பெருவிளை அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கடந்த ஆண்டு கோரிக்கை வைத்திருந்தேன். ஆனால், அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்த ஆண்டாவது அது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே கல்வி வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் ஏராளமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக சீருடை, இலவசமாக பள்ளிப் பாடப் புத்தகங்கள், இலவச பேருந்து வசதி, இலவச மிதிவண்டிகள் வழங்குவது என்று இப்படிப்பட்ட சிறப்பான திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இருந்தாலும், பல்வேறு பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் அமர்வதற்குப் போதுமான இருக்கை வசதிகள் இல்லை. எனவே, வருகின்ற காலத்தில் அரசு இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்கின்ற அளவிற்கு, மாணவர்கள் அமர்வதற்கு இருக்கை வசதிகள், டெஸ்க் போன்ற வசதிகளை செய்து தருவதற்கான உத்தேசம் அரசிடம் ஏதேனும் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருவிளை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய கோரிக்கையை, வரக்கூடிய நிதியாண்டில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல பள்ளிகளிலே பெஞ்சுகள், டெஸ்குகள் இல்லை என்ற ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த அவையிலே பல முறை நான் சொல்லியிருக்கிறேன்; நீங்களும் அறிவீர்கள். முதன்முறையாக நபார்டு வங்கியிலே அதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பெற்று, இந்த அரசு, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அரசுதான், அனைத்துப் பள்ளிகளிலும்— இதுவரை நபார்டுமூலம் I முதல் 7, 8 திட்டக் காலங்களிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற அனைத்துப் பள்ளிகளிலும்— பெஞ்சுகள், டெஸ்குகள் வழங்குவதற்கு ஏறத்தாழ 80 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கித் தந்திருக்கிறது. படிப்படியாக இப்போது நமது டான்சி நிறுவனத்தின்மூலமாக அந்த பெஞ்சுகள், டெஸ்குகள்

செய்யப்பட்டு அவை இப்போது பல பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவர் குறிப்பிடக்கூடிய பள்ளிகள் ஏதேனும் விடுபட்டுப் போயிருந்தால், என்னுடைய கவனத்திற்கு அவர் எழுதித் தருவார்களேயானால், நிச்சயமாக அந்தப் பள்ளிகளையும் எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு திட்டத்தில் கிராமப்புறங்களில் இருக்கின்ற பல்வேறு கல்விக்கூடங்களுக்குச் சுற்றுச் சுவர் இல்லாமல் அங்கே பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது. நாய்களும், பன்றிகளும், மற்ற மிருகங்களும் அங்கே சென்று வரும் நிலையில், அதைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு வழியில்லாமல் இருப்பதால், சுற்றுச் சுவர்களை அமைப்பதற்கு அரசு ஏதாவது திட்டங்களை வைத்திருக்கிறதா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய இந்தக் கேள்வி, மிக முக்கியமான கேள்வி. பல பள்ளிகளிலே இன்றைக்குப் போதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள் எல்லாம் கட்டப்பட்டாலும்கூட, சுற்றுச் சுவர்கள் இல்லை என்பது ஒரு பெரும் குறையாக உணரப்பட்டிருக்கிறது. எனவேதான், அக்குறையை நீக்குவதற்கு முதன்முறையாக நபார்டு வங்கிமூலம் ஆய்வகங்கள், வகுப்பறைகளுக்கு மாத்திரம் நிதியுதவி செய்தால் போதாது; பத்து ஏக்கர், பதினைந்து ஏக்கரிலே இருக்கக்கூடிய பெரிய பள்ளிகள் எல்லாம் தமிழகத்திலே இருக்கின்றன. பெரிய விளையாட்டு மைதானங்களை உள்ளடக்கி, பெரிய காம்பவுண்டு சுவர்களை எழுப்பவேண்டும் என்று சொன்னால், நிறைய நிதி தேவைப்படுகிறது. எனவே, நபார்டு வங்கியிலே இந்த ஆண்டு அதற்காக தனியாக ஒரு புரபோசல் கேட்டிருக்கிறோம். சுற்றுச் சுவர்கள் மாத்திரம் பள்ளிகளுக்குக் கொடுப்பதற்காக தனியாக ஒரு புரபோசல் நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதனுடைய ஒப்புதலை நான் விரைவில் எதிர்பார்க்கிறேன். வந்தவுடன் கட்டப்படலாம். அதைப்போல நடுநிலைப் பள்ளிகள் அளவிலே கம்ப்யூட்டர்கள்

கொடுத்து இருக்கிறோம்—அவர் சொல்வது போல மிருகங்கள் எல்லாம் அங்கே வரக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தாலும்கூட, இப்போது நம்முடைய முதல்வர் கலைஞர் ஆட்சியிலே பல பள்ளிகளுக்கு கம்ப்யூட்டர்கள், டி.வி-க்கள், டி.வி.டி.-கள் என்று ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி அளவிலே நாம் கொடுத்து இருக்கிறோம்—எனவே, பாதுகாப்பு கருதியும் சுற்றுச் சுவர்கள் தேவைப்படுகின்றன. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பிலே, நடைபெறக்கூடிய இந்த கட்டுமானப் பணிகளிலும், சுற்றுச் சுவரை ஒரு கூறாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசுக்கும் வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். வரக்கூடிய ஆண்டுகளில் நிச்சயமாக அதற்குரிய நிதியுதவிகளைப் பெற்று அவற்றை நிறைவேற்ற முடியும் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் மாநகராட்சியால் நடத்தப்படுகிற மாசாத்தியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஒரு மாணவி, அறிவியல் ஆசிரியர் இல்லாத ஒரு சூழலில், கணித ஆசிரியரும், ஆங்கில ஆசிரியரும் பாடம் நடத்தி 99 மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறார். அவர் ஒரு பாட்டாளியின் மகள். மாநகராட்சியால் நடத்தப்படும் இந்தப் பள்ளிகளில் அறிவியல் துறையில் மாணவர்களை ஊக்குவிக்க ஆய்வுக் கூடங்கள் அமைக்கவும், சிறப்புக் கவனம் எடுக்கவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பள்ளிகள் என்று மட்டுமல்ல; தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளிலே இப்படி ஆய்வகங்களை அமைப்பதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. நபார்டு வங்கியினுடைய திட்டத்தில் மாத்திரம் அல்லாமல், தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின்மூலமாக, அவர்களிடமிருந்து வரக்கூடிய நிதியையும் கூடுதலாகப் பெற்று, ஆய்வகங்கள் அமைக்கக்கூடிய பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு

2008 நவம்பர் 13]

வந்திருக்கிறோம். அந்த வகையிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார் என்று சொன்னால், எந்தப் பள்ளிகளிலே ஆய்வகம் அமைக்க வேண்டுமோ அந்தப் பள்ளிகளிலேயும் அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு இராஜஸ்தான் அரசுமூலமும் நபார்டு வங்கியின்மூலமும் கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தாலும் 6 ஆம் வகுப்பு, 7 ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் மழை பெய்தால் மிகவும் ஒழுகுகின்ற பழையக் கட்டடங்களில் தங்கியுள்ள ஒரு சூழ்நிலை உள்ள காரணத்தால் கூடுதல் பள்ளி அறைகள் கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்குக்கூட ஒரு கேள்வியிலே குறிப்பிட்டுச் சொன்னேன், தமிழகத்திலே இப்படிப் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நிதி வசதி நம்மிடத்திலே நிறைய இருக்கிறது, வகுப்பறைகளைப் பொறுத்தமட்டிலே. ஆனால், இட வசதி இருக்கிறதா என்பதுதான் மிக முக்கியமான ஒரு பிரச்சினை. பல பள்ளிகளிலே அங்கு ஏற்கெனவே பழைய கட்டடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களை இடித்துவிட்டு, புதிய பள்ளிக் கட்டடங்களை அங்கே கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, சில இடங்களிலே பொதுப் பணித் துறையிடத்திலே அனுமதி பெற்று அவற்றை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. பரங்கிப்பேட்டை பள்ளியிலே போதுமான இட வசதி இருந்தால்—6, 7, 8 ஆம் வகுப்புகளைப் பொறுத்தமட்டிலே அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் இந்த முறை ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கு மேலாக வகுப்பறைகள் கட்டுவதற்கு நிதியைப் பெற்றிருக்கிறோம்; எனவே, அங்கே இட வசதி இருக்கும் என்று சொன்னால்—நான் உடனடியாக அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து கூடுதல் கட்டடங்களை உடனடியாக அங்கே கட்டுவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் லாலாபேட்டை, கிருஷ்ணராயபுரம், பாலவிடுதி, கடவூர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் இல்லை. அதுமட்டுமல்லாமல், அங்கு கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச் சுவர் இல்லாமல் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரிதும் துன்பம் அடைகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வருகின்ற நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து, அந்தப் பள்ளிகளுக்கு மேற்கண்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்தப் பள்ளிகளுக்கு, வருகிற நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படக்கூடிய பள்ளிகளில் முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக் கூடங்களுக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்ற ஒரு நிலையில் N.C.D.C.—National Co-operative Development Corporation, அதேபோன்று நபார்டு, ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி போன்ற நிறுவனங்கள் தாராளமாக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்துதர வேண்டும் என்று நிதியளிக்கின்ற ஒரு சூழ்நிலையில் இந்த இரண்டே முக்கால் ஆண்டுக் காலத்தில் எத்தனை புரபோசல்கள், கருத்துருக்கள் இதுபோன்ற நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டன என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவலை இந்த அவைக்கு அளிப்பாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே, நபார்டு வங்கி மிகப் பெரிய அளவிலே அதற்கு உதவி செய்திருக்கிறது. அவர் இங்கே என்னிடத்திலே ஒரு விவரத்தைக் கேட்டிருக்கிறார். நபார்டு வங்கியினைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய தமிழகத்திலே 1 முதல் 8 பிரிவாக இதுவரை கொடுத்திருக்கிறார்கள். Phase 1 to Phase 8 வரை நம்முடைய மாநிலத்திலே அவர்கள் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். Phase 1-லே ரூபாய் 18.36 கோடி, இரண்டாவது கட்டத்திலே ரூபாய் 80.64 கோடி, 3-வது கட்டத்திலே ரூபாய் 83.74 கோடி, 4-வது கட்டத்திலே ரூபாய் 130.10 கோடி, 5-வது கட்டத்திலே ரூபாய் 102.3 கோடி, 6-வது கட்டத்திலே ரூபாய் 161.31 கோடி, 7-வது கட்டத்திலே ரூபாய் 131.69 கோடி என்று வரிசையாகக் கொடுத்திருக்கிறார்கள். இறுதியாக, இப்போது கொடுத்திருக்கக்கூடிய முன்மொழிவுகள் முன்பு எப்போதும் இல்லாத வகையிலே, ஏறத்தாழ 362 பள்ளிகளுக்கு 410 கோடி ரூபாய்க்கு இந்த ஆண்டு Phase 8-லே நம்முடைய பள்ளியிலே ஆய்வகங்கள் கட்டுவதற்கு, கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு, அதுபோல கழிவறை வசதிகள் ஏற்படுத்துவதற்கு நபார்டு வங்கி நமக்கு உதவி செய்திருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

29—

மேம்பாலம்

***25868—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கோடுஅள்ளி ஊராட்சி, வேப்பமரத்தூர்-சௌளகரபட்டி இடையில் வேப்பாடி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே, நபார்டு வங்கி மிகப் பெரிய அளவிலே அதற்கு உதவி செய்திருக்கிறது. அவர் இங்கே என்னிடத்திலே ஒரு விவரத்தைக் கேட்டிருக்கிறார். நபார்டு வங்கியினைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய தமிழகத்திலே 1 முதல் 8 பிரிவாக இதுவரை கொடுத்திருக்கிறார்கள். Phase 1 to Phase 8 வரை நம்முடைய மாநிலத்திலே அவர்கள் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். Phase 1-லே ரூபாய் 18.36 கோடி, இரண்டாவது கட்டத்திலே ரூபாய் 80.64 கோடி, 3-வது கட்டத்திலே ரூபாய் 83.74 கோடி, 4-வது கட்டத்திலே ரூபாய் 130.10 கோடி, 5-வது கட்டத்திலே ரூபாய் 102.3 கோடி, 6-வது கட்டத்திலே ரூபாய் 161.31 கோடி, 7-வது கட்டத்திலே ரூபாய் 131.69 கோடி என்று வரிசையாகக் கொடுத்திருக்கிறார்கள். இறுதியாக, இப்போது கொடுத்திருக்கக்கூடிய முன்மொழிவுகள் முன்பு எப்போதும் இல்லாத வகையிலே, ஏறத்தாழ 362 பள்ளிகளுக்கு 410 கோடி ரூபாய்க்கு இந்த ஆண்டு Phase 8-லே நம்முடைய பள்ளியிலே ஆய்வகங்கள் கட்டுவதற்கு, கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு, அதுபோல கழிவறை வசதிகள் ஏற்படுத்துவதற்கு நபார்டு வங்கி நமக்கு உதவி செய்திருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

29—

மேம்பாலம்

***25868—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கோடுஅள்ளி ஊராட்சி, வேப்பமரத்தூர்-சௌளாகரபட்டி இடையில் வேப்பாடி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

|2008 நவம்பர் 13

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தற்போது பரிசீலனையில் இல்லை

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கும், சேலம் மாவட்டத்திற்கும் எல்லையாக அமைந்துள்ளது இந்த வேப்பாடி ஆறு. ஏற்காடு மலையடிவாரத்திலிருந்து தொப்பூர் வரை ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த வேப்பாடி ஆறானது பாய்ந்து, மழைக் காலங்களில் ஏறக்குறைய 2 மாதம் தொடர்ந்து அந்த மழை வெள்ளமானது வந்து கொண்டிருக்கிறது. சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற ஓமலூர் சட்டமன்றத் தொகுதியின் வேப்பாடி ஊராட்சியிலே ஏறக்குறைய 15 கிராமங்கள் இருக்கின்றன. அதைப்போலவே, தருமபுரி சட்டமன்றத் தொகுதியிலே 20 கிராமத்து மக்கள், ஏறக்குறைய 20,000 மக்கள்தொகை அந்தப் பகுதியிலே இருக்கிறது. சேலம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய அந்த மக்கள், தருமபுரி தொகுதியிலே இருக்கக்கூடிய முத்தம்பட்டி உயர்நிலைப் பள்ளிக்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் தினந்தோறும் வந்து செல்கிறார்கள். அதைப்போலவே மருத்துவத்திற்காக நோயாளிகளும், கால்நடைகளும் இந்தப் பகுதிக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கில் வந்து செல்கிறார்கள். மழைக்காலங்களில் ஏறக்குறைய ஒரு மாதகாலம் இவர்கள் செல்லமுடியாத அளவிற்கு அந்த மழை நீர் சென்று கொண்டிருக்கிறது. அங்கே மாணவர்கள் எல்லாம் கயிறுகளிலே தொட்டில் கட்டிக்கொண்டு செல்லுகின்ற காட்சியானது நமது செய்தித் தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் வந்திருக்கிறது. சட்டமன்றத்திலேகூட நான் ஏற்கெனவே அந்தப் பகுதியிலே முத்தம்பட்டி ஊராட்சி, கோவிந்தாபுரத்திற்கு இடையிலே ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறேன். நம மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கட்டுவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இந்த வேப்பமரத்தூர் என்கின்ற இடத்திலாவது அல்லது முத்தம்பட்டி-கோவிந்தாபுரத்திற்கு இடையிலாவது கட்டாயம், அவசியம் ஒரு பாலம் கட்டித்தர வேண்டும் என்பதை முன்வைத்து, அமைச்சர் அவர்கள் கட்டித் தருவாரா என்று கேட்டு அமர்கிறேன்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பிரச்சினை நியாயமானதுதான். ஆனால், இப்பொழுது நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வருகிற சுமார் 62,000 கிலோ மீட்டர் சாலைகளில் இருக்கின்ற பாலங்களை அகலப்படுத்துவது, அல்லது தாழ்வான பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக உயர்த்துவது, சாலைகளைப் பராமரிப்பது போன்ற பணிகளுக்கே ஒதுக்கீடு செய்யும் நிதி சரியாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய இடமானது ஊராட்சி ஒன்றியத்திற்குரிய சாலை. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வேப்பாடி ஆற்றின் இரண்டு பக்கமும் மாவட்ட இதர சாலை செல்கிறது. அந்த இரண்டு சாலைகளையும் இணைக்கக்கூடிய சாலையானது ஊராட்சி ஒன்றிய சாலை. எனவே, மேற்படி பாலம் கட்டுவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எதிர்காலத்திலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரோடு கலந்து பேசி அதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு நெடுஞ்சாலைத் துறையும் நிச்சயமாக உறுதுணையாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று எனது தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில், தருமபுரிக்கும் அன்னசாகரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்விக்குச் சம்பந்தமாகக் கேளுங்கள்; இதுவே முடியவில்லை; அடுத்த கேள்விக்குப் போகிறீர்களே! இதிலே ஏதாவது supplementary question இருக்கிறதா?

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போலவே அந்தப் பகுதியில் ஏறக்குறைய பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள், மழைக் காலங்களில் ஏறக்குறைய இரண்டு மாதம் போக்குவரத்து இல்லாமல் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, இந்தப் பாலத்தை அவசியம் கட்டித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே, தொடர்ந்து அதுகுறித்து நெடுஞ்சாலைத் துறை பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

விடுதி வசதி

***29192—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு விடுதி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 புதிய மாணவர்கள் விடுதிகளைத் துவக்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய சீர்காழி தொகுதியில் மாதாணத்தில் புதிய மாணவர்கள் விடுதி துவக்குவதற்கு நமது முதல்வர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சீர்காழி தொகுதியில் திருமுல்லைவாசலில் மாணவர்கள் விடுதி வேண்டும் என்று வினா எழுப்பியுள்ளார்கள். தற்போது அங்கு மாணவர்கள் விடுதி துவக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

[2008 நவம்பர் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே, தொடர்ந்து அதுகுறித்து நெடுஞ்சாலைத் துறை பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

விடுதி வசதி

***29192—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு விடுதி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 புதிய மாணவர்கள் விடுதிகளைத் துவக்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய சீர்காழி தொகுதியில் மாதாணத்தில் புதிய மாணவர்கள் விடுதி துவக்குவதற்கு நமது முதல்வர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சீர்காழி தொகுதியில் திருமுல்லைவாசலில் மாணவர்கள் விடுதி வேண்டும் என்று வினா எழுப்பியுள்ளார்கள். தற்போது அங்கு மாணவர்கள் விடுதி துவக்குவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

2008 நவம்பர் 13]

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் இயக்கப்படும் மாதாணம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு விடுதியைத் துவக்குவதற்கு அனுமதியளித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

சீர்காழி தொகுதியிலே இருக்கக்கூடிய திருமுல்லைவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,000 மாணவர்கள் படித்து வருகிறார்கள். இந்த ஆண்டு நடைபெற்ற 10 ஆம் வகுப்புத் தேர்வில் 64 சதவிகிதமும் 12 ஆம் வகுப்புத் தேர்வில் 72 சதவிகிதமும் தேர்ச்சி பெற்று மாணவர்கள் வெற்றி அடைந்திருக்கிறார்கள். அங்கே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் ஒரு பெண்கள் விடுதி நடத்தப்படுகிறது. அது முழுமையாக, கிராமப்புறத்திலே அமைந்திருக்கிற மேல்நிலைப் பள்ளியாக இருப்பதால் மாணவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய அளவிற்கு, இந்த ஆண்டு மாணவர்களுக்குப் பயன்படுகிற விதத்திலே, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் புதிய விடுதியைத் துவக்கிக் கொடுப்பதற்கு அமைச்சர் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு ஏற்பதான், விடுதிகள் எங்கெங்கு வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பிறகுதான், மாதாணத்தில் நடப்பு ஆண்டில் விடுதி தொடங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் சீர்காழி தொகுதியிலே, திருமுல்லைவாசலிலே விடுதி வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். நடப்பாண்டில் தொடங்குவதற்கு வாய்ப்புகள் இல்லை. எதிர்காலத்தில் தேவை மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 6, 7 மற்றும் 8)@

பட்டியல் 6

1—

மின்சாரம் தயாரிப்பு

வினா எண் 40064—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சர்க்கரைச் சோளத்தட்டையிலிருந்து மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சர்க்கரைச் சோளத்தட்டையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசிடம் ஏதும் தற்பொழுது இல்லை.

2—

சாலை செப்பனிடல்

வினா எண் 14689—திரு. கே.வி. ராமநாதன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பவானி 11-வது வார்டில் பழுதடைந்துள்ள வெள்ளை விநாயகர் கோவில் சாலையைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, பவானி 11-வது வார்டில் பழுதடைந்துள்ள வெள்ளை விநாயகர் கோவில் சாலை 2006-2007 ஆம் ஆண்டு 12-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் ரூ.4.60 லட்சம் செலவில் தார்ச் சாலையாகச் செப்பனிடப்பட்டுள்ளது.

3—

எரிவாயு தகன மேடை

வினா எண் 20600—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி, சத்துவாச்சாரி நகராட்சி மயானங்களில் எரிவாயு தகன மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வேலூர் நகராட்சிப் பகுதியில் செயல்படும் பாலாற்றுப் படுகையில் பகுதி-II திட்டத்தில் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.40 இலட்சம் செலவினத்தில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிக்கு பணி உத்தரவு அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

4—

குப்பை லாரி

வினா எண் 32746—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகருக்கு கூடுதலாக குப்பை லாரி கூடுதலாக வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 நவம்பர் 13

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் உள்ளன. இந்நகராட்சியின் மக்கள் தொகை 58,407 ஆகும். இங்கு தினசரி உருவாகும் குப்பைகளின் அளவு 29.00 மெட்ரிக் டன்கள் ஆகும். இக்குப்பைகள் இரண்டு டிப்பர் லாரிகள், இரண்டு டிராக்டர்கள், ஒரு ஜேசிபி. மற்றும் டம்பர் பிளேசர் வாகனங்கள்மூலம் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன. நகராட்சியில் தினசரி உருவாகும் 29.00 மெட்ரிக் டன் குப்பைகளை அகற்ற, தற்போது உள்ள வாகனங்கள் போதுமானவை. எனவே, கூடுதலாக லாரிகள் வாங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

5—

பேருந்து நிலையப் பராமரிப்பு

வினா எண் 40827—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் புதிய பேருந்து நிலையத்தினைச் சுத்தமாகப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆத்தூர் நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தில் நாள்தோறும் தினசரி காலை 6.00 மணி முதல் தொடர்ந்து மறு நாள் காலை 6.00 மணி வரையிலும் மூன்று ஷிஃப்டுகளாக சுழற்சி முறையில் தினசரி 12 துப்புரவுப் பணியாளர்களை வைத்து சுத்தம் செய்யப்பட்டு, சேகரிக்கப்படும் திடக் கழிவுகள், இரண்டு குப்பை கொள்கலன்களில் சேகரிக்கப்பட்டு தினசரி அவை கலவை உரக் கிடங்கிற்கு அனுப்பப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமைகளில் இரவு நேரத்தில் பேருந்து நிலையத்தில் உள்ள

2008 நவம்பர் 13]

பயணிகள் தங்குமிடம் மற்றும் நடைமேடைகளைக் கழுவி சுத்தம் செய்து, கிருமி நாசினி தெளிக்கப்படுகிறது. இவ்வாறாகப் பேருந்து நிலையத்தைச் சுத்தமாகப் பராமரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

6—

சர்க்கரை ஆலை

வினா எண் 42060—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின்மூலம் விவசாயிகளின் கரும்புகளனைத்தையும் அரைவைக்குப் பதிவு செய்து கொள்ள அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கபிலர்மலை சட்டமன்றத் தொகுதி, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் பொன்னி சர்க்கரை ஆலை ஆகிய இரு ஆலைகளுக்கும் விவகார எல்லையாக உள்ளது.

கபிலர்மலை சட்டமன்றத் தொகுதியின் கீழ்க்கண்ட பகுதிகள் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் விவகார எல்லையாக உள்ளன.

வ.எண்	பிர்க்கா	கிராமங்கள்
1.	மோகனூர்	5 கிராமங்கள்
2.	வளையபட்டி	3 கிராமங்கள்
3.	பாளையம்பட்டி	அனைத்து கிராமங்கள்
4.	பரமத்தி	
5.	பண்டமங்கலம்	
6.	நல்லூர்	8 கிராமங்கள்
7.	ஜேடர்பாளையம்	கபிலர்குறிச்சி மட்டும்

அதுபோல, கபிலர்மலை சட்டமன்றத் தொகுதியின் கீழ்க்கண்ட பகுதிகள் பொன்னி சர்க்கரை ஆலையின் விவகார எல்லையாக உள்ளன.

வ.எண்	பிர்க்கா	கிராமங்கள்
1.	ஜேடர்பாளையம்	அனைத்து கிராமங்கள், கபிலர்குறிச்சி நீங்கலாக
2.	நல்லூர் (பகுதி)	நல்லூர், சித்தம்பூண்டி

இந்நிலையில் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதியில் பதிவு செய்ய விரும்பும் அனைத்து ஆலை அங்கத்தினரின் கரும்பையும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை பதிவு செய்து அரைவையை மேற்கொள்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

7—

சர்க்கரை ஆலை

வினா எண் 57500—திரு. வை. காவேரி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி பகுதியில் சர்க்கரை ஆலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி தாலுகாவில் உள்ளது. இத்தொகுதியில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சார்பாக புதிய சர்க்கரை ஆலை அமைப்பது தொடர்பான பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் தனியார் துறையிடமிருந்தும் இத்தொகுதியில் ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க ஆசால் பிரேரணை எதும் பெறப்படவில்லை. எடப்பாடி தாலுகாவில் உள்ள கரும்புப் பரப்பு முழுவதும் பொன்னி சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

2500 மெ.டன் கரும்பு பிழிதிறன் கொண்ட ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க ஒரு அரைவைப் பருவத்திற்கு 4.30 இலட்சம் டன்கள் கரும்பு தேவைப்படும். புதிய சர்க்கரை ஆலை இயங்குவதற்குத் தேவையான கரும்பு எடப்பாடி தொகுதியில் சாகுபடி செய்யப்படாததால் அப்பகுதியில் ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

8—

தூர் வாருதல்

வினா எண் 12337—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, முக்கல்நாய்க்கன்பட்டி ஊராட்சி மலை அடிவாரம் முதல் அன்னசாகரம் ஏரி வரை, ஆற்றைத் தூர் வாரி அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். இப்பொருள் நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டல தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

9—

தடுப்பணை

வினா எண் 18705—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் அருகில் பாம்பாற்றிலும், கோவிந்தாபுரம் அருகில் அங்குத்தி சுனையிலும் தடுப்பணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் அருகில் பாம்பாற்றிலும், கோவிந்தாபுரம் அருகில் அங்குத்தி சுனையிலும் தடுப்பணைகள் கட்டுவதற்குத் தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறு இல்லை.

10—

தூர் வாருதல்

வினா எண் 18759—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, வேப்பாடி ஆறு அணைக்கட்டிலிருந்து மணிபுரம், ராமநாதபுரம், கொப்பகரை செல்லும் வாய்க்கால்களைத் தூர் வாரிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, வேப்பாடி ஆறு அணைக்கட்டிலிருந்து மணிபுரம், ராமநாதபுரம், கொப்பகரை செல்லும் வாய்க்கால்களைத் தூர் வாரும் பணியை தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் (N.R.E.G.P.) நடப்பாண்டில் (2008-09) மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

11—

தூர் வாருதல்

வினா எண் 18762—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, மூக்கனூர் மலை அடிவாரத்திலுள்ள அக்கமனஅள்ளி ஏரியைத் தூர் வாரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, மூக்கனூர் மலை அடிவாரத்திலுள்ள அக்கமனஅள்ளி ஏரியைத் தூர் வாரும் பணியை, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் (N.R.E.G.P.) நடப்பு நிதியாண்டில் (2008-09) மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

12—

தூர் வாருதல்

வினா எண் 25898—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, அளே தருமபுரி ஊராட்சி, ராமக்காள் ஏரிக் கால்வாயைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தருமபுரி தொகுதி ராமக்காள் ஏரியைத் தூர் வாரி, கால்வாய்களைச் சீரமைக்க ரூ. 26.80 இலட்சம் மதிப்பீட்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 31-3-2008-ல் செய்து முடிக்கப்பட்டன.

13—

தடுப்பணை

வினா எண் 28336—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, தென்பெண்ணை ஆற்றில், எண்ணேகொள் அருகில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, தென்பெண்ணையாற்றின் குறுக்கே எண்ணேகொள் மற்றும் வாணி ஓட்டுக்கு இடையே தடுப்பணை கட்டும் திட்டம், நீர்வள ஆதாரத் துறை, திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

14—

தடுப்பணைகள்

வினா எண் 32698—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர், பெரிய ஏரிக் கோடியிலிருந்து வெங்களாபுரம் செல்லும் ஆற்றைத் தூர் எடுத்து தடுப்பணைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

தற்போது திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

15—

பாசனக் குட்டை

வினா எண் 42418—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

(அ) தருமபுரி தொகுதி, கம்பம்பட்டி ஊராட்சி, பாப்பம்பட்டியில் பாசனக் குட்டை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கம்பம்பட்டி ஊராட்சி, பாப்பம்பட்டி பகுதிகள், தொப்பையாறு அணையின் வலதுபுறக் கால்வாய்மூலம் ஏற்கெனவே பாசன வசதி பெறுவதால் இத்திட்டம் தேவையற்றது.

16—

ஏரி அமைத்தல்

வினா எண் 42419—திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, கம்பம்பட்டி ஊராட்சி, கஸ்தூரிகோம்பை கிராமத்தில் குண்டல்மடுவு பள்ளம் பகுதியில் புதியதாக ஏரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கம்பம்பட்டி ஊராட்சி, கஸ்தூரிகோம்பை கிராமத்தில் குண்டல்மடுவு பள்ளம் பகுதியில் புதியதாக ஏரி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

17—

கால்வாய் அமைத்தல்

வினா எண் 42445—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 13

(அ) தருமபுரி மாவட்டம், கொளகம்பட்டி ஊராட்சி, ஒட்டுத்தோட்டம் அருகிலிருக்கும் தடுப்பணையிலிருந்து கொளகம்பட்டி ஏரிக்குக் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடுப்பணையைவிட ஏரி 1.26 மீட்டர் உயரமாக உள்ளதால் கொளகம்பட்டி ஏரிக்குக் கால்வாய் அமைப்பது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை.

18—

பேருந்து வசதி

வினா எண் 17887—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் செல்ல அரசுப் பேருந்தைப் பள்ளி நேரத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலமாக நகரப் பேருந்து தடம் எண் ஓ4, காலை 8-00 மணிக்கும், தடம் எண் 97, காலை 8-20 மணிக்கும், ஓமலூரில் புறப்படும் நடைகளும், மாலையில் தடம் எண் ஓ8, 16-20 மணிக்கு மேச்சேரியிலும், தடம் எண் 79, 16-40 மணிக்கு ஒண்டிவீரனூரிலும், தடம் எண் ஓ4ஏ, 17-00 மணிக்குக் கீரைக்காரனூரிலும் புறப்படும் நடைகள், ஓமலூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் பயனடையும் வகையில் உள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

19—

பேருந்து வசதி

வினா எண் 26437—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் தடம் எண் 188டி, 188 ஆகிய விரைவுப் பேருந்துகள் கடும்பாடி பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கடும்பாடி கிராமம், சென்னை-புதுச்சேரி கிழக்குக் கடற்கரை சாலையில் மகாபலிபுரத்திலிருந்து 5-வது கி.மீ.-ல் உள்ள கடும்பாடி கூட்டுச் சாலையிலிருந்து வலதுபுறமாக உள்ளே 10 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. கடும்பாடி கூட்டுச் சாலை வழியாக அதிக அளவில் சாதாரண புறநகர்ப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. விரைவுப் பேருந்துகளுக்கு 6-வது கி.மீ.-ல் உள்ள மாமல்லபுரத்திற்குக் கட்டண நிலை உள்ளது. தொலை தூரத்திற்கு இயக்கப்படும் விரைவுப் பேருந்துகளைக் கடும்பாடி கூட்டுச் சாலையில் நிறுத்தினால் நேரடியாகச் செல்லும் பயணிகள் விரும்பமாட்டார்கள். எனவே, 188டி, 188 ஆகிய விரைவுப் பேருந்துகளைக் கடும்பாடி கூட்டுச் சாலை நிறுத்தத்தில் நிறுத்தும் திட்டம் இல்லை.

20—

பேருந்து வசதி

வினா எண் 28740—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-திருமணி, திருக்கழுக்குன்றம்-பெரும்பேடு-கிளாப்பாக்கம் வழி செல்லும் T-27 பேருந்தைக் கூடுதலாக இயக்கவும், கிளாப்பாக்கத்தில் இரவு தங்கவும், திருக்கழுக்குன்றம்-தத்தலூர்-கிளாப்பாக்கம் வழி T-3 பேருந்தை இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு-திருமணி-திருக்கழுக்குன்றம்-பெரும்பேடு-கிளாப்பாக்கம் செல்லும் தடத்தில் நகரத் தடம் டி.27 மூலம் தினசரி 12 நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த நடைகளே தற்பொழுது உள்ள போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதெனக் கருதப்படுகிறது. இப்பேருந்து தற்பொழுது இத்தடத்தில் உள்ள சோகண்டி என்ற இடத்தில் இரவு தங்குகிறது. இதனை மாற்றி அமைத்தால் பொதுமக்களிடமிருந்து எதிர்ப்பு வர வாய்ப்புள்ளதால், இது சாத்தியமில்லை. நகரத் தடம் டி.3 தற்பொழுது செங்கல்பட்டு-திருக்கழுக்குன்றம்-தத்தலூர் என 6 நடைகள் இயக்கப்படுகிறது. டி.3 பேருந்தைத் திருக்கழுக்குன்றத்திலிருந்து தத்தலூருக்குக் கிளாப்பாக்கம் வழியாக இயக்க சாத்தியமில்லை.

21—

பேருந்து வசதி

வினா எண் 32163—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம்-பொன்பதிர்கூடம்-பொன்விளைந்தகளத்தூர்-செங்கல்பட்டு வழியாகப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் செங்கல்பட்டு - பொன்விளைந்தகளத்தூர் - பொன்பதிர்கூடம் - திருக்கழுக்குன்றம் தடத்தில் 4 நடைகள் 20-8-2000 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

22—

பேருந்து வசதி

வினா எண் 33869—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

(அ) கரூரிலிருந்து புலியூர், உப்பிடமங்கலம், சேங்கல், பஞ்சப்பட்டி, கொசூர் வழியாக வீரப்பூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் - வீரப்பூர் (வழி) புலியூர், உப்பிடமங்கலம், சேங்கல், பஞ்சப்பட்டி, கொசூர் வழித்தட நீளம் 60 கிலோ மீட்டர் ஆகும். தற்போது இவ்வழித் தடம் முழுவதும் கீழ்க்கண்டுள்ளவாறு பகுதி பகுதியாக நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது.

வழித்தடம்	தினசரி இயக்கப்படும் பேருந்து நடைகள்	
கரூர்-மணப்பாறை (வழி) பஞ்சப்பட்டி, வீரப்பூர்	1	4
கரூர்-பஞ்சப்பட்டி (வழி) சேங்கல்	3	16
கரூர்-சேங்கல் (வழி) உப்பிடமங்கலம்	3	16
குளித்தலை-கரூர் (வழி) பஞ்சப்பட்டி	1	1
திருச்சி-கரூர் (வழி) பஞ்சப்பட்டி	1	1
குளித்தலை-கொசூர் (வழி) பஞ்சப்பட்டி	1	6
குளித்தலை-தொண்டமாங்கினம் (வழி) கொசூர்	1	2
தனியார் பேருந்து		
திருச்சி-வீரப்பூர் (வழி) தோகைமலை, கொசூர்	1	6
குளித்தலை-கரூர் (வழி) பஞ்சப்பட்டி	1	6

23—

பேருந்து வசதி

வினா எண் 34366—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், மேலமையூர் ஊராட்சி, காமராஜர் நகருக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

காமராஜர் நகர், செங்கல்பட்டு நகரில் செங்கல்பட்டிலிருந்து மதுராந்தகம் செல்லும் சாலையில் அரசு மருத்துவமனையை அடுத்து 1.0 கி.மீ.-ல் உட்புறமாக 0.5 கி.மீ.-ல் அமைந்துள்ளது. காமராஜர் நகர் வழியாகத் தற்பொழுது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம், நகரத் தடங்கள் டி21, டி27 மூலம் தினசரி 24 நடைகள் இயக்குகிறது. மேலும், காமராஜர் நகர், பிரதான சாலையிலிருந்து 0.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளதால், இது நடந்து செல்லக்கூடிய தடமாகும். எனவே, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், மேலமையூர் ஊராட்சியின் காமராஜர் நகருக்குத் தனியாகப் பேருந்து வசதி செய்து கொடுக்கத் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

24—

பேருந்து வசதி

வினா எண் 34383—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து அன்னவாசல், எஸ். கரிசல்குளம், நரிக்குடி, திருச்சுழி வழியாக அருப்புக்கோட்டை வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து அன்னவாசல் எஸ். கரிசல்குளம் வழியாக நரிக்குடி வரையிலும், அருப்புக்கோட்டையிலிருந்து திருச்சுழி வழியாக நரிக்குடி வரையிலும் பகுதிப் பகுதியாகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவையே, அப்பகுதிப் பயணிகளுக்குப் போதுமானவையாகும்.

2008 நவம்பர் 13]

25—

பேருந்து வசதி

வினா எண் 34387—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து மேலநெட்டூர், இளையான்குடி வழியாக நயினார்கோயில் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து மேலநெட்டூர் வழியாக இளையான்குடிக்கும், இளையான்குடியிலிருந்து பரமக்குடிக்கும், பரமக்குடியிலிருந்து நயினார்கோயில் வரைக்கும் பேருந்துகள் தேவையான அளவில் பகுதிப் பகுதியாக இயக்கப்பட்டு வருகின்றன.

26—

பேருந்து வசதி

வினா எண் 34391—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை, திருப்பத்தூர், புதுக்கோட்டை வழியாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து சிவகங்கை, திருப்பத்தூர், புதுக்கோட்டைக்கு நேரிடையாக நாள் ஒன்றுக்கு 20 நடைகள் அரசுப் பேருந்து இயக்கப்படுகிறது. மேலும், மானாமதுரை-சிவகங்கைக்கும், சிவகங்கை-திருப்பத்தூருக்கும், திருப்பத்தூர்-புதுக்கோட்டைக்கும் பகுதிப் பகுதியாக அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

[2008 நவம்பர் 13

27—

பேருந்து வசதி

வினா எண் 34706—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி பஞ்சப்பட்டியிலிருந்து உப்பிடமங்கலம் - லிங்கத்தூர் - பொறையாகவுண்டனூர் - ஏமூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வழியாக கரூர் வரை புதிய பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பஞ்சப்பட்டி - கரூர் (வழி) உப்பிடமங்கலம், லிங்கத்தூர், பொறையாகவுண்டனூர், ஏமூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வழித் தட நீளம் 36.7 கிலோ மீட்டர் ஆகும். இவ்வழித் தடத்தில் ஏமூர்புதூர்-லிங்கத்தூர் வரை 4.2 கிலோ மீட்டர் பகுதியைத் தவிர, மற்ற வழித் தடம் முழுவதும் பகுதிப் பகுதியாக நகர மற்றும் புறநகர் பேருந்துகள்மூலம் நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது. மேற்படி பேருந்து வசதி பெறாத 4.2 கிலோ மீட்டரில் 2.1 கிலோ மீட்டர் மண் சாலையாக உள்ளதால், பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. இதில் பொறையாகவுண்டனூர் என்ற கிராமம் உள்ளது.

28—

பேருந்து வசதி

வினா எண் 34714—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து லாலாப்பேட்டை, பழைய ஜெயங்கொண்டம் வரை கூடுதலாக நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-பழைய ஜெயங்கொண்டம் (வழி) லாலாப்பேட்டை வழித் தடத்தின் மொத்த நீளம் 48.0 கிலோ மீட்டர் ஆகும். இவ்வழித்தட நீளம் நகரப் பேருந்து இயக்க அதிகபட்ச தூரமான 35.0 கிலோ மீட்டருக்கு மேல் உள்ளதால், அரசாணைப்படி நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. இவ்வழித் தடத்தில் கரூர்-லாலாப்பேட்டை வரை உள்ள 32.0 கிலோ மீட்டர் வழித் தடம், திருச்சி-கரூர் பிரதான சாலையாகும். இவ்வழித் தடத்தில் ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. லாலாப்பேட்டை - பழைய ஜெயங்கொண்டம் வழித் தடத்திற்கு முசிறி - பழைய ஜெயங்கொண்டம் வழித் தட நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், கரூரிலிருந்து பழைய ஜெயங்கொண்டத்திற்கு சின்னசேங்கல், கோவகுளம், மேட்டுமகாதானபுரம் ஆகிய வழித் தடங்கள் வழியாக இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 12 நடைகள் இயக்கப்படுகின்றன.

29—

பேருந்து வசதி

வினா எண் 34731—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, பெரணம்பாக்கம் - காஞ்சிபுரம் - ஆற்காடு பெரணம்பாக்கம் - ஆரணி தேவிகாபுரம் (வழி) பெரணம்பாக்கம் ஆகிய பகுதிகளுக்குப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெரணம்பாக்கம் - காஞ்சிபுரம், பெரணம்பாக்கம்-ஆற்காடு, பெரணம்பாக்கம் - ஆரணி தடத்தில் பேருந்து இயக்க ஆய்வு செய்ததில், பெரணம்பாக்கம் போளூர் வட்டத்தைச் சார்ந்தது. பெரணம்பாக்கத்திலிருந்து அருகில் உள்ள வட்டத் தலைநகராகிய போளூருக்குத் தடம் எண் P3 போளூர்-மன்சுராபாத் (வழி)

பெரணம்பாக்கம் 6 நடைகளும், 2 தனியார் பேருந்துகள் 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. புதியதாகக் கோரியுள்ள, பெரணம்பாக்கம்-காஞ்சிபுரம், பெரணம்பாக்கம்-ஆற்காடு, பெரணம்பாக்கம்-ஆரணி வழித் தடங்கள் நேரடிப் பயணிகளுக்கு உபயோகம் இல்லை என்பதால், இத்தடங்களில் பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.

30—

பேருந்து வசதி

வினா எண் 34733—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, போளூரிலிருந்து கொம்மநந்தல் வழி சோத்துக்கண்ணி, செம்மியமங்கலம், பெரணம்பாக்கம், ஆத்துரை, தேவிகாபுரம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போளூர்-தேவிகாபுரம் (வழி) கொம்மனந்தல், சோத்துக்கண்ணி, செம்மியமங்கலம், பெரணம்பாக்கம், ஆத்துரை தடத்தின் நீளம் 24 கி.மீ. ஆகும். இது ஒரு சுற்று வழித் தடமாகும். இத்தடத்தில் ஏற்கெனவே தடம் எண் T3, போளூர்-மன்சுராபாத் (வழி) பெரணம்பாக்கம் 6 நடைகள் இயக்கப்படுகிறது. இத்தடத்தின் பயணிகள் அடர்வு 40.32% தான் உள்ளது. 2 தனியார் பேருந்துகள் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. சுற்று வழித் தடமாக உள்ளதாலும், ஏற்கெனவே இயக்கப்படும் நகரத் தடத்தின் பயணிகள் அடர்வு குறைவாக உள்ளதாலும், இத்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.

31—

பேருந்து வசதி

வினா எண் 35235—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

(அ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் வழியாக டி.வேளாங்குளத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் வழியாக டி. வேளாங்குளத்திற்கு 6 தனி நடைகள் நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இந்த நடைகள் பள்ளி மற்றும் கூட்ட நேரங்களில் இயக்கப்படுகின்றன. டி. வேளாங்குளம் கிராம மக்களின் தற்போதுள்ள தேவைக்கு இவ்வசதிகள் போதுமானவையாகும். தேவை அதிகரிக்கும்போது இத்தடத்தில் கூடுதல் நடைகள் இயக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

32—

பேருந்து வசதி

வினா எண் 35525—திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, கோட்டூர் முதல் பாரிமுனை வரை இயங்கி வந்த 18பி பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 18பி-ல் இயக்கப்படும் பயண நடைகள் சைதாப்பேட்டை வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது 18பி வழித் தடத்தில் பயணிகள் பயன்பாடு மிகவும் குறைவாக

இருக்கின்ற காரணத்தினால் 4 பயண நடைகள் மட்டும் அடிப்படைத் தடத்தில் (Basic route course) இயக்கப்பட்டும், மீதமுள்ள பயண நடைகள் ஜி18 எல்.எஸ்.எஸ். தடத்திலும் ஈ18 விரைவுத் தடத்திலும் இயக்கப்படுகின்றன. மேலும், கோட்டூர் மற்றும் கோட்டூர்புரம் வழியாகக் கீழ்க்காணும் வகையில் பேருந்துகள் பிராட்வேக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

தடம் எண்.	வழி	இயக்கப்படும் மொத்த பேருந்துகள்
21ஜி (தாம்பரம்-பிராட்வே)	மந்தைவெளி, மைலாப்பூர்	30+2 Volvo
எம்.21ஜி (கிண்டி-தொ.பேட்டை-பிராட்வே)	மந்தைவெளி, மைலாப்பூர்	6
5சி (தரமணி-பிராட்வே)	அடையாறு கேட்	7

கோட்டூர்/கோட்டூர்புரம் ஆகிய இடங்களிலிருந்து பாரிமுனைக்கு/ பிராட்வேக்குத் தேவையான பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

33—

பேருந்து வசதி

வினா எண் 37872—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை - மானாமதுரை நகரப் பேருந்து எண் 1 மற்றும் எண் 2 பேருந்துகள் மானாமதுரைக்கு வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை கிளையின் நகரப் பேருந்து தடம் எண் 1 மற்றும் தடம் எண் 2 ஆகிய இரண்டு பேருந்துகளும் மானாமதுரைக்குச் சென்று வந்து கொண்டிருக்கின்றன.

2008 நவம்பர் 13]

34—

பேருந்து வசதி

வினா எண் 37874—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலிருந்து இளையான்குடி வழியாகவும், மானாமதுரையிலிருந்து தாயமங்கலத்திற்குக் கூடுதல் நகரப் பேருந்து இயக்கவும், சிவகங்கையிலிருந்து நாட்டரசன்கோட்டை வழியாகவும் காளையார்கோவிலிலிருந்து மரவமங்கலம் வழியாகவும் தாயமங்கலத்திற்குக் கூடுதலாக நகரப் பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பரமக்குடியிலிருந்து இளையான்குடி வழியாக தாயமங்கலத்திற்கு 14 நடைகளும், தற்போது கூடுதலாக 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மானாமதுரையிலிருந்து தாயமங்கலத்திற்கு அரசுப் பேருந்துகள் மூலம் 12 நடைகளும் தனியார் பேருந்துகள் மூலம் 9 நடைகளும் இயக்கப்படுகின்றன. இதுவே, போதுமானதாகும். சிவகங்கையிலிருந்து நாட்டரசன்கோட்டைக்கும், நாட்டரசன்கோட்டையிலிருந்து காளையார்கோவிலுக்கும், காளையார்கோவிலில் இருந்து தாயமங்கலம் விலக்கிற்கும், தாயமங்கலம் விலக்கிலிருந்து தாயமங்கலத்திற்கும் பகுதிப் பகுதியாக அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

35—

பேருந்து வசதி

வினா எண் 38310—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 13

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அரியமான் கடற்கரை பேருந்து நிறுத்தத்தில் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், அரியமான் கடற்கரை பேருந்து நிலையத்தில் அனைத்துப் பேருந்துகளும் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன.

36—

பேருந்து வசதி

வினா எண் 38582—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சமூகரெங்கபுரம் ஊராட்சி, சிங்காரத்தோட்டம் கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்ட சிங்காரத்தோட்டம் கிராமம் சுமார் 100 வீடுகளையும் மக்கள் தொகை சுமார் 400 என்ற அளவிலும் கொண்ட குக்கிராமம். இக்கிராமமானது வள்ளியூர்-திருச்செந்தூர் பிரதான சாலையில் உள்ள கள்ளிக்குளம் மற்றும் சமூகரெங்கபுரம் ஆகிய இரு ஊர்களுக்கும் இடையே தென்புறத்தில் சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் உள்ளது. தற்போது மேற்சொன்ன பிரதான சாலை வழியாக தினசரி 100-க்கும் மேற்பட்ட சுற்றுகளில் பேருந்து வசதி உள்ளது. சிங்காரத்தோட்டம் கிராம மக்கள் பிரதான சாலை வந்து மேற்படி பேருந்து வசதியினைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதால் சிங்காரத்தோட்டத்திற்கெனப் பேருந்து வசதி செய்ய தற்போது தேவை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

37—

பேருந்து வசதி

வினா எண் 38593—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மதுரை கோட்டம்-3, நாகர்கோவில்மூலம் இயக்கப்படும் பேருந்து எண் 15டி-யை யாக்கோபுரம் வரை இயக்கிடவும், தடம் எண் 560, 561 பேருந்து காரிகோவில் ஊருக்குள் சென்றுவரவும், நாகர்கோவில்-திருச்செந்தூர் வரை இயக்கப்படும் ட்டி.எஸ்.எஸ். பேருந்து பொன்னார்குளம் விலக்கில் நின்று செல்லவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

யாக்கோபுரம் பகுதியில் பயன்பாட்டிற்கெனக் கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தடம் எண் 15 எல் நாகர்கோவில்-யாக்கோபுரம்-12 நடைகள், தடம் எண் 15 டி/வி. நாகர்கோவில் ஆரல்வாய்மொழி - 4 நடைகள், தடம் எண் 15டி/4எல்-2 நடைகள். இந்நிலையில் தடம் எண் 15டி-ல் ஆரல்வாய்மொழி வழி ஆரல்வாய்மொழி/ஆவரைகுளம் செல்லும் நடைகளை மாற்றும்போது தற்போது பயன்பெற்று வருவோர் பாதிப்படைவர். தற்போது தடம் எண் 560, 561 வழித் தடப் பேருந்துகள் காரிகோவில் ஊருக்குள் சென்று வருமாறு இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் 570, 570சி, 572, 573, 560, 561-ல் இயக்கப்பட்டு வரும் 12 பேருந்துகள் பொன்னார்குளம் விலக்கில் நின்று செல்கின்றன. நீண்ட தூர நேரடிப் பயணிகளின் கோரிக்கையின் பேரில் இரு பேருந்துகள் மட்டுமே கட்டண நிலைகளில் மட்டும் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கி குறைந்த பயண நேரத்தில் ட்டி.எஸ்.எஸ். (T.S.S.) பயணநேர சேமிப்புப் பேருந்தாக இயக்கப்பட்டு பயணிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. எனவே, நாகர்கோவில்-திருச்செந்தூர் பேருந்துகளை பொன்னார்குளம் விலக்கில் நிறுத்திச் செல்ல இயலாது.

38—

பேருந்து வசதி

வினா எண் 38679—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மதுரை கோட்டம்-3 மூலம் இயக்கப்படும் தடம் எண் 567, பேருந்தை டோனாவூர், புலிக்குறிச்சி கிராமங்கள் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக (மதுரை) லிமிடெட், நாகர்கோவில் வட்டாரம்மூலம் நாகர்கோவில்-பாபநாசம் வழித் தடத்தில் இரு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஒரு பேருந்து திருக்குறுங்குடி, டோனாவூர் விலக்கு வழியாகவும், ஒரு பேருந்து ஏர்வாடி, வடுகச்சிமதில், சவலக்காரன்குளம், களக்காடு வழியும் இயக்கப்படுகிறது. இந்த இரு பேருந்துகளின் தடத்தை மாற்றி இயக்கும்போது தற்போது பயன்பெற்று வருவோர் பாதிப்புக்குள்ளாவர். மேலும், டோனாவூர் மற்றும் புலியூர்குறிச்சி பகுதிகளில் இப்போக்குவரத்துக் கழக திருநெல்வேலி வட்டாரப் பேருந்துகள் போதுமான அளவில் உள்ளன.

39—

பேருந்து வசதி

வினா எண் 39022—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி மதுரை கோட்டம்-II வள்ளியூர் பணிமனைமூலம் வள்ளியூரிலிருந்து கன்னங்குளம் வரை இயக்கப்பட்டு வரும் நகரப் பேருந்து தடம் எண் 13-ஐ நாள் முழுவதும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை-திருநெல்வேலி வட்டார வள்ளியூர் பணிமனையிலிருந்து தடம் எண் 13-ன்மூலம் வள்ளியூர்-அஞ்சுகிராமம்/பனகுடி/களக்காடு/பனகுடி கன்னங்குளம் என பல்முனை வழித்தடத்தினதில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இவற்றில் பனகுடி-கன்னங்குளத்திற்கென தினசரி 5 சுற்றுகளில் பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது. வினாவில் குறிப்பிட்டவாறு தடம் 13-ன் அனைத்துச் சுற்றுக்களும் கன்னங்குளத்திற்கு இயக்கப்படும்பட்சத்தில் ஏனைய ஊர்களுக்கு இயக்கப்படும் சுற்றுக்கள் இழப்பு ஏற்பட்டு புதிய பிரச்சினை உருவாக ஏதுவாகும். கன்னங்குளம் கிராம மக்கள் கன்னங்குளத்திலிருந்து மிக அருகிலுள்ள பிரதானசாலைக்கு வந்து பயணம் செய்ய போதிய பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, தடம் எண் 13-ஐ முழுநேரப் பேருந்தாக கன்னங்குளத்திற்கு இயக்க இயலாத நிலை உள்ளது.

40—

பேருந்து வசதி

வினா எண் 39564—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம், மடப்புரம், கணக்கன்குடி, வெங்கட்டி, கருங்குளம் வழியாக கானூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட வழித் தடமான மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம், மடப்புரம், கணக்கன்குடி, வெங்கட்டி, கருங்குளம் வழியாக கானூர் செல்லும்

வழித் தடத்தில் சடங்கி கிராமத்தைத் தவிர மற்ற கிராமங்கள் அனைத்திற்கும் மதுரை மற்றும் சிவகங்கையிலிருந்து போதுமான அளவிற்கு நகரப் பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது. குறைவான குடியிருப்புகள் கொண்ட சடங்கி கிராம மக்கள் கே. பெத்தானேந்தல் மற்றும் கணக்கன்குடிக்குள்ள பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, வினாவில் தெரிவிக்கப்பட்ட புதிய வழித் தடம் இயக்குமளவிற்கு அத்தடப் பகுதிகளில் தேவை எழவில்லை. மேலும், இத்தடத்தில் கணக்கன்குடியிலிருந்து சடங்கி வரை, பேருந்து இயக்க இயலாத அளவிற்குச் சாலை குண்டும் குழியுமாக உள்ளது.

41—

பேருந்து வசதி

வினா எண் 39565—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை-இடைக்காட்டூர் (வழி) வேம்பத்தூர் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட நகரப் பேருந்தை அதே வழித் தடத்தில் மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தற்போது இயக்கப்பட்டு வரும் நகரப் பேருந்துகள் அனைத்தும் பல்முனை வழித் தடத்தின்கீழ் இயக்கப்படுவதாலும், போதிய நேரம் இன்மையாலும், அதிக தூரம் இயக்கப்படுவதாலும், பள்ளி செல்லும் குழந்தைகளின் வசதிக்காக இயக்கப்பட்டு வருவதாலும், தற்போதுள்ள பேருந்துகளை வைத்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும், புதிய வழித் தடங்கள் இயக்கும்பட்சத்தில் முன்னுரிமை அளித்து பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

42—

பேருந்து வசதி

வினா எண் 39568—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மதுரையிலிருந்து திருப்புவனம் வழியாக கீழடிக்கு நகரப் பேருந்தை ஐந்து முறை இயக்கவும், ஊருக்குள் வந்து செல்லவும், அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம் வழியாக கீழடி ஒரு சுற்று வழித் தடமாகும். தற்போது மதுரையிலிருந்து நேர்வழியில் சிலைமான் வழியாக 4 தனி நடைகள் கீழடிக்கு இயக்கப்படுகின்றன. இது தவிர, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கீழடி வழியாக கொந்தகை, மேலவெள்ளூர் மற்றும் மாங்குடி ஆகிய இடங்களுக்கு 36 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, கீழடி கிராமத்திற்குத் தற்போதுள்ள வசதிகள் போதுமானது.

43—

பேருந்து வசதி

வினா எண் 39889—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை, கோட்டம் III மூலம் இயக்கப்படும் தடம் எண் 570 டி.எஸ்.எஸ்., 572 டி.எஸ்.எஸ். ஆகிய பேருந்துகள் விஸ்வநாதபுரத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குறைந்த பயண நேரத்தில் நேரடிப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நாகர்கோவிலிலிருந்து தூத்துக்குடிக்கு 570 டி.எஸ்.எஸ். என்ற வழித் தடப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. வினாவில் குறிப்பிட்ட விஸ்வநாதபுரத்திற்கு அவ்வழியாக இயக்கப்படும் தடம் எண் 560, 570 மற்றும் 572 ஆகிய வழித் தடப் பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. மேலும் விஸ்வநாதபுரத்தை பேருந்து நிறுத்தமாகக் கொண்டு தினசரி 227 நடைகளில் நகர மற்றும் புறநகர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்து வசதிகளே விஸ்வநாதபுரத்திற்குப் போதுமானதாக உள்ளதால், தடம் எண் 570 டி.எஸ்.எஸ். பேருந்தினை விஸ்வநாதபுரத்தில் நிறுத்திச் செல்லும் தேவை எழவில்லை.

44—

பேருந்து வசதி

வினா எண் 40044—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து திருப்புவனம், வயல்சேரி வழியாகப் பழையனூருக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழையனூர் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் மதுரை தெப்பக்குளத்திலிருந்து திருப்புவனம், வயல்சேரி வழியாக பழையனூருக்கு இயக்கப்பட்டு வந்த பேருந்து, பெரியார் பேருந்து நிலையம் வரை நீட்டிக்கப்பட்டு, 25-08-2007 முதல் இயக்கப்பட்டு வருகிறது. அதன்படி தற்போது பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து பழையனூருக்கு 11 தனி நடைகளும், திருப்புவனத்திலிருந்து பழையனூருக்கு 5 தனி நடைகளும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

2008 நவம்பர் 13]

45—

பேருந்து வசதி

வினா எண் 40963—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அட்டகட்டி அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்குப் பேருந்துகள் காலையிலும், மாலையிலும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அட்டகட்டி அரசு உயர்நிலைப் பள்ளி வால்பாறை-பொள்ளாச்சி பிரதான சாலையின் அருகில் அமைந்துள்ளது. இப்பள்ளி நேரத்திற்கேற்ப பேருந்து ஒன்று தினசரி 2 நடைகள் இயங்கி வருகிறது. இதுதவிர வால்பாறை-பொள்ளாச்சி வழித் தடத்தில் இயங்கும் அனைத்துப் பேருந்துகளும் இப்பள்ளி மாணவ, மாணவியர்களை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. இந்நிலையில் கூடுதலாகப் பேருந்துகள் இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

பேருந்து வசதி

வினா எண் 40979—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலிருந்து முனைவென்றி வரை இயக்கப்படும் நகரப் பேருந்து மேலநெட்டூருக்குள் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமக்குடியிலிருந்து மேலநெட்டூருக்குப் நேரடியாக ஆறு நடைகளும், பரமக்குடியிலிருந்து மானாமதுரைக்கு இயக்கப்படும் பேருந்துகள்மூலம் 20 நடைகளும் நாள் ஒன்றுக்கு இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு விகிதம் மிகவும் குறைவாக இருப்பதால், தற்போது இதுவே போதுமானதாகும். பயணிகளின் அடர்வு விகிதம் அதிகரிக்கும் பட்சத்தில் தேவையின் அடிப்படையில் கூடுதல் நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

பேருந்து வசதி

வினா எண் 40980—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து தெ.புதுக்கோட்டை வழியாகப் பரமக்குடிக்கும், மானாமதுரை-மேலப்பிடாவூர், தாயமங்கலம் வழி சானாரேந்தல் விலக்கு வரையிலும், நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து தெ. புதுக்கோட்டை வழியாக பரமக்குடிக்கு நாள் ஒன்றுக்கு 20 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மானாமதுரையிலிருந்து மேலப்பிடாவூர்க்கும், தாயமங்கலத்திற்கும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மானாமதுரை-மேலப்பிடாவூர், தாயமங்கலம் வழியாக சானாரேந்தல் விலக்கு வரை இயக்கக் கோரும் வழித் தடம் புதிய வழித் தடமாக இருப்பதால் புதிய வழித் தடங்கள் இயக்கும்பட்சத்தில் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2008 நவம்பர் 13]

48—

பேருந்து வசதி

வினா எண் 40983—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும், மானாமதுரையில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வழியாக இயக்கப்படும் காரைக்குடி மண்டலப் பேருந்துகள் அனைத்தும் மானாமதுரையில் நின்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன.

49—

பேருந்து வசதி

வினா எண் 40984—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வயல்சேரி கிராம மாணவர்களின் நலன் கருதி பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் பிரமனூர் ஊராட்சியைச் சேர்ந்த வயல்சேரிக்கு, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 6 தனி நடைகளும் திருப்புவனத்திலிருந்து 2 நடைகளும் பேருந்து வசதி உள்ளது. இது தவிர, வயல்சேரி வழியாக வி. கரிசல்குளம், பழையனூர், ரெட்டைக்குளம் மற்றும் தச்சனேந்தல்

கிராமங்களுக்கு மதுரையிலிருந்தும் திருப்புவனத்திலிருந்தும் 34 தனி நடைகளும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்த இயக்கத்தில் காலை/மாலை பள்ளி நேரங்களில் பேருந்து வசதி உள்ளது. வயல்சேரி, கிராம மாணவர்களுக்குத் தற்போதுள்ள நடைகள் போதுமானவையாகும்.

50—

பேருந்து வசதி

வினா எண் 41431—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்திலுள்ள பள்ளி மாணவ, மாணவிகளுக்குக் கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து திருப்புவனத்திற்கு காரைக்குடி மண்டல நகரப் பேருந்துகள்மூலம் நாள் ஒன்றுக்கு 22 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், திருப்புவனம் வழியாக இயக்கப்படும் புறநகர்ப் பேருந்துகள் திருப்புவனத்தில் நின்று செல்கின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் மதுரை மண்டல நகரப் பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகளின் அடர்வு விகிதம் குறைவாக இருப்பதால் தற்போது இதுவே போதுமானதாக உள்ளது. பயணிகளின் அடர்வு விகிதம் அதிகரிக்கும்பட்சத்தில் தேவையின் அடிப்படையில் கூடுதல் நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

51—

பேருந்து வசதி

வினா எண் 41818—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

மேல்மலையனூர் தொகுதியில் பொன்னங்குப்பம், அனந்தபுரம், அத்தியூர் ஆகிய பகுதிகளுக்குக் கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மேல்மலையனூர் தொகுதியில் உள்ள பொன்னங்குப்பம், அனந்தபுரம், அத்தியூர் ஆகிய கிராமங்களுக்கு புறநகர் தடம் எண் 124, 227 மூலம் 6 நடைகளும், நகரத் தடம் எண் டி4, டி6, டி18 மூலம் 22 நடைகளும் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக புறநகர் தடம் எண் 117 மூலம் 4 நடைகள் பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது.

52—

பேருந்து வசதி

வினா எண் 41819—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அவலூர்பேட்டையிலிருந்து மேல்மலையனூர், வளத்தி வழியாக செஞ்சி வரை கூடுதலாகப் பேருந்து இயக்கவும், அவலூர்பேட்டை-ஆரணி வரை நகரப் பேருந்து இயக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அவலூர்பேட்டையிலிருந்து மேல்மலையனூர், வடபாலை, ஈயகுணம் வழியாக செஞ்சிக்கும், மேல்மலையனூரில் இருந்து வளத்தி வழியாக செஞ்சிக்கும் பகுதி வாரியாக, பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது. அவலூர்பேட்டையில் இருந்து மேல்மலையனூர், வளத்தி வழியாக செஞ்சி வரை தனியார் பேருந்துகளும் இயங்குகின்றன. இதுவே போதுமானதாகக் கருதப்படுகிறது.

53—

பேருந்து வசதி

வினா எண் 41821—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரத்திலிருந்து கணக்கன்குப்பம், ஆலம்பூண்டி வழியாக செஞ்சிக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அனந்தபுரத்தில் இருந்து கணக்கன்குப்பத்திற்கு இரண்டு தனியார் பேருந்துகள்மூலம் 12 நடைகளும், கணக்கன்குப்பத்தில் இருந்து ஆலம்பூண்டி வழியாக செஞ்சிக்கு அரசு நகரப் பேருந்துகள்மூலம் நாள் ஒன்றுக்கு 24 நடைகளும் பகுதி வாரியாகப் பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது அனந்தபுரத்திலிருந்து கணக்கன்குப்பம், ஆலம்பூண்டி வழியாக செஞ்சிக்கு நகரப் பேருந்து இயக்கும் திட்டம் இல்லை.

54—

பேருந்து வசதி

வினா எண் 41824—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, பரதன்தாங்கல் கிராமத்திலிருந்து திருவண்ணாமலை வரை இயக்கப்பட்ட நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பரதன்தாங்கல்-திருவண்ணாமலை தடத்தில் 78 அரசுப் பேருந்துகள் தினசரி 250 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

2008 நவம்பர் 13]

மேலும் 17 தனியார் பேருந்துகள் 70 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் T21 திருவண்ணாமலையிலிருந்து நல்லான்பிள்ளைபெற்றாள் (வழி) கீழ்ப்பென்னாத்தூர் தினசரி 12 நடைகளும், T32 திருவண்ணாமலை-அவலூர்பேட்டை (வழி) கீழ்ப்பென்னாத்தூர் 8 நடைகளும், T16 திருவண்ணாமலை-மாதப்பூண்டி 4 நடைகளும், திருவண்ணாமலை-ஆலூர் 2 நடைகளும், திருவண்ணாமலை-அவலூர்பேட்டை 4 நடைகளும் ஆக மொத்தம் 10 நடைகளும், T18 திருவண்ணாமலை-அவலூர்பேட்டை 6 நடைகளும், T20 திருவண்ணாமலை-மாணாவரம் 2 நடைகளும், திருவண்ணாமலை-அவலூர்பேட்டை 4 நடைகளும் ஆக 5 நகரப் பேருந்துகள் 42 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. பரதன்தாங்கல் கிராமம் திருவண்ணாமலை செஞ்சி பிரதான சாலையில் உள்ளதால் பயணிகளின் உபயோகம் இல்லாமல் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. மேற்கண்ட நகர வழித் தடங்களின் சராசரி பயணிகள் அடர்வு 35% உள்ளது. மேலும் தற்போது திருவண்ணாமலை செஞ்சி பிரதான சாலையில் 5 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

55—

பேருந்து வசதி

வினா எண் 41864—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், முகாசிபிடாரியூர் பகுதிக்கு பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம் முகாசிபிடாரியூர் வழியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் நகரப் பேருந்துகள் 124 தனி

நடைகள் சென்னிமலை-பெருந்துறை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. தவிர, புறநகர்ப் பேருந்துகளும் முகாசிபிடாரியூர் வழியாக இயக்கப்படுகின்றன.

56—

பேருந்து வசதி

வினா எண் 42012—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், வல்லக்குண்டாபுரம், வலையபாளையம் கிராமத்திற்கு பேருந்து இயக்கவும், மாறுப்பட்டி-எலையமுத்தூர் கிராமத்திற்கு இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தினை மீண்டும் இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

உடுமலையிலிருந்து வல்லக்குண்டாபுரத்திற்கு கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 4 பேருந்துகளின்மூலம் தினசரி 30 நடைகளும், தனியார் பேருந்து ஒன்றின்மூலம் தினசரி 10 நடைகளும், ஆக மொத்தம் 5 பேருந்துகளின்மூலம் தினசரி 40 நடைகளும், உடுமலையிலிருந்து வலையபாளையத்திற்கு ஒரு பேருந்து தினசரி 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

உடுமலையிலிருந்து, மானுப்பட்டி-எலையமுத்தூர் கிராமத்திற்கு கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று தினசரி 4 நடைகள் நிறுத்தமின்றி இயக்கப்பட்டு வருகிறது.

57—

பேருந்து வசதி

வினா எண் 42059—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

கரூர் தொகுதி, புகலூர் தொடர்வண்டி நிலையத்திற்குத் தொடர்வண்டி வரும் நேரங்களில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கரூர் தொகுதி, புகலூர் தொடர்வண்டி நிலையத்திற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலத்திலிருந்து இரு நகரப் பேருந்துகள் 10 நடைகள், முறையே கரூர்-மூலிமங்கலம், கரூர்-வேலாயுதம்பாளையம்-வேலூர் செல்லும் பேருந்துகள், புகலூர் தொடர்வண்டி வரும் நேரங்களில் சென்று பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. மேலும், புகலூர் தொடர்வண்டி நிலையத்தின் வழியாகத் தொடர்வண்டி வந்து செல்லும் நேரங்களில் இரு மினி பேருந்துகள் இயக்கப்பட்டு, பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. அவை சத்திரம்-வேலூர் பேருந்து நிலையம், வேலாயுதம்பாளையம், கே.பரமத்தி ஆகிய வழித் தடங்களில் 32 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

58—

பேருந்து வசதி

வினா எண் 43506—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியிலிருந்து பொறையாறு வரை இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட 4 ஆம் எண் மற்றும் 12 ஆம் எண் நகரப் பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சீர்காழி-பொறையாறு (வழி) அண்ணன்கோயில், அல்லிவிளாகம், கருவிழந்தநாதபுரம், ஆக்கூர் கிராஸ் ரோடு, திருக்கடையூர் மற்றும் தரங்கம்பாடி தடத்தின் நீளம் 33 கிலோ மீட்டர் ஆகும். இத்தடத்தில் சீர்காழி நகர் பேருந்துகள் தடம் எண் A4 மற்றும் A12 ஆகியவை இயக்கப்பட்டன. சிதம்பரம்-காரைக்கால் (வழி) சீர்காழி, கருவிழந்தநாதபுரம், ஆக்கூர் கிராஸ் ரோடு, திருக்கடையூர்

[2008 நவம்பர் 13

தரங்கம்பாடி மற்றும் பொறையாறு தடத்தில் சுமார் 20 நிமிட இடைவெளியில் அரசு/தனியார் புறநகர்ப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருதால், பயண நேரம் குறைவு கருதி புறநகர்ப் பேருந்துகளிலேயே பயணம் செய்திட பொதுமக்களும்/பயணிகளும் விழைகின்றனர். இதனால் இயக்கப்பட்ட தடம் எண் A4 மற்றும் A12 நகரப் பேருந்துகளில் போதிய மக்கள் பயன்பாடு மற்றும் வருவாயும் அமைந்திடாத நிலையில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தம் செய்யப்பட்டன. மீண்டும் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் சீர்காழி புறநகர்ப் பேருந்து தடம் எண் 445 மூலம் சீர்காழி-பொறையாறு (வழி) மங்கைமடம், திருவெண்காடு, மேலையூர், கருவிழந்தநாதபுரம், ஆக்கூர் கிராஸ் ரோடு, திருக்கடையூர், தரங்கம்பாடி தடத்தில் 20-03-2007 முதல் தினசரி 10 நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

59—

பேருந்து வசதி

வினா எண் 43507—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கேவரோடை கிராமத்திற்கு பேருந்து வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சீர்காழி-கேவரோடை (வழி) செம்மங்குடி, மாதானம் கிராஸ் ரோடு, வடகால், எடமணல், வருசபத்து மற்றும் வேட்டங்குடி தடத்தின் நீளம் 12.0 கிலோ மீட்டர் ஆகும். கோரிக்கை தடத்தில் வேட்டங்குடி பிரிவு சாலை முதல் கேவரோடை கிராமம் வரை இடைப்பட்ட 2 கிலோ மீட்டர் பகுதி மட்டும் பேருந்து வசதி பெறாத தடப் பகுதி ஆகும். எஞ்சிய பகுதிகள் அனைத்திலும் பகுதிப் பகுதியாகப் பேருந்து வசதி உள்ளது.

தற்போது இப்பகுதி கிராம மக்கள் வேட்டங்குடி பிரிவு சாலையினை அடைந்து சீர்காழி-அளக்குடி (வழி) வேட்டங்குடி

2008 நவம்பர் 13]

தடத்தில் இயக்கப்பட்டுவரும் சீர்காழி நகரப் பேருந்து தடம் எண் A17-ன் மூலம் 2 நடைகளையும், தனியார் பேருந்து மூலம் சீர்காழி-சிதம்பரம் (வழி) வேட்டங்குடி தடத்தில் இயக்கப்பட்டு வரும் 8 நடைகளையும் பயன்படுத்தி பேருந்து வசதி பெற்று வருகின்றனர்.

வேட்டங்குடி பிரிவு சாலையிலிருந்து கேவரோடை பிரிவு சாலை வரை உள்ள 0.5 கிலோ மீட்டர் தூரம் தற்போது சாலை போடும் பணி நடைபெற்று வருவதாலும் கேவரோடை பிரிவு சாலையிலிருந்து கேவரோடை கிராமம் வரை உள்ள 1.5 கிலோ மீட்டர் சாலைப் பகுதி மிகக் குறுகலாக அமைந்துள்ளதாலும் இக்கிராமத்திற்குப் பேருந்து வசதி அளித்திட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

60—

பேருந்து வசதி

வினா எண் 43543—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் நகர இரயில் நிலையத்திலிருந்து இரயில் வரும் நேரத்திற்கு இணையாக பல்வேறு இடங்களுக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து, சேலம் நகர இரயில் நிலையம் வழியாக காலையில் 2 நடைகள் மற்றும் மாலையில் 2 நடைகள் என 4 நடைகள் இயங்கி வருகின்றது. சேலம் நகர இரயில் நிலையம் வழியாக, சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து அம்மாபேட்டை, அயோத்தியாபட்டணம் வழியாக ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி உள்ளது. மேலும் அடிவாரம், அஸ்தம்பட்டி, கன்னங்குறிச்சியிலிருந்து முள்ளுவாடி கேட் வழியாக சேலம் நகரப் பேருந்து நிலையத்திற்கு ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளது. மேற்குறிப்பிட்ட முள்ளுவாடி கேட் பேருந்து நிறுத்தத்திலிருந்து 200 மீட்டர் தூரத்தில் சேலம் நகர இரயில் நிலையம் உள்ளது. எனவே, மேற்கண்ட பேருந்து வசதியே சேலம் இரயில் நிலையம் செல்லும் பயணிகளுக்குப் போதுமானதாகும்.

[2008 நவம்பர் 13

61—

பேருந்து வசதி

வினா எண் 43735—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனியிலிருந்து பாச்சலூருக்கு இயக்கப்பட்டு நிறுத்திவைக்கப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பழனியிலிருந்து பாச்சலூருக்கு இயக்கப்பட்ட பேருந்து நேரடிப் பயணிகளின் பயண அடர்வு மிகக் குறைந்த அளவில் இருந்ததால் அவ்வழித் தடப் பேருந்து நிறுத்தப்பட்டு ஒட்டன்சத்திரம்-பாச்சலூர் என இயக்கப்பட்டு வருகிறது. தற்போது பழனியிலிருந்து ஒட்டன்சத்திரம் வழியாக அரசு புறநகர்ப் பேருந்துகள்மூலம் தினசரி 486 தனி நடைகளிலும், தனியார் புறநகரப் பேருந்துகள்மூலம் தினசரி 250 தனி நடைகளிலும் பேருந்து வசதிகள் உள்ளன. ஒட்டன்சத்திரத்திலிருந்து பாச்சலூருக்கு அரசு புறநகர்ப் பேருந்துகள்மூலம் தினசரி 21 தனி நடைகளிலும், தனியார் புறநகரப் பேருந்துகள்மூலம் தினசரி 8 தனி நடைகளிலும் பேருந்து வசதிகள் உள்ளன. மேற்கண்ட நடைகளைப் பயன்படுத்தி பழனியிலிருந்து பாச்சலூர் செல்ல போதுமான பேருந்து வசதிகள் உள்ளது.

62—

பேருந்து வசதி

வினா எண் 44057—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை புதிய பேருந்து நிலையத்திலிருந்து உடைகுளம், ஆலங்குளம், கல்குறிச்சி வழியாக வி. கரிசல்குளம் வரை காலை மற்றும் மாலையில் நகரப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து உடைகுளம், ஆலங்குளம், கல்குறிச்சி வழியாக 7 கி.மீ. தொலைவில் வி. கரிசல்குளம் உள்ளது. வி. கரிசல்குளம் செல்லும் வழியில் இரயில்வே கேட் பிரித்து வேலை நடைபெறுவதால், செம்மண் குவிக்கப்பட்டுள்ளது. மேலும், 0.5 கி.மீ. மண்சாலையாகவும், மழையினால் சாலை அரிக்கப்பட்டும் உள்ளது. வி. கரிசல்குளத்தில் பேருந்து சென்று திரும்புவதற்கு போதிய இட வசதி இல்லாமலும் உள்ளது. எனவே, சாலை சரி செய்யப்படும் பட்சத்தில் தேவையின் அடிப்படையில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

63—

பேருந்து வசதி

வினா எண் 45839—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் முதல் கொல்லங்காடு தடத்தில் நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாகர்கோவிலிலிருந்து மார்த்தாண்டம், களியக்காவிளை, ஆறுதேசம் ஆஸ்பத்திரி வழியாக இயங்கி வந்த 311 எண் என்ற வழித் தடப் பேருந்து பயணிகள் பயன்பாடு இல்லாமல் மிகக் குறைந்த வருவாயுடன் செயல்பட்டதால் பல வருடங்களுக்கு முன்னரே நிறுத்தப்பட்டது. தற்போது நாகர்கோவிலிலிருந்து மார்த்தாண்டம், களியக்காவிளை, பாறசாலை, செங்கவிளை வழியாக கொல்லங்கோட்டிற்கு 14 பேருந்துகள்மூலம் தினசரி 106 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மார்த்தாண்டத்திலிருந்து களியக்காவிளை, ஆறுதேசம் ஆஸ்பத்திரி வழியாக வள்ளவிளைக்கு தடம் எண் 83பி-ன்மூலம் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

[2008 நவம்பர் 13

மேற்கண்டவாறு வினாவில் குறிப்பிட்ட பகுதிக்குப் போதுமான பேருந்து வசதிகள் உள்ளதால் இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கும் தேவை எழவில்லை.

64—

பேருந்து வசதி

வினா எண் 45840—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம், குலசேகரம் தும்பக்கோடு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் புறநகர்ப் பேருந்துகளில் ஏதாவது ஒன்றினைப் பள்ளி நேரங்களில் விலவூர்கோணம், மாடத்தூர்கோணம், அரமன்னம் வழியாக இயக்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

விலவூர்கோணம், மாடத்தூர்கோணம் வழியாகப் பேருந்து வசதி கேட்டு பெறப்பட்ட கோரிக்கையின் பேரில் தடம் எண் 89 என்ற நகரப் பேருந்துமூலம் காலை 7-15 மணியளவில் குலசேகரத்திலிருந்தும் காலை 8-40 மணியளவில் மார்த்தாண்டத்திலிருந்தும் பள்ளி நேரங்களில் விலவூர்கோணம், மாடத்தூர்கோணம், அரமன்னம் வழியாகப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

65—

பேருந்து வசதி

வினா எண் 46122—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு-அம்மணம்பாக்கம் வழி கிளாப்பாக்கம் வரை கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது செங்கல்பட்டிலிருந்து கிளாப்பாக்கத்திற்கு அம்மணம்பாக்கம் வழியாக தினசரி 10 நடைகள் நகரத் தடம்

2008 நவம்பர் 13]

எண் டி.27 மூலம் இயக்கப்படுகிறது. இப்பேருந்தின் தற்போதைய பயணிகள் அடர்வு 43 விழுக்காடும், ஒரு கி.மீ.-க்கு வருவாய் ரூ.10.85 மட்டுமே உள்ளது. இயக்கப்படும் பேருந்தே தற்பொழுது உள்ள போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதெனக் கருதப்படுகிறது.

66—

பேருந்து வசதி

வினா எண் 46125—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலிருந்து கூடுவாஞ்சேரி, சிங்கபெருமாள்கோவில் வழி அனுமந்தபுரத்திற்கும், மறைமலைநகர்-செங்கல்பட்டு வழி திருக்கழுக்குன்றம் வரையும், திருவான்மியூர்-சோழிங்கநல்லூர்-தாம்பரம்-சிங்கபெருமாள்கோயில் வழி திருக்கச்சூருக்கும் மாநகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருக்கழுக்குன்றம் மாநகரப் போக்குவரத்துக் கழக இயக்க எல்லைக்கு அப்பால் அமைந்துள்ளது. திருக்கச்சூர்-பிராட்வே மற்றும் திருக்கச்சூர்-திருவான்மியூர் இடையே தற்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம்மூலம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனினும் புதிய பேருந்துகள் பெறப்படும்போது அனுமந்தபுரம் மற்றும் திருக்கச்சூருக்கு மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்குவது குறித்து கருத்தில் கொள்ளப்படும்.

67—

பேருந்து வசதி

வினா எண் 46129—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடையாறு-திருப்போரூர்-மானாம்பதி வழியாக எச்சூர் வரையும், தாம்பரம்-செங்கல்பட்டு (வழி)-பொன்விளைந்தகளத்தூர் வரையும் மாநகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அடையாறு-திருப்போரூர்-மானாம்பதி-எச்சூர் தடத்தின் நீளம் 50.0 கி.மீ. ஆகும். இதில் அடையாறில் இருந்து மானாம்பதி வரையிலான 45.0 கி.மீ. தூரம் மாநகர எல்லையிலும் மானாம்பதியிலிருந்து எச்சூர் வரையிலான 5.0 கி.மீ. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் எல்லையில் வருகிறது. தாம்பரம்-பொன்விளைந்தகளத்தூர் வழி செங்கல்பட்டு தடத்தின் நீளம் 42.0 கி.மீ. ஆகும். இதில் தாம்பரத்திலிருந்து செட்டிப்புண்ணியம் வரையிலான 24.0 கி.மீ. தூரம் மாநகரப் போக்குவரத்துக் கழக எல்லையிலும் செட்டிப்புண்ணியத்திலிருந்து பொன்விளைந்தகளத்தூர் வரையிலான 18.0 கி.மீ. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரத்தின் எல்லையிலும் வருகிறது. எனவே, மேற்கண்ட தடங்களில் மாநகரப் பேருந்துகளை இயக்க இயலாது. இத்தடத்தின் அனைத்துப் பகுதிகளும் நன்கு போக்குவரத்து வசதி பெற்றுள்ளன. புதிய தடங்கள் இயக்கப்படும்பொழுது மேற்கண்ட தடங்களில் பேருந்துகளை இயக்க தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் மண்டலத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

68—

பேருந்து வசதி

வினா எண் 46990—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, நாகர்கோவில்-சிவந்தி ஆதித்தன் கல்லூரிக்கு ஆசாரிபள்ளம், மேலச்சங்கரன்குழி, இராஜாக்கமங்கலம், ஈத்தாமொழி,

2008 நவம்பர் 13]

கேசவன்புத்தன்துறை, புத்தன்துறை வழியாகப் பேருந்தும் குறும்பனை-நாகர்கோவில் வழி, குளச்சல் மணவை, ஆசாரிப்பாளையம் டி.எஸ்.எஸ். பேருந்தும், ஈத்தாமொழி-தக்கலை-களியக்காவிளை, புதிய பேருந்தும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவிலிலிருந்து சிவந்தி ஆதித்தன் கல்லூரிக்கு தடம் எண் 36, 36பி, 36சி, 36 பிசிஜி, 50வி, 54, 5டி/14இ, 7பி ஆகிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் 54 பேருந்தில் இராஜாக்கமங்கலம், ஈத்தாமொழி வழியாக சிவந்தி ஆதித்தன் கல்லூரிக்கு தினசரி 8 தனி நடைகளில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. நாகர்கோவிலிலிருந்து குளச்சலுக்கு ஆசாரிபள்ளம், மணவாளக்குறிச்சி வழியாக தினசரி 14 நடைகளில் டி.எஸ்.எஸ். பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. நாகர்கோவிலிலிருந்து தடம் எண் 5பி பிசிஜி ஆசாரிபள்ளம், மணவாளக்குறிச்சி, குளச்சல் வழியாக குறும்பனைக்கு 8 நடைகளில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்துகளில் பயணிகளின் பயன்பாடு முழுமையானதாகவும் இல்லை. ஈத்தாமொழியிலிருந்து நாகர்கோவிலுக்கு தடம் எண் 38, 38ஏ, 38பி, 38சி, 38டி, 38இ, 38ஜி/கே. 38எல், 38பி/38சி, 40, 51 மற்றும் Appia to Appia ஆகிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாகர்கோவிலிலிருந்து தக்கலை வழியாக களியக்காவிளைக்கு 5 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. வினாவில் குறிப்பிட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் மேற்கண்டவாறு போதிய பேருந்து வசதி உள்ளது.

69—

பேருந்து வசதி

வினா எண் 46997—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, குறும்பனையில் இருந்து, ஆலஞ்சி தெற்குபிடாகை, பன்னீர்முற்றம், பாலப்பள்ளம், கருங்கல், திக்கணங்கோடு, திங்கள்நகர், திருவிதாங்கோடு வழி தக்கலைக்குப் புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தக்கலையிலிருந்து கருங்கலுக்குத் தடம் எண் 10சி பேருந்து திருவிதாங்கோடு, திங்கள்நகர், திக்கணங்கோடு வழியாக இயக்கப்பட்டு வருகிறது. கருங்கலிலிருந்து பாலப்பள்ளம் வழியாக குளச்சலுக்கும், கருங்கலிலிருந்து ஆலஞ்சி வழியாக குறும்பனைக்கும் தேவைக்கேற்ப பேருந்து வசதிகள் உள்ளன. இந்தத் தடங்களில் பயணிகளின் பயன்பாடு முழுமையானதாகவும் இல்லை. பயணிகளின் பயன்பாடு அதிகரிக்கும்போது இக்கோரிக்கை குறித்துப் பரிசீலிக்கப்படும்.

70—

பேருந்து வசதி

வினா எண் 46998—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, நாகர்கோவில்-குளச்சல் (வழி ஈத்தாமொழி) புதிய பேருந்து இயக்கவும், மணக்குடி-நீரோடி (தடம் எண் 302 வழி இராஜாக்கமங்கலம், பிள்ளைத்தோப்பு-முட்டம், குளச்சல்) கூடுதல் பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவிலிலிருந்து ஈத்தாமொழிக்குத் தடம் எண் 38, 38ஏ, 38பி, 38சி, 38இ, 38டி, 38ஜி/கே, 38ஜெ, 38எம், 38என்,

2008 நவம்பர் 13]

38என்/எம் ஆகிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் 38பி பேருந்து ஈத்தாமொழி, இராஜாக்கமங்கலம் வழியாக இயக்கப்பட்டு வருகிறது. ஈத்தாமொழி பயணிகள் இராஜாக்கமங்கலத்தில் பேருந்து மாறி குளச்சலுக்கு செல்ல போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. கடற்கரை கிராமங்களை இணைக்கும் பேருந்து தடம் எண் 302 மணக்குடியிலிருந்து ஈத்தாமொழி, இராஜாக்கமங்கலம், பிள்ளைத்தோப்பு, முட்டம், குளச்சல் வழியாக நீரோடிக்கு இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்தில் பயணிகளின் பயன்பாடு முழுமையானதாக இல்லை. பயணிகளின் பயன்பாடு அதிகரிக்கும்போது இக்கோரிக்கை குறித்துப் பரிசீலிக்கப்படும்.

71—

பேருந்து வசதி

வினா எண் 47437—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், ஓமலூர், பண்ணப்பட்டி, மாரக்கவுண்டன்புதூருக்குப் புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்துகள் மூன்றின்மூலம் மாரக்கவுண்டன்புதூர் கிராமத்திற்கு தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

72—

பேருந்து வசதி

வினா எண் 47674—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதி, திண்டுக்கல், வன்னியபாறைப்பட்டிக்குத் தனிப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திண்டுக்கல்லிலிருந்து வன்னியபாறைப்பட்டி சுமார் 6.4 கி.மீ. என்ற குறுகிய தூரத்தில் உள்ளது. இக்கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 250 என்ற அளவில் உள்ளது. திண்டுக்கல்-வன்னியபாறைப்பட்டி வழித் தடத்தில் வன்னியபாறைப்பட்டி பாலம் முதல் வன்னியபாறைப்பட்டி வரையிலான 2 கி.மீ. சாலை, பழுதடைந்து பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. இருப்பினும், வன்னியபாறைப்பட்டி கிராம மக்கள் தற்போது திண்டுக்கல்லிலிருந்து ஏரோடிராம் நிறுத்தம் வழியாக இயக்கப்படும் 178 தனி நடைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். ஏரோடிராமிலிருந்து வன்னியபாறைப்பட்டி பாலம் சுமார் 0.5 கி.மீ. தூரம் உள்ளது. பாலம் சீர் செய்யப்பட்ட பின்னர் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

73—

பேருந்து வசதி

வினா எண் 47716—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, மண்டைக்காடு திங்கள் நகர் வழியாக குலசேகரத்துக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் மற்றும் திங்கள் நகர் பகுதிகளில் இருந்து குலசேகரத்திற்குத் தொடர்ந்து பேருந்து வசதிகள் உள்ளன. மண்டைக்காடு பகுதியினர் தங்கள் அருகில் உள்ள திங்கள் நகர் வந்து குலசேகரம் செல்ல தொடர்ந்து பேருந்து வசதிகள் உள்ளன. இப்பகுதிகளுக்கு இயக்கப்படும் பேருந்துகள் 50%-க்கும் குறைவான பயணி பயன்பாட்டுடன் செயல்பட்டு வருவதாலும் புதிய பேருந்து இயக்கும் தேவை எழவில்லை.

2008 நவம்பர் 13]

74—

பேருந்து வசதி

வினா எண் 47717—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, ஈத்தாமொழி-களியக்காவிளைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈத்தாமொழி-நாகர்கோவில் இடையே தடம் எண் 38, 38ஏ, 38பி, 38சி, 38டி, 38இ ஆகிய வழித் தடங்களில் தொடர்ந்து நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி-களியக்காவிளை வழித் தடத்தில் 15 நிமிட இடைவெளிகளில் நாகர்கோவில் வழியாக களியக்காவிளை செல்ல தடம் எண் 303 வழித் தடம்மூலம் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்து வசதிகளை ஈத்தாமொழி பகுதியினர் பயன்படுத்தி களியக்காவிளை செல்லலாம். மேற்கண்டவாறு பகுதிப் பகுதியாகப் பேருந்து வசதிகள் உள்ளதால் புதிய பேருந்துகள் இயக்க தேவை எழவில்லை.

75—

பேருந்து வசதி

வினா எண் 47718—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, நீரோடி-மணக்குடிப் பேருந்தைக் கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரை கிராமங்களை இணைத்து நீரோடி-மணக்குடி என ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இவ்வழித் தடப் பேருந்து செல்லும் அனைத்துப் பகுதிகளிலும் முழுமையான பயணிப் பயன்பாடு இல்லாமல் உள்ளது. பயணிகள் பயன்பாடு அதிகரிக்கும்பட்சத்தில் கூடுதல் பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

76—

பேருந்து வசதி

வினா எண் 47719—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, குளச்சலிலிருந்து ஈத்தாமொழி வழியாக நாகர்கோவிலுக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நாகர்கோவில்-குளச்சல் வழித் தடத்தில் தடம் எண் 5டி வழித் தடப் பேருந்துமூலம் தொடர்ந்து பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாகர்கோவில்-ஈத்தாமொழியை இணைத்து தடம் எண் 38, 38ஏ, 38பி, 38சி, 38டி, 38இ மற்றும் 40 ஆகிய வழித் தடப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஈத்தாமொழி பகுதியினர் தடம் எண் 38பி வழித் தடப் பேருந்து வசதியினைப் பயன்படுத்தி இராஜாக்கமங்கலம் வந்து பேருந்து மாறி குளச்சல் செல்ல பேருந்து வசதிகள் உள்ளதால், வினாவில் கோரப்பட்ட வழித் தடத்தில் புதிய பேருந்து இயக்க தேவை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

77—

பேருந்து வசதி

வினா எண் 47759—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, துவரங்குறிச்சி - கருமலை, புத்தாநத்தம், கனவாய்ப்பட்டி, சிலநாயக்கம்பட்டி, செல்லம்பட்டி, கார்வாடி, கோட்டப்பட்டி, தாதகவுண்டம்பட்டி, பொடங்குபட்டி, எப். தொப்பம்பட்டி, பனமரத்துக்கடை, மணப்பாறை வரை புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கையில் உள்ள வழித் தடம் 18-04-2008 அன்று ஆய்வு செய்யப்பட்டது. இதன் வழித் தட தூரம் 44 கிலோ மீட்டர் ஆகும். கோரிக்கையிலுள்ள வழித் தடத்தில் கனவாய்ப்பட்டி-கார்வாடி 5 கிலோ மீட்டர் சாலை மற்றும் கோட்டப்பட்டி பிரிவு - கோட்டப்பட்டி 2 கிலோ மீட்டர் சாலைகள் மண் சாலைகளாக உள்ளதால் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும், கோரிக்கையில் உள்ள பல ஊர்கள் கீழ்க்கண்டுள்ளவாறு பகுதி பகுதியாகப் பேருந்து வசதி பெற்றுள்ளன.

வ. எண்.	வழித்தடம்	நடைகள்
1	மணப்பாறை-கார்வாடி வழி பொடங்குபட்டி, தாதக்கவுண்டம்பட்டி, கோட்டப்பட்டி (அரசு நகரப் பேருந்துமூலம்)	28
2	வளநாடு கைகாட்டி-புத்தாநத்தம் வழி கார்வாடி, செல்லம்பட்டி, கனவாய்ப்பட்டி (1 மினி பேருந்து மூலம்)	12
3	புத்தாநத்தம்-துவரங்குறிச்சி (10 நிமிடத்திற்கு 1 பேருந்து)	112

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மேலும், கனவாய்பட்டி-கார்வாடி 5 கிலோ மீட்டர் சாலை மற்றும் கோட்டப்பட்டி பிரிவு-கோட்டப்பட்டி 2 கிலோ மீட்டர் உள்ள சாலைகள் மண் சாலைகளாக உள்ளதால், மேற்கண்ட சாலைகள் செப்பனிடப்பட்டதும் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

78—

பேருந்து வசதி

வினா எண் 47761—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, துவரங்குறிச்சி - மணப்பாறைக்கு காலை, மாலை பள்ளி நேரங்களில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, துவரங்குறிச்சி - மணப்பாறை வழித் தடத்தில் காலையில் பள்ளி நேரத்தில் அதாவது 07-50 மணி முதல் 08-45 மணி வரை துவரங்குறிச்சியிலிருந்து 5 நடைகளும், மாலையில் 16-10 மணியிலிருந்து 18-00 மணி வரை மணப்பாறையிலிருந்து 5 நடைகளும், இயக்கப்பட்டு மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், துவரங்குறிச்சி - மணப்பாறை வழித் தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலம் மூலமாக 12 நகரப் பேருந்துகள் தினசரி 74 நடைகள், 16 புறநகர் பேருந்துகள் தினசரி 46 நடைகள் மற்றும் தனியார் துறை பேருந்துகளின்மூலம் 22 நடைகள், ஆக மொத்தம் 142 நடைகள் தினசரி இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

79—

பேருந்து வசதி

வினா எண் 47762—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

(அ) மணப்பாறை-மஞ்சம்பட்டி, மலையடிப்பட்டி, பொன்னக்கம்பட்டி, கலிங்கிபட்டி, அமையபுரம், இலங்காகுறிச்சி, வையம்பட்டி வரை புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மணப்பாறை-மஞ்சம்பட்டி, மலையடிப்பட்டி, பொன்னக்கம்பட்டி, கலிங்கிபட்டி, அமையபுரம், இலங்காகுறிச்சி, வையம்பட்டி வரை உள்ள வழித் தடம் 18-04-2008 அன்று ஆய்வு செய்யப்பட்டது. இத்தடத்தில் கலிங்கிபட்டி - அமையபுரம் 1 கிலோ மீட்டர் சாலை மெட்டல் சாலையாகவும், குண்டும் குழியுமாகவும், குறுகிய சாலையாகவும் உள்ளதால், பெரிய பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும், மணப்பாறை - பண்ணப்பட்டி, வழி மஞ்சம்பட்டி, பொன்னக்கம்பட்டி, கலிங்கிபட்டி, அமையபுரம் வழியாக 2 மினி பேருந்துகள்மூலம் தினசரி 24 நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இவை தவிர, மணப்பாறை-என். பூலாம்பட்டி, வழி மலையடிப்பட்டி, செட்டியப்பட்டி தடத்தில் தினசரி 4 நடைகளும் மற்றும் மணப்பாறை - வையம்பட்டி வழி காவல்காரன்பட்டி, இலங்காகுறிச்சி தடத்தில் தினசரி 10 நடைகளும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலம் மூலமாக இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

80—

பேருந்து வசதி

வினா எண் 48065—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, திருக்கோவிலூர்-மூங்கில்துறைப்பட்டு வரை, திருக்கோவிலூரிலிருந்து கல்லந்தல், ஒட்டம்பட்டு வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, திருக்கோவிலூரிலிருந்து மூங்கில்துறைப்பட்டு வரை வழித்தட நீளம் 46.0 கிலோ மீட்டர் ஆகும். இதில் புறநகரப் பேருந்து வசதி உள்ளது. நகரப் பேருந்து இயக்கிட அரசு நிர்ணயித்துள்ள அதிகபட்ச வழித் தட நீளமான 35.0 கிலோ மீட்டருக்கும் அதிகம் என்பதால் நகரப் பேருந்து இயக்கிட இயலாது. மேலும், திருக்கோவிலூரிலிருந்து கல்லந்தல், ஒட்டம்பட்டு வழியாக கண்டாச்சிபுரம் வரை நகரப் பேருந்து தடம் எண் டி14-ன் மூலம் தினசரி ஆறு நடைகள் பேருந்து வசதி உள்ளது.

81—

பேருந்து வசதி

வினா எண் 48131—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாநகராட்சி 11-வது வார்டு கொங்கு பிரதான சாலையில் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 4, தினசரி 20 நடைகளும், தனியார் பேருந்து ஒன்று தினசரி 16 நடைகளும், ஆக மொத்தம் 5 பேருந்துகள் தினசரி 36 நடைகள் திருப்பூர் பழைய பேருந்து நிலையம்-திருநீலகண்டபுரம் எனக் கொங்கு பிரதான சாலையில் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியின் தற்போதைய பயணிகள் அடர்விற்கு இதுவே போதுமானதாகும்.

2008 நவம்பர் 13]

82—

பேருந்து வசதி

வினா எண் 48480—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம்-செங்கல்பட்டு வழியாக சோகண்டி வரை மாநகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சோகண்டி கிராமம் மாநகர போக்குவரத்துக் கழக இயக்க எல்லைக்கு அப்பால் அமைந்துள்ளதால் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை சோகண்டி வரை இயக்குவதென்பது சாத்தியமில்லை.

83—

பேருந்து வசதி

வினா எண் 49020—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியிலிருந்து கடலையூர், கருப்பூர், முத்தலாபுரம் பாலம், மேலக்கரந்தை, கீழக்கரந்தை, செங்கோட்டை வழியாக புதூர் வரை புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோவில்பட்டியிலிருந்து கடலையூர், கருப்பூர் வழியாக முத்தலாபுரம் பாலம் வரை தினசரி 4 தனி நடைகள் அரசுப் பேருந்துகளும், 12 தனி நடைகள் தனியார் பேருந்துகளும் இயங்கி வருகின்றன. கோவில்பட்டியிலிருந்து எட்டயபுரம், முத்தலாபுரம் பாலம், மேலக்கரந்தை, கீழக்கரந்தை, செங்கோட்டை வழியாக புதூருக்கு தினசரி 4 தனி நடைகள் அரசு புறநகர்ப் பேருந்துகள் இயக்கப்பட்டு

[2008 நவம்பர் 13

வருகின்றன. வினாவில் குறிப்பிட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் பகுதி பகுதியாகவும், அக்கிராம மக்களின் அன்றாட போக்குவரத்து தேவைக்கேற்ப அருகிலுள்ள முக்கிய நகரங்களை இணைத்தும் போதுமான பேருந்து வசதிகள் உள்ளன.

84—

பேருந்து வசதி

வினா எண் 49021—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, தூத்துக்குடியிலிருந்து குளத்தூர், பெரியசாமிபுரம், வேம்பாறு வழியாக கமுதிக்கு இயங்கி வந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தூத்துக்குடியிலிருந்து குளத்தூர், பெரியசாமிபுரம், வேம்பாறு வழியாக கமுதிக்கு இயக்கப்பட்ட பேருந்தானது, 9 வருடங்களுக்கு முன்னரே, குறைந்த பயணிகள் விழுக்காடு காரணமாகவும் நேரடிப் பயணிகள் அதிகம் பயன்படுத்தாததாலும் தொடர்ந்து இயக்க இயலாமல் நிறுத்தப்பட்டது. தற்போது தூத்துக்குடியிலிருந்து கமுதிக்கு கீழ்க்கண்டபடி நேரடிப் பேருந்து வசதிகள் உள்ளன.

1.	திருச்செந்தூர்-கமுதி (வழி) தூத்துக்குடி, குறுக்குச்சாலை, குளத்தூர், சூரன்குடி, வேம்பாறு, சாயல்குடி	1 பேருந்து - 2 சுற்றுகள்
2.	திருச்செந்தூர்-கமுதி (வழி) தூத்துக்குடி, குறுக்குச்சாலை, குளத்தூர், சூரன்குடி, தரக்குடி, சாயல்குடி	1 பேருந்து - 2 சுற்றுகள்
3.	திருச்செந்தூர்-திருப்பத்தூர் (வழி) தூத்துக்குடி, குளத்தூர், சூரன்குடி, வேம்பாறு, சாயல்குடி, கமுதி	1 பேருந்து - 2 சுற்றுகள்

மேற்படி நேரடிப் பேருந்துகள் நீங்கலாக தூத்துக்குடியிலிருந்து சாயல்குடி சென்று (70-க்கும் மேற்பட்ட சுற்றுகள்) கமுதி செல்வதற்கும் போதிய பேருந்து வசதிகள் உள்ளன.

2008 நவம்பர் 13]

பெரியசாமிபுரத்தை பொறுத்தவரை, தற்போதுள்ள 20 சுற்றுகளைப் பயன்படுத்தி வேம்பாறு வந்து கழுதிக்குச் செல்லும்படி தற்போது வசதிகள் உள்ளன.

85—

பேருந்து வசதி

வினா எண் 49120—திரு. ஞா. ஜான் ஜோசப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, ஆறுகாணி மலையோரப் பகுதி-சென்னைக்கு விரைவுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆறுகாணியிலிருந்து சென்னை செல்லும் பயணிகள், நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி, மார்த்தாண்டம் வந்து அங்கிருந்து சென்னைக்கு இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து வசதியைப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் மேற்படி தடத்தில் அரசு விரைவுப் பேருந்து இயக்க தற்போது சாத்தியமில்லை.

86—

பேருந்து வசதி

வினா எண் 49141—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து கீழமேல்குடி, தீத்தான்பேட்டை வழியாக கொம்புக்காரனேந்தல் வரை இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து கீழமேல்குடி செல்லும் சாலை மிகவும் மோசமாக குண்டும், குழியுமாக பேருந்து செல்ல இயலாத நிலையில் இருப்பதால் மானாமதுரையிலிருந்து ஒத்தக்கடை, தீத்தான்பேட்டை வழியாக கொம்புக்காரனேந்தல் வரை பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி சாலை சரி செய்யப்படும்பட்சத்தில் கீழமேல்குடி வழியாகப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

87—

பேருந்து வசதி

வினா எண் 49145—திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி நகரப் பேருந்து வழி தடம் 3பி பேருந்து பெருந்துறையிலிருந்து காலை 8-30 மணிக்கும், மாலை 3-30 மணிக்கும் புறப்பட்டு பெருந்துறை, சீனபுரம், கிரேநகர், பெரியவீரசங்கிலி, கைக்கோளபாளையம், வெள்ளிரவழி, செம்மாண்டம்பாளையம், வேலம்பாளையம் வழியாக குன்னத்தூர் வரை இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித் தடங்களில் இயங்கும் தடம் எண் P3 மற்றும் P10A நகரப் பேருந்துகள்மூலம் காலை 6-15, 9-30, மதியம் 2-00, மாலை 6-05 மணிகளுக்கு பெருந்துறையிலிருந்தும், காலை 7-50, மதியம் 3-00 மணிகளுக்கு குன்னத்தூரிலிருந்தும் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள ஊர்கள் வழியாக 5 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. கோரிக்கை நேரங்களுக்கு மேற்குறிப்பிட்ட ஊர்கள் வழியாக இயக்கப்பட்டால் தற்பொழுது பயன்பெறும் பகுதி பள்ளிக் குழந்தைகளும், பொது

2008 நவம்பர் 13]

மக்களும் பாதிப்படைய நேரிடும் என்பதால் கோரிக்கைப்படி இயக்க சாத்தியகூறுகள் இல்லாத நிலை உள்ளது.

88—

பேருந்து வசதி

வினா எண் 51715—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கரூர் - மாவட்ட ஆட்சியர் வளாகம் - ஏமூர்புதூர், லிங்கத்தூர் - உப்பிடமங்கலம் - சேங்கல் - பஞ்சப்பட்டி - இரும்பூதிப்பட்டி - குளித்தலை வரை புதிய வழித் தடத்தில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் - குளித்தலை (வழி) மாவட்ட ஆட்சியர் வளாகம், ஏமூர்புதூர், லிங்கத்தூர், உப்பிடமங்கலம், சேங்கல், பஞ்சப்பட்டி, இரும்பூதிப்பட்டி வழித்தட நீளம் 59.3 கிலோ மீட்டர் ஆகும். இவ்வழித் தடம் கரூரிலிருந்து குளித்தலை செல்ல சுற்று வழித் தடம் ஆகும். இதில் நேரடிப் பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. மேலும், இவ்வழித் தடம் முழுவதும் பகுதிப் பகுதியாக 5 புறநகரப் பேருந்துகள்மூலம் 21 நடைகளும், 2 தனியார் பேருந்துகள் மூலம் 12 நடைகளும், மற்றும் 14 நகரப் பேருந்துகள்மூலம் 59 நடைகளும், 3 தனியார் பேருந்துகள்மூலம் 18 நடைகளும் இயக்கப்படுகின்றன.

89—

தரம் உயர்த்துதல்

வினா எண் 32699—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம் ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலையமானது, கடந்த 30-4-2007 அன்று 30 படுக்கை வசதி, 5 மருத்துவர் புதிய பணியிடங்கள், 24 மணி நேர கவனிப்பு, அறுவை அரங்கு, எக்ஸ் ரே, நோயாளர் ஊர்தி மற்றும் நவீனக் கருவிகள் ஆகிய வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், மேற்படி ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தற்போது அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

90—

உயிர் காக்கும் மருந்துகள்

வினா எண் 39434—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு மருத்துவமனையில் மகப்பேறு, குடும்பக் கட்டுப்பாடு, குழந்தை நல சிகிச்சை, கண் சிகிச்சை, மகப்பேறு, காமாலை நோய், அவசர சிகிச்சை ஆகிய பிரிவுகளையும் அறுவை அரங்குடன் அமைத்து கூடுதலாக நோயாளர் ஊர்தி, உயிர் காக்கும் மருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா:

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை அரசு மருத்துவமனையானது, மகப்பேறு பிரிவு, குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சைப் பிரிவு, அறுவை

2008 நவம்பர் 13]

சிகிச்சை அரங்கு, குழந்தைகள் நலப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு • ஆகிய பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. அம்மருத்துவமனையில் கண் நோய்களுக்கு உரிய சிகிச்சை வழங்குவதுடன் தேவையான கூடுதல் கட்டடங்கள், உபகரணங்கள் மற்றும் பணியாளர்களும் ஒப்பளிக்கப்பட்டு சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

91—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 16250—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வால்பாறையில் சேமிப்புக் கிடங்கின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து ஜூன் 2008-ல் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

92—

புதிய கட்டடம்

வினா எண் 24138—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, எடமணல் ஊராட்சி, மேலப்பாளையம் கூட்டுறவு அமுதம் அங்காடிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் எந்தவொரு அமுதம் அங்காடியும் (ரேஷன் கடைகள்) நடத்தப்படவில்லை. அதனால் சீர்காழி தொகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் அமுதம் அங்காடிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

93—

தொழிற்பயிற்சி

வினா எண் 45302—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் 6 முதல் 8 வகுப்பு வரை படித்த பெண் குழந்தைகளுக்குத் தொழிற்பயிற்சியான வயர் கூடை பின்னுதல், கதர் துணிகளில் பூ அமைப்பது, எம்பிராய்டரி, சர்ப் பவுடர் தயாரித்தல், பாசி மாலை கட்டுதல் போன்ற பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் தொழிற்பிரிவுகள் யாவும் புது டெல்லி தேசிய தொழில்நெறிக் கல்வி பயிற்சிப் பாடத் திட்டக் குழுவால் ஒப்புதல் பெறப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதால் மானாமதுரை தொகுதியில் 6 முதல் 8 வகுப்பு வரை படித்த பெண் குழந்தைகளுக்குத் தொழிற்பயிற்சியான வயர் கூடை பின்னுதல், கதர் துணிகளில் பூ அமைப்பது, எம்பிராய்டரி, சர்ப் பவுடர் தயாரித்தல், பாசி மாலை கட்டுதல் போன்ற பயிற்சி அளிக்க உத்தேசமில்லை.

(ஆ) எழாது.

2008 நவம்பர் 13]

94—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 55807—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி தென்சித்தூர், காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிப்புதூர், சோமந்துறை ஊராட்சிகளில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

1.	கோயம்புத்தூர்	-	1104 இருக்கைகள்
2.	கோயம்புத்தூர் (மகளிர்)	-	160 இருக்கைகள்
3.	திருப்பூர்	-	144 இருக்கைகள்
	மொத்தம்		1408 இருக்கைகள்

மேலும், இம்மாவட்டத்தில் 3096 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள திருப்பூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மகளிர் தொழிற்பயிற்சி நிலையமாக இருந்து, பின்னர் மகளிர் சேர்க்கை மிகவும் குறைவாக இருந்ததால் பொது அரசினர் தொழிற்பயிற்சி நிலையமாக மாற்றப்பட்டது. மேலும், இம்மாவட்டத்தில் 1408 இருக்கைகள் கொண்ட மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 3096 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும்,

இயங்கிவருகின்றன. எனவே, வால்பாறை தொகுதியில் தென்சித்தூர், காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிப்புதூர், சோமந்துறை ஊராட்சிகளில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

95—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 55812—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி, அங்கலக்குறிச்சி, ஜல்லிப்பட்டி, கரியஞ்செட்டிபாளையம் ஊராட்சிகளில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

1. கோயம்புத்தூர்	-	1104 இருக்கைகள்
2. கோயம்புத்தூர் (மகளிர்)	-	160 இருக்கைகள்
3. திருப்பூர்	-	144 இருக்கைகள்
மொத்தம்	-	1408 இருக்கைகள்

2008 நவம்பர் 13]

மேலும், இம்மாவட்டத்தில் 3096 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள திருப்பூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மகளிர் தொழிற்பயிற்சி நிலையமாக இருந்து, பின்னர் மகளிர் சேர்க்கை மிகவும் குறைவாக இருந்ததால் பொது அரசினர் தொழிற்பயிற்சி நிலையமாக மாற்றப்பட்டது. மேலும், இம்மாவட்டத்தில் 1408 இருக்கைகள் கொண்ட மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் 3096 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கிவருகின்றன. எனவே, வால்பாறை தொகுதியில் தென்சங்கம் பாளையம், அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி, ஜல்லிப்பட்டி கரியாஞ்செட்டிபாளையம் ஊராட்சிகளில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

96—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 55818—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகராட்சியில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூன்று அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

1. கோயம்புத்தூர்	-	1104 இருக்கைகள்
2. கோயம்புத்தூர் (மகளிர்)	-	160 இருக்கைகள்
3. திருப்பூர்	-	144 இருக்கைகள்
மொத்தம்	-	1408 இருக்கைகள்

மேலும், இம்மாவட்டத்தில் 3096 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள திருப்பூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மகளிர் தொழிற்பயிற்சி நிலையமாக இருந்து, பின்னர் மகளிர் சேர்க்கை மிகவும் குறைவாக இருந்ததால் பொது அரசினர் தொழிற்பயிற்சி நிலையமாக மாற்றப்பட்டது. மேலும், இம்மாவட்டத்தில் 1408 இருக்கைகள் கொண்ட மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் 3096 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருகின்றன. எனவே, வால்பாறை நகராட்சியில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

97—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 55819—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் மற்றும் வேட்டைக்காரன்புதூர் ஊராட்சிகளில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

2008 நவம்பர் 13]

1. கோயம்புத்தூர்	-	1104 இருக்கைகள்
2. கோயம்புத்தூர் (மகளிர்)	-	160 இருக்கைகள்
3. திருப்பூர்	-	144 இருக்கைகள்
மொத்தம்	-	1,408 இருக்கைகள்

மேலும், இம்மாவட்டத்தில் 3,096 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன, இம்மாவட்டத்தில் உள்ள திருப்பூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மகளிர் தொழிற்பயிற்சி நிலையமாக இருந்து, பின்னர் மகளிர் சேர்க்கை மிகவும் குறைவாக இருந்ததால் பொது அரசினர் தொழிற்பயிற்சி நிலையமாக மாற்றப்பட்டது. மேலும், இம்மாவட்டத்தில் 1,408 இருக்கைகள் கொண்ட மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் 3,096 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருகின்றன. எனவே, வால்பாறை தொகுதி பில்சின்னம்பாளையம் மற்றும் வேட்டைக்காரன்புதூர் ஊராட்சிகளில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசிற்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

98—

பல் மருத்துவக் கல்லூரி

வினா எண் 43590—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்மூலம் பல் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்மூலம் 9 கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 4 கல்வி நிறுவனங்களின் சம்பளச் செலவுகளுக்காக அரசு நிதியுதவியும் மற்றும் இதர செலவுகள் திருக்கோயில் நிதியிலும், இதர கல்வி நிறுவனங்கள் முற்றிலும் திருக்கோயில் நிதியிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும், இத்திருக்கோயிலால் நடத்தப்பட்டுவரும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கருணை இல்லங்களில் உள்ள மாணவ, மாணவிகளின் கல்விச் செலவுகளும் திருக்கோயில்மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு நலத் திட்டங்களுக்காக பெருமளவு தொகை திருக்கோயில்மூலம் செலவிடப்பட்டு வருகிறது. நிதி வசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும் திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ஆண்டுதோறும் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, திருக்கோயில்மூலம் பல் மருத்துவக் கல்லூரியை அமைக்கத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புகள் (Infrastructure) மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் இல்லையென்பதாலும் பல் மருத்துவக் கல்லூரியை நிருவகிக்க அதிக அளவில் தொடர் செலவுகள் ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டும் பழனி திருக்கோயில்மூலம் பல் மருத்துவக் கல்லூரி தொடங்க இயலாது.

TRUTH ALONE TRIUMPHS

99—

சொந்தக் கட்டடம்

வினா எண் 54328—திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திம்மணாமுத்தூர் ஊராட்சி, திம்மணாமுத்தூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, திம்மணாமுத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் 1-5-2007 முதல் செயலிழந்த நிலையில் உள்ளது. இச்சங்கத்திற்குப் புத்துயிரூட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, திம்மணாமுத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்படத் தொடங்கிய பின்னர், சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

100—

புதிய கட்டடம்

வினா எண் 56764—திரு. வை. காவேரி: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எடப்பாடி தொகுதி, குண்டலப்பட்டியில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, குண்டலப்பட்டியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லாததாலும் சங்கத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லாததாலும் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பட்டியல் 7

1—

தொழிற்சாலை

வினா எண் 26049—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் பேருந்து கூடு கட்டும் தொழிற்சாலை, அச்சுத் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இதுபோன்ற திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2—

தொழிற்பேட்டை

வினா எண் 33332—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் ஆட்டோ தொழிற்பேட்டை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள்:

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இதுபோன்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2008 நவம்பர் 13]

3—

மழைநீரை வெளியேற்றுதல்

வினா எண் 7170—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் விவசாய விளைபொருள் கமிட்டி அருகில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகரில் விவசாய விளைபொருள் கமிட்டி முன்புறம் தார்ச் சாலை தாழ்வாக உள்ளது. இச்சாலை நெடுஞ்சாலைக்குச் சொந்தமானது. மழைக் காலங்களில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற நகராட்சிமூலம் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

4—

தெரு விளக்கு வசதி

வினா எண் 23145—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி எஸ்டேட் குடியிருப்புப் பகுதியில் தெரு விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வால்பாறை தொகுதி எஸ்டேட் பகுதிகள் முழுவதற்கும் தனியார் தேயிலைத் தோட்ட நிருவாகம்தான் அடிப்படை வசதிகள் செய்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கொடுக்க வேண்டும். இருப்பினும், 1996-1997 முதல் 2007-2008 முடிய தோட்டத் தொழிலாளர் நலன் கருதி 1920-ம் வருடத்திய மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 136-ஐத் தளர்த்தி, வால்பாறை தொகுதி, எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் நகராட்சி நிதியிலிருந்து இதுவரை 2428 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன. 2008-2009 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று, புதிதாக 178 தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5—

சுய உதவிக் குழுக் கட்டடம்

வினா எண் 46963—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, வெள்ளிச்சந்தை ஊராட்சி, சரல் ஊரில் சுய உதவிக் குழுக்கள், புத்தேரி ஊராட்சி, கீழப்புத்தேரி, நாஞ்சில் ஆண்கள் சுய உதவிக் குழு, மேலச்சங்கரன்குழி, பாம்பன்விளை மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றிற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு ஊராட்சிக்கு ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் தலைமையிடங்களில் தேவைக்கேற்ப மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள் இருக்கின்றன. வெள்ளிச்சந்தை ஊராட்சியிலும் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், ஆண்கள் சுய உதவிக் குழுவுக்கென தனிக் கட்டடம் கட்டுவதற்கு வழிவகை இல்லை.

2008 நவம்பர் 13]

6—

நகைக் கடன்

வினா எண் 8021—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, பச்சனம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு நகைக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் சரகத்தில் செயல்பட்டுவரும் பச்சனம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு, தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 20 இலட்சம் 12-4-2008-ல் அனுமதிக்கப்பட்டு 76 நபர்களுக்கு ரூ. 20 இலட்சம் பொது நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது. தகுதியின் அடிப்படையில் தொடர்ந்து நகைக் கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7—

நிதியுதவி

வினா எண் 26552—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டை மலைவாழ் மக்கள் சிறு விவசாயம் செய்ய நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில் அமைந்துள்ள டேனிஷ்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்மூலம் 2006-2007 ஆம் ஆண்டு ரூ. 30.05 இலட்சம் விவசாயக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையில் மலைவாழ் மக்கள் 8 நபர்களுக்கு ரூ. 2,38,800/- கடன் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் 2007-2008 ஆம் ஆண்டில் மார்ச் 2008 வரை ரூ. 17.26 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தொகையில் மலைவாழ் மக்கள் 4 நபர்களுக்கு ரூ. 76,200/- விவசாயக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

8—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 28737—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், மோசிவாக்கம் பகுதிக்கு நியாய விலைக் கடை அமைத்துத் தரவும், பொன்விளைந்த களத்தூர் ஊராட்சி நியாய விலைக் கடைக் கட்டடத்தைப் பழுதுபார்க்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், மோசிவாக்கம் நியாய விலைக் கடை 101 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேரக் கடையாகத் தற்போது அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, அக்கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பொன்விளைந்தகளத்தூர் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுமூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடை, பொன்விளைந்தகளத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமான கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடை கட்டடம் பழுதுபார்க்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

9—

வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

வினா எண் 30829—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, முதலிபாளையம் கிராமத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், முதலிபாளையம் கிராமத்தில் ஒரு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வந்தது. அச்சங்கம் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டதால், அதன் அருகிலுள்ள ஆரத்தொழுவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் துணை விதிகளுக்குத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, முதலிபாளையம் வருவாய் கிராமம், ஆரத்தொழுவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையில் சேர்க்கப்பட்டு, முதலிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆரத்தொழுவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, உறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஆரத்தொழுவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து குவிந்த நட்டத்தில் செயல்பட்டுவரும் நிலையில், அவ்வங்கியினைப் பிரித்து முதலிபாளையம் கிராமத்தில் தனியாகப் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்கினால், அவ்வாறான புதிய வங்கி வாழ்திறனுடன் செயல்பட வாய்ப்பில்லை. மேலும், அமலில் உள்ள அரசாணையின்படி, புதிதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் பூர்த்தியடையாத நிலையில், முதலிபாளையம் கிராமத்தில் புதியதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி துவக்கிடச் சாத்தியக்கூறுகள் இல்லை.

10—

புதிய கட்டடம்

வினா எண் 33893—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகர்ப்புற வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகரக் கூட்டுறவு வங்கியின் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு ரூ.30.00 இலட்சம் செலவில் புதிய

கட்டடம் கட்டிக்கொள்ள காஞ்சிபுரம் மண்டல இணைப் பதிவாளரால் அனுமதி வழங்கப்பட்டு, தற்போது புதிய கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

11—

நியாய விலைக் கடை

வினா எண் 47023—திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, குருந்தன்கோடு ஒன்றியம், முட்டம் ஊராட்சி, புனித ஜார்ஜியார் தெரு, ஜேம்ஸ் நகரில் நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குருந்தன்கோடு ஒன்றியம், முட்டம் ஊராட்சி—புனித ஜார்ஜியார் தெரு, ஜேம்ஸ் நகர் மேலமுட்டம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் மேலமுட்டம் நியாய விலைக் கடை செயல் எல்லையில் உள்ளது. ஜேம்ஸ் நகரைச் சேர்ந்த 60 குடியிருப்புகளில், 40 குடும்பங்கள் மேலமுட்டம் நியாய விலைக் கடையுடனும், 20 குடும்பங்கள் கீழமுட்டம் நியாய விலைக் கடையுடனும் இணைக்கப்பட்டுள்ளன. ஜேம்ஸ் நகரில் உள்ள மேலமுட்டம் மற்றும் கீழமுட்டம் நியாய விலைக் கடைகள், நாகர்கோவில் மீன் துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருவதால், அத்துறையால் ஜேம்ஸ் நகரில் செயல்படும் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

12—

பயிர்க் கடன்

வினா எண் 47579—திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பொன்னகரம் கூட்டுறவு வங்கிமூலம் விவசாயிகளுக்குப் புதிய பயிர்க் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடந்த இரண்டாண்டுகளில் கீழ்க்கண்டவாறு பயிர்க் கடன் வழங்கியுள்ளது:

வருடம்	பயிர்க் கடன் குறியீடு (ரூபாய் இலட்சத்தில்)	பயிர்க் கடன் வழங்கியது (ரூபாய் இலட்சத்தில்)	
		நபர்	தொகை
2006-07	20.00	175	21.42
2007-08	25.00	191	31.37

2008-2009 ஆம் ஆண்டில் 30 இலட்சம் ரூபாய் பயிர்க் கடன் வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பயிர்க் கடன் கோரும் உறுப்பினர்களுக்குத் தகுதிக்குட்பட்டு தடையின்றி கடன் வழங்கப்பட்டு வருகிறது.

13—

பயிர்க் கடன்

வினா எண் 47765—திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதியிலுள்ள கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மருங்காபுரி தொகுதியில் உள்ள 23 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடந்த இரண்டாண்டுகளில் பின்வருமாறு பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன:

ஆண்டு	ஆண்டுக் குறியீடு (ரூபாய் இலட்சத்தில்)	பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை வழங்கியது (ரூபாய் இலட்சத்தில்)
2006-07	640	3240	684.32
2007-08	715	3355	685.74

2008-2009 ஆம் ஆண்டில் 730 இலட்சம் ரூபாய் பயிர்க் கடன் வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் கோரும் தகுதியுள்ள விவசாயிகள் அனைவருக்கும் பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஆண்டிற்கான குறியீட்டை எய்த, தக்க அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

14—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 10430—திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பென்னேஸ்வரம்மடம் கிராமத்தில் ஓர் நெற்களமும், நெல் கிட்டங்கியும் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதியில் கரடிஅள்ளி மற்றும் ஜமேதார்மேடு ஆகிய இரு கிராமங்களில் 20 x 20 மீட்டர் அளவில் தலா ரூ.2.00 இலட்சம் செலவில் நெற்களக் கட்டுமானப் பணி முடிவுற்று, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

பெண்னேஸ்வரம்மடம் கிராமத்தில், 2008-09 ஆம் ஆண்டில், விவசாயிகளின் விளைபொருட்களை அறுவடைக்குப் பின் நேரும் இழப்பிலிருந்து பாதுகாக்க தகுதியான நிலத்தில் முன்னுரிமை அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை பெறப்பட்டு உலர்களம் கட்டப்படும்.

15—

நெல் விளைச்சல்

வினா எண் 49723—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பொள்ளாச்சியில் நெல் விளைச்சலை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) பொள்ளாச்சி பகுதியில் நெல் விளைச்சலை அதிகரிக்க வேளாண்மைத்துறை மூலம் ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) சென்ற ஆண்டில் சுமார் 1,000 எக்டேரில் செம்மை நெல் சாகுபடி முறை கடைப்பிடிக்கப்பட்டு அதிகபட்சமாக ஒரு எக்டேருக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

10,200 கிலோ மகசூலாகப் பெறப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் நெல் விளைச்சலை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2008-09 ஆம் ஆண்டு குறுவைப் பட்டத்தில் 1,000 எக்டேர் பரப்பிலும், சம்பா பட்டத்தில் 2,200 எக்டேர் பரப்பிலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், நடப்பு குறுவைப் பட்டம் முதல் ஆழியாறு பாசனப் பகுதியில் செம்மை நெல் சாகுபடிமூலம் ஒரு எக்டேருக்கு 13,000 கிலோ மகசூல் எடுக்க திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. வால்பாறை தொகுதிக்குட்பட்ட மயிலாடுதுறை, கோட்டூர், ஆழியாறு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் குறுவை நெல் சாகுபடி முழுவதும் செம்மை நெல் சாகுபடி முறையில் நடவு செய்திட முதற்கட்டமாக ஒவ்வொரு கிராமத்திலும் மாலைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, அக்கூட்டத்தில் தொழில்நுட்பங்களை விளக்கும் வகையில் கருத்துக் காட்சி வைக்கப்படுகிறது. மேலும், மக்கள் மனதில் பதியும் வண்ணம், விதை நேர்த்தி, நடவு இயந்திரம் கொண்டு நடுதல், கோனோ வீடர் கொண்டு களையெடுத்தல் ஆகியவை நேரடி செயல் விளக்கமாகச் செய்து காண்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. விதைப்புக்குத் தேவையான நெல் விதைகள் ஆனைமலை வேளாண்மை விரிவாக்க மையத்தில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

16—

மண் வளப் பரிசோதனை

வினா எண் 52605—டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உழவர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள வேளாண்மை அலுவலகத்திலேயே தங்கள் நிலங்களின் மண் வளப் பரிசோதனையைச் செய்துகொள்ள அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையின்கீழ் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் நடமாடும் மண்

2008 நவம்பர் 13]

ஆய்வுக் கூடங்கள் உள்ளன. எனவே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் உள்ள வேளாண்மை அலுவலகத்திலேயே உழவர்கள் தங்கள் நிலங்களின் மண் வளப் பரிசோதனையைச் செய்துகொள்ள அரசிடம் தற்போது எந்தத் திட்டமும் இல்லை.

17—

தூர் வாருதல்

வினா எண் 23301—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, தூதை, வாடவேந்தல், பாட்டம், அம்பலத்தாடி கண்மாய்களின் கால்வாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, தூதை, வாடவேந்தல், பாட்டம், அம்பலத்தாடி கண்மாய்களின் கால்வாய்களை வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18—

தூர் வாருதல்

வினா எண் 27575—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சோமாத்தூர், செய்யாலூர், நச்சோனை, கால்பிரவு, இடைக்காட்டூர் சிறிய, பெரிய கண்மாய் மடைகளைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், சோமாத்தூர், செய்யாலூர், நச்சோடை, கால்பிரவு, இடைக்காட்டூர் சிறிய, பெரிய கண்மாய்களில் சோமாத்தூர், செய்யாலூர், நச்சோடை, கண்மாய்கள் முறைசாரா பாசனக் கண்மாய்கள் ஆகும். மீதம் உள்ள கால்பிரவு, இடைக்காட்டூர் சிறிய மற்றும் பெரிய கண்மாய்கள் வைகை ஆற்றுப் பாசனக் கண்மாய்கள் ஆகும். இவற்றில் கால்பிரவு கண்மாய், கால்வாய் 2006-ல் தேசிய சமச்சீர் வளர்ச்சித் திட்டத்தின் (RSVY) கீழ் தூர் வாரப்பட்டுள்ளது. ஏனைய கண்மாய்களில் தூர் வாரும் பணிகள் யாவற்றையும் வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

19—

தூர் வாருதல்

வினா எண் 27637—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், எஸ். காரைக்குடி, புலவமறிச்சான், புலவர்சேரி, ஆதி திராவிடர் குளம், பள்ளாமடை ஆகிய கண்மாய், கால்வாய் மடைகளைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், ஆதி திராவிடர் குளக் கண்மாய் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தது.

எல். காரைக்குடி கண்மாய், கால்வாய் மடைகள் தூர்வாரும் பணி நீர்வளம் நிலவளம் (IAMWARM) திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. மீதமுள்ள கண்மாய்களை வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் எடுத்து படிப் படியாகத் தூர் வார நடவடிக்கை எடுக்கப்படும்.

20—

கண்மாய்க் கலிங்குகள்

வினா எண் 28235—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூர், தவளைக்குளம், கருங்காலக்குடி, காஞ்சிரங்குளம், கழுவன்குளம், சொட்டத்தட்டி ஆகிய கண்மாய்களின் கலிங்குகளைப் புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூர், தவளைக்குளம், கருங்காலக்குடி, காஞ்சிரங்குளம், கழுவன்குளம், சொட்டத்தட்டி ஆகிய கண்மாய்களின் கலிங்குகள் வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

21—

கலிங்குகளை மராமத்து செய்தல்

வினா எண் 28248—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கொன்னக்குளம், கருவக்குடி, கிழங்காட்டூர் மானம்பாக்கி, மானங்காத்தான், கீழப்பிடாவூர் ஆகிய கண்மாய்களின் கலிங்குகளை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கொன்னக்குளம், கருவக்குடி, கிழங்காட்டூர் மானம்பாக்கி, மானங்காத்தான் மற்றும் கீழப்பிடாவூர் கண்மாய்கள் யாவும் (மூறை)சாரா பாசனக் கண்மாய்கள் ஆகும். கொன்னக்குளம் கண்மாய் கலிங்கினை நீர்வள நிலவள (IAMWARM) திட்டத்தின்கீழ் மராமத்து செய்திட ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள கருவக்குடி, கிழங்காட்டூர் மானம்பாக்கி, மானங்காத்தான், கீழப்பிடாவூர் கண்மாய்களின் கலிங்குகளை மராமத்து செய்திடும் பணிகள், வரும் ஆண்டுகளில் பெறப்படும் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

22—

வேகத் தடைகள்

வினா எண் 17561—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி-திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் குட்டம் அரசு உயர்நிலைப்பள்ளி முன்பு வேகத் தடைகள் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி-திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் குட்டம் அரசு உயர்நிலைப்பள்ளி முன்பு வேகத் தடைகள் அமைத்திட நெடுஞ்சாலைத் துறையுடன் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2008 நவம்பர் 13]

23—

பேருந்து வசதி

வினா எண் 34392—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து மானாமதுரை, மேலநெட்டூர், இளையான்குடி, சாலைக்கிராமம் வழி ஆர்.எஸ். மங்கலம் வரை புறநகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மதுரையிலிருந்து மானாமதுரைக்கும், மானாமதுரையிலிருந்து மேலநெட்டூர் வழியாக இளையான்குடிக்கும், இளையான்குடியிலிருந்து சாலைக்கிராமம் வழியாக ஆர்.எஸ். மங்கலத்திற்கும் பேருந்துகள் பகுதிப் பகுதியாக அதிக அளவில் இயக்கப்படுகின்றன.

24—

வேகத் தடுப்பு

வினா எண் 39306—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் சிறிய லாரிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மதுரை - இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் சிவகங்கை மாவட்ட எல்லையான எம். கரிசல்குளம் முதல் சிலைமான்

அருகில் உள்ள அபிராமி மில் வாயில் வரையில் தேசிய நெடுஞ்சாலை சுற்றுக் காவல் குழு மானாமதுரை துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் இயங்கி வருகிறது. இந்தக் குழுவினர் அதிவேக வாகனங்களை உடனடியாக நிறுத்தி வாகன வழக்குகள் பதிவு செய்தும், வாகன ஓட்டிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கியும், வேகத்தின் அளவைக் கட்டுப்படுத்தி வருகிறார்கள். மேலும், மேற்படி தேசிய நெடுஞ்சாலையில் சிவகங்கை மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் எம். கரிசல்குளம், கேப்பார் பட்டினம், மானாமதுரை வழிவிடு முருகன் கோயில், மானாமதுரை பைபாஸ் ரோடு, செம்பராயனேந்தல் விலக்கு, திருப்பாச்சேத்தி பிரதான பேருந்து நிலையம், திருப்பாச்சேத்தி காவல் நிலையம், தூதை விலக்கு, வடனேந்தல், திருப்புவனம் பூவந்தி விலக்கு மற்றும் அபிராமி மில் வாயில் ஆகிய இடங்களில் வேகத் தடுப்பு வேலிகள் அமைத்து அனைத்து வாகனங்களின் வேகத்தையும் கட்டுப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

25—

பேருந்து வசதி

வினா எண் 43540—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை வேளச்சேரியிலிருந்து செங்கல்பட்டிற்கு மாநகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னையில் முக்கியப் பகுதிகளான தி.நகர், தாம்பரம், மந்தைவெளி ஆகிய இடங்களிலிருந்து செங்கல்பட்டிற்குக் கீழ்க்காணும் தடங்களில் பேருந்துகளை இயக்கி வருகின்றது:

வ. எண்	தடம் எண்	பேருந்துகள்	புறப்படுமிடம்	சேருமிடம்
1.	எம் 500	13	தாம்பரம்	செங்கல்பட்டு
2.	500/577	10	தி. நகர்/மந்தைவெளி	செங்கல்பட்டு
3.	500 (விரைவு)	2	தி.நகர்	செங்கல்பட்டு

2008 நவம்பர் 13]

மேலும், தற்போது வேளச்சேரி மெயின் ரோடு மற்றும் முடிச்சூர் சாலையினை இணைத்திடும் வண்ணம் ஜி.எஸ்.டி. சாலை சந்திப்பில் (எல்.சி.எண் 30) தாம்பரம் மேம்பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மேம்பாலத்தில் செங்கல்பட்டு, வேளச்சேரி முடிச்சூர் மற்றும் கிண்டி நோக்கி வாகனங்கள் சென்றிட தனித்தனி நீண்ட பாதைகள் (Separate Corridors) அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த தாம்பரம் மேம்பாலம் பொது மக்கள் வாகனப் போக்குவரத்திற்குத் திறக்கப்பட்டவுடன், சென்னை வேளச்சேரி, செங்கல்பட்டு இடையே மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

26—

பேருந்து வசதி

வினா எண் 43739—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி நகரத்தில் இயங்கும் பழைய நகரப் பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பழைய நிலையிலுள்ள நகரப் பேருந்துகள் அவ்வப்போது கழிவு செய்யப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக நல்ல நிலையிலுள்ள சமீபத்திய வருடப் பேருந்துகள் மாற்றம் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. 2008-2009 ஆம் நிதியாண்டின் புதிய பேருந்துகள் ஒதுக்கீட்டின்படி பழைய நகரப் பேருந்துகள் படிப் படியாகக் கழிவு செய்யப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் இயக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 13

27—

பேருந்து நீட்டிப்பு

வினா எண் 44524—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், சிறுகளஞ்சி ஊராட்சி, ஆலம்பாளையத்திற்கு காலை 7.45 மாலை 5.45 மணிக்கு சி9 பேருந்தை இயக்கவும், 11D நகரப் பேருந்தை கோவில்பாளையம் கிராமத்திற்குக் காலை 8 மணி மற்றும் மாலை 6 மணிக்குக் கூடுதலாக இயக்கவும், சிறுகளஞ்சி-ஆலம்பாளையம் வரை சி22 பேருந்தை மீண்டும் இயக்கவும், திப்பம்பாளையம் சி9 பேருந்தைக் காலை 7.45 மற்றும் மாலை 5.45 மணிக்கு ஊத்துக்குளி பாலம் வரை நீட்டித்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் சி9, காலை 2 தனி நடைகள் ஆலம்பாளையம் வழியாக இயக்கப்படுகின்றன. மாலையில் தடம் எண் சி2 மூலம் 2 தனி நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தடம் எண் 11டி மாலை 5.45 மணிக்கு கோவில்பாளையம் வழியாக இயக்கப்படுகிறது. காலையில் கோரிக்கைப்படி இயக்கப்பட்டால், உலகபுரம்-முத்தையன்கோவில் பகுதி துண்டிப்பு ஏற்படும். சிறுகளஞ்சி, ஆலம்பாளையம் பிரிவு வழியாக தற்பொழுது 3 நகரப் பேருந்துகள்மூலம் 22 தனி நடைகள் பேருந்து வசதி உள்ளது. தடம் எண் சி9 நகரப் பேருந்து 6 தனி நடைகள் ஊத்துக்குடி பாலம் உள்ள திருப்பு முனையாகிய வடுகபாளையம் வரை இயக்கப்படுகின்றன. மாலை நேரத்தில் பெருந்துறைக்கு இயங்குவதை வழித் தடம் மாற்றி இயக்க இயலாத நிலை உள்ளது.

28—

பேருந்து வசதி

வினா எண் 44528—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, நகரப் பேருந்து தடம் எண் 11ஜெ சம்பந்தம்பாளையம், பொன்னங்காளிவலசு, மருதுறையான்வலசு, மீனாட்சிவலசு மற்றும் படியூர் வழியாக காலை/மாலை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 11சி / 16 நகரப் பேருந்துமூலம் காலையில் 2 தனி நடைகள் திருப்பூரிலிருந்து மருதுறையான்வலசு வரை சம்பந்தம்பாளையம், பொன்னங்காளிவலசு, மீனாட்சிவலசு, படியூர் வழியாக 24-11-2007 முதல் இயக்கப்படுகின்றன. தற்சமயம் உள்ள பேருந்துகள்மூலம் மாலையில் இயக்க சாத்தியக் கூறுகள் இல்லாத நிலை உள்ளது.

29—

பேருந்து வசதி

வினா எண் 48064—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, திருக்கோவிலூர்-அருமலை, புத்தூர், தணிக்கலாம்பட்டு, ஆலம்பாடி, சத்தியகண்டனூர், ஒடுவன் எஸ். குப்பம், ஒதியத்தூர், அத்தியூர் வரை அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, திருக்கோவிலூரிலிருந்து அருமலை, புத்தூர், தணிக்கலாம்பட்டு, ஆலம்பாடி சத்தியகண்டனூர், ஒடுவன் எஸ். குப்பம், ஒதியத்தூர் வழியாக அத்தியூர்திருக்கை வரை அரசுப் பேருந்துகள் இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

30—

கூடுதல் பேருந்து

வினா எண் 51698—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் காலை, மாலை வேளைகளில் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடவூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மணப்பாறையிலிருந்து பொத்தப்பட்டி, பாலவிடுதி பிரிவு வழியாக காலை 7.30 மணிக்கும், மாலை 5.00 மணிக்கும், கடவூரிலிருந்து காலை 6.45 மணிக்கும் மற்றும் மாலை 4.10 மற்றும் 4.30 மணிக்கும், பள்ளி நேரத்திற்கு நகர மற்றும் புறநகரப் பேருந்துகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், கடவூர் கிராமத்திற்கு ஒரு நகரப் பேருந்தின்மூலம் தினசரி 6 நடைகளும், மூன்று புறநகர்ப் பேருந்துகளின்மூலம் தினசரி 16 நடைகளும் மற்றும் 2 மினி பேருந்துகளின்மூலம் தினசரி 32 நடைகளும், ஆக மொத்தம் தினசரி 54 நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

கடவூர் கிராமத்திற்குக் காலை, மாலை பள்ளி நேரத்திற்குப் பேருந்து இயக்கம் செய்யப்பட்டு வருகிறது.

2008 நவம்பர் 13]

31—

பேருந்து வசதி

வினா எண் 51713—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மணப்பாறை-வையம்பட்டி-தரகம்பட்டி-பாளையம்-வெள்ளியணை-கரூர் வழியாக கோயம்புத்தூருக்கு புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை-கோயம்புத்தூர் (வழி) வையம்பட்டி, தரகம்பட்டி, பாளையம், வெள்ளியணை, கரூர் வழித் தடம் சுற்று வழித் தடமாகும். இவ்வழித் தடத்தில் பேருந்து நேரடியாக இயக்கம் செய்யப்பட்டால், நேரடிப் பயணிகளின் அடர்வு குறைவாக இருக்கும். இதனால் வருவாய் இருக்காது. மேலும், வையம்பட்டியிலிருந்து கரூர் வரை 67.9 கிலோ மீட்டர் கிராமப்புற வழித் தடச் சாலை ஆகும்.

மேலும், மணப்பாறையிலிருந்து, தரகம்பட்டி, கரூர் வரை, கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், 10 பேருந்துகள்மூலம் 47 நடைகளும் மற்றும் தனியார் துறை 4 பேருந்துகள்மூலம் தினசரி 18 நடைகளும், ஆக மொத்தம் 65 நடைகளும் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றது. தரகம்பட்டியிலிருந்து கரூர் வரை கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், 7 பேருந்துகள்மூலம் 34 நடைகளும் மற்றும் தனியார் துறை 6 பேருந்துகள்மூலம் தினசரி 28 நடைகளும், ஆக மொத்தம் 62 நடைகளும் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

மேலும், கரூர்-கோயம்புத்தூர் வழித்தடத்தில் ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வீதம் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, மணப்பாறை-கோயம்புத்தூர் வழித் தடம் முழுவதும் பகுதிப் பகுதியாகப் போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

[2008 நவம்பர் 13

32—

பேருந்து வசதி

வினா எண் 51720—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாப்பையம்பாடியிலிருந்து காலை 8.00 மணிக்கு மேட்டுத்திருக்காம்புலியூர் வழியாக கரூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டல பல்வழித் தடத் திட்டத்தின்கீழ் நகரப் பேருந்து ஒன்றின்மூலம், கரூர்-பாப்பையம்பாடி (வழி) புலியூர், மாயனூர், திருக்காம்புலியூர் வழியாக தினசரி 6 நடைகள் 3-1-2008 முதல் இயக்கம் செய்யப்படுகின்றது.

இந்நகரப் பேருந்து பல்வழித் தடத்தின்கீழ், காலை 7.55 மணிக்கு மேலமாயனூரில் புறப்பட்டு கரூர் சென்றடைகிறது. எனவே, இந்நகரப் பேருந்தினை காலை 8.00 மணிக்கு பாப்பையம்பாடியில் புறப்படுமாறு கால அட்டவணையை மாற்றம் செய்ய இயலாத நிலை உள்ளது.

மேலும், கரூர்-பாப்பையம்பாடிக்குத் தற்பொழுது இயங்கும் மேற்படி நகரப் பேருந்தின் தினசரி பயணிகளின் பயன்பாடு 32% ஆகும். எனவே, பாப்பையம்பாடி-கரூர் வரை காலை 8.00 மணிக்குப் புதிதாக நகரப் பேருந்து இயக்கும் அளவிற்குப் பயணிகளின் அடர்வு இல்லை. எனவே, புதிய நகரப் பேருந்து இயக்க வாய்ப்பில்லை.

33—

பேருந்து வசதி

வினா எண் 51725—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கரூர்-மணப்பாறை-கரூர் பேருந்துகளை லிங்கத்தூர்-சித்தப்பட்டி-ஏழூர்புதூர் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டலம்மூலம், லிங்கத்தூர், சித்தப்பட்டி, ஏழூர்புதூர் வழியாக கரூர்-இடையப்பட்டிக்கு தினசரி 8 நடைகள் 7-1-2008 முதல் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கரூர்-மணப்பாறை, மணப்பாறை-கரூர் (வழி) புலியூர், உப்பிடமங்கலம், காணியாளம்பட்டி, தரகம்பட்டி வழித் தடத்தில், நான்கு புறநகர் பேருந்துகள்மூலம் தினசரி 12 நடைகள் இயக்கம் செய்யப்படுகின்றது. இப்பேருந்துகளை லிங்கத்தூர், சித்தப்பட்டி, ஏழூர்புதூர் வழியாக தடமாற்றம் செய்தால் இப்பேருந்துகள் தற்போது இயங்கும் புலியூர், காந்திகிராமம் ஆகிய ஊர் மக்களுக்குப் பேருந்து வசதி இல்லாமல் பாதிப்பு ஏற்படும். மேலும், நேரடிப் பயணிகளுக்கு 10 கிலோ மீட்டர் கூடுதலாகி, பயணக் கட்டணம் மற்றும் பயண நேரம் அதிகரித்து பாதிப்பு ஏற்படும்.

34—

புதிய பேருந்து

வினா எண் 51747—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் - மயிலாடுதுறை செல்லும் தடம் எண் 408-ல் புதிய பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார்-மயிலாடுதுறை தடம் எண் 408-ல் தற்போது TN49/N-1378 என்ற பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

இப்பேருந்து லேலண்ட் 2005 மாடல் கொண்டது. தற்போது இப்பேருந்து நல்ல நிலையில் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி தடத்தில் புதிய பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

35—

புதிய பேருந்து

வினா எண் 51748—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, மயிலாடுதுறையிலிருந்து பெருந்தோட்டம் செல்லும் தடம் எண் 34-ல் இயக்கப்பட்டு வரும் மிகவும் பழுதடைந்த பேருந்துக்குப் பதிலாக புதிய பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை-பெருந்தோட்டம் எண் 34 வழித்தடத்தில் தற்போது TN49 N-1163 என்ற பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இது லேலண்ட் வகை 2000 மாடல் கொண்ட பேருந்தாகும். தற்போது இப்பேருந்து நன்கு பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் இயக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் 2008-09 ஆம் நிதியாண்டில் புதிய பேருந்துகள் வருகையினைத் தொடர்ந்து நல்ல நிலையிலுள்ள வயது குறைந்த பேருந்தினைக் கொண்டு வாகன மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

36—

மயக்கவியல் மருத்துவர் நியமனம்

வினா எண் 1970—திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட சென்னிமலை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் மயக்கவியல் மருத்துவ நிபுணரைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதியிலுள்ள சென்னிமலை ஆரம்ப சுகாதார நிலையம் தாராபுரம் சுகாதார வட்டத்தின்கீழ் இயங்கிவருகிறது. இந்நிலையத்தில் 3 மருத்துவ அலுவலர்கள் ஒப்பளிக்கப்பட்டதில், ஒரு மருத்துவர் பணியிடம் எழுமாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பணிப் பெயர்ச்சி செய்யப்பட்டுள்ளது. மயக்கவியல் மருத்துவரை நியமிக்க காலிப் பணியிடம் ஏதுமில்லை.

37—

தனியாக மருத்துவ இல்லம்

வினா எண் 2176—செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணியிலுள்ள மருத்துவர்கள் தனியாக மருத்துவ இல்லம் நடத்துவதைத் தடை செய்யும் செயல்முறை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவ விதித் தொகுப்பு I, பத்தி எண் [illegible]-ன்படி, அரசுப் பணியில் உள்ள மருத்துவர்கள் தனியாக மருத்துவ இல்லம் நடத்துவதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளனர். மேலும், அரசு மருத்துவர்கள் தனியாக மருத்துவ இல்லம் நடத்துவதில்லை

என்று அரையாண்டு விவர அறிக்கை ஒன்றினையும் தலைமை இடத்திற்கு அனுப்பிட வேண்டும் என்று தமிழ்நாடு மருத்துவ விதித் தொகுப்பு I, பத்தி எண் 646-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு மருத்துவர்கள் மருத்துவ இல்லம் நடத்துவதைத் தடை செய்ய தனியாகச் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. அதற்கான தேவையும் எழவில்லை.

38—

இலவச மூக்குக் கண்ணாடிகள்

வினா எண் 4360—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சியில் உள்ள வயது முதிர்ந்த பெரியவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள வேட்டைக்காரன் புதூரில் அரசு மருத்துவமனை (Non-Taluk Hospital) உள்ளது. அம்மருத்துவமனையில் தினமும் புற நோயாளிகளாக 297 நபர்கள் சிகிச்சை பெறுகின்றனர். இந்த மருத்துவமனையில் ஒரு கண் மருத்துவர் பணிபுரிகிறார். இங்கு கண் பரிசோதனை செய்யப்படும் நோயாளிகளில் கண் அறுவை சிகிச்சை தேவைப்படின், அவர்கள் பொள்ளாச்சி அரசு தாலுகா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கண் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. எனவே, வேட்டைக்காரன் புதூரில் உள்ள வயது முதிர்ந்த பெரியவர்கள் இலவசமாகக் கண் பரிசோதனை செய்து கொள்ளலாம். ஆனால், கண் அறுவை சிகிச்சை பெற்றவர்களுக்கு மட்டும் தேவைப்பட்டால் கண்ணாடி இலவசமாக மாவட்ட கண் பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் மூலமாக வழங்கப்படுகிறது. கண் பார்வைக் குறைபாடு காணப்பட்டால் இலவசமாகக் கண் பரிசோதனை செய்யப்பட்டு கண்ணாடிக்குப் பரிந்துரை மட்டும் செய்யப்படும்.

2008 நவம்பர் 13]

39—

இலவச மூக்குக் கண்ணாடிகள்

வினா எண் 4361—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், ஜல்லிப்பட்டி, பிலிசின்னம்பாளையம், அங்கலக்குறிச்சி, சுரியஞ்செட்டிபாளையம், கம்பலாபட்டி, அர்த்தநாரிபாளையம், சோமந்துறை பெத்தநாயக்கனூர், ரமணமுதலிப்புதூர், காளியாபுரம் முதலிய ஊராட்சிகளிலுள்ள வயது முதிர்ந்த பெரியவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், பொதுவாக வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் இலவசமாகக் கண் பார்வை பரிசோதனை செய்யப்படுகிறது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, வயது முதிர்ந்தவர்களுக்குக் கண் புரை காணப்பட்டால், இலவசமாகக் கண் புரை அறுவை சிகிச்சை செய்து தேவைப்படின் கண்ணாடி வழங்கப்படும். மேலும், கண் பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கு, இலவசமாகக் கண் பரிசோதனை செய்யப்பட்டு, கண்ணாடிக்கு மட்டும் பரிந்துரை செய்யப்படும். இவர்களுக்கு இலவசமாகக் கண்ணாடி வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

40—

மருத்துவர் நியமனம்

வினா எண் 16562—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 13

(அ) வால்பாறை மற்றும் கோட்டூரிலுள்ள அரசு மருத்துவமனைக்கு மயக்க மருந்து மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை.—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ள உதவி மருத்துவர் பணியிட எண்ணிக்கை நான்கு. இந்த நான்கு மருத்துவர் பணியிடங்களும் தற்சமயம் இரு பொது மருத்துவர் (எம்.பி.பி.எஸ்.), ஒரு மகப்பேறு சிறப்பு மருத்துவர் மற்றும் ஒரு எலும்பு முறிவு சிகிச்சை சிறப்பு மருத்துவரைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன. தற்சமயம், இம்மருத்துவமனையில் மயக்க மருத்துவரை நியமிக்க மருத்துவர் காலிப் பணியிடம் ஏதுமில்லை. கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள உதவி மருத்துவர் பணியிட எண்ணிக்கை மூன்று. இவற்றில் ஒரு குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர், ஒரு மகப்பேறு சிறப்பு மருத்துவர், ஒரு அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர் பணிபுரிந்து வருகின்றனர். இம்மருத்துவமனையில் மயக்க மருத்துவரை நியமிக்க காலிப் பணியிடம் இல்லை. எனினும், வால்பாறை மருத்துவமனையில் Cemonc திட்டத்தின்கீழ் உள்ள இரண்டு மருத்துவர் பணியிடங்களில் மயக்க மருந்து நிபுணர்களைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலமாக அல்லது வேலைவாய்ப்பகம்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

41—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 16605—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமான கட்டட வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. வால்பாறை தொகுதியில் அர்த்தநாரிபாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் இல்லை. இது மலைப் பகுதியும் சமவெளிப் பகுதியும் சார்ந்தது. ஆனால் அர்த்தநாரிபாளையம் கிராமம் மலைப் பகுதி அல்ல. இத்தொகுதியின் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளதால், அர்த்தநாரிபாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் தற்போது தொடங்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

42—

மருத்துவர் நியமனம்

வினா எண் 17581—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி துணை சுகாதார நிலையத்தில் முழு நேர மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணி நியமனம் ஒப்பளிப்பு ஏதும் இல்லை. துணை சுகாதார நிலையத்தில் ஒரு கிராம சுகாதார செவிலியர் பணியாற்றி வருகிறார். துணை சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஒப்பளிக்கப்படுவதில்லை. எனினும், பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் நடமாடும் மருத்துவக் குழுவின்மூலம் மாதம் இருமுறை இந்தத் துணை சுகாதாரப் பகுதிகளுக்கு மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது.

43—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21755—திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், கவுந்தம்பாடி கிராமம், அய்யம்பாளையம் ஆரம்ப சுகாதார துணை மருத்துவமனைக் கட்டடத்திற்குச் சுற்றுச் சுவர், குடிநீர், கழிப்பிடம் மற்றும் மின் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியத்தில் ஒடத்துறை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் அய்யம்பாளையம் துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. அய்யம்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர், குடிநீர், கழிப்பிடம் மற்றும் மின் வசதி செய்ய நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

44—

கூடுதல் மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 22641—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம், மானாமதுரை அரசு மருத்துவமனைகளில் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை அரசு மருத்துவமனை 34 படுக்கை வசதிகளுடன் இயங்கிவரும் வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில், நாளொன்றுக்கு சுமார் 320 புறநோயாளிகளும் 18 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு 7 பெரிய அறுவை சிகிச்சைகளும், 25 பிரசவங்களும் நடைபெற்று வருகின்றன. இம்மருத்துவமனையில் ஒரு முதுநிலை குடிமை மருத்துவரும், நான்கு உதவி மருத்துவர்களும், ஒரு பல் மருத்துவரும் பணிபுரிந்து வருகின்றனர். திருப்புவனம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை மூன்று. தற்போது 3 மருத்துவ அலுவலர்கள் பணியில் உள்ளனர். எனவே, இம்மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கணக்கிலிடும்போது, தேவைக்கதிகமாக மருத்துவர்கள் உள்ளனர். எனவே, இம்மருத்துவமனைகளில் கூடுதல் மருத்துவர்கள் நியமனம் செய்யவேண்டிய அவசியம் எழவில்லை.

45—

புதிய கட்டடம்

வினா எண் 22785—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சின்னக்கண்ணனூர், பச்சேரி, தஞ்சாகூர் கிராம துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் சார்ந்த (1) கொம்புக்காரனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் செயல்படும் சின்னக்கண்ணனூர் துணை சுகாதார நிலையம் சுய உதவிக் குழுவின் வாடகை இல்லாக் கட்டடத்திலும், (2) பெரியக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் செயல்படும் பச்சேரி துணை சுகாதார நிலையம், கிராமத்தார் நாடக மேடையருகே வாடகை இல்லாக் கட்டடத்திலும், (3) தஞ்சாக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த தஞ்சாக்கூர் துணை சுகாதார நிலையம் சொந்தக் கட்டடத்திலும் செயல்படுகின்றன. சின்னக்கண்ணனூர், பச்சேரி ஆகிய துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நபார்டு வங்கியிடம் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. வங்கியின் ஒப்புதல் பெறப்பட்ட உடனே கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும். மேலும், பழுதடைந்துள்ள தஞ்சாக்கூர் துணை சுகாதார நிலையத்தின் கட்டட பழுதுகளை நிவர்த்தி செய்ய இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கப்படும்.

46—

ஓட்டுநர் நியமனம்

வினா எண் 28303—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய நோயாளி ஊர்திக்கு ஓட்டுநரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஓமலூர் தொகுதியில், காடையாம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வாழப்பாடி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இரண்டு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார

2008 நவம்பர் 13]

நிலையங்களுக்கும் ஓட்டுநருக்கான பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டு, காடையாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 16-4-2008 அன்றும், வாழப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 12-4-2008 அன்றும், ஓட்டுநர்கள் பணியில் இணைந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

47—

மகப்பேறு பிரிவு கூடுதல் கட்டடம்

வினா எண் 28397—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அரசினர் மருத்துவமனையில் மகப்பேறு பிரிவிற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அரசு மருத்துவ்மனையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ. 106.35 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையால் 10-8-2007 அன்று ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது:-

(1) தற்போது இருக்கும் கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் (Repairs and renovation to the existing buildings)

(2) வெளிநோயாளிகள் பிரிவுக் கட்டடத் தொகுதி கட்டுதல் (Construction of Out-patient Block)

(3) ஒருங்கிணைந்த மகப்பேறு பிரிவுக் கட்டடத் தொகுதி (Comprehensive Maternity Block)

(4) விபத்து மற்றும் அவசரப் பிரிவுக் கட்டடம் (Accident and Emergency Ward)

(5) இரு சக்கர வாகன நிறுத்தும் இடம் (Two wheeler shed)

[2008 நவம்பர் 13

(6) மருத்துவக் கழிவு சேமிக்கும் அறை (Bio-Medical Wastage storage room)

(7) குருதி சேமிக்கும் அறை மற்றும் நோயாளிகளுக்கு அறிவுரை வழங்கும் அறை உள்ளடக்கிய கட்டடப் பணிகள் (The civil works shall include provision of a blood storage room and a patient counselling booth/cubicle)

48—

தற்காலிக ஓட்டுநர் நியமனம்

வினா எண் 28822—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அரசு மருத்துவமனையிலுள்ள இரண்டு புதிய நோயாளி ஊர்திகளுக்கு முன்னாள் இராணுவ வீரர்களை ஓட்டுநர்களாகத் தற்காலிகமாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசு வெளியிட்ட அறிவுரைகளின்படி, ஓட்டுநர் பணியிடங்களை TEXCO மூலம் முன்னாள் இராணுவ வீரர்களைக் கொண்டு நிரப்ப வேண்டும். ஆனால் TEXCO அனைத்து ஓட்டுநர் பணியிடங்களையும் நிரப்ப ஓட்டுநர்களை அனுப்ப இயலாது எனத் தெரிவித்ததால், ஓட்டுநர் பணியிடத்திற்கான விதிகளின்படி, வேலை வாய்ப்பகம்மூலம் ஓட்டுநர் பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதி அளித்தது. அரசு அனுமதி அளித்ததின்பேரில், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் அம்மருத்துவமனையில் காலியாகவுள்ள மூன்று ஓட்டுநர் பணியிடங்களை மாவட்ட வேலை வாய்ப்பகம்மூலமாக நிரப்பியுள்ளார்.

2008 நவம்பர் 13]

49—

கூடுதல் கட்டடம்

வினா எண் 29559—திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றிய துணை சுகாதார நிலையங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் (1) பாணவரம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் கீழ்வீராணம், கரிக்கல், ஆயல், போலிப்பாக்கம் துணை சுகாதார நிலையங்களும் (2) காவேரிப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் சிறுகரும்பூர், ஒச்சேரி, காவேரிப்பாக்கம், கரிவேடு, கொண்டாபுரம் துணை சுகாதார நிலையங்களும் (3) குருவராஜப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் சேம்பேடு, வடமாம்பாக்கம், நந்திவேடந்தாங்கல், குருவராஜப்பேட்டை, ஆட்சிபுதூர் துணை சுகாதார நிலையங்களும் (4) புதுப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் சேரி, புதுப்பட்டு, வேடந்தாங்கல், ஈராளச்சேரி, பெருவளையம் துணை சுகாதார நிலையங்களும் (5) மின்னல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் மின்னல் அன்வர்திகான்பேட்டை, குன்னத்தூர், பெருமாள்ராஜ்பேட்டை, தண்டலம் சுகாதார நிலையங்களும் (6) பாராஞ்சி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் பாராஞ்சி, கூடலூர், ஜப்பேடு, பரவத்தூர், ஜனகாபுரம் ஆகிய துணை சுகாதார நிலையங்களும் செயல்படுகின்றன. இவை அனைத்தும் அரசுக் கட்டடங்களில் செயல்படுகின்றன.

2. தற்போது இந்த துணை சுகாதார நிலையங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. கூடுதல்

கட்டடம் கட்ட அவசியமிருப்பின், மாவட்ட ஆட்சியரின் சிறப்பு நிதி அல்லது சட்டமன்ற உறுப்பினர்/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஏதேனும் ஒன்றில் நிதி பெற்று கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலூர், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

50—

மருத்துவர் நியமனம்

வினா எண் 30366—திரு. கோ. அரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, செஞ்சி ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, செஞ்சி வட்டாரத்தில் இயங்கிவரும் சத்தியமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த மருத்துவர் பணியிடங்கள் 3. அதில் மூன்று மருத்துவ அலுவலர்களும் பணியில் உள்ளனர். காலிப் பணியிடம் இல்லை.

51—

மருத்துவர் நியமனம்

வினா எண் 30367—திரு. கோ. அரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு மயக்க மருந்து மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கடம்பத்தூர் வட்டாரத்தின் கீழே இயங்கி வருகிறது. இந்நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை 5 ஆகும். தற்போது 5 மருத்துவர்களும் பணியில் உள்ளனர். இந்நிலையத்தில் காலிப் பணியிடம் ஏதுமில்லை.

52—

'வருமுன் காப்போம்' திட்டம்

வினா எண் 31659—திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பொழிச்சலூர் ஊராட்சி அரசு மருத்துவமனையில் 'வருமுன் காப்போம்' திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 'வருமுன் காப்போம்' திட்டத்தில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு மருத்துவ முகாம் வீதம் சுழற்சி முறையில் துணை சுகாதார நிலையப் பகுதியில் நடைபெறுகிறது. இதன் அடிப்படையில், பொழிச்சலூர் துணை சுகாதாரப் பகுதியில் 'வருமுன் காப்போம்' திட்டம், கௌல் பஜாரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 20-2-2007 அன்று நடத்தப்பட்டது. இதில் 1,669 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். இது தவிர, தாம்பரம் தொகுதிக்குட்பட்ட, பம்மலில் உள்ள சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் 6-7-2007 அன்று இம்முகாம் நடத்தப்பட்டு, அதில் 1,014 நபர்களும், திரிசூலம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியில் 6-12-2007 அன்று நடைபெற்ற முகாமில் 1,040 நபர்களும் மற்றும் அனகாபுத்தூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பஞ்சாயத்து யூனியன் ஆரம்ப சுகாதார மையத்தில் நடைபெற்ற முகாமில் 1,109 நபர்களும் பயன் அடைந்துள்ளனர்.

53—

கூடுதல் மருத்துவர் நியமனம்

வினா எண் 37945—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகர அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவரைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகர அரசு மருத்துவமனையில் 9 சிறப்பு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு 850 வெளி நோயாளிகளும், 66 உள் நோயாளிகளும் பயனடைகின்றனர். மேலும், இம்மருத்துவமனைக்கு கூடுதலாக 2 மருத்துவர்கள் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இம்மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்கள் பணிபுரிவதால், கூடுதலாக மருத்துவர்களை மீண்டும் நியமிக்கவேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

54—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 38001—திரு. மா. தண்டபாணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்டத் தலைமை மருத்துவமனைகளில் உளவியல் மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உளவியல் (டி.பி.எம்.) (ம) எம்.டி. (சைக்கியாட்ரி) பயின்ற மருத்துவர்கள் பற்றாக்குறை காரணமாக வட்டத் தலைமை மருத்துவமனைகளில் உளவியல் மருத்துவர்களை நியமிக்க இயலாத நிலை உள்ளது. இருப்பினும் டி.பி.எம். பயின்ற மருத்துவர்களைக் கொண்டு, தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பி உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

55—

மனநல இல்லம்

வினா எண் 38499—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், அணைக்கார கிராம கருணை இல்லத்தில் உடல் ஊனமுற்ற, மனநலம் பாதிக்கப்பட்ட 63 பேர்களுக்குச் சிகிச்சை அளித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தென்காசி தலைமை மருத்துவமனையிலிருந்து மனநலம் பயின்ற மருத்துவர் தலைமையில் மருத்துவக் குழு ஒன்று மாதந்தோறும் மனநல இல்லங்களுக்குச் சென்று சிகிச்சை அளித்து வருகிறது.

56—

தரம் உயர்த்துதல்

வினா எண் 42401—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, பழையனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட திருப்பாச்சேத்தியில் துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. திருப்பாச்சேத்தியில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. திருப்பாச்சேத்தி துணை சுகாதார நிலையம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,02,699. இவ்வொன்றியத்தில் கொண்டகால், பழையனூர், பூவந்தி மற்றும் திருப்புவனம் என 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. தற்போதுள்ள 4 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால், திருப்பாச்சேத்தித் துணை சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

57—

நோய் பரவுதல்

வினா எண் 42891—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பருவ மழையினால் சேலம் மாநகர் பகுதியில் மழை நீர் தேங்கி நோய் பரவி வருவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட 60 கோட்டங்களிலும் துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள், களப் பணியாளர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்களை வைத்து அனைத்துக் கழிவுநீர்க் கால்வாய்களும் தூர் வாரப்பட்டு, கழிவுநீர்

2008 நவம்பர் 13]

தேங்காமல் வைக்கப்பட்டு, சுற்றுப்புற சுகாதாரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அனைத்துக் குடிநீர் நிலையங்களுக்கும் முறையாக குளோரின் கலந்த பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அன்றாடம் சேகரிக்கப்படும் அனைத்துக் கழிவுகளும் அப்புறப்படுத்தப்பட்டு நகரம் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சிப் பகுதியில், சமீபத்தில் ஏற்பட்ட அடைமழையால் நீர்த்தேக்கம் எங்கும் ஏற்படவில்லை. தற்போதைய மழையின்போது சேலம் மாநகர் பகுதியில் எந்தவித நோயும் பரவவில்லை. பாவும் அபாயமும் இல்லை.

58—

24 மணி நேர சிகிச்சை

வினா எண் 42900—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாழப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேரமும் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், வாழப்பாடியில் இருப்பது கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகும். 2001-2002 ஆம் நிதியாண்டில் 30 படுக்கை வசதி (மற்றும்) அறுவை அரங்கம் உடைய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக நபார்டு திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு, ரூ.40 இலட்சத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு 17-03-2004 முதல் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

மேலும் 2007-2008 ஆம் நிதியாண்டில் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தில் வாழப்பாடி கூடுதல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேர பிரசவ சேவை 17-10-2007 முதல் செய்யப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

59—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 47331—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சங்கனாபுரம் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சங்கனாபுரம் கிராம சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்கள் 3 ஆகும். அந்த மூன்று பணியிடங்களிலும் மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது காலிப் பணியிடம் ஏதும் இல்லை.

60—

தரம் உயர்த்துதல்

வினா எண் 48665—திரு. செ. புஷ்பராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி ஒன்றியம், வேம்பி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் உள்ள சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் விக்கிரவாண்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்பட்டு, பொதுப் பணித் துறையால் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அரசின் கொள்கைப்படி ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுவதால் அதே ஒன்றியத்தைச் சார்ந்த வேம்பி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

61—

நிதியுதவி

வினா எண் 50486—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதம் ரூ. 1,000 வீதம் ரூ. 6,000 முழுமையாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள 19 வயதிற்கு மேற்பட்ட ஏழை கர்ப்பிணிப் பெண்கள் அனைவரும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற கர்ப்பிணிப் பெண்கள், அவர்கள் வாழும் பகுதியிலே நிரந்தரமாகக் குடியிருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும் இவர்கள் அப்பகுதியின் கிராம சுகாதார செவிலியரால் பராமரிக்கப்படும் குடும்பப் பதிவேடு மற்றும் பிரசவ கால முன்கவனிப்புப் பதிவேட்டிலும் பதிவு

செய்யப்பட்டிருக்க வேண்டும். மேற்கண்ட தகுதியுள்ள ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு நிதியுதவி ரூ.6,000/-த்தை இரண்டு தவணைகளாக. அதாவது முதல் தவணை ரூ.3,000/-த்தைக் கருவுற்ற ஏழாவது மாதத்திலும், இரண்டாவது தவணை ரூ.3,000/-த்தைக் குழந்தை பிறக்கும் சமயத்திலும், வழங்கப்படுகிறது. மேலும் பயனாளியிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து முன்னுரிமைப் பட்டியலின்படி தகுதியான ஏழை கர்ப்பிணிகளுக்கு இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு ஓமலூர் தொகுதியில் வாழும் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

62—

சிறப்பு மருத்துவர் நியமனம்

வினா எண் 51387—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனையில் நீரிழிவு சிகிச்சைக்கு சிறப்பு மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள உதவி மருத்துவர் பணியிட எண்ணிக்கை இரண்டு இந்த இரண்டு உதவி மருத்துவர் பணியிடங்களும் ஒரு மயக்கவியல் மருத்துவர் மற்றும் ஒரு குழந்தைகள் நல மருத்துவரைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனையில் நீரிழிவு சிகிச்சைக்கென சிறப்பு மருத்துவரை நியமிக்க தற்சமயம் இம்மருத்துவமனையில் உதவி மருத்துவர் காலிப் பணியிடம் ஏதுமில்லை.

2008 நவம்பர் 13]

63—

தடுப்பூசி

வினா எண் 51404—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் மற்றும் வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவ மனைகளில் ஆஸ்துமா நோய் வராமல் தடுக்க தடுப்பூசியும், மருந்துகளும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூர் மற்றும் வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைகளில் ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையும் மருந்துகளும் வழங்கப்படுகின்றன. ஆஸ்துமா நோய் வராமல் தடுக்க தடுப்பூசிகள் கிடையாது.

64—

தடுப்பூசி

வினா எண் 52217—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, திருப்புவனம் ஒன்றியங்களில் விவசாய மக்களுக்கு இலவச மஞ்சள் காமாலை தடுப்பூசி போட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 நவம்பர் 13

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மஞ்சள் காமாலை நோய் HEPATITIS-'A', 'B', 'C', 'D', 'E', 'F' போன்ற வைரஸ் கிருமிகளால் ஏற்படுகின்றது. HEP-'A' வைரஸினால் ஏற்படும் மஞ்சள் காமாலை நோய் பெரும்பாலும் நீர், உணவு மற்றும் சுற்றுப்புற சுகாதாரமின்மையால் ஏற்பட வாய்ப்புள்ளது.

HEP-'A' மஞ்சள் காமாலை நோய்க்கு தமிழக அரசினால் தடுப்பூசி வழங்கப்படுவதில்லை. HEP-'B' வைரஸ் கிருமிகள்மூலம் ஏற்படும் மஞ்சள் காமாலை நோயானது தவறான ஊசிகள் மூலமும், இரத்தம் மற்றும் தவறான உடலுறவு மூலமும் பரவும் வாய்ப்புள்ளது. இதனால் கல்லீரல் நோய்கள் வர வாய்ப்புள்ளது. இந்நோய்க்கு தமிழக அரசின்மூலம் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

65—

மருத்துவர் மற்றும் செவிலியர் நியமனம்

வினா எண் 52402—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கீரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கீரனூர் ஆரம்ப சுகாதார நிலையம், கரூர் சுகாதார மாவட்டத்தின்கீழ் இயங்கி வருகிறது. இந்நிலையத்திற்கென மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட 3 மருத்துவ அலுவலர்கள் மற்றும் 3 செவிலியர் பணியிடங்களிலும் மருத்துவ அலுவலர் மற்றும் செவிலியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையத்தில் காலிப் பணியிடம் ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

66—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 16901—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை கால்நடை மருத்துவமனைக்கு ஆழ்குழாய்க் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை கால்நடை மருந்தகத்திற்கு மேல்நிலைத் தொட்டி மற்றும் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

67—

மருத்துவமனைக் கட்டடம்

வினா எண் 36175 திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, அழகுசமுத்திரம் ஊராட்சிக்கு கால்நடை மருத்துவமனைக் கட்டடம் புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், அழகுசமுத்திரம் கால்நடைக் கிளை நிலையம் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்குப் புதிய கட்டடம் கட்ட நபார்டு RIDF XIII திட்டத்தின் நிதி உதவி பெற பரிசீலிக்கப்படுகிறது. நிதி கிடைக்கப்பெற்றபின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2008 நவம்பர் 13

68—

புதிய கட்டடம்

வினா எண் 37550—திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, பேரளம் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் இயங்கிவரும் பேரளம் கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதி உதவி பெற, நபார்டு திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

69—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 39643—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், பெரியகண்ணனூர் கால்நடை மருத்துவமனைக் கட்டடங்களை மராமத்து செய்து, வெள்ளையடிக்கவும், விரிவுபடுத்தவும், தளவாட சாமான்கள் வழங்கவும், புதிய மின் கம்பிகளை அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், பெரியகண்ணனூர் கால்நடை மருந்தகம் 2000-2001 ஆம் ஆண்டு முதல் அரசுக்குச்

2008 நவம்பர் 13]

சொந்தமான கட்டடத்தில் இயங்குகின்றது. பழுதுகள் ஏதுமில்லை. மின் வசதியும் உள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் கால்நடை மருந்தகத்திற்குத் தேவையான தளவாட சாமான்கள் தேவைப் பட்டியலின் அடிப்படையில் இருப்பில் உள்ளன. மேலும் வெள்ளையடிக்கத் தேவை இல்லை. கட்டடம் கால்நடை மருந்தகத்திற்குத் தேவையான அளவு உள்ளது. எனவே, விரிவுப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

70—

மின் கம்பிகள் மாற்றம்

வினா எண் 39654—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல் கால்நடை மருத்துவமனையின் மின் கம்பிகளைப் புதிதாக மாற்ற அரசு முன்வருமா;

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியத்தில் முத்தனேந்தல் கால்நடை மருந்தகம் 7-1-2005 முதல் ஏற்கெனவே செயல்பட்டு வந்த ஊராட்சிக்குச் சொந்தமான கிளை நிலைய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அம்மருந்தகத்தின் மின்சாரக் கம்பிகள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, அவற்றை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

71—

மருத்துவர் நியமனம்

வினா எண் 40077—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, திருப்புவனம் கால்நடை மருந்தகத்தினை நவீனப்படுத்தி நிரந்தர மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் கால்நடை மருந்தகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட கால்நடை உதவி மருத்துவர் பதவியில் டாக்டர் கே. ராமலட்சுமி என்பவர் நியமனம் செய்யப்பட்டு, 8-8-2007 முதல் தொடர்ந்து திருப்புவனம் கால்நடை மருந்தகத்தில் பணியாற்றி வருகிறார். நபார்டு RIDF X திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் கால்நடை மருந்தகத்தை நவீனப்படுத்த ரூ. 60,000-க்கு தேவையான அனைத்து உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

72—

கூடுதல் கட்டடங்கள்

வினா எண் 40082—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் கால்நடை மருந்தகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் கால்நடை மருந்தகம், 29-10-2003 முதல் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குக் கூடுதல் கட்டடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

2008 நவம்பர் 13]

73—

மருத்துவர் நியமனம்

வினா எண் 40083—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் கால்நடை மருந்தகத்தினை நவீனப்படுத்தி, மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் கிராமத்தில் கால்நடை நிலையங்கள் ஏதும் தற்போது செயல்படாததால் நவீனப்படுத்துவது மற்றும் மருத்துவர்களை நியமிப்பது குறித்துக் கேள்வி எழாது.

74—

கூடுதல் கட்டடம்

வினா எண் 40086—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் கால்நடை மருந்தகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கட்டிக்குளம் கிராமத்தில் கால்நடை மருத்துவ நிலையம் எதுவும் செயல்படவில்லை. எனவே, கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய செயற்குறிப்பு எதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

75—

கால்நடை மருந்தகம்

வினா எண் 40098—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், ஓக்கூர், காளையார்கோவில், இளையான்குடியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், ஓக்கூர், காளையார்கோவில் மற்றும் இளையான்குடி ஆகிய இடங்களில் ஏற்கெனவே கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழாது.

76—

கால்நடை மருத்துவர் நியமனம்

வினா எண் 41124—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், தமறாக்கி கால்நடை மருந்தகத்தைச் சீரமைத்து, கால்நடை மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த தமறாக்கி கால்நடை மருந்தகக் கட்டடத்தினைச் சீரமைப்பது குறித்து 2008-09 ஆம் ஆண்டில்

2008 நவம்பர் 13]

கட்டடங்கள் பராமரித்தல் தலைப்பின்கீழ் உரிய நிதி ஒதுக்கீடு பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சிவகங்கை மாவட்டம் தமறாக்கி கால்நடை மருந்தகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட கால்நடை உதவி மருத்துவர் பதவியில் டாக்டர் கே.சி.எஸ். அருணாபாரதி என்பவர் நியமனம் செய்யப்பட்டு, 4-8-2007 முதல் தமறாக்கி கால்நடை மருந்தகத்தில் பணியாற்றி வருகிறார்.

(ஆ) கேள்வி எழவில்லை.

77—

கூடுதல் கட்டடங்கள்

வினா எண் 41127—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், சாலைக்கிராமம் கால்நடை மருந்தகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சாலைக்கிராமம் கால்நடை மருந்தகம், அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குக் கூடுதல் கட்டடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

78—

கால்நடை மருந்தகங்கள்

வினா எண் 43609—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் புதியதாகக் கால்நடை மருந்தகங்கள் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதியில் (திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து யூனியன்) செங்கல்பட்டு கால்நடை பெருமருத்துவமனை மற்றும் திருக்கழுக்குன்றம், பி.வி. களத்தூர், விட்டலாபுரம் ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்களும், முள்ளிக்கொளத்தூர், ஆசிபாத்தங்களம், அழகுசமுத்திரம், வள்ளிபுரம், நெரும்பூர், மாமல்லபுரம், சதுரங்கப்பட்டினம் ஆகிய ஏழு கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இத்தொகுதியில் ஒரு கால்நடை பெருமருத்துவமனையும், 3 கால்நடை மருந்தகங்களும், 7 கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருவதால், இக்கால்நடை நிலையங்கள் மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. எனவே, இத்தொகுதியில் புதியதாகக் கால்நடை மருந்தகங்கள் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

79—

நோய்த் தடுப்பு

வினா எண் 44235—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கால்நடைகளைக் கோமாரி, குடற்புழு நோய் தாக்கி வருவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும் மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் கால்நடைகளுக்கு இலவசமாகக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், கோமாரி நோய்க்குத் தடுப்பூசி

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

இலவசமாகப் போடப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்டத்தில் 2007-2008 ஆம் ஆண்டில் 1,70,000 கால்நடைகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசியும் 6,98,617 கால்நடைகளுக்கு இலவசமாகக் குடற்புழு நீக்கமும் செய்யப்பட்டுள்ளது.

80—

நோய்த் தடுப்பு

வினா எண் 46079—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேகமாகப் பரவி வரும் கோமாரி நோயால் கால்நடைகள் இறப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறையினரால் கோமாரி (காணை) நோயைத் தடுக்க இலவசமாக மாநிலம் முழுவதும் 2007-2008 ஆம் ஆண்டில் 83,50,000 தடுப்பூசிகள் போடப்பட்டன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2,60,000 கால்நடைகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கால்நடை விவசாயிகள் அருகிலுள்ள அரசு கால்நடை நிலையங்களை அணுகி தங்கள் கால்நடைகளுக்கு இலவசமாகக் கோமாரி நோய்த் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.

81—

இருப்பிடச் சான்று

வினா எண் 38500—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கார கிராம கருணை இல்லத்தில் உடல் ஊனமுற்ற 63 நபர்களுக்கு இருப்பிட, வருவாய்ச் சான்றிதழ் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உறுமன்குளம் கிராமம் அணைக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கருணை இல்லத்தில் உள்ள 60 உடல் ஊனமுற்ற நபர்களுக்கு இருப்பிடச் சான்று கடந்த 3-9-2007-ல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சான்றில் வருமானம் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கருணை இல்ல மேற்பார்வையாளர் திருமதி ஜான்சி என்பவர் பெற்றுள்ளார்.

82—

வீடு கட்டும் திட்டம்

வினா எண் 53546—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி ஜெ.ஜெ. நகர் மற்றும் அண்ணா நகரில் வீட்டு வசதி வாரியம்மூலம் வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி ஜெ.ஜெ. நகர் மற்றும் அண்ணா நகரில் வீட்டு வசதி வாரியம்மூலம் வீடு கட்டித் தரும் திட்டம் எதுவும் வாரியத்திடம் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

83—

வீடு கட்டும் திட்டம்

வினா எண் 53548—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஸ்டேன்மோர் எஸ்டேட், சவரங்காடு எஸ்டேட் மற்றும் வரட்டுப்பாறை குடியிருப்புப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி வாரியம்மூலம் வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) வால்பாறை தொகுதி, ஸ்டேன்மோர் எஸ்டேட், சவரங்காடு எஸ்டேட் மற்றும் வரட்டுப்பாறை குடியிருப்புப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடு கட்டித் தரும் திட்டம் எதுவும் வாரியத்திடம் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

84—

சிலையைப் புதுப்பித்தல்

வினா எண் 58155—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை அரண்மனை வாசல் முன்பு அமைந்துள்ள நேதாஜி சிலையைப் புதுப்பித்துப் பாதுகாக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(அ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2008 நவம்பர் 13

85—

மாணவர் விடுதி

வினா எண் 3539—திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் தங்கும் விடுதியினைத் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி துவக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 59389—திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதியில், அரசுத் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) தலைவாசல் தொகுதி அமைந்துள்ள சேலம் மாவட்டம், சேலத்தில் 984 இருக்கைகளுடனும், மகளிருக்கென்று 136 இருக்கைகளுடனும், இரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையம் ஃபேப்ரிகேஷன் தொழிற்பிரிவில் திறன்மிகு மையமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இம்மாவட்டத்தில் 1,904 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட

2008 நவம்பர் 13]

தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. எனவே, இம்மாவட்டத்தில் இரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் மொத்தம் 1,120 இருக்கைகளுடன் இயங்கி வருவதால், தலைவாசல் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசுக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) எழாது.

87—

திருக்கோயில் பராமரிப்பு

வினா எண் 38353—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளம் ஊராட்சி, அந்தோணியார் நகர்ப் பகுதி ஆதி திராவிட மக்களின் அருள்மிகு மாடன் தம்பிரான் திருக்கோயிலைப் பராமரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், வடக்கன்குளம் கிராமம் அந்தோணியார் நகர்ப் பகுதியிலுள்ள அருள்மிகு மாடன் தம்பிரான் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் அல்லாத திருக்கோயில் ஆகும். மேற்படி திருக்கோயிலுக்கு 2006-2007 ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் அல்லாத ஆதி திராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணிக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் இத்திருக்கோயிலின் கர்ப்பக்கிரகம் கட்டும் பணிக்கு மதிப்பீடுகளை அங்கீகரித்து ரூ. 25,000/- வழங்கப்பட்டு மேற்படி பணியில் 50% சதவீதம் முடிவுற்றது. மேலும் மேற்படி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத காரணத்தால் திருக்கோயிலின் இதர பராமரிப்புப் பணிகளை இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் மேற்கொள்வதற்கு வழிவகையில்லை.

88—

குடிநீர் வசதி

வினா எண் 41067—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் சொக்கனாதிருப்பு ஆதி திராவிடர் காலனிக்குச் சொந்தமான மதுரை வீரன் கோயிலுக்குக் குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் சொக்கனாதிருப்பு ஆதி திராவிடர் காலனிக்குச் சொந்தமான மதுரை வீரன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத, ஆதி திராவிடர் திருப்பணி திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற்ற திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலுக்குப் போதிய நிதி வசதி இல்லாததால் தற்போது குடிநீர் வசதி செய்ய இயலாது.

89—

செவிலியர் கல்லூரி

வினா எண் 43589—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்மூலம் செவிலியர் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்மூலம், பழனியில் (1) அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக்

2008 நவம்பர் 13]

கல்லூரி, (2) அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, (3) அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி, (4) அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி உதவிபெறும் தொடக்கப் பள்ளி, (5) அருள்மிகு பழனியாண்டவர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, (6) அருள்மிகு பழனியாண்டவர் காது கேளாதோர் பள்ளி, (7) அருள்மிகு பழனியாண்டவர் நாதஸ்வரம் மற்றும் தவில் பயிற்சிப் பள்ளி, (8) அருள்மிகு பழனியாண்டவர் வேத ஆகம பாடசாலை, (9) அருள்மிகு பழனியாண்டவர் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் முதல் 4 கல்வி நிறுவனங்களின் சம்பளச் செலவுகளுக்காக அரசு நிதியுதவியும் மற்றும் இதர செலவுகளுக்குத் திருக்கோயில் நிதியும் செலவிடப்படுகிறது. இதர கல்வி நிறுவனங்கள் முற்றிலும் திருக்கோயில் நிதியில் செயல்பட்டு வருகின்றன. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இத்திருக்கோயிலால் நடத்தப்பட்டுவரும் கருணை இல்லங்களில் உள்ள மாணவ, மாணவிகளின் கல்விச் செலவுகளும் திருக்கோயில்மூலமே செலவிடப்பட்டு வருகின்றன. மேலும் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காகப் பல்வேறு நலத் திட்டங்களுக்கான பெருமளவு தொகை திருக்கோயில்மூலம் செலவிடப்படுகிறது. நிதி வசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும் திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ஆண்டுதோறும் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், திருக்கோயில் மூலம் செவிலியர் பயிற்சிக் கல்லூரியை அமைக்கத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புகள் (Infrastructure) மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமாக இக்கல்லூரிக்குத் தேவையான அளவு இடம் இல்லையென்பதாலும், செவிலியர் பயிற்சிக் கல்லூரியை நிருவகிக்க அதிக அளவில் தொடர் செலவுகள் ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டும் பழனி திருக்கோயில்மூலம் செவிலியர் பயிற்சிக் கல்லூரியைத் துவக்க இயலாத நிலை உள்ளது.

90—

அடிப்படை வசதிகள்

வினா எண் 46005—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 13

(அ) இராமநாதபுரம் மாவட்டம், உத்தரகோசமங்கை, மங்களநாதசுவாமி கோவிலில் அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், உத்தரகோசமங்கை, அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் சிரமமின்றி, திருக்கோயிலைச் சுற்றிவர ஏதுவாக ஆலய உள் பிரகாரங்களில் ரூ. 21.00 இலட்சத்தில் கான்கிரீட் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. பக்தர்களுக்குக் கூடுதல் வசதி செய்துதரும் நோக்கத்துடன் அக்னி தீர்த்தத்தின் வடக்குப் பகுதியில் பக்தர்கள் இளைப்பாற ரூ. 8.50 இலட்சம் மதிப்பீட்டில் நிலத் தோட்டம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பக்தர்களுக்கு ஓய்வு அறைகள் சுற்றுலாத் துறை மூலமாகக் கட்டப்பட்டு ஊராட்சி நிருவாகம் மூலமாகக் கட்டணம் பெற்றுக்கொண்டு பயன்பாட்டில் உள்ளன. திருக்கோயிலின் உள் பகுதியில் புதிதாக மின் இணைப்பும், வெளிப் பகுதியில் தெரு விளக்கும் அமைக்கும் பணி ரூ. 6.20 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தலா 5 எண்ணிக்கையில் தனித் தனி கழிவறைகளும், தலா 4 குளியலறைகளும் நவீன முறையில் அமைக்கப்பட்டு, பக்தர்களின் பயன்பாட்டில் உள்ளன.

91—

ஒலி–ஒளிக் காட்சி

வினா எண் 51083—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் கோட்டையில் வேலூர் சிப்பாய்ப் புரட்சி-1806 என்ற ஒலி-ஒளிக் காட்சி அமைத்து இந்திய சுதந்திர வரலாற்றைப் படமாகக் காட்ட அரசு முன்வருமா?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

வேலூர் கோட்டை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. இது மைய அரசு தொல்லியல் துறை சென்னை வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

92—

ஆடு மாடுகளுக்கு மேய்ச்சல் வசதி

வினா எண் 33520—திரு. தி. இராமசாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர், மேற்குத் தொடர்ச்சி மலையில் ஆடு மாடுகள் மேய்வதற்கு அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

ஸ்ரீவில்லிபுத்தூர், மேற்குத் தொடர்ச்சி மலையில், ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில் சரணாலயம் நீங்கலாக, இதர பகுதிகளில் ஆடு மாடுகள் மேய்ச்சல் அனுமதிக்கப்படுகிறது.

93—

மண் தொட்டிகள் பயன்பாடு

வினா எண் 34555—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வனத் துறை சார்பாக மரக்கன்றுகளை வளர்க்க மண் தொட்டிகளைப் பயன்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில், வனத் துறையில், மரக்கன்றுகளை வளர்க்க மண் தொட்டிகளைப் பயன்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

94—

மரக் கன்று நடுதல்

வினா எண் 51075—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி, அலமேலுமங்காபுரம், பெருமுகை பகுதியில் உள்ள மலைகளில் காடு வளர்ப்புத் திட்டத்தில் மரக் கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, அலமேலுமங்காபுரம், பெருமுகை பகுதியிலுள்ள மலைக் காடுகளில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரக் கன்றுகள் நடுவது குறித்த திட்டம் எதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

95—

சாலை மேம்பாடு

வினா எண் 33345—திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சி-த. மரவக்காடு சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சி-த. மரவக்காடு சாலையில் மேம்படுத்தப்பட உள்ள சாலை தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகா, பட்டுக்கோட்டை ஒன்றியம், துவரங்குறிச்சி, த. மாவக்காடு சாலை கி.மீ. 0/0-7/2 எனும் இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-1/0 மற்றும் 2/0-3/0 பழுதுபார்த்தல் பணி, தலைமைப் பொறியாளர் (நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்தின்மூலம் ரூ. 11.00 இலட்சத்தில்

29-2-2008-ல் முடிக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள சாலைப் பகுதி கி.மீ. 1/0-2/0 மற்றும் 3/0-7/2-க்கு தஞ்சாவூர் (நெடுஞ்சாலை) நிரந்தர கோட்டத்தின்மூலம் ரூ. 58.00 இலட்சத்தில் 31-3-2008-ல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

96—

ஆதி திராவிடர் காலனி வீடுகள்

வினா எண் 5446—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, வேப்பனூத்து ஊராட்சி பாறைப்பட்டியில் உள்ள ஆதி திராவிடர் காலனி வீடுகளை மராமத்து செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, வேப்பனூத்து ஊராட்சி, பாறைப்பட்டியில் உள்ள ஆதி திராவிடர் காலனி வீடுகளை இத்துறையின்மூலம் மராமத்து செய்யும் திட்டம் நடைமுறையில் இல்லை.

97—

தரம் உயர்த்துதல்

வினா எண் 12446—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, நெரும்பூர், ஆதி திராவிடர் நலத் துறை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

2008-2009 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு தொகுதி, நெரும்பூர், அரசு ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி

அரசாணை (நிலை) எண் 70, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 13-06-2008-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

98—

மயானப் பாதை வசதி

வினா எண் 39943—திரு. மு. அப்பாவு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அச்சம்பாடு ஊராட்சி, கிழவனேரி ஆதி திராவிட மக்களுக்கு மயானப் பாதை வசதி, மயானக் கொட்டகை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, கிழவனேரி கிராமத்தில் ஆதி திராவிட மக்கள் தற்போது புல எண் 6697-ல் பயன்படுத்திவரும் மயானத்திற்குப் பாதை வசதி புல எண் 172 பாட்டை புறம்போக்கில் ஏற்கெனவே உள்ளது. எனவே, தனியாக மயானப் பாதை வசதி ஏற்படுத்தித்தர வேண்டிய அவசியம் இல்லை.

99—

சமுதாயக் கூடம்

வினா எண் 58499—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

உசிலம்பட்டி தொகுதி, தும்மக்குண்டு ஊராட்சி, தும்மக்குண்டு ஆதி திராவிட மக்களுக்குச் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, தும்மக்குண்டு ஊராட்சி, தும்மக்குண்டு ஆதி திராவிட மக்களுக்குச் சமுதாயக் கூடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

100—

நவீனமயமாக்கல்

வினா எண் 46957—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இராமேஸ்வரம் பகுதியில் கருவாடு பதப்படுத்தும் தொழிலை நவீனமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளில் தாட் எனப்படும் தேங்காய் நார்வலை மற்றும் கழித்தொதுக்கப்பட்ட நூல் வலைகளிலும் கருவாடுகள் காயப் போடப்படுகின்றன.

மேற்படி காயப்போடும் கருவாடுகள் ஒரே நாளில் காய்ந்தும், சுத்தமாகவும் இப்பகுதிகளில் கையாள்வதற்கு வசதியாகவும் உள்ளன. இதனால் மிகக் குறைந்த செலவினமே ஏற்படுகிறது. ஏழை மீனவத் தொழிலாளர்கள் பலருக்கு வேலைவாய்ப்பும் உள்ளது. அதனால் இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளில் கருவாடு பதப்படுத்தும் தொழிலை நவீனமயமாக்கவேண்டிய அவசியம் எழாது.

பட்டியல் 8

1—

மதுபானக் கடை இடமாற்றம்

வினா எண் 40909—திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் நகரப் பேருந்து நிலையம் அருகில் உதவிக் கல்வி அலுவலகத்தின் கீழ்மாடியிலுள்ள டாஸ்மாக் மதுபானக் கடையை இடம் மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள்:

நாமக்கல் நகரப் பேருந்து நிலையம் அருகில் உதவிக் கல்வி அலுவலகத்தின் கீழ்மாடியில் இருந்த டாஸ்மாக் மதுபானக் கடை (எண் 3916) கடந்த 9-3-2008 அன்று மூடப்பட்டுவிட்டது.

2—

சீரான மின்சாரம்

வினா எண் 19925—திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 15-ல் பாலு தெரு, அப்பாசாமி தெரு, கோதண்டராமர் தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 15-ல் பாலு தெரு மற்றும் கோதண்டராமர் தெருவில் உள்ள பழைய பில்லரை மாற்றி புதிய பில்லர் அமைக்கப்பட்டுள்ளது. அப்பாசாமி தெருவில் தாழ்வழுத்த 1 x 240 சதுர மி.மீ. அளவுள்ள புதைவடம் 120 மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதிகளில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

2008 நவம்பர் 13]

3—

மின் இணைப்பு

வினா எண் 28763—திரு. கி. ஆறுமுகம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செங்கல்பட்டு நகராட்சி, அம்பேத்கர் நகர் 7-வது வார்டு பகுதியில் மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு நகராட்சி, அம்பேத்கர் நகர் 7-வது வார்டில் உள்ள ஸ்ரீ ஆதி பச்சையம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான இடத்தில் (புல எண் 1191, 1192/1 மற்றும் 1193/3) கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க நீதிமன்றத் தடை உத்தரவு உள்ளது. ஆகவே, மின் இணைப்பு வழங்க இயலவில்லை. மற்ற இடங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு வாரிய விதிமுறைகளின்படி உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தால் மின் இணைப்பு வழங்கப்படும்.

4—

மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 37790—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, வீ. கரிசல்குளம் ஊராட்சி, தாமரைக் குளத்திற்குத் தனியாக மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வீ. கரிசல்குளம் ஊராட்சி, தாமரைக்குளம் கிராமத்தில் புதிதாக 100 கே.வி.ஏ. மின் மாற்றி இயக்கி வைக்கப்பட்டுள்ளது.

5—

மின் கம்பங்கள் மாற்றம்

வினா எண் 38340—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பழையூர் பகுதி, நயினார்பேட்டை பகுதி, கலியாந்தூர் வயல்வெளிப் பகுதிகளில் மின் கம்பங்களைப் புதிதாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பழையூர் பகுதி, நயினார்பேட்டை பகுதி, கலியாந்தூர் வயல்வெளிப் பகுதிகளில் பழுதடைந்ததாகக் கண்டறியப்பட்ட 11 மின் கம்பங்களும் மாற்றப்பட்டுவிட்டன.

6—

மின் கம்பிகள் மாற்றம்

வினா எண் 41477—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் லாடனேந்தலில் தாழ்வாகச் செல்லும் மின்சாரக் கம்பிகளை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் லாடனேந்தலில் ஸ்டே ராடுகள் அறுந்து விட்டதால் மின் கம்பிகள் தாழ்வாகச் சென்றன. தற்போது ஆறு புதிய ஸ்டே ராடுகள் (நிலை நிறுத்துக் கம்பி) அமைத்து மின் கம்பிகள் போதுமான இடைவெளியில் இழுத்துக் கட்டப்பட்டு சரிசெய்யப்பட்டுவிட்டன.

2008 நவம்பர் 13]

7—

மின் கம்பிகள் மாற்றம்

வினா எண் 41597—திரு. கு. செல்வம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மங்கலூர் தொகுதி, நல்லூர் ஒன்றியம், ஏ. அகரம் கிராமத்தில் தாழ்வாக உள்ள மின் கம்பிகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

மங்கலூர் தொகுதி, நல்லூர் ஒன்றியம், ஏ. அகரம் கிராமத்தில் நடுத் தெரு, ஏ. அகரம் காலனி பகுதி மற்றும் கிழக்குத் தெரு பகுதி, மேலூர் செல்லும் சாலை, ஏ. அகரம் கிராமத்திலிருந்து வேப்பூர் செல்லும் சாலை ஆகிய இடங்களில் இருந்த தாழ்வழுத்த மின் கம்பிகள் இழுத்து கட்டப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளன.

8—

சீரான மின்சாரம்

வினா எண் 44132—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தி. ஆலங்குளம் கிராமத்தில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தி. ஆலங்குளம் கிராமத்திற்கு, 24-10-2007 அன்று முதல் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திருப்பாச்சேத்தி 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது அங்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

9—

சீரான மின்சாரம்

வினா எண் 44134—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வேலாங்குளம் பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் வேலாங்குளம் பகுதிக்கு 24-10-2007 முதல் புதியதாக அமைக்கப்பட்டுள்ள திருப்பாச்சேத்தி 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

10—

மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 44139—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பழையனூரில் 250 கிலோ வோல்ட் திறன் கொண்ட மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பழையனூரில் ஏற்கெனவே 100 கே.வி.ஏ. 11 கி.வோ. திறன் உள்ள மின் மாற்றி இயக்கத்தில் உள்ளது. இம்மின் மாற்றியில் இணைக்கப்பட்டுள்ள மின் பளு மின்

மாற்றியின் திறனைவிடக் குறைவாகவே உள்ளது. இம்மின் மாற்றியின் கடைநிலை மின்னழுத்தத்தை உச்ச நேர வேளையில் அளவீடு செய்தபோது ஒரு முனை மின்னழுத்தம் 230 வோல்ட் என தகுந்த அளவில் உள்ளது. ஆகையால், பழையனூர் கிராமத்தில் உள்ள மின் மாற்றியின் திறனை உயர்த்தவேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

11—

சீரான மின்சாரம்

வினா எண் 44575—திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை, வால்பாறை தொகுதியின் கீழ்ப்பகுதி கிராமங்கள் மற்றும் அங்கலக்குறிச்சி ஊராட்சியில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, வால்பாறை தொகுதியின் கீழ்ப்பகுதி கிராமங்கள் மற்றும் அங்கலக்குறிச்சி ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு அங்கலக்குறிச்சி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து ஆறு 22 கி.வோ. மின்னூட்டிகளின்மூலம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

12—

வீடுகளுக்கு மின் வசதி

வினா எண் 45870—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, காட்டுப்பகுதி மலைவாழ் மக்கள் வீடுகளுக்கு மின் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதிக்குட்பட்ட காட்டுப் பகுதியில் உள்ள 59 குடியிருப்புகளில் 27 குடியிருப்புகளுக்கு 16-6-95 அன்று மின்னிணைப்பு வழங்கப்பட்டது. மீதமுள்ள 32 குடியிருப்புதாரர்கள் வனத் துறையின் தடையின்மை சான்றுடன் விண்ணப்பித்தால் வாரிய விதிகளின்படி மின்னிணைப்பு வழங்கப்படும்.

13—

சுய வேலைவாய்ப்புப் பயிற்சி

வினா எண் 57513—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்டல ஊரகப் பயிற்சி நிறுவனத்தில் செயல்படுத்தப்பட்ட இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சியை மீண்டும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1999 ஆம் வருடத்திற்குப் பின்னர் ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் மத்திய அரசினால் கைவிடப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தினால் மண்டல ஊரகப் பயிற்சி நிறுவனங்களில் மேற்படிப் பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்படவில்லை. எனவே, மீண்டும் இப்பயிற்சிகளைத் தொடர்ந்து நடத்த வாய்ப்பில்லை.

14—

நியாய விலைக் கடை

வினா எண் 17915—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அரியாம்பட்டி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடையைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட செலவிடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் அரியாம்பட்டி நியாய விலைக் கடையினை பழுது நீக்கி சீர் செய்ய திட்ட அலுவலர், சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. இதன் மீதான தொடர் நடவடிக்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் மேற்கொள்ளப்படும்.

15—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 60461—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வாழைப் பயிர் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தமிழ்நாட்டில் வாழை சாகுபடிக்குத் தேவையான தகுந்த இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து திருச்சியில் அமைந்துள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர, வாழை சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்கள் மற்றும் ஆலோசனைகளுக்குத் தமிழ்நாடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2008 நவம்பர் 13

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும் அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள தோட்டக்கலை அறிவியலாளர்களை அணுகலாம். புதியதாக ஒரு ஆராய்ச்சி நிலையம் துவங்க சுமார் ரூ. 3 கோடி முதல் ரூ. 5 கோடி வரை நிதி தேவைப்படுகிறது. எனவே, மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வாழைப் பயிர் ஆராய்ச்சி மையம் அமைக்கவேண்டிய அவசியமில்லை.

16—

தேங்கிக் கிடக்கும் வழக்குகள்

வினா எண் 14898—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவில் முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தேங்கிக் கிடக்கும் நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க சென்னை உயர் நீதிமன்றத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவில் முடிக்க சென்னை உயர் நீதிமன்றம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது:—

(i) நிலுவையிலுள்ள வழக்குகளை விரைவில் முடிவிற்குக் கொண்டு வரவும், குறைந்த காலத்தில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகளை முடிப்பதற்காகவும், பொதுவான சட்டப் பிரிவு கொண்ட வழக்குகளை ஒன்று சேர்த்து ஒரு பிரிவாகக் கொண்டு அவை ஒரே நீதிபதியின் தீர்வுக்காக வைக்கப்படுகின்றன.

2008 நவம்பர் 13]

(2) சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த முந்தைய தீர்வுகளின் அடிப்படையின்கீழ் வரும் வழக்குகள் எல்லாம் ஒரே தொகுதியாக ஒருங்கிணைத்து நீதிபதியின் தீர்வுக்காக வைக்கப்படுகின்றன.

(3) பழைய வழக்குகளை எல்லாம் முடிவிற்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் இதர நீதிபதிகளின் அமர்வுகளுக்கு ஏற்பாடு செய்கிறார்.

(4) அவ்வழக்குகளை கால வரிசை முறைப்படி கண்டிப்பாக விசாரணை செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

(5) சில குறிப்பிட்ட சிறப்புக் காரணங்கள் அல்லாது பிந்தைய ஆண்டுகளுக்கான வழக்குகள் (Last year cases) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

(6) பழைய வழக்குகளுக்கு ஒத்திவைப்பு வழங்கப்படுவதில்லை.

(7) உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக அவ்வப்போது மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதிகளின் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

(8) நிலுவையிலுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

17—

தூர் வாருதல்

வினா எண் 22669—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், காஞ்சிரங்குளம், மேலவள்ளூர், கொந்தகை, திருப்புவனம், நயினார்கோட்டை, கட்டமன்கோட்டை கண்மாய்களின் கால்வாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், நயினார்கோட்டை மற்றும் கட்டமன்கோட்டை ஆகியவை திருப்புவனம் ஒன்றியத்திற்குட்பட்ட பஞ்சாயத்து யூனியன் கண்மாய்கள் ஆகும். மேலவெள்ளூர் கண்மாய் பகுதி-2 திட்டத்தின் மூலம் சீரமைக்கப்பட்டு வருகிறது. மேற்காணும் ஏனைய கண்மாய்களின் வரத்துக் கால்வாய்களை வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் சீரமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18—

புதிய கண்மாய் மடைகள்

வினா எண் 23263—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மேலப்பசலை, கட்டிக்குளம், மிளகனூர் மற்றும் கீழ்மேல்குடி கண்மாய்களின் மடைகளைப் புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, மேலப்பசலை, கட்டிக்குளம், மிளகனூர் மற்றும் கீழ்மேல்குடி கண்மாய்கள் முறையே 126.36, 1212.42, 569.13 மற்றும் 178.27 ஹெக்டேர் பாசனப் பரப்புடையன. இக்கண்மாய்கள் யாவும் பூர்வீக ஆற்றுப் பாசனக் கண்மாய்களாகும். மேற்கண்ட கண்மாய்களுக்குரிய மடைகளைப் புதிதாகக் கட்ட பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் படிப் படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

19—

புதிய கண்மாய் மடைகள்

வினா எண் 23286—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூர், மணலூர், தட்டான்குளம், அம்பலத்தாடி, டி. வேலாங்குளம், வில்லியநேந்தல் கண்மாய்களின் மடைகளைப் புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பழையனூர், மணலூர், தட்டான்குளம், அம்பலத்தாடி, டி. வேலாங்குளம், வில்லியநேந்தல் கண்மாய்களின் மடைகள் வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து சீர் செய்யப்படும். இக்கண்மாய்களின் மடைகளைப் புதிதாகக் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

புதிய கண்மாய் மடைகள்

வினா எண் 23295—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை கண்மாய் மடைகளைப் புதிதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை கண்மாய் மடைகளைப் புதிதாக கட்ட வரும் ஆண்டுகளில் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் கண்மாய்க்குரிய மடைகளை புதிதாகக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

21—

தூர் வாருதல்

வினா எண் 23308—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், கட்டனூர் கண்மாய், கால்வாயைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், கட்டனூர் கிராமத்திலுள்ள கட்டனூர் கண்மாய், கிருதுமால் உப வடிநிலத்தைச் சார்ந்த கண்மாய் ஆகையால் இக்கண்மாயின் வரத்துக் கால்வாயைத் தூர் வாரி புனரமைக்கும் பணி உலக வங்கி நிதியுதவியில் நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் கிருதுமால் உப வடிநிலப் பணிகள் 2 ஆம் ஆண்டு திட்டத்தில் மேற்கொள்ளும்போது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

2008 நவம்பர் 13]

22—

தூர் வாருதல்

வினா எண் 23309—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மடப்புரம், தட்டான்குளம், சொரிகுளம், மணலூர், கலியாந்தூர் கண்மாய், கால்வாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தட்டான்குளம், கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 1.00 கி.மீ. ஆகும். சொரிகுளம் கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 1.00 கி.மீ. ஆகும். மணலூர் கண்மாயின் வரத்துக் கால்வாய் நீளம் 2.00 கி.மீ. ஆகும். கலியாந்தூர் கண்மாய் பஞ்சாயத்து யூனியன் கண்மாய் ஆகும். மணலூர் கண்மாய் 2003-2004 ஆம் ஆண்டு தூர் வாரி சீரமைக்கப்பட்டுள்ளது. ஏனைய கண்மாய்கள் வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து தூர் வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

23—

தூர் வாருதல்

வினா எண் 23314—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இடைக்காட்டூர், சிறுகுடி, பொட்டப்பாளையம், முதுவந்திடல், சம்பராயனேந்தல், பதினெட்டாங்கோட்டை கண்மாய், கால்வாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, சிறுகுடி கண்மாய், கால்வாய் பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்பந்தம் போடப்பட்டு தூர் வாரும் நிலையில் உள்ளது. இடைக்காட்டூர், பதினெட்டாங்கோட்டை, முதுவந்திடல் மற்றும் சம்பராயனேந்தல் கண்மாய்கள் முறையே 51.83, 96.30, 49.02 மற்றும் 76.92 ஹெக்டேர் பாசனப்பரப்புடையவை. இக்கண்மாய்கள் யாவும் பூர்வீக ஆற்றுப் பாசனக் கண்மாய்களாகும். பொட்டப்பாளையம் கண்மாய் 65.92 ஹெக்டேர் பாசனப்பரப்புடையது. இக்கண்மாய் முறைசாராப் பாசனக் கண்மாயாகும். மேற்கண்ட கண்மாய்கள், கால்வாய்ப் பணிகளை வரும் ஆண்டுகளில் கிடைக்கப்பெறும் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

24—

தூர் வாருதல்

வினா எண் 23320—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, செல்லப்பனேந்தல், வில்லியநேந்தல், டி. வேலாங்குளம் கண்மாய், கால்வாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா ;

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, செல்லப்பனேந்தல், வில்லியநேந்தல், டி. வேலாங்குளம் கண்மாய், கால்வாய்களைத் தூர் வாரி சீரமைத்துத் தர, வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2008 நவம்பர் 13]

25—

தூர் வாருதல்

வினா எண் 26724—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பரமக்குடி வட்டம், மோசுகுடி ஊராட்சி, பெரிய பிச்சைபிள்ளையேந்தல், இடையாத்தூர், பன்னீர்குளம், மாரநேரி, மோசுகுடி, வாகைக்குளம் ஆகிய கண்மாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, பரமக்குடி வட்டம், இடையாத்தூர், மாரநேரி மற்றும் மோசுகுடி கண்மாய்கள் மட்டும் பொதுப் பணித் துறை பராமரிப்புக்கு உட்பட்ட கண்மாய்கள் ஆகும். இந்தக் கண்மாய்களை, வரும் நிதியாண்டுகளில் கிடைக்கப்பெறும் நிதி ஒதுக்கீட்டிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் தூர் வார நடவடிக்கை எடுக்கப்படும். பிச்சைப்பிள்ளையேந்தல், பன்னீர்குளம் மற்றும் வாகைக்குளம் கண்மாய்கள் பரமக்குடி ஊராட்சி ஒன்றிய பராமரிப்புக்கு உட்பட்ட கண்மாய்கள் ஆகும்.

26—

தடுப்புச் சுவர்

வினா எண் 26739—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பரமக்குடி ஒன்றியம், ஏனாதிக்கோட்டை கண்மாய் கரையில் தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, பரமக்குடி ஒன்றியம், ஏனாதிக்கோட்டை கண்மாய் கடந்த 2001 ஆம் ஆண்டு நீர்வள மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் தூர் வாரப்பட்டு தற்போதுவரை கால்வாய் நல்ல நிலையில் உள்ளது. கண்மாயின் உள்வாயில் தடுப்புச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

27—

மராமத்துப் பணி

வினா எண் 28103—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், பள்ளிரமடை, கட்டிக்குளம், கால்பிரவு, ராஜகம்பீரம், வேதியரேந்தல் ஆகிய கண்மாய்களின் கலிங்கை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், பள்ளிரமடை, கட்டிக்குளம், கால்பிரவு, ராஜகம்பீரம், வேதியரேந்தல் ஆகிய கண்மாய்களுக்குரிய கலிங்குகளை மராமத்து செய்ய, வரும் நிதியாண்டுகளில் பெறப்படும் நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

28—

கலிங்குகள் பராமரிப்பு

வினா எண் 28120—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், முல்லைக்குளம், என். புளியங்குளம், நச்சேரனை, மருதங்கநல்லூர், கலியனேந்தல், சொக்கப்பனேந்தல் ஆகிய கண்மாய்களின் கலிங்கை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) என். புளியங்குளம், நச்சேரனை, மருதங்கநல்லூர் கண்மாய் கலிங்குகளை நீர்வள, நிலவளத் (IAMWARM) திட்டத்தின்கீழ் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. எஞ்சிய கண்மாய்களுக்குரிய கலிங்குகளை வருடாந்திர பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக மராமத்து செய்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

29—

புதிய கலிங்குகள்

வினா எண் 28145—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், புலவச்சேரி, எஸ். கரிசல்குளம், புல்லைமறிச்சான், வாகுடி, வடக்குச் சந்தனூர், தெற்குச் சந்தனூர், தாமரைக்குடி, சேமாத்தூர் ஆகிய கண்மாய்களின் கலிங்கைப் புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், புலவச்சேரி, எஸ். கரிசல்குளம், புலவைமறிச்சான், வழுதணி, வடக்குச் சந்தனூர், தெற்குச் சந்தனூர், தாமரைக்குடி மற்றும் சோமாத்தூர் கண்மாய்களில் உள்ள கலிங்குகளைப் புதிதாகக் கட்டுவதற்கு, வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

கலிங்குகள் பராமரிப்பு

வினா எண் 28167—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தவத்தாரேந்தல், முக்குடி, நெடுங்கரை, அச்சங்குளம், பொய்கை, பொட்டப்பாளையம், புலியூர், ராங்கியம், டி. புளியங்குளம் ஆகிய கண்மாய் கலிங்குகளை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தவத்தாரேந்தல், முக்குடி, நெடுங்கரை, அச்சங்குளம், புலியூர், ராங்கியம், டி.புளியங்குளம், பொய்கை, பொட்டப்பாளையம் ஆகிய கண்மாய்களின் கலிங்குகளை, வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2008 நவம்பர் 13]

31—

கலிங்குகள் பராமரிப்பு

வினா எண் 28214—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வில்லியரேந்தல், மேலச்சொரிகுளம், கீழவெள்ளூர், கருவக்குடி, அகரம்பொட்டல், அம்பலத்தடி ஆகிய கண்மாய்களின் கலிங்குகளை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழவெள்ளூர் கண்மாய் கலிங்குகள் நபார்டு வங்கி நிதியுதவியுடன் சீரமைக்கப்பட்டுள்ளன. வில்லியரேந்தல், மேலச்சொரிகுளம், கருவக்குடி, அகரம்பொட்டல், அம்பலத்தடி ஆகிய கண்மாய்களின் கலிங்குகளை, வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32—

புதிய கலிங்குகள்

வினா எண் 28220—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழச்சொரிகுளம், லாடனேந்தல், கிளாதரி, மாரநாடு, கருங்குளம், திருப்புவனம், கீழக்கரிசல்குளம், எஸ். புதுக்கோட்டை கண்மாய்களின் கலிங்குகளைப் புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழச்சொரிகுளம், லாடனேந்தல், கிளாதரி, மாரநாடு, கருங்குளம், திருப்புவனம், கீழக்கரிசல்குளம், எஸ். புதுக்கோட்டை கண்மாய்களின் கலிங்குகளை, வரும் ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33—

சாலை செப்பனிடுதல்

வினா எண் 39391—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பார்த்திபனூர் மதகு அணையருகே மரங்களைப் பாதுகாத்து சாலைகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பார்த்திபனூர் மதகு அணையருகே உள்ள மரங்கள் நல்ல முறையில் பாதுக்காக்கப்பட்டு வருகின்றன. சாலைகள் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளன.

34—

விபத்துகளைத் தவிர்த்தல்

வினா எண் 39765—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

(அ) மானாமதுரை தொகுதி, மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகளைத் தவிர்க்க அதிவேக வாகனங்களைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் சிவகங்கை மாவட்ட எல்லையான எம். கரிசல்குளம் முதல் சிலைமான் அருகில் உள்ள அபிராமி மில் கேட் வரையில் தேசிய நெடுஞ்சாலை ரோந்துக் குழு மானாமதுரை துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் நேரடி மேற்பார்வையில் இயங்கி வருகிறது. இந்தக் குழுவினர் அதிவேக வாகனங்களை உடனடியாக நிறுத்தி வாகன வழக்குகளைப் பதிவு செய்தும், வாகன ஓட்டிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கியும், வேகத்தின் அளவைக் கட்டுப்படுத்தியும் வருகிறார்கள். மேலும், மேற்படி தேசிய நெடுஞ்சாலையில், சிவகங்கை மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் எம். கரிசல்குளம், கேப்பார்பட்டினம், மானாமதுரை வழிவிடு முருகன்கோயில், மானாமதுரை பைபாஸ் ரோடு, செம்பராயனேந்தல் விலக்கு, திருப்பாச்சேத்தி பிரதான பஸ் நிறுத்தம், திருப்பாச்சேத்தி காவல் நிலையம், தூதை விலக்கு, வாடனேந்தல், திருப்புவனம், பூவந்திவிலக்கு மற்றும் அபிராமி மில் கேட் ஆகிய இடங்களில் வேகத் தடுப்பு வேலிகள் அமைத்து அனைத்து வாகனங்களின் வேகத்தையும் கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கத் தேவையான அகலம், மேற்படி சாலையில் இல்லாத காரணத்தால் ஆங்காங்கே சில விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, மேற்படி சாலையின் அகலத்தை விரிவுபடுத்தி விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

35—

லாரிகள் செல்லத் தடை

வினா எண் 42636—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரின் மையப் பகுதியில் செல்லும் தேசிய நெடுஞ் சாலையில் லாரிகள் செல்ல முழுமையாகத் தடை செய்து தருமபுரி புறவழிச் சாலை வழியாக லாரிகளை அனுமதிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது தருமபுரி நகரின் மத்தியப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை (NH-7) செல்கிறது. தருமபுரி நகர்ப் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு காலை 8-00 மணி முதல் இரவு 10-00 மணி வரை நகருக்குள் செல்லும் லாரிகள் அதியமான்கோட்டையில் இருந்து, நகரை ஒட்டிச் செல்லும் இணைப்புப் புறவழிச் சாலை வழியாகச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. மேலும், இரவு நேரங்களில் அதியமான்கோட்டையில் இருந்து செல்லும் இணைப்புப் புறவழிச் சாலை வழியாகவே லாரிகள் செல்ல அனுமதிக்கப்பட்டால், சோகத்தூர் ஏரிக்கரை வழியாகச் செல்லும் இந்தப் புறவழிச் சாலையில், ஏரிக்கரை சாலை மிகவும் குறுகலாக வளைவுகள் மிகுந்துள்ள காரணத்தால், விபத்துகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இதனால் இரவு நேரத்தில் மட்டும் கனரக வாகனங்களை தருமபுரி மையப் பகுதியில் செல்லும் நெடுஞ்சாலையில் செல்ல அனுமதிக்கப்படுகிறது. தற்பொழுது சேசம்பட்டியில் இருந்து குண்டல்பட்டி வரை புதியதாக போடப்பட்டு வரும் நான்கு வழிச் சாலை வேலைகள் நடந்து வருவதால், இதன் வேலை முழுமையாக முடிவடைந்தவுடன், தருமபுரி நகரின் மத்திய பகுதியில் செல்லும் தேசிய நெடுஞ்சாலை வழியாக லாரிகள் செல்ல முழுமையாகத் தடை செய்யப்படும்.

36—

பேருந்து வசதி

வினா எண் 47696—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் சமுத்திரம் பகுதிக்குக் கூடுதல் பேருந்தும், எடப்பாடி-ராசிபுரம் வரை (வழி) கொங்கணாபுரம் வெள்ளையம்பாளையம்-

காக்காபாளையம், ஆட்டையாம்பட்டி வரை புதிய பேருந்தும், ஓமலூர்-ஈரோடு வரை (வழி) தாரமங்கலம், சின்னப்பம்பட்டி-சமுத்திரம்-கோரணம்பட்டி-மூலப்பாதை வரை புதிய பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1. எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் சமுத்திரம் பகுதிகளுக்கு, தடம் எண் 6, -6 நடைகளும், தடம் எண் 2பி, 2டி-8 நடைகளும், தடம் எண் 2சி-6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நடைகளில் பயணியர் கொள்திறன் சராசரியாக 37 சதவிகிதமே உள்ளது.

2. எடப்பாடி-ராசிபுரம் (வழி) கொங்கணாபுரம், வெள்ளையம்பாளையம், காக்காபாளையம் ஆட்டையாம்பட்டி தடத்தில் பகுதிவாரியாக அரசுப் பேருந்துகள் 106 நடைகளும், தனியார் பேருந்துகள் 114 நடைகளும் இயங்கி வருகின்றன.

3. ஓமலூர்-ஈரோடு (வழி) தாரமங்கலம், கொங்கணாபுரம் மற்றும் சங்ககிரி நேர் வழித்தட நீளம் 64 கிலோ மீட்டர் ஆகும். ஆனால் கோரப்பட்டுள்ள வழித் தடத்தில் தடநீளம் 71 கிலோ மீட்டர் ஆகும். எனவே, பயணக் கட்டணம் மற்றும் பயண நேரம் அதிகரித்து நேரடிப் பயணிகள் பாதிப்படைவர். எனினும், வழித் தடத்தில் உள்ள சின்னப்பம்பட்டி சமுத்திரம், கோரணம்பட்டி பகுதி மக்களுக்கு பேருந்து வசதியும், நகரப் பேருந்து தடம் எண் 10-ன் மூலமாக எடப்பாடி-கொங்கணாபுரம் (வழி) தாதாபுரம், கோரணம்பட்டு, மூலப் பாதை தடத்தில் 10 நடைகள் பேருந்து வசதியும் உள்ளது.

37—

பேருந்து வசதி

வினா எண் 47697—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 13

பழனி தொகுதி, பழனியிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாகப் பழனி-சென்னை தடத்தில் இரண்டு அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகளும், இரண்டு சொகுசுப் பேருந்துகளும் (மொத்தம் 4 பேருந்துகள்) இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி தடத்தில் இயக்கப்பட்டு வரும் பேருந்துகளில் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில் பயணிகளின் தேவைக்கு ஏற்ப பழனி-சென்னை தடத்தில் கூடுதலாக சொகுசுப் பேருந்துகள் இயக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

38—

பேருந்து வசதி

வினா எண் 47781—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையிலுள்ள வில்லோனி எஸ்டேட் பகுதிக்கு கூடுதல் பேருந்தும், உருளிக்கல் இரண்டாவது பிரிவிற்குப் பள்ளி நேரங்களில் பேருந்தும், கோட்டூர் பேரூராட்சி பொங்காளியூருக்குக் கூடுதல் பேருந்தும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் தற்போது வால்பாறையிலிருந்து வில்லோனி எஸ்டேட் பகுதிக்கு 9 பேருந்துகளின்மூலம் தினசரி 18 நடைகள் இயக்கி வருகின்றது. வால்பாறையிலிருந்து உருளிக்கல் இரண்டாவது பிரிவிற்குக் காலை,

மாலை எனப் பள்ளி நேரத்திற்கேற்ப 14 பேருந்துகளின்மூலம் தினசரி 46 நடைகள் இயங்கி வருகின்றன. பொள்ளாச்சியிலிருந்து 3 பேருந்துகளின்மூலம் தினசரி 10 நடைகள் பொங்காளியூரை திருப்புமுனையாகவும், 9 பேருந்துகளின்மூலம் தினசரி 48 நடைகள் பொங்காளியூரை வழியாகவும், மொத்தம் 12 பேருந்துகள்மூலம் தினசரி 58 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளின் பயணிகள் அடர்விற்குத் தற்போது இயக்கிவரும் பேருந்துகளே போதுமானவையாகும்.

39—

பேருந்து வசதி

வினா எண் 47784—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சுள்ளிபெருக்கி அம்மன் காலனி பகுதிக்கு பேருந்தும், சரளப்பதி பகுதிக்குக் கூடுதல் பேருந்தும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத் தடம் எண் 12ஏ/12பி பேருந்து பொள்ளாச்சி-சரளப்பதி தடத்தில் சுள்ளிப்பெருக்கி அம்மன் காலனி வழியாக தினசரி 8 நடைகள் இயங்கி வருகிறது. இத்தடத்தில் பயணிகள் அடர்வு மிகக் குறைவாக (சராசரியாக 49%) உள்ளதால் தற்போது இயங்கும் நடைகளே போதுமானவையாகும்.

40—

பேருந்து வசதி

வினா எண் 47792—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 13

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி வால்பாறையிலிருந்து தூத்துக்குடிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை-தூத்துக்குடி ஒரு நீண்டதூர மலைப் பகுதி மற்றும் சமவெளிப் பகுதி சார்ந்த வழித் தடமாகும். ஆழியாறு அணையிலிருந்து வால்பாறை செல்லும் சுமார் 40 கிலோ மீட்டர் சாலை மிகவும் குறுகலானதும், அதிக கொண்டை ஊசி வளைவுகளைக் (Hair pin bends) கொண்ட மலைப் பிரதேச சாலையுமாகும். இச்சாலை வழியே குறைந்த சக்கர இடைவெளி (Short Wheel Base) கொண்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. சமவெளியுடன் மலைப் பகுதி இயக்கத்தை ஒப்பிடுகையில் மலைப் பகுதியில் பயணிகள் எண்ணிக்கை குறைவாகவும், இயக்கச் செலவு அதிகமாகவும் உள்ளது. எனவே, இத்தகைய சூழ்நிலையில் குறைந்த இருக்கைகள் கொண்ட பேருந்துகளைக் கொண்டு வால்பாறையிலிருந்து தொலைதூரப் பகுதியான தூத்துக்குடிக்குப் பேருந்து இயக்கிட சாத்தியமில்லை.

41—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேருந்து வசதி

வினா எண் 48397—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி இரயில் நிலையம் முதல் பேருந்து நிலையம் வரை நகரப் பேருந்தும், தருமபுரி முதல் கடத்தூர் வரை கூடுதல் பேருந்தும், தருமபுரி-இலளிகம் வழி அப்பனஅள்ளி, கோம்பைக்குக் கூடுதல் பேருந்தும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ):

தருமபுரி இரயில் நிலையம் முதல் பேருந்து நிலையம் வரை

தருமபுரி பேருந்து நிலையம் முதல் இரயில் நிலையம் வரை தடத்தின் நீளம் 2.0 கிலோ மீட்டராகும். இதில் தருமபுரிக்குப் பயணிகள் இரயில்கள் வந்து செல்லும் நேரத்திற்கு ஏற்றவாறு காலையும், மாலையும் தருமபுரியிலிருந்து இரயில் நிலையத்திற்கு 5 நகர் பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 10 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நடைகளில் பயணிகள் அடர்வு மிகக் குறைவாக உள்ளது. இரயில் நிலையத்திலிருந்து 0.50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள, பிரதான சாலையில் உள்ள பேருந்து நிறுத்தம் வழியே பல நகரப் பேருந்துகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. எனவே, தற்சமயம் இரயில் நிலையம் வரை கூடுதல் பேருந்து வசதி செய்திட இயலாத நிலையுள்ளது.

தருமபுரி-கடத்தூர் கூடுதல் பேருந்து வசதி

தருமபுரி-கடத்தூர் வழித் தடத்தின் நீளம் 20.0 கிலோ மீட்டராகும். இத்தடத்தில் ஏற்கெனவே அரசுப் பேருந்து மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் 268 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் புதிய பேருந்துகள் ஒதுக்கீடு செய்யும்பொழுது, தருமபுரி-கடத்தூர் தடத்தில் கூடுதல் நடைகள் இயக்குவதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

தருமபுரி-அப்பனஅள்ளி, கோம்பை(வழி) இலளிகம்

தருமபுரி-அப்பனஅள்ளி, கோம்பை (வழி) நல்லம்பள்ளி, இலளிகம் தடத்தின் நீளம் 21.0 கிலோ மீட்டராகும். இத்தடத்தில் நகர்ப் பேருந்து தடம் எண் டி1ஏ பேருந்துமூலம் நாளொன்றுக்கு 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இது சுற்றுத் தடமாகும். இதில் பயணிகளின் அடர்வு சுமார் 52 விழுக்காடுகளாகும். இதைத் தவிர, தருமபுரியிலிருந்து மிட்டாரெட்டிஅள்ளி வழியாக அப்பனஅள்ளி, கோம்பை வரை நகரத் தடம் எண் 7பி மூலம் நாளொன்றுக்கு 10 நடைகளும், நகரத் தடம் எண் டி3.5 மூலம் நாளொன்றுக்கு 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தின் நீளப்

160 கிலோ மீட்டராகும். இதில் பயணிகளின் அடர்வு சுமார் 33 விழுக்காடுகளாகும். எனவே, இவ்வழித்தடத்தில் கூடுதல் நடைகளைத் தற்சமயம் இயக்கிட இயலாத நிலையுள்ளது.

42—

பேருந்து வசதி

வினா எண் 51199—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேலம் முதல் சித்தர் கோவில் வழி எளம்பிள்ளை வரை காலை மற்றும் மாலை நேரங்களில் அரசுப் பேருந்து கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம்-எளம்பிள்ளை வழி சித்தர் கோவில் வழித் தடத்தில் சேலம். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்தின்மூலம் 100 நடைகள், புறநகரப் பேருந்துமூலம் 12 நடைகள், தனியார் நகர பேருந்துமூலம் 48 நடைகள் மற்றும் தனியார் புறநகரப் பேருந்தின் மூலம் 44 நடைகள், மொத்தம் 204 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளதால் கூடுதலாக இவ்வழித் தடத்தில் பேருந்துகள் இயக்கவேண்டிய தேவை எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

43—

பேருந்து வசதி

வினா எண் 51707—திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-வீரப்பூர் புதிய வழித்தடத்தில் கரூர்-ஏழூர்புதூர்-லிங்கத்தூர்-பஞ்சநாயக்கன்பட்டி-பி.உடையாபட்டி-கீரனூர்-தருமகவுண்டனூர், கொசூர்-வீரப்பூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர்-வீரப்பூர் (வழி) ஏமூர்புதூர், லிங்கத்தூர், மஞ்சநாயக்கன்பட்டி, பி. உடையாபட்டி, கீரனூர், தருமகவுண்டனூர், கொசூர் வழித் தட நீளம் 57.0 கிலோ மீட்டராகும். இவ்வழித் தடம் முழுவதும் தற்பொழுது 15 அரசுப் பேருந்துகள்மூலம் 62 நடைகளும், 4 தனியார் பேருந்துகள்மூலம் 30 நடைகளும், நேரடியாகவும், பகுதிப் பகுதியாகவும் போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளது.

44—

பேருந்து வசதி

வினா எண் 51722—திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரத்திலிருந்து காலை 7-45, 8-00, 8-30 மணி ஆகிய நேரங்களில் கரூர் வரை ஒரு தனிப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் வழியாக கரூருக்கு கும்பகோணம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டல நகர மற்றும் புறநகரப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியில் இயக்கம் செய்யப்படுகின்றன. எனவே, கிருஷ்ணராயபுரத்திலிருந்து காலை 7-45, 8-00, 8-30 மணி ஆகிய நேரங்களில் கரூருக்குத் தனியாக ஒரு பேருந்து இயக்கும் அளவிற்குப் பயணிகளின் அடர்வு போதுமானதாக இல்லை. எனவே, கிருஷ்ணராயபுரத்திலிருந்து கரூர் வரை பேருந்து இயக்க வாய்ப்பில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

45—

பேருந்து வசதி

வினா எண் 51745—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியிலிருந்து வைத்தீஸ்வரன்கோவில், நாங்கூர், திருவெண்காடு வழியாக இயக்கப்பட்ட ஏ17 பேருந்தை மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி-திருவெண்காடு (வழி) சட்டநாதபுரம், செங்கமேடு, வைத்தீஸ்வரன்கோவில், எடக்குடிவடபாதி, தென்னலக்குடி, அன்னங்கோவில், நாங்கூர், மங்கைமடம் தடத்தின் நீளம் 24.0 கி.மீ. ஆகும். திருவெண்காடு-மேலையூர் (வழி) மணிகிராமம் தடத்தின் நீளம் 4.0 கி.மீ. ஆகும். சீர்காழி புதிய வழித் தட நகரப் பேருந்து தடம் எண் ஏ17 மூலம் சீர்காழி-மேலையூர் (வழி) வைத்தீஸ்வரன்கோவில், அன்னங்கோவில், நாங்கூர், மங்கைமடம், திருவெண்காடு, மணிகிராமம் தடத்தில் 18-07-2008 முதல் தினசரி இரு நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு இயக்கப்பட்டுவரும் இவ்விரு நடைகளிலேயே போதிய மக்கள் பயன்பாடு இல்லாத நிலையிலும், பொதுமக்கள் நலன் கருதி தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

46—

பேருந்து வசதி

வினா எண் 51749—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, பூம்புகார்-மயிலாடுதுறை செல்லும் தடம் எண் 21சி-க்குப் புதிய பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார்-மயிலாடுதுறை தடம் எண் 21சி-ல் தற்போது TN49/N-0812 என்ற நல்ல நிலையில் உள்ள பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் 2008-09 ஆம் நிதியாண்டில் நல்ல நிலையிலுள்ள வயது குறைந்த இரண்டாம் நிலைப் பேருந்தின்மூலம் தற்போது இயக்கப்படும் பேருந்தினை வாகன மாற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

47—

போக்குவரத்தைச் சரி செய்தல்

வினா எண் 52283—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி-சாலையூர் சாலையில் போக்குவரத்தைச் சரி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி-சாலையூர் சாலையில் போக்குவரத்து சரிசெய்யப்பட்டு ஒருவழிப் பாதையாக இருந்து வருகிறது. மேலும் மக்கள் நெரிசல் அதிகமாகும் நேரங்களில் கூடுதல் போக்குவரத்துக் காவலர்கள் நியமிக்கப்பட்டு நெரிசல் ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் ஆகியோர் அடிக்கடி மேற்படி சாலையில் ரோந்து சென்று போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்து வருகின்றனர்.

48—

கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 55744—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2008 நவம்பர் 13

(அ) சிவகங்கையிலிருந்து இளையான்குடி, மானாமதுரை, பார்த்திபனூர் வழி கமுதி, வீரசோழன் வரை கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கையிலிருந்து இளையான்குடிக்கும், இளையான்குடியிலிருந்து மானாமதுரைக்கும், மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர் வழியாக கமுதி, வீரசோழன் வரைக்கும் பகுதிப் பகுதியாக அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது இயக்கப்படும் அனைத்துப் பேருந்துகளும் பல்முனை வழித் தடத்தில் இயக்கப்படுவதாலும், போதிய நேரம் இன்மையாலும், அதிக தூரம் இயக்குவதாலும், தற்போது உள்ள பேருந்துகளை வைத்து கூடுதல் நடைகள் இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும், கோரிக்கையில் உள்ள வழித் தடம் புதிய வழித் தடமாக இருப்பதால் புதிய வழித் தடங்கள் இயக்கும்பட்சத்தில் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

பேருந்துப் பணிமனை

வினா எண் 56321—திரு. வை. காவேரி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மேச்சேரியில் அரசுப் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மேச்சேரியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) சார்பில், பணிமனை துவக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

50—

பேருந்து வசதி

வினா எண் 57634—திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம்-மதுரைக்கு ஆற்றங்கரை, வேடபட்டி வழியாக இயக்கப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

விளாத்திகுளத்திலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள ஆற்றங்கரைக்கு தினசரி 6 சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. விளாத்திகுளத்திலிருந்து காலை 7-15 மணிக்குப் புறப்பட்டு ஆற்றங்கரை, வேடப்பட்டி வழியாக மதுரைக்கும், மதுரையிலிருந்து 15.18 மணிக்குப் புறப்பட்டு வேடப்பட்டி, ஆற்றங்கரை வழியாக விளாத்திகுளத்திற்கும், முன்னர் 2 நடைகள் இயக்கப்பட்டு வந்தன. மேற்படி நடைகளில் ஆற்றங்கரை, வேடப்பட்டி ஆகிய பகுதிப் பொதுமக்கள் போதியவாறு பயன்படுத்தாமல் மிகக் குறைந்த பயணிகளுடன் பயனில்லாது சுற்று வழித் தடத்தில் இயக்கப்பட்டு வந்ததால் இந்த நடைகள் நிறுத்தப்பட்டன. தற்போது விளாத்திகுளத்திலிருந்து காலை 5.30 மணிக்குப் புறப்பட்டு ஆற்றங்கரை, வேடப்பட்டி வழியாக அருப்புக்கோட்டை வரை ஒரு நடை இயக்கப்பட்டு வருகிறது. மேலும், வேடப்பட்டி கிராம மக்கள் பயன்பெறும் வகையில் கோவில்பட்டி-வேடப்பட்டி என 6 நடைகளும் சாத்தூர்-வேடப்பட்டி என 8 நடைகளிலும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

51—

பேருந்து வசதி

வினா எண் 57643—திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, புதுக்கோட்டை-கொத்தமங்கலத்துக்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இவ்வழித் தடத்தில் புதுக்கோட்டை மண்டல நகர் மற்றும் புறநகர்ப் பேருந்து 30 நடைகளும் ஒரு தனியார் பேருந்து 10 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. இது தவிர, ஆலங்குடியிலிருந்து கொத்தமங்கலத்திற்கு 2 நகரப் பேருந்துகள்மூலம் 11 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டையிலிருந்து ஆலங்குடி வழியாக ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியிலும், நகர் மற்றும் புறநகர்ப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் கோரிக்கை தடத்தில் கூடுதலாகப் பேருந்து இயக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

52—

பேருந்து வசதி

வினா எண் 57749—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகருக்குள் தடம் எண் 102 மற்றும் 84 கொண்ட பேருந்துகள் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மண்டலம், ஆரணி பணிமனையிலிருந்து இயக்கப்படும் 202 தடத்தில் 19 பேருந்துகள் தினசரி 4 நடைகள் என மொத்தம் 76 நடைகள் ஆற்காடு வழியாக இயக்கப்படுகின்றன. வேலூர் மண்டலம், ஆற்காடு பணிமனையிலிருந்து சென்னை செல்ல, ஆற்காடு சட்டப் பேரவை உறுப்பினரின் கோரிக்கைக்கு இணங்க 16-06-2008 முதல் மேலும் 18 பேருந்துகள் மூலம் 72 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, ஆற்காடு பயணிகளின் தேவையை நிறைவு செய்யும் விதமாக 15 நிமிட இடைவெளியில் பேருந்து சென்னைக்கு இயக்கப்படுவதனால் 102, 84 தடப் பேருந்துகள் ஆற்காடு நகருக்குள் வந்து செல்லும்படி இயக்குவது மக்கள் பயன்பாடு அற்றதாகவே அமைவதுடன், மேலும் நேரடிப் பயணிகளின் பயண நேரம் அதிகமாகும்.

2008 நவம்பர் 13]

53—

பேருந்து வசதி

வினா எண் 57750—திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரிலிருந்து சென்னைக்குக் கூடுதலாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருவண்ணாமலை மண்டலம் மற்றும் வேலூர் மண்டலத்தின்மூலமாக 37 பேருந்துகள்மூலம் தினசரி 98 நடைகள் ஆற்காடு வழியாகவும், ஆற்காட்டில் இருந்து சென்னைக்கு 15 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து என இயக்கப்படுகிறது. ஆற்காடு சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையின்பேரில் நடப்பு நிதியாண்டில் ஆற்காடு வழியாகச் சென்னைக்குக் கூடுதலாக 64 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

54—

பேருந்து வசதி

வினா எண் 57780—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியிலிருந்து வாய்மேட்டிற்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருத்துறைப்பூண்டியிலிருந்து (வழி) கட்டிமேடு, வடபாதி, தென்பாதி, செங்காத்தலை, தாணிக்கோட்டகம் மற்றும் நடுத்திட்டு தடத்தின் நீளம் 16.0 கி.மீ. ஆகும்.

கோரிக்கை தடம் புதிய வழித் தடமாகும். திருத்துறைப்பூண்டி-வேதாரண்யம்-திருத்துறைப்பூண்டி (வழி) வாய்மேடு தடத்தில் கீழ்க்கண்டவாறு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன:—

தடம்	கழகம்	தனியார்	மொத்தம்
	இயக்கப்படும் நடைகளின் விவரம்		
திருத்துறைப்பூண்டி-வேதாரண்யம் (வழி) வாய்மேடு	54	23	77
வேதாரண்யம்-திருத்துறைப்பூண்டி (வழி) வாய்மேடு	65	23	88
மொத்தம்	**119**	**46**	**165**

இவ்வாறாக இயக்கப்பட்டுவரும் புறநகர்ப் பேருந்துகளின் நடைகளைப் பயணிகள் பயண நேரம் குறைவு கருதி பயன்படுத்தி வருவதால் கோரிக்கைப்படி குறைந்த தட நீளமுள்ள இத்தடத்தில் நகரப் பேருந்து வசதி அளித்தாலும் போதிய மக்கள் பயன்பாடு அமைந்திட வாய்ப்பில்லை.

55—

பேருந்து வசதி

வினா எண் 57781—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியிலிருந்து கரியாப்பட்டினம் வழியாக வேதாரண்யம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி-வேதாரண்யம் (வழி) கட்டிமேடு, வடபாதி, தென்பாதி, செங்காத்தலை, மணக்காடு, கரியாப்பட்டினம், செண்பகராயநல்லூர், தென்னம்புலம், குரவப்புலம் தடத்தின் நீளம் 34.0 கி.மீ. ஆகும். தற்போது வேதாரண்யத்திலிருந்து கரியாப்பட்டினம்

2008 நவம்பர் 13]

வழியாக திருத்துறைப்பூண்டிக்கு வேதாரண்யம் நகரப் பேருந்துகள் தடம் எண் A4, A4A மற்றும் A7 ஆகியவைமூலம் கீழ்க்காணும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன:—

வேதாரண்யம் தடம் எண் A4 நகரப் பேருந்து	வேதாரண்யம்-திருத்துறைப் பூண்டி (வழி) கரியாப்பட்டினம்	34 கி.மீ. x 12 நடைகள்
வேதாரண்யம் தடம் எண் A4A நகரப் பேருந்து	வேதாரண்யம்-திருத்துறைப் பூண்டி (வழி) கரியாப்பட்டினம்	34 கி.மீ. x 8 நடைகள்
	வேதாரண்யம்-திருத்துறைப் பூண்டி (வழி) கரியாப்பட்டினம் பிராந்தியங்கரை	[illegible] கி.மீ. x 4 நடைகள்
வேதாரண்யம் தடம் எண் A7 நகரப் பேருந்து	வேதாரண்யம்-திருத்துறைப்பூண்டி (வழி) கரியாப்பட்டினம் பிராந்தியங்கரை	35 கி.மீ. x 10 நடைகள்

இவ்வாறாக வேதாரண்யத்திலிருந்து கரியாப்பட்டினம் வழியாக திருத்துறைப்பூண்டிக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால் மேலும் திருத்துறைப்பூண்டிலிருந்து நகரப் பேருந்து வசதி அளித்தாலும் போதிய மக்கள் பயன்பாடு அமைந்திட வாய்ப்பில்லை.

56—

மணல் லாரிகளில் தார்ப் பாய்

வினா எண் 60828—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பகுதியில் மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் தார்ப் பாய் மூடாமல் லாரிகள், டிராக்டர்கள் மணல் ஏற்றிச் செல்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பகுதியில், மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் (NH 49) தார்ப் பாய் போடாமல் லாரிகள், டிராக்டர்கள் மணல் ஏற்றிச் செல்வதைத் தடுக்க அரசு மணல் குவாரியில் நடைச் சிட்டு போடும் இடத்திலேயே தார்ப் பாய் மூடிச்செல்ல தக்க அறிவுரை கொடுத்து அதன்படி தார்ப் பாய் மூடியே மணல் லாரிகள், டிராக்டர்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் (மதுரை-இராமேஸ்வரம் சாலையில்) செல்கின்றன. இதனைக் கண்காணிக்க, வாகனத் தணிக்கை அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தார்ப் பாய் மூடாமல் செல்லும் மணல் லாரிகள்மீது மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நாள் வரை தார்ப்பாய் மூடாமல் விதியை மீறிச் சென்ற லாரிகள்மீது 26 வழக்குகள் பதியப்பட்டு நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளது. தார்ப் பாய் மூடாமல் லாரிகள், டிராக்டர்கள் மணல் ஏற்றிச் செல்வதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

57—

துப்புரவுப் பணியாளர்

வினா எண் 6480—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளர் பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட ஒரு பணியிடத்தில் துப்புரவுப் பணியாளர் பணிபுரிந்து வருகிறார். தற்சமயம் காலியிடம் எதுவும் இல்லை.

58—

நாய்க் கடி, பாம்புக் கடி மருந்து

வினா எண் 10150—திரு. கோ. அரி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி அரசு மருத்துவமனையில் நாய்க் கடிக்கும், பாம்புக் கடிக்கும் போதுமான மருந்துகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) திருத்தணி அரசு மருத்துவமனையில் நாய்க் கடிக்கும், பாம்புக் கடிக்கும் போதுமான மருந்துகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் சேவைக் கழகம்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் போதுமான அளவு மருந்துக் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

59—

எம்.ஆர்.ஐ. ஸ்கேன்

வினா எண் 13809—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 13

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசு பொது மருத்துவமனை, சென்னை மற்றும் மதுரை அரசு இராசாசி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் செயல்பட்டு வந்தது. கடந்த ஆண்டில், கோவை, வேலூர், திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் திருச்சியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி வழங்கப்பட்டது. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் தேவைப்படின் வழங்க பரிசீலிக்கப்படும்.

60—

எக்ஸ்-ரே இயந்திரம்

வினா எண் 11268—திரு. எஸ். ராஜகுமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் புதிய எக்ஸ்-ரே இயந்திரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்பொழுது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உள்ள எக்ஸ்-ரே இயந்திரம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. இதன்மூலம் அங்கு வரும் நோயாளிகளுக்கு எக்ஸ்-ரே படம் எடுக்கப்பட்டு பயன்பெற்றுச் செல்கின்றனர். இந்நிலையில், இம்மருத்துவமனைக்கு நவீன வசதியுள்ள எக்ஸ்-ரே இயந்திரம் வழங்குவது குறித்து திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

61—

அரசு மருத்துவமனை

வினா எண் 16561—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் அரசு மருத்துவமனையைச் சுத்தமாக வைக்க ஆயாக்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூர் அரசு மருத்துவமனையில், ஏற்கெனவே இரண்டு துப்புரவுப் பணியாளர்கள் (ஆயாக்கள்) பணிபுரிந்து வருகின்றனர். இம்மருத்துவமனையில் சிகிச்சை பெறும் உள்நோயாளிகளின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது இரண்டு துப்புரவுப் பணியாளர்கள் (ஆயாக்கள்) போதுமானதாகும்.

62—

புதிய இரும்புக் கட்டில்கள்

வினா எண் 22799—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு மருத்துவமனையில் பழுதுபட்ட இரும்புக் கட்டில்களை நீக்கிவிட்டுப் புதிய இரும்புக் கட்டில்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனை தற்போது 34 படுக்கை வசதிகளுடன் கூடிய தாலுகா மருத்துவமனையாகும்.

மருத்துவமனையில் 31 கட்டில்கள் நல்ல நிலையில் உள்ளன. புதிய இரும்புக் கட்டில்கள் வழங்க அவசியம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

63—

சிறப்புப் பிரிவுகள்

வினா எண் 22819—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் இருதயம், சிறுநீரகம், எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே எலும்பு முறிவு அவசர சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இங்கு இருதயம் மற்றும் சிறுநீரக நோய் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் எண்ணிக்கையைப் பரிசீலித்துப் பார்க்கும்போது, மேற்கண்ட பிரிவுகளை இம்மருத்துவமனையில் ஏற்படுத்துவதற்கான நிருவாக ரீதியான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

64—

புற நோயாளிகள் பிரிவு

வினா எண் 29577—திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வடக்குப் பகுதி அரசு மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருப்பூர் வடக்குப் பகுதி அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே வெளிநோயாளர் பிரிவு சுமார் 3.96 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

65—

மின் கம்பிகள் மாற்றம்

வினா எண் 38106—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையின் மின் கம்பிகளை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள மானாமதுரை அரசு மருத்துவமனை மற்றும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் மின் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ. 1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

66—

துப்பரவுப் பணிகள்

வினா எண் 41421—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், அரசு மருத்துவமனைகளில் தீவிர துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும், நோயாளர் நிதிக் குழுமத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, போதுமான துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, துப்புரவுப் பணியானது மிக நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

67—

மருத்துவ சிகிச்சை

வினா எண் 42426—திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகரங்களில் மது அடிமைகள் மறுவாழ்வு மையம் ஏற்படுத்தி இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகரங்களில் மது அடிமைகள் மறுவாழ்வு மையம் ஏற்படுத்தி இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

68—

ஆடு வளர்ப்பு

வினா எண் 43610—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கூடுதலாக ஆடுகள் வளர்க்க ஆடு வளர்ப்போருக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் கூடுதலாக ஆடுகள் வளர்க்க ஆடு வளர்ப்போருக்கு மானியம் வழங்குவது குறித்து அரசிடம் தற்பொழுது திட்டம் ஏதும் இல்லை.

69—

வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள்

வினா எண் 51162—திரு. எச். அப்துல் பாசித்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி நகரத்தில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகரத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வசம் நிலம் ஏதும் இல்லை. எனவே, வாரியத்தின்மூலம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

70—

பத்திரப் பதிவுக் கட்டணம்

வினா எண் 48740—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப்பகுதிகளில் நிலம், வீடு வாங்குபவர்களுக்கு பத்திரப் பதிவுக் கட்டணத்தைக் குறைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதிகளில் நிலம் வீடு வாங்குபவர்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

சீர் செய்தல்

வினா எண் 12063—திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள அரசு அச்சகக் குடியிருப்புகள் பழுதடைந்துள்ளதைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:

(1) சென்னை-81-ல் தண்டையார்பேட்டையில் உள்ள அரசு அச்சகக் குடியிருப்பின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு 2007-2008 ஆம் ஆண்டில் சுற்றுச் சுவர் கட்ட ரூ. 12,10,000/- அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, பொதுப் பணித் துறையினர்மூலம் இப்பணி முடிக்கப்பட்டது.

2008 நவம்பர் 13]

(2) அரசு அச்சகக் குடியிருப்பின் பாதுகாப்பினை மேலும் அதிகரிக்கும்பொருட்டு ஏற்கெனவே உள்ள சுற்றுச் சுவர்களின் தற்போதைய உயரத்தினை மேலும் அதிகரிக்க பொதுப் பணித் துறையிடம் உரிய செலவின மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பெற்ற பின்னர் அரசிடம் நிதி ஒதுக்கீடு பெற்று இப்பணி முடிக்கப்படும்.

(3) பழுதான அரசு அச்சகக் குடியிருப்புகளைச் சீர் செய்ய பொதுப் பணி துறை மதிப்பீடு கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

72—

நுகர்வோர் உரிமைகள்

வினா எண் 55716—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நுகர்வோர்களின் உரிமைகள் மற்றும் ஏனைய தகவல்கள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நுகர்வோர் உரிமைகள் மற்றும் ஏனைய தகவல்கள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த. சென்ற நிதியாண்டில் (2007-2008) ரூ. 2.59 கோடி செலவில் கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தியுள்ளது.

(1) கிராமப்புற மக்களிடையே நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்களைப் பரப்பிடும் திட்டத்திற்கு ரூ. 36.25 இலட்சம் இந்திய அரசிடம் மானியம் பெற்று மாவட்டம் ஒன்றிக்கு ரூ. 1.25 இலட்சம் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

(2) நுகர்வோர் கல்வி மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்களைப் பரப்புவதற்கு 900 கிராமப் பஞ்சாயத்துகளில் 9,000 சுய உதவிக் குழு மகளிர் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ. 69.91 இலட்சம் மானியம் பெற்று, திட்டம் செயலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

(3) அரசு, பொதுத் துறை ஊழியர்கள் நுகர்வோர்களை அணுகும் முறை, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மேற்கொள்ளும் நடவடிக்கை குறித்துப் பயிற்சியளிக்க மத்திய அரசிடம் ரூ. 10.92 இலட்சம் மானியமாகப் பெற்று திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(4) நுகர்வோர் கல்வியை மாணவர்களுக்குப் போதித்திட 1,000 பள்ளிகளில் நுகர்வோர் மன்றங்கள் அமைக்க, பள்ளிக்கு ரூ. 10,000/- வீதம் ரூ. 1 கோடி இந்திய அரசிடம் மானியமாகப் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

(5) தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதியிலிருந்து ரூ. 32.00 இலட்சம் ஒதுக்கீட்டுத் தொகையில் ரூ. 16.77 இலட்சம் செலவில் 16 நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த குறும்படங்கள் தயாரித்து ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.

(6) 2007-2008 ஆம் நிதியாண்டில் நுகர்வோர் கல்வி மற்றும் விழிப்புணர்வு குறித்த செயல்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 25.00 இலட்சம் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் உலக/தேசிய நுகர்வோர் தின விழா மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

"தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" எனும் காலாண்டிதழ் மற்றும் "நுகர்வோர் மன்றக் கையேடு", "ஆசிரியர் கையேடு" என்ற புத்தகங்கள் அச்சிடப்பட்டு அரசு அலுவலகங்கள்/நூலகங்கள்/நுகர்வோர் மன்றங்கள்/நுகர்வோர் மன்ற மாணவர்கள்/ஆசிரியர்கள் ஆகியோருக்கு வழங்கப்படுகின்றன. மேலும், நுகர்வோர் விழிப்புணர்வு தகவல்கள் மற்றும் செய்திகள் பற்றிய பிரத்தியேக வலைதளம் துவங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

73—

நீண்டகாலக் கடனுதவி

வினா எண் 17046—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆட்டோ ரிக்‌ஷா வாங்க நீண்டகாலக் கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆட்டோ ரிக்ஷா வாங்க பொதுக் கடன் திட்டத்தின்கீழ் தனி நபருக்கு ரூ.1,00,000 வரை தற்சமயம் கடனாக வழங்கப்படுகிறது.

74—

விற்பனை மையம்

வினா எண் 49801—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில், கைத்தறித் துணி விற்பனை மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) 1983 ஆம் ஆண்டு முதல் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையம் உடுமலைப்பேட்டையில் இயங்கி வருகிறது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

75—

சரிகை நூல் தொழிற்சாலை

வினா எண் 52068—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பாலபட்டி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம்,

தென்சித்தூர், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிப்புதூர் மற்றும் ஜல்லிப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் சரிகை நூல் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பலாபட்டி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம், தென்சித்தூர், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிப்புதூர் மற்றும் ஜல்லிப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் சரிகை நூல் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

76—

விசைத்தறிப் பூங்கா

வினா எண் 52090—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் விசைத்தறிப் பூங்கா அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

77—

இலவச வீட்டுமனை

வினா எண் 56715—திருமதி ஜி. லதா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. எனவே, குடியாத்தம் பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

78—

எடைக் குறைவாக விற்பனை

வினா எண் 61265—திரு. அ. தமிழரசு: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைகளுக்கான பிஸ்கட், பால் பவுடர் போன்ற பல்வேறு உணவுப் பொருட்களை எடைக் குறைவாக விற்று வரும் பன்னாட்டு நிறுவனங்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

குழந்தைகளுக்கான பிஸ்கட், பால் பவுடர் போன்ற பல்வேறு உணவுப் பொருட்களை எடைக் குறைவாக விற்று வரும் பன்னாட்டு நிறுவனங்கள்மீது இப்பொருள் குறித்த புகார் ஏதும் இதுவரை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பெறப்படவில்லை. புகார் ஏதும் பெறப்படின், தரப்படுத்தப்பட்ட எடையளவு (பொட்டணப் பொருட்கள்) விதிகளின்கீழ் தொழிலாளர் நலத் துறை அலுவலர்களால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

79—

பொறியியல் கல்லூரி

வினா எண் 43592—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்மூலம் பொறியியற் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்மூலம் பழனியில், (1) அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, (2) அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, (3) அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி, (4) அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி உதவிபெறும் தொடக்கப் பள்ளி, (5) அருள்மிகு பழனியாண்டவர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, (6) அருள்மிகு பழனியாண்டவர் காது கேளாதோர் பள்ளி, (7) அருள்மிகு பழனியாண்டவர் நாதஸ்வரம் மற்றும் தவில் பயிற்சிப் பள்ளி, (8) அருள்மிகு பழனியாண்டவர் வேத ஆகம பாடசாலை மற்றும் (9) அருள்மிகு பழனியாண்டவர் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில், முதல் 4 கல்வி நிறுவனங்களின் சம்பளச் செலவுகளுக்காக அரசு நிதியுதவியும் மற்றும் இதர செலவுகள் திருக்கோயில் நிதியிலும், இதர கல்வி நிறுவனங்கள் முற்றிலும் திருக்கோயில் நிதியிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கானகஇத்திருக்கோயிலால் நடத்தப்பட்டுவரும் கருணை இல்லங்களில் உள்ள மாணவ, மாணவிகளின் கல்விச் செலவுகளும் திருக்கோயில்மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு நலத் திட்டங்களுக்கான பெருமளவு தொகை

2008 நவம்பர் 13]

திருக்கோயில்மூலம் செலவிடப்படுகிறது. நிதி வசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும் திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ஆண்டுதோறும் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் திருக்கோயில்மூலம் பொறியியல் கல்லூரியை அமைக்கத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புகள் (Infrastructure) மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமாக இக்கல்லூரி அமைக்கத் தேவையான அளவு இடம் இல்லையென்பதாலும், பொறியியல் கல்லூரியை நிருவகிக்க அதிக அளவில் தொடர் செலவுகள் ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டும், பழனி திருக்கோயிலின்மூலம் பொறியியல் கல்லூரியைத் துவக்க இயலாது.

80—

இசைக் கல்லூரி

வினா எண் 43594—திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி அருள்மிகு பழனியாண்டவர் இசைக் கல்லூரியை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்மூலம் பழனியில், (1) அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, (2) அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, (3) அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி, (4) அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி உதவிபெறும் தொடக்கப் பள்ளி, (5) அருள்மிகு பழனியாண்டவர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, (6) அருள்மிகு பழனியாண்டவர் காது கேளாதோர் பள்ளி, (7) அருள்மிகு பழனியாண்டவர் நாதஸ்வரம் மற்றும் தவில் பயிற்சிப் பள்ளி, (8) அருள்மிகு பழனியாண்டவர் வேத ஆகம பாடசாலை மற்றும் (9) அருள்மிகு பழனியாண்டவர் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில், முதல் 4 கல்வி நிறுவனங்களின் சம்பளச் செலவுகளுக்காக அரசு நிதியுதவியும் மற்றும் இதர செலவுகள் திருக்கோயில் நிதியிலும், இதர கல்வி நிறுவனங்கள் முற்றிலும்

திருக்கோயில் நிதியிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக இத்திருக்கோயிலால் நடத்தப்பட்டுவரும் கருணை இல்லங்களில் உள்ள மாணவ, மாணவிகளின் கல்விச் செலவுகளும் திருக்கோயில்மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு நலத் திட்டங்களுக்கான பெருமளவு தொகையும் திருக்கோயில்மூலம் செலவிடப்படுகிறது. நிதி வசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும் இத்திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ஆண்டுதோறும் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, அருள்மிகு பழனியாண்டவர் இசைக் கல்லூரியை விரிவுபடுத்த இயலாது.

81—

தடுப்புச் சுவர்

வினா எண் 55569—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள டான்டீ மருத்துவமனையைச் சுற்றிலும் தடுப்புச் சுவர் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் நிலவிவரும் நிதி நெருக்கடியினைக் கருத்திற்கொண்டும், தற்போது அம்மருத்துவமனையின் ஒரு பகுதியில் பாரதியார் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரி இயங்கி வருவதாலும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்குச் சொந்தமான வால்பாறையில் உள்ள டான்டீ மருத்துவமனையைச் சுற்றிலும் தடுப்புச் சுவர் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

82—

மரக் கன்றுகள் நடுதல்

வினா எண் 58550—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, பூம்புகார் அருள்மிகு சாயாவனேஸ்வரர் ஆலயத் தோப்பில் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, பூம்புகார் அருள்மிகு சாயாவனேஸ்வரர் ஆலயத் தோப்பில் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரக் கன்றுகள் நடுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

சாலை செப்பனிடல்

வினா எண் 38271—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடி அருகே தேசிய நெடுஞ்சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய நெடுஞ்சாலை 49-ல், கி.மீ.96/0-97/0 முடிய (சத்திரக்குடி அருகில்) உள்ள சாலை அவசர பழுதுபார்த்தல் திட்டப் பணிகள்மூலம் மார்ச் 2008-ல் சீர் செய்யப்பட்டுள்ளது.

84—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 32747—திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 நவம்பர் 13

(அ) பண்ருட்டி தொகுதி, மாளிகம்பட்டு காலனி சத்துணவு மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மாளிகம்பட்டு காலனியில் அங்கன்வாடி மையம் ஒன்று தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் அங்கன்வாடி மையம் கட்டித் தரப்படும்.

85—

வீடுகளைப் பழுதுபார்த்தல்

வினா எண் 2652—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காளியாபுரம், பெத்தநாயக்கனூர் ரமணமுதலிப்புதூர், சோமந்துரை, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம் முதலிய ஊராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்குத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் பழுதடைந்துள்ள வீடுகளைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிப்புதூர், சோமந்துரை, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம் முதலிய ஊராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்குத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் பழுதடைந்துள்ள வீடுகளைப் பழுதுபார்க்கும் திட்டம் எதுவும் தற்சமயம் நடைமுறையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13]

86—

விடுகளைப் பழுதுபார்த்தல்

வினா எண் 2658—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி, கம்பலாபட்டி அங்கலக்குறிச்சி, கரியாஞ்செட்டிப்பாளையம், பிலிசின்னம்பாளையம் முதலிய ஊராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்குத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் பழுதடைந்துள்ள வீடுகளைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி, கம்பலாபட்டி, அங்கலக்குறிச்சி, கரியாஞ்செட்டிப்பாளையம், பிலிசின்னம்பாளையம் முதலிய ஊராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்குத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் பழுதடைந்துள்ள வீடுகளைப் பழுதுபார்க்கும் திட்டம் எதுவும் தற்சமயம் நடைமுறையில் இல்லை.

87—

விடுகளைப் பழுதுபார்த்தல்

வினா எண் 2806—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சி, தேவபட்டிணம் குடியிருப்புப் பகுதியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சி, தேவபட்டிணம் குடியிருப்புப் பகுதியிலுள்ள தொகுப்பு வீடுகளை, ஆதி திராவிடர் நலத் துறைமூலம் பழுதுபார்க்கும் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை.

88—

வீடுகளைப் புதுப்பித்தல்

வினா எண் 4659—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், தாமரைக்குளம் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் புதுப்பித்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், தாமரைக்குளம் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனி வீடுகளை இத்துறையின்மூலம் புதுப்பித்துத்தரும் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை.

89—

வீடுகளை மராமத்து செய்தல்

வினா எண் 5448—திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் ஊராட்சி, கீழப்பெருமாள்பட்டியில் உள்ள ஆதி திராவிடர் காலனி வீடுகளை மராமத்து செய்து கொடுக்க அரசு முன்வருமா?

2008 நவம்பர் 13]

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் ஊராட்சி, கிழப்பெருமாள்பட்டியில் உள்ள ஆதி திராவிடர் காலனி வீடுகளை இத்துறையின்மூலம் மராமத்து செய்து கொடுக்கும் திட்டம் ஏதுவும் தற்சமயம் நடைமுறையில் இல்லை.

90—

கூடுதல் அடிப்படை வசதி

வினா எண் 33557—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, ஆதி திராவிட மாணவ மாணவிகள் தங்கும் விடுதிக்குக் கூடுதல் கழிப்பிடங்களும், குளியல் அறைகளும் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை மாணவர் விடுதிக்குக் கூடுதல் கழிப்பிட வசதி மற்றும் குளியலறைகள் கட்ட 2007-2008 ஆம் ஆண்டு மத்திய அரசின் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் ரூ. 2.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வால்பாறை ஆதி திராவிடர் நல மாணவிகள் விடுதியில் 9 குளியல் அறைகளும், 11 கழிப்பிட அறைகளும் உள்ளன. இவை தற்போதுள்ள மாணவிகளுக்குப் போதுமானவையாக உள்ளன.

91—

ஆங்கிலப் பயிற்சி

வினா எண் 49965—திரு. கோவை தங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் மாணவ, மாணவிகளுக்கு ஆங்கிலப் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட கிறித்துவ மாணவ, மாணவிகள் பயனடையும்வகையில் ஆதி திராவிடர் நலத் துறை விடுதிகளில் தங்கிப் படிக்கும் 1,000 மாணவ, மாணவிகளுக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டு, திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டிலும் (2008-2009) ஆதி திராவிடர் நலத் துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் 1000 இளைஞர்களுக்கு ரூ. 40.00 இலட்சம் செலவில் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி அளிக்க ஆணை வெளியிடப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

92—

சமுதாயக் கூடம்

வினா எண் 59922—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மிளகனூர் காலனியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மிளகனூர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2008 நவம்பர் 13]

93—

நிவாரணத் தொகை

வினா எண் 23161—திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கடற்கரை கிராமங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டு வலை இழந்த மீனவ மக்களுக்கு நிவாரணத் தொகை ரூ.10,000 வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கடற்கரை கிராமங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டு வலை இழந்த 657 மீனவ மக்கள் பயன்பெறும்வகையில் அரசாணை (நிலை) எண். 228, வருவாய்த் துறை, நாள் 28-4-2008-ல் ஆணை வழங்கப்பட்டு ரூ.63,49,000-க்கு (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரம் மட்டும்) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

94—

மீன் இறங்குதளம்

வினா எண் 34262—திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பூம்புகார் தொகுதி சின்னங்குடியில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம் பூம்புகார் தொகுதி, சின்னங்குடியில் மீன் இறங்குதளம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

சொந்தக் கட்டடம்

வினா எண் 34264—திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் மீன்வளத் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் மீனவர் கிராமத்தில் மீன்வளத் துறைக்குச் சொந்தமான நிலம் ஏதும் இல்லாததால் அலுவலகக் கட்டடம் கட்டிட வழிவகை ஏதுமில்லை.

96—

விசைப் படகுகளைச் சீரமைத்தல்

வினா எண் 45955—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் கடல் பகுதியில் அடிக்கடி இயற்கைச் சீற்றங்களால் பழுதடையும் விசைப் படகுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் பகுதியில் இயற்கைச் சீற்றங்களால் அடிக்கடி பழுதடையும் விசைப் படகுகளைச் சீரமைக்கும் பணியினை மேற்கொள்ளும்வகையில் அரசுத் தரப்பில் வழிவகைகள் இல்லை. மேலும், இவ்விதம் பழுதடையும் விசைப் படகுகளை மீனவர்கள் தங்களது சொந்தச் செலவில் பழுது நீக்கிப் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2008 நவம்பர் 13]

97—

இலவச வீடுகள்

வினா எண் 50233—திரு. பெ. கண்ணன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, கூனாண்டியூர் ஊராட்சி, பள்ளிப்பட்டி பகுதியில் உள்ள மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, கூனாண்டியூர் ஊராட்சி, பள்ளிப்பட்டி பகுதியில் உள்ள மீனவர்களுக்குக் கடந்த ஆண்டுகளில் மீனவர் இலவச வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இருப்பினும் மேற்கண்ட திட்டத்தின்கீழ் பயனடைய விரும்புவோர், வீடுகள் பெற அரசால் வகுக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நெறிமுறைகளைப் பின்பற்றி இலவச வீடு பெறலாம்:—

(1) மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருத்தல்;

(2) வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருத்தல்;

(3) மீனவர் குடிசை வீட்டில் வசித்து வருபவராக இருத்தல் மற்றும் 3 செண்ட் நிலம் சொந்தமாக வைத்திருத்தல்.

மேற்படி நெறிமுறைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யும் மீனவர்கள், அவர்கள் உறுப்பினராக உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கம்மூலம் உரிய தீர்மானம் இயற்றி சரக மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உரிய நில ஆவணங்களுடன் விண்ணப்பித்து 2008-2009 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் பெற்றுப் பயன் பெறலாம்.

98—

மீனவர்களுக்கு மாற்றுத் தொழில்

வினா எண் 56176—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்ட கடலோரப் பகுதியில் வசிக்கும் மீனவர்களுக்கு மாற்றுத் தொழில் தொடங்க, கடல் பாசி வளர்ப்புப் பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகக் கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்களுக்கு நீர்வாழ் உயிரின வளர்ப்பு, மதிப்பூட்டிய மீன் உணவுப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் திறன் மேம்படுத்துதல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்பட்ட நிதியில், இராமநாதபுரம் மாவட்டத்தில், 2006-2007 முதல் 2008-2009 முடிய மூன்றாண்டுகளுக்கு 800 மீனவர்களுக்கு கடற்பாசி வளர்ப்புப் பயிற்சி அளிக்கும்பொருட்டு ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 400 மீனவர்களுக்கு ரூ.18 இலட்சம் செலவில் கடற்பாசி வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பயிற்சிகளால் பயன்பெற்ற இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களைப் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுத்தி அவர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் இப்பயிற்சி பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு 50 விழுக்காடு அரசு மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் உதவி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 20 சுய உதவிக் குழுக்களுக்கு அரசு மானியத் தொகை ரூ.15,52,500/- உடன்கூடிய மொத்தத் தொகையான ரூ.31,05,000-க்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2008 நவம்பர் 13]

99—

பால் விற்பனை நிலையம்

வினா எண் 46932—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பால் விற்பனை நிலையம் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் விற்பனை நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பால் விற்பனை நிலையம் மற்றும் பால் உப பொருட்களின் விற்பனை நிலையம் துவக்க வாய்ப்பில்லை. இருப்பினும் பால் விற்பனை செய்ய முன்வருபவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாய்ப்பளிக்கப்படும்.

100—

மட்பாண்டம் தயாரித்தல்

வினா எண் 57252—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் அரசு மட்பாண்டம் தயாரிக்கும் தொழில் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் மொத்தம் 27 மட்பாண்ட கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதனில் சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை மட்பாண்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேற்படி கூட்டுறவுச்

[2008 நவம்பர் 13

சங்கத்தில் மண்பாண்டப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி கூட்டுறவுச் சங்கத்தில் யூ.என்.டி.பி. திட்டத்தின்கீழ் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நவீன பொருட்கள் உற்பத்தி செய்ய புதிய தொழில்நுட்பம்மூலம் உற்பத்திப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென மும்பை கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழு யூ.என்.டி.பி. திட்டத்தில் மொத்தம் ரூ. 13.24 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. மேலும் பூம்புகார் வளர்ச்சி நிதியிலிருந்து மாவட்ட ஆட்சியர், சிவகங்கை மூலம் ரூ. 5.50 இலட்சத்தில் பயிற்சி மற்றும் கருத்தரங்கு நடத்த கூடம் ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மானாமதுரை மட்பாண்ட கூட்டுறவுச் சங்கம், பெங்களூர், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கதர் கிராமத் தொழில்கள் ஆணைக் குழு நடத்திய பொருட்காட்சிகளிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை தீவுத் திடலில் நடத்திய பொருட்காட்சியிலும் பங்கு பெற்றுள்ளது.

மேலும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தற்போது மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின்மூலம் கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்படி ரூ.10.00 இலட்சம் வரை திட்ட மதிப்பில் 25% கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் விளிம்புத் தொகையாக தரப்படும். ரூ.10.00 இலட்சத்தில் இருந்து ரூ.25 இலட்சம் வரையில் உள்ள திட்டங்களுக்கு ரூ.10.00 இலட்சம் வரை 25%-ம் மீதியுள்ள மதிப்பிற்கு 10%-ம் விளிம்புத் தொகையாக தரப்படும்.

எனவே, மட்பாண்டம் செய்பவர்கள் தொழில் செய்ய தொடர்புடைய திட்டத்துடன் முன்வருவார்களேயானால் அவர்கள் கதர் ஆணைக் குழுவின்மூலம் விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் 25% முதல் 30% வரை மானியத்துடன் விளிம்புத் தொகை கடன் பெற்று மாற்றுத் தொழில் தொடங்கிட வாய்ப்புள்ளது. மானாமதுரையில் அரசு மட்பாண்டம் தயாரிக்கும் தொழில் துவங்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

(அ) இடை நிலை ஆசிரியர் நியமனத்தில் பதிவு மூப்பு முறை மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? சொல்லுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One by one. *(குறுக்கீடுகள்)* Right, *எடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. மணி, சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *பேரவைத் தலைவர் அவர்களே. இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலை நியமனத்தில் இதுவரையில் இருந்துவந்த மாவட்ட அளவிலான பதிவு மூப்பு அடிப்படை மாற்றப்பட்டு, இப்பொழுது மாநில அளவிலான பதிவு மூப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலே ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் மத்தியிலே மிகப் பெரிய பதற்ற நிலை. உண்ணாவிரதப் போராட்டம் இருந்தார்கள். அது நள்ளிரவு வரை நீடித்தது. மிகப் பெரிய பதற்றம்; 27 மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலை மேலோங்கி இருக்கின்ற காரணத்தினாலே, அது நீதிமன்ற ஆணை என்று சொன்னாலும்கூட, அந்த நீதிமன்றப் பிரச்சினையை நீக்கி, கொள்கை முடிவாக எடுத்து, பழைய மாதிரியே இருக்கச் செய்ய வேண்டும். இப்பொழுது பார்த்தால் பணி உயர்விலே மாவட்ட அளவிலான பதவி மூப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) எடுக்கப்படும். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. *(குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

(அ) இடை நிலை ஆசிரியர் நியமனத்தில் பதிவு மூப்பு முறை மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One by one. *(குறுக்கீடுகள்)* Right, எடுக்கிறேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். திரு. மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலை நியமனத்தில் இதுவரையில் இருந்துவந்த மாவட்ட அளவிலான பதிவு மூப்பு அடிப்படை மாற்றப்பட்டு, இப்பொழுது மாநில அளவிலான பதிவு மூப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலே ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் மத்தியிலே மிகப் பெரிய பதற்ற நிலை. உண்ணாவிரதப் போராட்டம் இருந்தார்கள். அது நள்ளிரவு வரை நீடித்தது. மிகப் பெரிய பதற்றம்; 27 மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலை மேலோங்கி இருக்கின்ற காரணத்தினாலே, அது நீதிமன்ற ஆணை என்று சொன்னாலும்கூட, அந்த நீதிமன்றப் பிரச்சினையை நீக்கி, கொள்கை முடிவாக எடுத்து, பழைய மாதிரியே இருக்கச் செய்ய வேண்டும். இப்பொழுது பார்த்தால் பணி உயர்விலே மாவட்ட அளவிலான பதவி மூப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆய்விலே இருக்கிறது. *(குறுக்கீடு)* எடுக்கப்படும். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* செல்வி கே. பாலபாரதி.

(ஆ) தொழிற்சங்க உரிமைகள் தொழிற்சாலைகளில் மறுக்கப்படுதல்

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஹூண்டாய் கம்பெனி உட்பட நம்முடைய திருமங்கலத்தில் இருக்கக்கூடிய மெட்டல் பவுடர் கம்பெனி வரை இருபதுக்கும் மேற்பட்ட அரசு, தனியார் கம்பெனிகளில் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கம் அமைப்பதற்கு உரிமையை மறுக்கிறார்கள். அவர்களை இடை நீக்கம் செய்கிறார்கள்; வேலை நீக்கம் செய்கிறார்கள்; ஊதியத்தை வெட்டுகிறார்கள். இதுபோன்ற பல்வேறு தொடர் நெருக்கடிகளையும், பிரச்சினைகளையும் அந்த நிறுவனங்கள் செய்து வருகின்றன. ஆகவே, இது உடனடியாக விவாதிக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தங்களிடத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்தோம். அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பரிசீலனையில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், என்ன?

திரு. வை. சிவபுண்ணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தலைவர் செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிட்ட அதே கருத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்துகிறேன். அதேபோல இன்னும் பல்வேறு கூடுதலான கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய திருவாரூர் மாவட்டத்திலே கொலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களிடையே மோதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்களிடையே 12-11-2008 அன்று நடைபெற்ற மோதல் குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு

(ஆ) தொழிற்சங்க உரிமைகள் தொழிற்சாலைகளில் மறுக்கப்படுதல்

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஹூண்டாய் கம்பெனி உட்பட நம்முடைய திருமங்கலத்தில் இருக்கக்கூடிய மெட்டல் பவுடர் கம்பெனி வரை இருபதுக்கும் மேற்பட்ட அரசு, தனியார் கம்பெனிகளில் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கம் அமைப்பதற்கு உரிமையை மறுக்கிறார்கள். அவர்களை இடை நீக்கம் செய்கிறார்கள்; வேலை நீக்கம் செய்கிறார்கள்; ஊதியத்தை வெட்டுகிறார்கள். இதுபோன்ற பல்வேறு தொடர் நெருக்கடிகளையும், பிரச்சினைகளையும் அந்த நிறுவனங்கள் செய்து வருகின்றன. ஆகவே, இது உடனடியாக விவாதிக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தங்களிடத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்தோம். அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பரிசீலனையில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், என்ன?

திரு. வை. சிவபுண்ணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தலைவர் செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிட்ட அதே கருத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்துகிறேன். அதேபோல இன்னும் பல்வேறு கூடுதலான கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய திருவாரூர் மாவட்டத்திலே கொலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவையெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களிடையே மோதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்களிடையே 12-11-2008 அன்று நடைபெற்ற மோதல் குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு

உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. எல். ரவிச்சந்திரன், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. செ.ம. வேலுசாமி, திரு. பி. பலராமன், திரு. சொ. கருப்பசாமி, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. டி. சுதர்சனம், திரு. சி. ஞானசேகரன், திரு. கோவை தங்கம், திரு. கரி. இராமசாமி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ராம. சுப்புராம், திரு. விடியல் எஸ். சேகர், திரு. அருள் அன்பரசு, திரு. பெ.சு. விஜயகுமார், திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், திரு. ஆர்.எம். பழனிசாமி ஆகியோரும், பா.ம.க. சார்பாக திரு. ஜி. கே. மணி, திரு. தி. வேல்முருகன், திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், திரு. மு.க. பெரியசாமி, திரு. பெ. கண்ணன், டாக்டர் க. நெடுஞ்செழியன், திருமதி பெ. கமலாம்பாள், திரு. இல. வேலுசாமி, திரு. கி. ஆறுமுகம் ஆகியோரும், ம.தி.மு.க. சார்பாக திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. ஞா. ஜாண் ஜோசப், திரு. ப. டில்லி பாபு ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. குணசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. எஸ். இராசசேகரன், திருமதி பி. பத்மாவதி, திரு. கே. உலகநாதன் ஆகியோரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக திரு. து. ரவிக்குமார் அவர்களும், சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்களும் விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். (குறுக்கீடுகள்) இந்த issue எடுத்தாயிற்று. உட்காருங்கள். முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

முற்பகல் 10-50

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நேற்று டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் படித்துவரும் குறிப்பிட்ட ஒரு பிரிவைச் சார்ந்த மாணவர்கள் சிலர்மீது வேறு பிரிவைச் சார்ந்த சக மாணவர்களே காவல் துறையினர் முன்பு மண்வெட்டி, இரும்புக் கம்பி உள்ளிட்ட

பயங்கர ஆயுதங்களைக்கொண்டு கொலைவெறியுடன் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 4 மாணவர்கள் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தக் கொடூரக் காட்சிகளைக் கண்ட அனைவருமே அதிர்ச்சிக்குள்ளாயினர். தமிழ்நாட்டின் காவல் துறையின்மீது ஏற்கெனவே மக்கள் நம்பிக்கை இழந்துள்ள நிலையில், இதுபோன்ற வன்முறைக் காட்சிகள் மக்களின் மனநிலையை மேலும் பாதிக்கும் விதமாக அமைந்துள்ளன. தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் கலவரம் வெடிக்கும், எங்கு வன்முறைச் சம்பவங்கள் நடக்க வாய்ப்பு இருக்கும், எங்கு மதக் கலவரங்கள் நடக்க வாய்ப்பு இருக்கும் என்பதையெல்லாம் முன்கூட்டியே அறிந்து அந்த இடத்திற்குத் தேவையான காவலர்களை அனுப்பி, இதுபோன்ற கலவரங்களை முளையிலேயே கிள்ளியெறியும் பணியைச் செய்யவேண்டியது காவல் துறையின் தலையாய கடமை. ஆனால், இந்தச் சட்டக் கல்லூரிக்கு வெளியே ஐம்பதுக்கும் மேற்பட்ட காவலர்கள் வாகனத்துடன் நின்று கொண்டிருந்தபோதும், காவல் துறையினருக்கு எதிரே 10 அடி தூரத்தில் அங்கு நடைபெற்ற கொடூர சம்பவத்தை, இரக்கமின்றித் திரைப்படக் காட்சியைப் பார்ப்பதுபோல காவல் துறையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது, மிகுந்த மன வேதனை அளிக்கின்ற ஒன்றாகும். ** (குறுக்கீடுகள்) ஏனெனில், மாண்புமிகு . . .

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேவையில்லாதது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அமைச்சர், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற சம்பவம் விரும்பத்தகாத சம்பவம். மாணவர்களிடையே ஏற்பட்டது. அது வேதனை தரக்கூடிய ஒன்று. ஆனால் ** அவருக்கு அருகதை இல்லை. நாங்கள் நடத்திய பேரணியில் காவல் துறையும் குண்டர்களும், ரவுடிகளும் கைகோர்த்துக்கொண்டு. . . (குறுக்கீடுகள்)

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. டி. ஜெயக்குமார்: நீங்கள் என்ன Law Minister -ஆ? (குறுக்கீடு) நீங்கள் என்ன Law Minister-ஆ? அவர் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, உட்காருங்கள். திரு. டி. ஜெயக்குமார், சொல்லுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: ஏனெனில், அதே சமயத்தில், (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள்மீது கொலைவெறித் தாக்குதலை சமூக விரோதிகள் நடத்தியபோதும், மதுரையில் பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டு 3 ஊழியர்கள் மரணமடைந்தபோதும் . . . (குறுக்கீடு) பதில் சொல்லட்டும் சார். அவர் சொல்லட்டும். நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயக்குமார், இந்த subject-க்கு related ஆகப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இந்த subject-ஐ ஒட்டிப் பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: காவல் துறை எப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Subject-க்கு related -ஆகப் பேசுங்கள். அதை விட்டுவிட்டு out of scope போகாதீர்கள். (குறுக்கீடு) சரி பேசுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டு மூன்று ஊழியர்கள் மரணமடைந்தபோதும் காவல் துறை இதே முறையைத்தான் கடைப்பிடித்தது. (குறுக்கீடு) இதுபோன்று வேடிக்கை பார்த்ததால் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். அவர்கள் கருத்தைச் சொல்லட்டும். அந்தக் கருத்துக்கு பதில் அளிக்க வேண்டியது நம்முடைய பொறுப்பு. நான் அதற்காக இங்கே தலைவரால் அனுப்பப்பட்டிருக்கிறேன். அவர்கள் கருத்தைச் சொல்லட்டும். நாம் பேசிக்கொள்ளலாம். அமைதியாக இருங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: நானும் அம்மாவால்தான் அனுப்பப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இருக்கட்டும் திரு. ஜெயக்குமார். இந்த subject-க்கு உள்ளே பேசுங்கள். இதை விட்டுவிட்டு, out of scope போகாதீர்கள். (குறுக்கீடு) இந்த matter dilute ஆகிவிடும். (குறுக்கீடு) இந்த matter dilute ஆகிவிடும்.

முற்பகல் 10-55

திரு. டி. ஜெயக்குமார்: இதுபோன்று வேடிக்கை பார்க்கத்தான் காவலர்கள் அங்கு அனுப்பப்பட்டனரா? வேடிக்கை பார்க்கும் காவலர்களுக்கு எதற்கு அரசுச் சம்பளம்? சட்டக் கல்லூரிக்கு வெளியே நின்றுகொண்டு, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அனைத்துக் காவலர்களையும், காவல் துறை அதிகாரிகளையும் உடனடியாகப் பணி நீக்கம் செய்து, அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர், மேற்படி சம்பவத்திற்குத் தார்மீகப் பொறுப்பேற்று, தன்னுடைய பதவியை இராஜினாமா செய்யவேண்டும் என்று தமிழக மக்களின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மேற்படி சம்பவத்தில் படுகாயம் அடைந்து, ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களுக்கு உயரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்றும், அவர்களுக்குத் தேவையான நிதியுதவியைத் தமிழக அரசு வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, கடந்த 29 மாத தி.மு.க. ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது என்றும், வன்முறைகளை வேடிக்கை பார்க்கின்ற துறையாகத்தான் காவல் துறை இருக்கிறது என்றும் அம்மா அவர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டியதைப்போல, இன்றைக்கு நடக்கும் ஆட்சி சட்டத்தின் ஆட்சி அல்ல; அது காட்டாட்சி, காட்டாட்சி என்று சொல்லி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற கலவரத்தில் கிட்டத்தட்ட 50 மாணவர்கள் பங்கேற்றுள்ளனர். அவர்கள் மேற்படிப்புப்

2008 நவம்பர் 13] [திரு. சி. ஞானசேகரன்]

படிக்கவேண்டுமென்று அவர்களுடைய பெற்றோர்கள் தங்களுடைய வியர்வையைச் சிந்தி உழைத்து, தங்களுடைய மகன்கள் எதிர்காலத்தில் நல்ல நீதிமான்களாக, சிறந்த வழக்கறிஞர்களாக, அரசுத் துறையிலே பெரிய அலுவலர்களாக வரக்கூடும் என்ற கனவோடு அனுப்பி, எதிர்காலத்தில் அவர்கள் பேனா ஏந்தி, கறுப்பு coat போட்டு வலம் வருவார்கள் என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டிருந்தவர்களுடைய மனதில் மண்ணை வாரிப் போட்டதுபோல, நேற்று அந்தக் கலவரத்தைத் தொலைக்காட்சியிலே பார்க்கிறபோது இவர்களெல்லாம் கூலிப் படைத் தலைவர்களாக வர இலாயக்குள்ளவர்களாக மாறி விடுவார்களோ என்கிற ஒரு அச்சம், நாட்டு மக்கள் மத்தியிலே ஏற்பட்டது.

நான் காரிலே பயணித்துக் கொண்டிருந்தபோது, நிறைய பேர் தொலைபேசியிலே தொடர்புகொண்டு, "நீங்கள் தொலைக்காட்சியிலே இந்தக் காட்சியைப் பார்த்தீர்களா? காட்டுமிராண்டித்தனமாக இப்படி அடித்துக்கொள்கிறார்களே? அப்படி அடித்துக்கொள்கிறபோது, அங்கே 10 அடி தொலைவிலேயே காவல் துறை அதிகாரிகள் நின்று அதை வேடிக்கை பார்க்கிறார்களே? இதற்காகவா நாம் காவல் துறையை வைத்திருக்கிறோம்? இதற்காகவா நாம் நம்முடைய வரிப் பணத்தில் அவர்களுக்குச் சம்பளம் தருகிறோம்?" என்று கேட்டார்கள்.

சட்டம்-ஒழுங்கைக் கட்டிக் காப்பாற்றவேண்டிய காவல் துறை எதிரிலேயே—சொல்லப்போனால், இது cognizable offence—காவல் துறை அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய குற்றம் ஏதாவது கண்ணெதிரே நடைபெறுமேயானால், உடனடியாகக் கொஞ்சங்கூட தயங்காமல் நடவடிக்கை எடுத்து, ஒரு குற்றத்தைத் தடுக்கவேண்டிய பொறுப்புள்ள காவல் துறை அதிகாரிகளுடைய கண்ணெதிரிலேயே இப்படிப்பட்ட ஒரு கொலைவெறித் தாக்குதல் நெடுநேரம் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், இது உண்மையிலேயே வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒன்று. காட்டுமிராண்டித்தனமான, காட்டு தர்பாரான இதுபோன்ற நிகழ்வுகளைக் காவல் துறை ஏன் முளையிலேயே கிள்ளியெறியவில்லை; ஏன் இவர்கள் ஆரம்ப கட்டத்திலேயே இதற்கு அணை போடவில்லை என்கிற ஒரு பெரிய வினா நம்முடைய நாட்டு மக்கள் மத்தியிலே இருந்து கொண்டிருப்பதை நான் மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்கும், சட்டக் கல்லூரிக்குப் பொறுப்பாக இருந்து கொண்டிருக்கிற சட்டத் துறை அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [2008 நவம்பர் 13

கிட்டத்தட்ட ஒரு வார காலம் அல்லது 10 நாட்களாகவே இந்தப் புகைச்சல் மாணவர்கள் மத்தியிலே இருந்து வந்திருப்பதாகக் காவல் துறைக்கு ஏற்கெனவே தகவல் வந்திருக்கிறது. அந்தக் கல்லூரியினுடைய முதல்வருக்கும் இது நன்றாகவே தெரிந்திருக்கிறது. காவல் துறைக்கும் நன்றாகத் தெரிந்து, 50 காவலர்கள் வாகனங்களிலே வந்து வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் தெரிந்திருந்தும்கூட, இப்படிப்பட்ட ஒரு கொலைவெறித் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. நேற்றைக்குத்தான் நாம் இலங்கைப் போரைப்பற்றி நெடுநேரம் பேசி, அங்கிருக்கக்கூடிய இனப் படுகொலையை நினைத்து நினைத்து, அது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஒரு தீர்மானம் முன்மொழியப்பெற்று, ஏகமனதாக அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினோம். இலங்கைப் போரை நேரிலே பார்க்காதவர்களுக்கு, 'இங்கே தமிழகத்திலே ஒரு போரைப் பாருங்கள்' என்று காட்டுவதைப்போல, அப்படிப்பட்ட ஒரு நிகழ்வு நம்முடைய சட்டக் கல்லூரியில் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், அதை எப்படி நாம் ஜீரணிக்க முடியும் என்பதைத்தான் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-00

காவல் துறை ஏன் இதைக் கைகட்டி அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்பது a thousand dollar question, still unanswered. I am told that only the A.C. has been suspended, அல்லது இன்னும் யாராவது இப்பொழுது suspend செய்யப்பட்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு கொடூரமான சம்பவம் மாணவர்கள் மத்தியிலே நடந்துள்ளது. சமூகத்தில் நிச்சயமாக மாணவர்கள்தான் எதிர்கால மன்னர்களாக வரப்போகிறவர்கள்; பொறுப்புள்ள அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள்; நாட்டை ஆளப் போகிறவர்கள். ஆனால், இப்படி இரும்புத் தடிகளையும், அதேபோல், டியூப் லைட்டுகளையும், கத்திகளையும், கட்டைகளையும் எடுத்துக்கொண்டு இவர்களே போர்க்களத்தில் இறங்கியுள்ளதை நேற்று தொலைக்காட்சியிலே பார்க்கிறபோது—நான் ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவன். பொதுவாக நாங்கள் எங்களுடைய தென்னை மரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய தேங்காயை உரித்துவிட்டு மட்டையில் நார் எடுக்க வேண்டுமென்று சொன்னால், நாங்கள் அந்த மட்டையை வைத்துவிட்டு, அதிலே அந்த நாரை எடுக்க வேண்டுமென்பதற்காக வேண்டுமானால் நாங்கள் விடாமல் அதை அடித்துக்கொண்டிருப்போம். ஒரு செத்த பாம்பை அடிக்கிறபோதுகூட,

2008 நவம்பர் 13] [திரு. சி. ஞானசேகரன்]

ஒருவேளை அது பிழைத்துக் கொண்டு மீண்டும் நம்மைக் கடித்துவிடுமோ என்பதற்காக அது செத்துவிட்டதா, செத்துவிட்டதா என்று அறிவதற்காக வேண்டுமானால் தொடர்ந்து அடிப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், ஒரு மாணவன் அங்கே கீழே மயங்கி விழுந்த பிறகும்கூட ஒவ்வொருவராக, தங்களுடைய பங்கு என்கிற வகையில் காவல் துறை அதிகாரிகள் முன்னாலேயே, வந்து வந்து அடித்துவிட்டு அடித்துவிட்டுப் போகிறார்களே! இந்தக் காட்சியை எப்படிப் போலீஸ்காரர்கள் தங்களுடைய கண்ணெதிரிலேயே அரங்கேறவிட்டார்கள்; இதை எப்படி இந்த அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதுதான் எங்களுக்கு இருக்கக்கூடிய ஒரு வினா. இதிலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தக் கல்லூரியின் முதல்வருக்கு இது தெரிந்திருந்தும்கூட, அந்த முதல்வர் ஏன் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார்? முதலில் நீங்கள் அந்தக் கல்லூரியினுடைய முதல்வரை வேலைநீக்கம் செய்யுங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுதுதான் உண்மையான ஒரு நிலவரம் தெரியும்; கட்டுக்கோப்புக்குள்ளே அந்தக் கல்லூரி இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக முடியும்.

அடுத்தபடியாக, காவல் துறை. சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. காவல் துறை அதிகாரிகள் தொடர்ந்து அங்கேயே வலம் வந்துகொண்டிருக்கிறார்கள். சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோதே, இப்படி ஒரு சம்பவம் தலைநகரிலேயே நடந்துள்ளது. ஏதோ ஒரு கிராமத்திலே இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு நடந்து, காவல் துறை அதிகாரிகள் வருவதற்குக் காலதாமதமாகி, அதற்குள்ளே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுவிட்டாலும்கூட ஓரளவு மன்னித்துவிடலாம்; but this kind of events, tragic incidents are going on under the nose of the police officials. இதற்கு ஒரு முடிவே இல்லை. ஆகவே, இந்தக் காவல் துறைக்கு—சென்னை மாநகர காவல் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய கமிஷனர் level-இலிலிருந்து தவறு செய்தவர்கள் வரை உடனடியாக suspend செய்து, நிச்சயமாக எப்படியாவது காவல் துறையை Scotland Yard-க்கு இணையான போலீஸ் என்பதை மீண்டும் நீங்கள் நிலைநாட்ட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே, இதைத் தொலைக்காட்சியிலே பார்த்த தமிழகம் முழுவதும் அதிர்ச்சி. இரத்தம் சொட்டச் சொட்ட இவர்கள் இரும்புத் தடியையும், மற்ற தடிகளையும் கொண்டுவந்து அடித்து அடித்து கீழே விழுந்துவிட்டான் ஒரு மாணவன். அவன் gate-லே இடையிலே மாட்டிக்கொள்கிறான்.

அவனை அடித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு மாணவன் பாவம் எழுந்து தப்பிக்க முயற்சி செய்கிறான். ஆனால், அவனால் நடக்க முடியவில்லை. இரண்டு கால்களும் fracture ஆகி, கிளையிலே தொங்கிக்கொண்டிருக்கிறான். பிறகுதான் போலீசார் போய், அவனைத் தூக்குகிறார்கள். ஆனால் அங்கே வந்த மக்கள், காவல் துறை அதிகாரிகளைப் பார்த்து "ஏன் நீங்கள் வேடிக்கை பார்க்கிறீர்கள்? போய்த் தடுங்கள்" என்று சொன்னால், அதற்கு "எங்களுக்கு இன்னும் ரிப்போர்ட் வரவில்லை; ரிப்போர்ட் வந்தால்தான் நாங்கள் போய் நடவடிக்கை எடுப்போம்" என்று சொல்லக்கூடிய காவல் துறை அதிகாரிகளுடைய செயல், காட்டுமிராண்டித்தனமான ஒன்று. உடனடியாக நீங்கள் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்காதவாறு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Special report கொடுக்கலாம். தாங்களும் வழக்கறிஞர்களாக இருந்தவர்கள். போலீஸ் யாராவது ஒரு சாராய case-க்கு raid-க்குப் போகிறபோது, அல்லது ஒரு காவல் துறை அதிகாரியே ஓரிடத்தில் போகிறபோது ஒரு nuisance நடக்கிறதென்று சொன்னால், அவர்களாகவே cognizance எடுத்து அவர்களாகவே நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். He can take cognizance. அந்தமாதிரி அவர்களாகவே நடவடிக்கை எடுத்து, உடனடியாக அதைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால், இன்று 3 மாணவர்கள் உயிருக்குப் போராடக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. மருத்துவமனைக்கு நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும் போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இப்படிப்பட்ட காட்சிகள் இனி எதிர்காலத்தில் மாணவர்கள் மத்தியிலே நடைபெறக்கூடாது.

நான் பணிவன்போடு இன்னும் ஒன்றையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். தலைநகரங்களிலே இப்படி மாணவர்கள் எடுத்த எடுப்பிலேயே தடி எடுப்பதற்கோ, கத்தி எடுப்பதற்கோ தயாராகிவிட மாட்டார்கள். சிலபேர் கூலிப் படையை வைத்துக்கொண்டு அதிலே மாணவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு training-ஐக் கொடுக்கக்கூடிய நிலைமைகள் ஆங்காங்கே இருந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கூலிப் படைகளை முதலிலே நீங்கள் வேரறுத்து, மாணவர்கள் மத்தியிலே இப்படிப்பட்ட விஷ வித்துகளைப் பரப்பி, அவர்களையும் தயார் செய்துகொண்டிருக்கக்கூடிய அப்படிப்பட்ட இயக்கங்களையும் நீங்கள் வேரறுக்க வேண்டும். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

2008 நவம்பர் 13] [திரு. சி. ஞானசேகரன்]

முற்பகல் 11-05

அந்த மாணவர்களுக்கு மருத்துவ வசதி அளித்து நல்ல முறையில் தீவிர சிகிச்சை அளித்து, அவர்களுக்கு நிதி தேவைப்பட்டால் நிதியைக் கொடுத்தாவது அவர்களையெல்லாம் காப்பாற்றி, இனி எந்தக் கல்லூரியில் இப்படி நடந்தாலும் அந்தக் கல்லூரி முதல்வரும் மற்றும் இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகளும் உடனடியாக வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்கிற ஒரு நல்ல சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும்.

இப்படிப்பட்ட கொந்தளிப்பான சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே வந்து இந்த அவைக்கு பதில் சொல்வார்கள் என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். இன்று காவல் துறைக்குப் பொறுப்பு வகித்துக்கொண்டிருப்பவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். ஆனால், இப்பொழுது சட்டத் துறை அமைச்சர் சட்டக் கல்லூரிக்குப் பொறுப்பாக இருக்கக்கூடியவர் என்று பதிலைச் சொல்லுகிறார். இருந்தாலும்கூட இதிலே அவருக்கும் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. காவல் துறையை மீண்டும் முடுக்கிவிட்டு தமிழகத்திலே நடைபோடச் செய்ய வேண்டுமென்று சொன்னால், நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து, இனி எல்லாக் கல்லூரி மாணவர்களிடையேயும் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள் எனத் தெரிவித்து, அவர்களுக்குக் கல்வி இல்லாவிட்டாலும் பரவாயில்லை; காட்டுமிராண்டிகளாக அவர்கள் மாறுவதையாவது தடுத்து நிறுத்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்றில் இதுவரையிலும் எந்தக் கல்லூரியிலும், எந்த மாணவர் குழு மோதலிலும் இல்லாத அளவிற்கு மிகக் கடுமையான ஒரு மனித நேயமற்ற, ஈவு இரக்கமற்ற, கொஞ்சங்கூட பச்சாதாபம் என்று சொல்வார்களே அந்த வரிகளுக்குக்கூட இடம் கொடுக்காமல், தன் சக மாணவர்களையே ஒரு கும்பல் படுமோசமாக கத்தி, வீச்சரிவாள், பைப், உருட்டுக் கட்டை போன்ற படு பயங்கரமான ஆயுதங்களால் தாக்கி இருக்கிறது. தாக்குவதற்கு 10 நாட்களுக்கு முன்பாகவே இப்படி ஒரு குழு மோதல், அங்கு சாதிய மோதலாக

[திரு. தி. வேல்முருகன்] [2008 நவம்பர் 13

வெடிப்பதற்குச் சூழல் இருக்கிறது என்று தெரிந்தும், அந்தச் சட்டக் கல்லூரியினுடைய முதல்வர் அவர்கள். ஏன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து தகுந்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு காவல் துறையை அணுகவில்லை?' அது ஒன்று.

இரண்டாவது, தொலைக்காட்சிகள் அனைத்தும் படம் பிடித்துக்கொண்டிருக்கின்றன; அந்த மாணவர்கள் குழுவிற்குள்ளே மோதலாகி ஆளாளுக்கு ஆயுதங்களை வைத்துக்கொண்டு சட்டக் கல்லூரி வளாகத்திற்குள்ளேயே ஒவ்வொருவரும் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கு ஓடுகின்ற காட்சி, இன்று 'தினகரன்' பத்திரிகையிலும், 'தினத்தந்தி' பத்திரிகையிலும் புகைப்படமாக வந்திருக்கிறது. கலர் போட்டோ எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். வீச்சரிவாள்களோடு, வேல் கம்புகளோடு, உருட்டுக் கட்டைகளோடு வலம் வருகின்றார்கள்; ஒரு காவலர் லத்தியைக் கையிலே வைத்துக்கொண்டு வேறு பக்கம் திரும்பிப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இதைப் புகைப்படம் எடுக்கின்ற ஊடக நண்பர்கள், பத்திரிகையாளர்கள், காவலுக்கு நிற்கின்ற காவலர்களிடத்திலே சென்று 'ஐயய்யோ உயிர் போகிறது' காப்பாற்றுங்கள்' என்று ஒரு பெண் நிருபர் கதறிக் கொண்டிருக்கிறார். எங்களுக்குப் புகார் வரவில்லை என்று மனித நேயமற்ற முறையில் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொள்கிற காவல் துறை ஆய்வாளர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அங்கே 10 அடி தூரத்தில் இருந்த காவல் துறை நண்பர்கள், கொலை செய்ய முயற்சிக்கிற அந்தக் கும்பலிடமிருந்து அந்த உயிரைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையில் ஏன் ஈடுபடவில்லை? அவர்களுக்கு ஏன் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை?

சட்டமன்றம் நடைபெறுகின்ற இந்தக் காலத்தில் இந்த அரசுக்கும் மாண்புமிகு முதலமைச்சருக்கும் மிகப் பெரிய ஒரு அவப் பெயரை ஏற்படுத்துகிற இந்தச் சூழலில், இதைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டிய காவல் துறையின் கவனம் ஏன் வேறு திசையில் செலுத்தப்பட்டிருக்கிறது? பக்கத்தில் பூக்கடை காவல் நிலையம் இருக்கிறது. ஓடிச் சென்று ஐந்து மணித்துளிகளில் துப்பாக்கி ஒன்றை எடுத்துவந்து கண்ணீர்ப் புகைக்குண்டு வீசியிருந்தாலும்கூட கூட்டம் சிதறியோடி இருக்கும். வானத்தை நோக்கிச் சுட்டிருந்தாலும்கூட, அந்த உயிர்கள் இன்றைக்குக் காப்பாற்றப்பட்டிருக்கும். இன்னும் அந்த மாணவர்கள் உயிர் பிழைப்பார்களா அல்லது அவர்கள் இறப்பார்களா என்று கவலைக்கிடமான நிலையிலே இருக்கின்றார்களே, உயிர்

போய்விட்டது என்று சொன்னால் யார் பதில் சொல்வது? இதை ஏன் காவல் துறை தகுந்த நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்தவில்லை என்பதை நான் இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்ல; சட்டக் கல்லூரியில் கடந்த 30 ஆண்டுக் கால வரலாற்றில் எப்போது பார்த்தாலும் குழு மோதல்களும், சாதிய மோதல்களும் ஏற்பட்டு தடுக்கச் சென்ற சில காவலர்களுக்கேகூட காயம் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்ட காரணத்தினாலே காவலர்கள் அங்கே செல்லவில்லை என்கிற ஒரு காரணத்தைச் சொல்லலாம். ஆனால், கண் எதிரே நடந்து கொண்டிருக்கிறபோது ஏன் அந்தக் காவல் துறை தடுப்பு நடவடிக்கையில்கூட ஈடுபடவில்லை என்ற ஐயம் இங்கே எழுகிறது.

சட்டக் கல்லூரி மாணவர் விடுதிகளிலும் சில ரௌடிக் கும்பல்கள், வெளி ஆட்கள் கொண்டு வரப்பட்டு கலவரங்கள் நடத்தப்படுகின்றன. ஆக, தமிழகத்தினுடைய கல்லூரி வளாகங்களில் நடைபெறுகின்ற இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான மனிதநேயமற்ற கொடூரத் தாக்குதல்களுக்கு முடிவு கட்டவேண்டும். இந்தக் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் வீடியோ கிளிப்பிங்ஸ்மூலமாக, புகைப்படத்தின்மூலமாக, அடையாளம் காட்டப்பட்டிருக்கிறார்கள். தமிழக அரசும், நம்முடைய சட்டத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்களும், ஈவு இரக்கமற்ற அந்தச் செயலில் ஈடுபட்ட மாணவர்கள் யார் என்று அடையாளம் கண்டுபிடித்து அவர்கள் எந்தச் சாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், தமிழகத்தில் அல்ல, இந்தியாவில் எந்தத் துறையிலும் இனி அவர்கள் கல்வி படிக்கமுடியாது என்கிற ஒரு நிலையில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், அங்கு இருக்கின்ற காவலர்கள் கைகட்டி, வாய்பொத்தி வேடிக்கை பார்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு உத்தரவு போடவேண்டிய உதவி ஆணையர்கள், துணை ஆணையர்கள் எங்கே இருந்தார்கள்? வெறும் காவலர்களை மட்டும் நாம் சஸ்பெண்டு செய்துவிட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துவிட்டு, உத்தரவு போட வேண்டிய அதிகாரிகளைத் தண்டிக்கவில்லை என்று சொன்னால், மீண்டும் அந்தத் தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவர்கள்மீதும் இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. தி. வேல்முருகன்] [2008 நவம்பர் 13

முற்பகல் 11-10

கீழ்க்கண்டவற்றுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மற்றும் அவையினுடைய கவனத்தை நான் ஈர்க்க விரும்புகிறேன். பொதுவாக படிக்கின்ற பருவங்களிலே மாணவர் தேர்தல் என்கிற பெயரில் மிகப் பெரிய கலவரங்கள் நடக்கின்றன. பல்வேறு கல்லூரிகளில் நடக்கின்றன. அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். மூன்று மாதத்திற்கு முன்பே தேர்தலை அறிவித்து, வாழ்வாங்கு வாழக்கூடிய காலத்தில் இளைய தலைமுறையினர் அணியாக, சாதியாக, அரசியல் கட்சிகளாக, பிரிவுகளாகச் சிதறுண்டு போவதைத் தடுத்து நிறுத்துவதற்கு, தேர்தலை நீங்கள் இரத்து செய்தாலும் நல்லது. இல்லையென்றால், மாணவர்கள் எழுச்சியாகப் போராட முன்வருவார்களென்று சொன்னால், திடீரென்று ஒரு நாள் குறிப்பிட்டு, அன்றைக்கே தேர்தல், அன்றைக்கே வாக்கு என்கிற முடிவைக் கொண்டுவர வேண்டும். அவர்கள் தயாராவதற்கான வாய்ப்புகளுக்கு இடமளிக்காமல் நீங்கள் அந்த முயற்சியை எடுக்கவேண்டும். இல்லையென்று சொன்னால், தேர்தலை அடியோடு இரத்து செய்வதற்கான வாய்ப்புகளை நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடிபட்டவர்களை அரசு மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். அடியைப் பார்த்திர்களென்றால், சன் டி.வி.யிலே, ராஜ் டி.வி.யிலே, மக்கள் தொலைக்காட்சியிலே, ஜெயா டி.வி.யிலே பார்த்த எந்தவொரு குடும்ப உறுப்பினரும், எந்த இரக்கமுள்ள மனிதரும் இரவு சாப்பிட்டிருக்க மாட்டார்கள். அவ்வளவு கொடூரமான தாக்குதல். காயப்பட்ட அந்த இருவரையும் அப்போலோ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, அவர்கள் உயிரைக் காப்பாற்றுவதற்கு நம்முடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தென் மாவட்டங்கள், நான் இருக்கின்ற வட மாவட்டங்கள் என சாதியத் தீ எரிந்த மாவட்டங்களெல்லாம் இன்றைக்கு அமைதிப் பூங்காவாக, அமைதியான ஒரு சூழல் இருக்கின்ற இந்த நிலையில், எதிர்காலத்தில் அரசு வழக்கறிஞர்களாக, நீதிபதிகளாக, உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக, சட்டப் பேராசிரியர்களாக வரவேண்டிய அந்த மாணவர் சமூகம் சாதியக் கண்ணோட்டத்தோடு இவ்வாறு குழு மோதலில் ஈடுபட்டால், அரசுப் பொறுப்புகள் இவர்களின் கைகளுக்கு வருகின்றபொழுது இந்தியாவினுடைய இறையாண்மையைப் பாதுகாத்து, தமிழ்ச் சமூகத்திற்கு நல்லவற்றையும், நியாயத்தையும்

எடுத்துக் கூறுகின்ற நல்ல தீர்ப்புகளை வழங்குவதற்கான வாய்ப்புகள் எப்படி இவர்களால் ஏற்படுத்தப்படும்? சாதியக் கண்ணோட்டத்தில் ஈடுபடும் இவர்கள்மூலமாக மிகப் பெரிய சமூக அழிவை நோக்கி, தமிழ்ச் சமூகம் செல்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆதலால், நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும், காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் இனி இதுபோன்ற சம்பவங்கள் இந்தத் தமிழ் மண்ணில் நடைபெறாத அளவிற்கு, இதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இனிமேல் வருகின்ற கல்லூரித் தேர்தல்களில் பல்வேறு குழு மோதல்களைத் தடுக்கவேண்டும். இதுபோன்ற ஈவிரக்கமற்ற, மனித நேயமற்ற ஒரு செயலைத் தமிழகம் கண்டதில்லை. அப்படி இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. நாம் அவையில் கூடி விவாதிக்கின்ற அளவுக்கு இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. இதை எப்படி அனுமதித்தார்கள்? நம்முடைய காவல் துறை ஆணையர் கட்டுப்பாட்டில் இருக்கிற ஐ.எஸ். என்கிற உளவுத் துறை, முதலமைச்சருக்குத் தகவலைச் சொல்லுகின்ற உளவுத் துறை என்ன செய்து கொண்டிருக்கிறது என்ற கேள்வியும் இங்கே எழுப்பப்படுகிறது. இங்கேயும் சாதியம் புகுந்து இந்தச் செய்தி முதலமைச்சர் கவனத்திற்குச் செல்லாமல் தடுத்துவிட்டதா என்கிற ஐயம் ஏற்பட்டிருக்கிறது.

அரசும், துறையின் அமைச்சர் அவர்களும், இதுபோன்ற தவறுகள் நடக்காது என்ற ஒரு நல்ல செய்தியை நாட்டு மக்களுக்கும், எதிர்காலத் தலைமுறைக்கும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாதிக்கப்பட்டோர் குடும்பத்திற்கு, காயமடைந்தோர் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் நிவாரணமும் வழங்கவேண்டும். 50 பேர்கள் தாக்கியிருக்கிறார்கள்; வெறும் 8 பேர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 50 பேர்கள் வீச்சரிவாள், உருட்டுக் கட்டை, பைப்புடன் வருகிறார்கள். செத்துவிட்டான் என்று ஒருவன் சொல்லுகிறான், 'செத்துவிட்டானா என்று நான் சோதிக்கிறேன்' என்று ஒருவன் கல்லைத் தூக்கிக் கொண்டுபோய் கழுத்திலே போடுகிறான்; தலையிலே போடுகிறான். வீடியோ, புகைப்படக்காரர்கள் அதனைக் காட்சியாகக் காட்டுகிறார்கள். இந்த அளவுக்கு மனித நேயமற்ற அரக்க குணம், இந்த மனித சமூகத்தில் வருவதற்குக் காரணம் சாதியம். சாதியத் தீ பறந்த மாவட்டங்களெல்லாம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிற இந்தச் சூழலில், இதுபோன்று கல்லூரி மாணவர்கள் செயல்படுகின்ற இந்தச் சூழலைத் தடுத்து நிறுத்தி, சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றி, எதிர்கால மாணவர் சமுதாயம் வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டுமென்று கேட்டு, அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி.

[2008 நவம்பர் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக திரு. கே. மகேந்திரன் அவர்கள்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில், மாலை 5 மணியளவில் இரு பிரிவு மாணவர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டு ஆறுமுகம், பாரதி கண்ணன், சித்திரைச்செல்வன், அய்யாதுரை என்ற நான்கு மாணவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையிலே அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் வலியுறுத்தியதுபோல, நேற்றையதினம் நடைபெற்ற அந்த பயங்கர மோதலைத் தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் பார்த்த நண்பர்களெல்லாம், மனித நேயம் இருக்கக்கூடிய அனைவரும் வெட்கித் தலைகுனியக்கூடிய அளவிற்கு ஒரு பயங்கர மோதல் நேற்றையதினம் நடைபெற்றிருக்கிறது. நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, கடந்த 10 தினங்களாகவே டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் ஒரு மோதல் நிலை உருவாகி வந்துள்ளது. நேற்றையதினம் அரசு சட்டக் கல்லூரிக்குச் செல்லக்கூடிய மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் காலையில் கல்லூரிக்குச் செல்லும்போது உருட்டுக் கட்டை, கத்தி மற்றும் இரும்புக் கம்பிகள் உள்ளிட்ட பயங்கரமான ஆயுதங்களோடு சென்றதாகத் தகவல்கள் உள்ளன.

முற்பகல் 11-15

இப்படிப்பட்ட சூழல் காலையில் ஏற்பட்ட காரணத்தினால், அதனுடைய உச்சகட்டமாகத்தான் மாலையிலே ஒரு கடுமையான மோதல் நடைபெற்று. நான்கு மாணவர்கள் கடுமையான அளவிற்குத் தாக்கப்பட்டு இன்றைக்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடுமையாகத் தாக்கப்பட்ட மாணவனைக் காப்பாற்ற முயன்ற பாரதி கண்ணன் என்ற மாணவன் மயங்கி விழுந்திருக்கக்கூடிய சூழ்நிலையில் அந்த மாணவன்மீது மீண்டும் மீண்டும் அங்கே இருக்கக்கூடிய ஒருசில மாணவர்கள் தங்களது மூர்க்கத்தனமான தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அந்தப் பகுதியினுடைய அசிஸ்டெண்ட் கமிஷனர் உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகளும், காவலர்களும் சம்பவம் நடந்த, மோதல் நடந்த

2008 நவம்பர் 13] [திரு. கே. மகேந்திரன்]

இடத்திற்கு 10 அடி தூரத்தில் நின்றிருந்தும்கூட, அந்த மோதலைத் தடுப்பதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது வேதனையை அளிக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காரணம், இன்றைக்குத் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில், சென்னை மாநகரத்தில்கூட, ஏதாவது ஒரு ஆர்ப்பாட்டம் அல்லது பொதுக் கூட்டம் நடத்திட வேண்டும் என்று காவல் துறையிடம் கோரிக்கை வைத்தால், இரண்டு இடங்களில் மட்டும்தான் உண்ணாவிரதம் நடத்த வேண்டுமென்று காவல் துறை அதிகாரிகள் கட்டளையிடுகிறார்கள். பொதுக் கூட்டம் நடத்துவதற்கு சென்னை மாநகரத்தில் பல்வேறு இடங்களில் அனுமதி மறுக்கப்படுகிறது.

ஜனநாயக உரிமைகளை மறுக்கக்கூடிய சென்னைக் காவல் துறை அதிகாரிகளின் கண்முன்பாக நடைபெறக்கூடிய ஒரு தாக்குதலைத் தடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியையும் மேற்கொள்ளாதது மட்டுமல்ல; பத்திரிகை நிருபர்களும், அந்தப் பகுதியிலே இந்த மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அங்கு கூடியிருந்த பொது மக்களும், அப்பாவி மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள்; கொலை செய்யப்படுகிறார்கள்; அதைத் தடுக்க வேண்டுமென்று காவல் துறையிடம் கோரிக்கை வைத்தபோது, காவல் துறை அதிகாரிகள் சொன்னார்களாம்—இன்றைக்குப் பத்திரிகையிலே அந்தச் செய்தி வந்திருக்கிறது—"புகார் வராத காரணத்தினால் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை" என்று காவல் துறை அதிகாரிகள் சொன்னதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது.

நான் பணிவோடு இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புவது, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக, சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சிறிய பிரச்சினை ஒன்று ஏற்பட்டபோது, அந்தக் கல்லூரியினுடைய அனுமதியைப் பெறாமல் அங்கேயிருக்கக்கூடிய காவல் துறையானது கல்லூரி வளாகத்திற்குள் புகுந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குள் புகுந்து, கடுமையான தடியடித் தாக்குதலை நடத்திய சம்பவம் இரண்டு மாதங்களுக்கு முன்பாக நடைபெற்றது.

இதே சென்னை, அரசு அம்பேத்கர் சட்டக் கல்லூரியின் மாணவர் விடுதியில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக, எந்தவிதப் புகாரும் வராதபோது, இப்போது இதே அவையிலே உள்ள, அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய நம்முடைய அன்பு அமைச்சர்

[திரு. கே. மகேந்திரன்] [2008 நவம்பர் 13

பெருமக்கள் எல்லாம் இருந்தபோது, நாங்கள் சட்டமன்றத்திலே இதே பிரச்சினையை எழுப்பினோமே. அரசு அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் காவல் துறை புகுந்து, கடுமையான தடியடித் தாக்குதலை நடத்தி, நூற்றுக்கணக்கான மாணவர்கள் அன்றைக்குப் படுகாயமுற்று அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் என்று; யாருடைய புகாரின் அடிப்படையிலே அன்றைக்கு அவர்கள் அந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்று தெரியாது.

இன்றைக்கும் சு-கோட்டைப்பட்டி என்ற கிராமத்தில், போக்குவரத்தே இல்லாத ஒரு கிராமத்தில் மறியல் செய்த மக்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு, சுரேஷ் என்ற வாலிபன் கொலை செய்யப்பட்டிருக்கிறான். இரட்டணையிலே, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது. எந்தப் புகாரின் அடிப்படையில் இவையெல்லாம் நடைபெற்றன என்று தெரியவில்லை. ஆனால், அப்பாவி மாணவர்கள் தாக்கப்படும்போது, காவல் துறையினுடைய கண்முன்னால் கடுமையாகத் தாக்கப்படும்போது, காவல் துறை நடவடிக்கை எடுக்காமல் இருந்திருக்கிறது என்றால், அந்தக் காவல் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய சென்னை மாநகரத்தினுடைய ஆணையர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகள்மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் வலியுறுத்த விரும்புவது—இது பூக்கடை காவல் நிலைய எல்லை என்று சொன்னார்கள், பூக்கடை காவல் நிலையம் இருக்கிறது; எஸ்பிளனேடு காவல் நிலையம் இருக்கிறது; உயர் நீதிமன்றத்திலும் காவல் நிலையம் இருக்கிறது. மூன்று காவல் நிலையங்களை உள்ளடக்கி இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் இதுபோன்ற ஒரு பயங்கரத் தாக்குதல் மாணவர்கள்மீது நடத்தப்பட்டிருக்கிறது; அங்கேயிருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருக்கிறார்கள் என்றால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்குக் காலையில் ஒரு செய்தியைச் சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய உதவி ஆணையர், ஒரு ஆய்வாளர், நான்கு உதவி ஆய்வாளர்கள் உள்ளிட்ட சில அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டும், சில காவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டும் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. முன்பு பேசிய உறுப்பினர்கள் சொன்னவாறு ஏதோ தற்காலிக இடைநீக்கம் செய்வதால்மட்டும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுமா என்றால் நிச்சயமாக ஏற்படாது. காவல் துறை அதிகாரிகள் கண்முன்னால் இதுபோன்ற அராஜகம் நடைபெறும்போது, அதைத் தடுக்காத

2008 நவம்பர் 13] [திரு. கே. மகேந்திரன்]

அனைத்துக் காவல் துறை அதிகாரிகள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

முற்பகல் 11-20

கடந்த 10 தினங்களாக டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் இரு பிரிவு மாணவர்களுக்கு இடையில் ஒரு மோதல் நிலை உருவாகிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், நேற்றையதினம் அனைத்துப் பகுதி மாணவர்களும் ஆயுதங்களோடு கல்லூரிக்குச் செல்லக்கூடிய நிலைமை இருந்தபோது, இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பிலே இருக்கக்கூடியவர் அந்தக் கல்லூரியின் முதல்வர். ஏனென்றால், காவல் துறை அதிகாரிகள் மட்டுமல்ல; கல்லூரியினுடைய முதல்வர் பொறுப்பிலே இருக்கக்கூடிய அவர்களும் இப்படிப்பட்ட ஒரு மோதல் நிலைமை கல்லூரியிலே உருவாகிக் கொண்டிருக்கிறபோது, அந்த மோதல் நிலையைத் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கையாக ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா என்றால், எந்தவித நடவடிக்கையும் எடுக்காததனுடைய விளைவு, இன்றைக்கு நான்கு மாணவர்களது உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கல்லூரியினுடைய முதல்வர்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வலியுறுத்துவதோடு, தொடர்ந்து சட்டக் கல்லூரிகளில், சென்னை அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மட்டுமல்ல; தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு சட்டக் கல்லூரிகளிலே பயிலக்கூடிய மாணவர்கள் மத்தியில் சாதிய ரீதியிலான பிளவை ஏற்படுத்துவதற்கு இன்றைக்கு சாதிய சக்திகள் முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. ஏனைய professional கல்லூரிகளில் இதுபோன்ற நிலைமைகள் இருக்கிறதா என்றால் இல்லை; அப்படி இல்லாத சூழ்நிலையில், சட்டக் கல்லூரிகளிலே பயிலும் மாணவர்களை, சாதிய ரீதியாக அணி திரட்டுவதற்கான ஒரு முயற்சியை சாதிய சக்திகள் தமிழகத்தில் மேற்கொண்டு வருகின்றன என்றால், இந்தச் சக்திகளைத் தடுப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். அது எந்த சாதிய அமைப்பாக இருந்தாலும் சரி, படிக்கக்கூடிய மாணவர்கள் மத்தியிலேயே சாதிய ரீதியாக சாதிய உணர்வுகள் வளர்க்கப்பட்டால், பிற்காலத்தில் இவர்களெல்லாம் பல்வேறு பொறுப்புகளுக்கு வரும்போது, நிச்சயமாக சாதிய உணர்வோடு செயல்படக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு

[திரு. கே. மகேந்திரன்] [2008 நவம்பர் 13

வருவதோடு, சாதிய சக்திகள் கல்வி நிலையங்களில் புகுந்து, மாணவர்களை சாதிய ரீதியாகப் பிரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போது சாதிய சக்திகள்மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, உடனடியாக இந்தப் பிரச்சினை சம்பந்தமாக, இந்தத் தாக்குதல் சம்பந்தமாக, பதவியில் இருக்கக்கூடிய நீதிபதி தலைமையிலான நீதி விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும், டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வுகள் என்ன என்பதை முழுமையாகத் தமிழக மக்களுக்கும், இந்த அவைக்கும் தெரிவிப்பதற்கு, ஒரு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்களுக்கு இன்னும் சிறந்த முறையில் சிகிச்சை அளித்து, அந்த மாணவர்களது உயிரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதோடு அவர்களுக்குத் தேவையான நிவாரணத்தையும் வழங்குவதற்கு, திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டது குறித்து இங்கே அவையிலே நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் மிகுந்த கவலையையும், அச்சத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைத் தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் பார்த்து அனைவருமே மிகப் பெரிய அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கிறார்கள். இது ஏன் நடத்தப்பட்டது; எதற்காக நடத்தப்பட்டது என்ற காரணங்கள் பலவாறாக வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சம்பவம் என்பது, திட்டமிட்ட முறையிலே நடைபெற்றிருக்கிறதோ என்ற அச்சமும், சந்தேகமும் எழுகிறது. மாணவர்கள் தாக்கிக் கொண்டார்கள் என்ற செய்தி வருகிறது. ஆனால், இதற்கு வெளியிலிருந்து ஆதரவு வலுவாக வந்திருக்கிறது என்ற அச்சமும், சந்தேகமும் வலுவாக இருக்கிறது. நான் இன்று காலையிலே, அவைக்குப் பேருந்திலே வருகிறபோது, இதைப்பற்றிய செய்தியை விவாதமாக, பொது மக்களும், அந்தப் பேருந்திலே பயணித்தவர்களும் சொல்கிறார்கள். இந்தத் தாக்குதலிலே ஈடுபடுகிறபொழுது, வெளியாரும் இணைந்து தாக்குதல்

2008 நவம்பர் 13] [திரு. வை. சிவபுண்ணியம்]

நடத்தியிருப்பார்கள் என்ற அச்சத்தை வெளியிடுகிறார்கள். முகத்திலே கறுப்புத் துணியைக் கட்டிக் கொண்டு வந்து தாக்குதல் நடத்தினார்கள் என்ற செய்தி வருகிறது. எனக்கு உண்மை என்னவென்று தெரியவில்லை. திட்டமிட்ட ஒரு அடிப்படையிலே, அந்தச் சட்டக் கல்லூரியிலே தாக்குதல் நடைபெற்றிருக்கிறது என்ற செய்தி வருகிறது. தாக்குதல் நடத்தியவர்களுடைய புகைப்படங்கள் வெளி வந்திருக்கின்றன. மிகவும் ஆக்ரோஷமான முறையில், கொலை வெறித்தனத்தோடு அந்தத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. தாக்கப்பட்ட மாணவன் கீழே விழுந்து மயக்கமுற்ற நிலையிலே இருக்கிறான். ஆனாலும் இரும்புத் தடியாலும், உருட்டுக் கட்டையாலும் அவனைத் திரும்பத் திரும்பத் தாக்கி கொண்டேயிருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

இவர்கள் சட்டம் பயில வந்த மாணவர்களா என்ற அச்சம் வருகிறது. குற்ற வழக்குகளை நடத்தி அதன்மீது தீர்ப்புகளைப் பெற வேண்டியதற்காகப் படிக்க வந்த மாணவர்களே அந்தக் குற்றச் செயலில் இப்படி ஈடுபட்டு, அதன்மூலமாகத் தெளிவாக, நல்ல அனுபவத்தோடு அவர்கள் அந்த வழக்குகளை நடத்தப் போகிறார்களா அல்லது குற்றவாளிகளாகவே வெளியேறி அந்தத் தண்டனைக்கு அவர்களே ஆளாக்கப்படப் போகிறார்களா என்ற அச்சமும் சந்தேகமும் இப்பொழுது எழுந்திருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி ஒரு தெளிவான முடிவுக்கு தமிழ்நாடு அரசாங்கம் வந்தாகவேண்டிய அவசியம் இருக்கிறது.

இன்னொன்று; காவல் துறை சொல்வது மிகவும் வேடிக்கைக்குரியதாக இருக்கிறது. அங்கே கும்பலாகக் காவல் துறையினர் இருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் அங்கே இருக்கிற காரணத்தினாலே அந்தச் சட்டக் கல்லூரியிலே பதற்றம் வரப் போகிறது; தகராறு வரப் போகிறது, பிரச்சினைகள் வரப் போகின்றன என்பதை முன்கூட்டியே அறிந்த காரணத்தினாலே அங்கே காவல் துறை வந்ததாகப் பத்திரிகைச் செய்தி வருகிறது. அப்படியானால், அதைத் தடுப்பதற்குரிய முயற்சி ஏன் காவல் துறையால் எடுக்கப்படவில்லை? அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை அந்தக் கல்லூரியினுடைய முதல்வர் ஏன் எடுக்கவில்லை? இதுதான் இப்பொழுது இருக்கக்கூடிய அழுத்தமான கேள்வி. சரி, அதை முன்ஜாக்கிரதையாகத் தடுப்பதற்காக, அங்கே காவல் துறை கும்பலாக நின்றதே, நின்ற காவல் துறை ஏன் கைகட்டிக் கொண்டிருந்தது? இந்த வலுவான சந்தேகம் பொது மக்களுக்கு வந்திருக்கிறது. நின்றதோடு

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 நவம்பர் 13

மட்டுமல்லாமல், அங்கே இருந்த காவல் துறை அதிகாரிகளைக் கேட்கிறபொழுது அவர்கள் சொன்ன காரணம் இருக்கிறதே, அது மிகவும் விநோதமான காரணம்; "எங்களுக்குப் புகார் வரவில்லை நாங்கள் உடனடியாகத் தலையிட முடியவில்லை" என்று. அப்படியானால், புகாரை யாரிடத்திலிருந்து அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்? நாங்கள் இத்தனை மணிக்கு, இத்தனாம் தேதி, இவ்வாறெல்லாம் தாக்கப்போகிறோம் என்று தாக்குகிறவர்கள் புகார் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்களா? அல்லது, தாக்கப்பட்டு, உயிருக்குப் போராடி மயங்கிய நிலையிலே இருக்கக்கூடிய மாணவன் துடித்தெழுந்து வந்து அவன் புகார் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்களா? இது வேடிக்கையாகவும், விநோதமாகவும் இருக்கிறது. நம்முடைய காவல் துறையினுடைய நடவடிக்கை என்பது மிக மோசமான நடவடிக்கை. நம்முடைய முதல்வர் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் சொன்னார்கள், காவல் துறையினுடைய ஈரல் கெட்டுப்போய் விட்டது என்று. நான் சொல்கிறேன், ஈரல் கெட்டது மட்டுமல்ல; அவர்களுடைய இதயமே கெட்டுப்போய் விட்டது என்றுதான் நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மனிதாபிமானமற்ற முறையிலே அவர்கள் எப்படிக் கைகட்டிக் கொண்டிருந்தார்கள்? இதைப்பற்றி நம்முடைய முதல்வர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது மோசமான முன்னுதாரணம்; மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். தேவையில்லாத சாதிய உணர்வுகளைத் தூண்டுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இதன்மூலமாகத் தமிழகத்தில் வேறுவிதமான பாதிப்புகளை ஏற்படுத்த முயற்சிக்கிறார்களோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. பல அரசியல் கொலைகள் நடைபெறுகின்றன. எங்களுடைய மாவட்டத்திலே எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து முதல்வர் அவர்களிடத்திலே நேரடியாகவே சந்தித்து இதன்மீது தீர்வு காண வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். அங்கேயும் அப்படிப்பட்ட நிலைகள் தொடர்கின்றன. கொலை செய்யப்பட்ட நிலையிலே, அதனால் பாதிக்கப்பட்ட நிலையிலே இருக்கிறவர்கள்கூட அவர்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் இன்றைக்கு திருச்சி மத்திய சிறையிலே எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த 20 பேர் இருக்கிறார்கள். 12 ஆம் வகுப்பு படிக்கிற மாணவன் சிறைச்சாலையில் இருக்கிறான். வெளியூரிலிருந்து துக்கத்திற்கு வந்தவர்கள் உள்ளே இருக்கிறார்கள். இதெல்லாம் காவல்

2008 நவம்பர் 13] [திரு. வை. சிவபுண்ணியம்]

துறையினுடைய நடவடிக்கை. ஆனால் அவர்கள் முன்னிலையிலேயே சம்பவம் நடைபெறுகிறபோது கைகட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்திருக்கிறார்கள் என்று சொன்னால், இது காவல் துறையினுடைய மோசமான செயல்பாடு. இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும், அந்தக் கல்லூரி முதல்வர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்; இந்தக் கொலைவெறித் தாக்குதலை நடத்திய மாணவர்கள்மீது உரிய நடவடிக்கை என்பது, தீர்வு காண்பதற்கான வகையில் இருக்க வேண்டும். அந்த முயற்சிகளைத் தொடர்வதன்மூலமாகத்தான், காவல் துறையின்மீது நம்பிக்கை வரும். அதை நம்முடைய முதல்வர் அவர்களும், நம்முடைய தமிழக அரசும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் இரு பிரிவு மாணவர்களுக்குள்ளே ஏற்பட்ட மோதல், தகராறு ஆகியவற்றினால் 4 மாணவர்கள் உயிருக்குப் போராடுகின்ற, கவலைக்கிடமான சூழ்நிலையில் அரசுப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். இரு பிரிவு மாணவர்களும் உருட்டுக் கட்டை, மண்வெட்டி, கம்பிகள் போன்ற கொடூரமான ஆயுதங்களால், பயங்கரமான ஆயுதங்களால தாக்கப்பட்டு, இந்த விபரீத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதில் திகைப்பு என்னவென்று சொன்னால், அந்தக் கல்லூரியின் பிரதான நுழைவாயிலில் ஒரு மாணவன் மயக்கமுற்ற நிலையில், உணர்வற்ற நிலையில் கீழே அடித்து சாய்க்கப்படுகின்றான். அவ்வாறு சாய்ந்த மாணவன்மீது தொடர்ந்து ஒவ்வொருவராக வந்து உருட்டுக் கட்டையாலும், கம்பியாலும் அடித்துக் கொண்டிருப்பதை 10, 15 அடி தூரத்தில் இருக்கின்ற காவல் துறை அதிகாரிகள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது வேதனைக்குரியது; கண்டனத்திற்குரியது. பலாத்காரத்தில், பாலியல் பலாத்காரத்தில் சிக்கிய ஒரு பெண், "என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்!" என்று அலறுகின்றபோது, பக்கத்தில் இருக்கின்ற காவல் துறை அதிகாரி, "எனக்கு அனுமதி கிடையாது. நான் காப்பாற்ற முடியாது" என்று

சொல்வதற்கும், இதற்கும் வித்தியாசம் ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

முற்பகல் 11-30

நேற்றையதினம், தொலைக்காட்சியில் பார்க்கின்றபோது, தமிழகமே அழுதது. நெஞ்சைப் பிளக்கின்ற அந்த வேதனையான சம்பவம், கொடூரமான சம்பவம் இனிமேலும் நடக்காத வகையில் இந்த அரசு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதுவும் பலர் அடையாளம் தெரியாத வகையில், முகத்தில் கறுப்புத் துணி கட்டிக்கொண்டு வந்து, அத்துமீறி உள்ளே நுழைந்து, அடித்து நொறுக்கிய காட்சி வேதனைக்குரியது. காவல் துறை முன்னமே துரிதமாக நடவடிக்கை எடுத்துத் தலையிட்டிருந்தால், ஆரம்பத்திலேயே இந்த மோதலைத் தவிர்த்திருக்கலாம். உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற 4 மாணவர்களைக் காப்பாற்றி இருக்கலாம்; கடுமையான மோதலையும் தவிர்த்திருக்கலாம். மேலும், இந்த விபரீத சம்பவங்களின் எதிரொலி குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இந்தச் சம்பவம் எதிரொலியாக வெடிக்கும்; பல கல்லூரிகளில் இது தொடரலாம்; பல விடுதிகளில் தொடரலாம்; நீங்கள் எச்சரிக்கை உணர்வோடு, விழிப்புணர்வோடு இருந்து, அதைக் கட்டுப்படுத்துவதற்கு ஆரம்பத்திலேயே, முளையிலேயே கிள்ளி எறிவதற்குண்டான முயற்சியினை மேற்கொள்ளவேண்டும். இக்கொடிய சம்பவங்கள் நடக்கும்போது உடனடியாக மோதலைக் கட்டுப்படுத்தாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த காவல் துறை உயர் அதிகாரிகள்மீது, ஏனையோர்மீது நடவடிக்கை எடுப்பதோடு, அந்தக் கல்லூரியின் முதல்வர்மீதும் நடவடிக்கை எடுப்பதோடு, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கு உயரிய மருத்துவ சிகிச்சை வழங்கவேண்டுமென்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கர் சட்டக் கல்லூரியிலே நேற்றையதினம் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள்பற்றி விரிவாக ஏற்கெனவே உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கல்லூரிக்கு

2008 நவம்பர் 13] [திரு. து. ரவிக்குமார்]

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரைச் சூட்டுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எத்தனை முயற்சிகளை எடுத்துக்கொண்டார், அதன்மூலம் ஒரு சமூக நீதியை எப்படி இந்த நாட்டிற்கு உணர்த்தினார் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அத்தகைய ஒரு கல்லூரியிலே இப்படி ஒரு சம்பவம் நடந்திருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. இன்றைக்கு, இரண்டு தரப்பு மாணவர்கள் மோதிக் கொண்டதாகத் தகவல்கள் சொன்னாலும், நான்கு பேர் படுகாயப்பட்டு இருப்பதிலே மூன்று வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் இருக்கின்றார்கள். காயம்பட்டிருக்கிற இரண்டு மாணவர்கள் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களாகவும், மற்ற இரண்டு மாணவர்கள் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஆக, இத்தகைய பிரச்சினை அங்கே உருவாகி வருகிறது என்பது நம்முடைய காவல் துறையினால், அதிலும் குறிப்பாக உளவுத் துறையினால் ஏற்கெனவே எடுத்துச் சொல்லப்பட்டு, உரிய அதிகாரிகளுக்கு அதுபற்றிய எச்சரிக்கை தரப்பட்டிருக்கிறது என்கிற தகவல்கள் வருகின்றன. இந்த நிலையிலே அதைத் தடுப்பதற்குப் போதுமான காவலர்கள் அங்கே இருந்தும்கூட, அவர்கள் கண் எதிரிலேயே இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது என்பது எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. இந்தச் சம்பவத்திற்குச் சாட்சியாக நின்ற அந்தக் காவலர்கள், அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் சிலர், இன்றைக்குத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, சிலர் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. ஆனாலுங்கூட, அங்கே பணியிலே நிறுத்தப்பட்டிருந்த காவலர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அங்கே மௌன சாட்சிகளாக நின்று கொண்டிருந்த அந்தக் காவலர்கள்மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முற்பகல் 11-35

அதுமட்டுமல்லாமல், இங்கே ஏற்கெனவே உறுப்பினர்கள் இந்தச் சம்பவத்தைப்பற்றி வலியுறுத்தியதைப்போல, இப்படி ஒரு வன்முறை நிகழ்ச்சி நடக்கப் போகின்றது என்பது அந்தக் கல்லூரி முதல்வர் அவர்களுக்கு ஏற்கெனவே தெரிய வந்திருந்தும்கூட, அதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுக்காமல் மெத்தனமாக இருந்த காரணத்தாலே அந்தச் சட்டக் கல்லூரி முதல்வர்மீதும் நடவடிக்கை எடுப்பதுதான் நியாயமாக இருக்கும். ஆக, இந்தக் கோரிக்கைகளை அரசு பரிவோடு பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS

[திரு. து. ரவிக்குமார்] [2008 நவம்பர் 13

அதுமட்டுமல்லாமல், இப்போது சட்டக் கல்வி என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கே படித்து வருகின்ற மாணவர்கள்தான் பின்னாலே சாதாரண நீதிமன்றங்கள் முதல் உயர் நீதிமன்றம் வரை நீதிபதிகளாக வரக்கூடியவர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் உருவாகி வருகின்ற அந்த மாணவர்கள், நீதிமன்றங்களுக்குச் சென்று நீதி வழங்கும் அதிகாரங்களைப் பெற்றால், இந்த நாட்டிலே நீதியின் நிலைமை என்னவாகும் என்கின்ற கவலைதான் நமக்கு எல்லாம் ஏற்படுகின்றது. இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே தேசிய சட்டப் பள்ளிகள் இருக்கின்றன. National Law Schools என்று அழைக்கப்படுகின்ற அத்தகைய பள்ளிகளிலே பயில்கின்ற மாணவர்கள் இன்றைக்கு உச்ச நீதிமன்றம் போன்ற உயரிய நீதிமன்றங்களுக்குச் சென்று வாதாடுகின்ற திறன் பெற்றவர்களாக இருக்கின்றார்கள். அருகிலே இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே அமைந்திருக்கின்ற National Law School-ஐப்போல, தமிழ்நாட்டிலேயும் அத்தகைய உயரிய திறன்வாய்ந்த சட்ட மாணவர்களை உருவாக்குகின்ற ஒரு தேசிய மாணவர் பள்ளியை உருவாக்குவதற்கு நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்தச் சம்பவத்தை முன்னிறுத்தி ஏதோ இதிலே ஈடுபட்ட மாணவர்களைத் தண்டிப்பது, இதற்குப் பொறுப்பாக இருந்த காவல் அதிகாரிகளை இடமாற்றம் செய்வது என்பதோடு இந்தப் பிரச்சினையை முடித்துவிடாமல், சட்டக் கல்லூரி என்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு கல்லூரி வளாகங்களில் இருக்கின்ற இதுபோன்ற நிகழ்வுகளை முறைப்படுத்துவதற்கு, கல்லூரி வளாகங்களை முறைப்படுத்துவதற்கு ஒரு பொதுவான நடைமுறைகளை உருவாக்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். இதற்காகக் கல்வியாளர்கள், ஓய்வு பெற்ற காவல் அதிகாரிகள், நீதிபதிகள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின்மூலம் பரிந்துரைகளைப் பெற்று நம்முடைய campus-களை, கல்லூரி வளாகங்களை முறைப்படுத்துவதற்கு ஒரு நிரந்தரமான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வரவேண்டும். எவ்வாறு தென் மாவட்டக் கலவரங்களின்போது ஒரு நீதி விசாரணை நடத்தப்பட்டு, அந்த நீதிபதியினுடைய பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, இன்றைக்குப் பெருமளவிலே அத்தகைய வன்முறைகள் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றனவோ, அதுபோலவே இந்தச் சம்பவத்தை முன்வைத்து, இதற்கான ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, இத்தகைய கல்லூரி வளாகங்களை முறைப்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும்.

இந்தச் சம்பவத்திலே ஈடுபட்ட, குற்றச் செயலில் ஈடுபட்ட மாணவர்கள் தொடர்ந்து கல்வியைத் தொடர்வதற்கு ஒருபோதும் அரசு அனுமதிக்கக் கூடாது. இவர்கள் நாளைக்கு வழக்கறிஞர்களாக வந்தாலும் சரி அல்லது நீதிபதிகளாக வந்தாலும் சரி, இந்த நாட்டுக்கு அது கேடாகத்தான் முடியும் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகின்ற காரணத்தால், இதில் எந்தவிதமான தயவுதாட்சண்யமும் பார்க்காமல், இத்தகைய குற்றச் செயலில் ஈடுபட்ட மாணவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்று பார்க்காமல், அவர்கள் தொடர்ந்து கல்வியைத் தொடர்வதற்கு அனுமதிக்காமல் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இதிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்காமல் எப்படி பயங்கரவாதத்திற்கு சாதி இல்லை, மதம் இல்லை என்று நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்றோமோ, அதுபோல வன்முறை என்பதற்கும் சாதி, மதம் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்குக் கடுமையான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கல்லூரி வளாகங்களுக்குள்ளே பண்பாட்டு நிகழ்ச்சி என்ற பெயரிலே சாதியத் தலைவர்களின் புகழ் பாடுவது அல்லது நினைவு நாள் கொண்டாடுவது போன்ற நிகழ்ச்சிகளை அனுமதிக்கின்ற காரணத்தால்தான் இத்தகைய அசம்பாவிதங்கள் நடப்பதற்கு வழிவகை ஏற்படுகின்றது. ஆகவே இத்தகைய சம்பவங்கள் முளையிலேயே கிள்ளி எறியப்படவேண்டும் என்று சொன்னால், சாதியத் தலைவர்களுக்கு கல்லூரி வளாகங்களிலே பிறந்த நாள் அல்லது நினைவு நாள் கொண்டாடப்படுவதற்கு அனுமதி மறுக்கப்படவேண்டுமென்பதை நான் வேண்டுகோளாக முன்வைக்கின்றேன். இந்த அளவிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் அண்ணல் அம்பேத்கர் பெயரில் அமைந்துள்ள, அரசு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சி குறித்து, இங்கே விவாதத்திலே ஈடுபட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார், மாண்புமிகு உறுப்பினர்

திரு. ஞானசேகரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். விரும்பத்தகாத ஒரு நிகழ்வு என்பதை நாம் அனைவரும் ஒத்துக்கொள்கிறோம். அந்த விரும்பத்தகாத நிகழ்ச்சி எப்படி நடைபெற்றது என்பது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இனிமேல், இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டுமென்ற ஆலோசனையையும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்று முடிந்த பிறகு, அந்தச் செய்தி முதல்வர் அவர்களுக்கு வந்தபோது, முதல் வேலையாக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரை அனுப்பி, உடனடியாக அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்; மருத்துவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்து போகச் சொல்லுங்கள்; இரவெல்லாம் அங்கே இருக்கச் சொல்லுங்கள் என்று உத்தரவிட்டார்கள். என்னோடும் மற்ற அமைச்சர் பெருமக்களோடும், அதிகாரிகளோடும், இதுகுறித்து இரவு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். காலையிலே அவரே வந்து இங்கே பதில் சொல்வதற்குத்தான் இருந்தார்கள். ஆனால், நீண்ட நேரம் விழித்திருந்ததால் அவருக்குச் சற்று உடல்நலம் குறைவாக இருந்தது. ஆகையினாலேதான், அவர் சார்பில் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு பதில் அளிக்கின்ற பொறுப்பை எனக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

இங்கு மாண்புமிகு உறுப்பினர், திரு. ஞானசேகரன் சொன்னதைப் போல், இந்த மன்றத்திற்கு அவர் வரக்கூடாது என்றோ அல்லது அவரால் பதில் அளிக்க முடியாது என்றோ அல்ல. ஆனால், அதற்கு முதலமைச்சர் அவர்கள் வரவில்லை, வருவார் என்று எதிர்பார்த்தேன் என்றும் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) 'எதிர்பார்த்தேன்' என்றுதானே சொன்னார். நான்கூட எதிர்பார்த்தேன். இது இவ்வளவு பெரிய பிரச்சினை, சென்னையில் நடந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள் இங்கே சென்னையிலே இருக்கிறார். அவர்தான் இதிலே பேசி இருப்பார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், திரு. ஞானசேகரன் அவர்கள் அதை எழுப்பியிருக்கிறார். (குறுக்கீடுகள்) நானும் 'எதிர்பார்த்தேன்' என்றுதான் சொன்னேன். இல்லை, இல்லை. திரு. ஞானசேகரன், 'முதலமைச்சர் வந்து இதற்கு பதில் சொல்வார் என்று எதிர்பார்த்தேன்' என்று சொன்னார்.

2008 நவம்பர் 13] [திரு. துரைமுருகன்]

நான்கூட, 'திரு. சுதர்சனம் இதில் பேசுவார் என்று எதிர்பார்த்தேன்' என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) இதில் என்ன தவறு இருக்கிறது? ஆகையினாலே, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். காலையிலே நானும் மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்முடி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்களும் மருத்துவமனைக்குச் சென்று அங்கு இருக்கக்கூடிய மாணவர்களை, அடிபட்டவர்களைப் பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டு, மருத்துவர்களை அழைத்து, அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கவேண்டுமென்று அவர்களிடத்தில் நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

நடைபெற்ற நிகழ்ச்சிக்கு யாரும் வக்காலத்து வாங்கமுடியாது. காரணம், வருங்கால இந்திய நாட்டினை உருவாக்குகின்ற பிரஜைகள் மாணவர்கள். இந்த நாட்டின் நன்மைக்கும், தீமைக்கும் பொறுப்பேற்கப் போகிறவர்கள். அதிலும், குறிப்பாக, சிறப்பாக, நீதிக்காக வாதாடப் போகிறவர்கள். நீதி கேட்டு வருகின்ற வழக்குகளைக் கேட்டு தீர்ப்புரைக்கப் போகின்றவர்கள். அந்தச் சட்டக் கல்லூரியிலேயே, அந்த மாணவர்களில் இரு பிரிவுகளுக்கு இடையே, இப்படிப்பட்ட விரும்பத்தகாத வன்முறைப் போக்குகொண்ட நிகழ்வு நடந்தது கண்டிக்கத்தக்கதுதான்; வருத்தம் தெரிவித்துக்கொள்கிறோம்.

முற்பகல் 11-45

நானும் அந்தச் சட்டக் கல்லூரி மாணவன்தான். இங்கே பேசியவர்கள் அனைவரில் பெரும்பகுதியினர் சட்டக் கல்லூரி மாணவர்கள். அது எங்கள் கல்லூரி. அதிலே அந்த நிகழ்ச்சி நடந்தது என்பதிலேகூட எங்களுக்கு ஒரு ஆதங்கம் உண்டு. ஆனால், அந்தச் சட்டக் கல்லூரியில் இது முதல் முறை அல்ல. பல முறை இப்படி நடந்திருக்கிறது. இங்கேகூட, நம்முடைய திரு. மகேந்திரன் அவர்கள் சொன்னார்கள். வழக்கமாக நாம் சட்டமன்றத்திலே, எதிர்க்கட்சியிலே என்ன பேசுவோம் என்று கேட்டால் போலீஸ் excess-ஆகப் போய்விட்டார்கள்; அத்துமீறிவிட்டார்கள் என்று பேசுவோம். ஆனால், இந்த முறை போலீஸ் மெத்தனமாக இருந்துவிட்டது என்று நாம் பேசுகிறோம். (குறுக்கீடுகள்) மெத்தனமாக இருந்துவிட்டது. நீங்கள் எப்படி வேண்டுமானாலும் போடுங்கள். எனக்குத் தெரிந்த வார்த்தையை நான் சொல்கிறேன். ஆனால், ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கிற, இரண்டு பிரிவுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சி இது. ஆனால், இந்த நிகழ்ச்சிபற்றி மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள்

பேசுகிறபோது சொன்னார், "முதலமைச்சர் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு ஒரு தார்மீகப் பொறுப்பேற்று இராஜிநாமா செய்திருக்க வேண்டும்" என்று அவர் சொன்னார். (குறுக்கீடு) ஆமாம். நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நான் ஒன்று கேட்கிறேன். (குறுக்கீடு) நான் விளக்கத்திற்காகவே கேட்கிறேன். இரண்டு மாணவர் பிரிவுகளுக்கிடையே ஏற்பட்ட ஒரு தகராறு; அதிலே போலீஸ் வாளா இருந்தது என்று குற்றச்சாட்டு. அதற்கே போலீஸ் 'துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற முதலமைச்சர் தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என்றால், சென்ற முறை ஒரு முன்னாள் முதலமைச்சரைக் கைது செய்தார்கள் என்பதற்காக வழியிலே காலிகள் கலாட்டா செய்து கொண்டிருக்கிறபோது, அந்த வழியாக கோயம்புத்தூரிலே இருக்கிற விவசாயக் கல்லூரியிலே படிக்கிற மாணவிகள் பஸ்ஸிலே போகிறபோது, போலீஸ்காரர் அங்கே அவர்களைத் தடுத்து நிறுத்தியபோது, (குறுக்கீடுகள்) ஆனால் நீங்கள் அவர்களை, உயிரோடு எரித்து மூன்று பேரைக் கொன்றீர்களே, அதற்குப் பொறுப்பேற்கிற தகுதி, தார்மீகத் தகுதி உங்களுக்கு உண்டா? நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) யார்? நாங்களா சொல்கிறோம்? நீதிமன்றத்திலேயே சொன்னார்கள். அந்தப் பெண்களை எரித்தது அ.தி.மு.க.-காரர்கள்தான் என்று நீதிமன்றத்திலே தீர்ப்புரைத்திருக்கிறார்கள். அன்றைக்கு உங்களுடைய தலைவி ஜெயலலிதா பொறுப்பேற்றிருந்தால், நாணயம் உள்ளவர்கள் என்று நான் சொல்வேன். ஆனால், ஒரு சிறு நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சிக்கு முதலமைச்சர் பொறுப்பேற்று விலக வேண்டும் என்றால் என்ன பொருள்! நான் கேட்கிறேன். ஜெயக்குமார் கேட்கிறார், இவர்களுக்கு நிதி உதவி தாருங்கள் என்று. அது இருக்கட்டும். நான் அவரைத் திருப்பிக் கேட்கிறேன். இதே சட்டக் கல்லூரியில், ஹெல்லீஸ் விடுதியின் உள்ளே போலீசை விட்டு அடித்தீர்களே. நூற்றுக்கணக்கான மாணவர்களைக் கொண்டுவந்து கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலே கிடத்தினீர்களே, மீன் கடையிலே போடுவதைப் போல் மாணவர்களைப் போட்டார்களே. நான் கேட்கிறேன். அன்றைக்கு ஜெயக்குமார், அல்லது எந்த அமைச்சராவது அந்த அடிபட்ட மாணவர்களைச் சென்று ஆஸ்பத்திரியிலே பார்த்ததுண்டா? (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இங்கே உட்கார்ந்திருக்கிற தளபதி ஸ்டாலினும், நானும் அமைச்சர் பொன்முடியும் அல்லவா அன்றைக்குப்

போய்ப் பார்த்தோம். கேட்பதற்குமுன் இதைப்போல் பேசுவார்களே என்றாவது உங்களுக்குத் தெரிய வேண்டாமா? (குறுக்கீடுகள்)'

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் திரு. ஜெயக்குமார் பேசியதற்கு பதில் சொல்லியிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி. உட்காருங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார் பேசியதற்குப் பதில் சொன்னார்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இன்னொன்று கேட்கிறார். எதற்குச் சம்பளம் கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார். ஆனால் (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் நேற்று நடந்த சம்பவத்திற்கு வக்காலத்து வாங்கவில்லை. ஆனால், நீங்கள் சொன்ன குற்றச்சாட்டிற்கு பதில் வாங்கிக் கொள்ளுங்கள். தாங்க முடியாவிட்டால் தாங்கிக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் வெளியே போங்கள். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. (குறுக்கீடுகள்) என்ன அர்த்தம்? நீங்கள் சொல்லலாம். நான் திரும்ப பதில் சொல்லக்கூடாதா? (குறுக்கீடுகள்) பதில் சொல்லக்கூடாதா? எனவே அதேபோன்று, இந்த நிகழ்ச்சிகள் நடந்திருப்பதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். (குறுக்கீடுகள்) இங்கேகூட சொன்னார்கள். (குறுக்கீடுகள்) "ஏன் போலீஸ் action எடுக்கவில்லை? Principal என்ன செய்து கொண்டிருந்தார்? இதைப்போல ஒரு செய்தி வந்தபிறகும்கூட போலீஸ் ஏன் inactive-ஆக இருந்தது? உடனே, போலீஸ் எதிரிலேயே ஒரு cognizable offence நடக்கிறபொழுது அதை வேடிக்கை பார்க்கிறார்களே, அதைத் தடுப்பது ஒரு மனித உரிமையல்லவா?" என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். இந்த அவைக்கு அதற்காக நான் சிலவற்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இரண்டு பிரிவுகளுக்கிடையில் ஏற்பட்ட அந்தத் தகராறின் காரணமாக கைகலப்பு, அடிதடி இவை இரண்டிலும் இறங்கி ஒருவருக்கு ஒருவர் தாக்கிக் கொண்டார்கள். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, எல்லோரும் உட்காருங்கள்; அமைச்சர் பதில் சொல்கிறார்.

முற்பகல் 11-50

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அதனுடைய விளைவாக ஆறுமுகம் என்ற மாணவரும், பாரதி கண்ணன் என்ற மாணவரும், அய்யாதுரை என்ற மாணவரும், சித்திரைச்செல்வன் என்ற மாணவரும் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சை வழங்கப்படுகிறது. அதேபோன்று இந்தக் கலவரத்திலே ஈடுபட்டவர்கள்மீது . . . (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்கள் இருக்கையைவிட்டு முன்னே வந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயக்குமார், உங்கள் இருக்கைக்குப் போங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அப்போது சொல்லாமல் இருந்திருக்க வேண்டும். திருப்பித் தாக்குவானே துரைமுருகன் என்று தெரிந்திருக்க வேண்டும். கண்ணாடி வீட்டுக்காரன் கையிலே கல் எடுக்கக்கூடாது. திருப்பி விழும்; ஆமாம், திருப்பி விழும். நீங்கள் அன்று செய்தீர்கள், சொல்லிக் காட்டுகிறோம். (குறுக்கீடுகள்) சொல்லிக் காட்டுகிறோம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள், எச்சரிக்கிறேன்; போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. நான் அடுத்த கவன ஈர்ப்பு எடுக்க வேண்டும், நேரம் ஆகிறது. (குறுக்கீடுகள்) எல்லோரும் இருக்கைக்குச் சென்று உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நான் சொன்ன ஒரு பதிலுக்கே இப்படி ஆடிப் போய்விட்டீர்களே! நான் முழுமையாகச் சொன்னால் நீங்கள் என்ன ஆவீர்கள்? (கூச்சல்-குழப்பம்) இந்தச் சம்பவம் குறித்து காவல் துறை இப்போது உரிய நடவடிக்கை எடுத்து இருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். திரு. கலைராஜன் மற்றும் எல்லோரும் அவரவர்கள் இருக்கைகளுக்குப் போங்கள். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: கூச்சல் போடுவதற்கு முன்னாலேயே யோசித்திருக்க வேண்டும்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எச்சரிக்கை செய்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். நான் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகவேண்டும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நாம் எப்படி நடந்திருக்கிறோம்? உங்களுடைய அம்மா எப்படிப் போலீசை நடத்தி இருக்கிறார்கள். . . *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றும்படி காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். எல்லோரையும் வெளியேற்றுங்கள்.

(கோஷமிட்டுக் கொண்டிருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: என்னென்ன பேசுவார்கள் என்று தெரிந்திருக்க வேண்டும். உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஏதோ, வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசிவிட்டு மாட்டிக்கொண்ட பிறகு, இப்படி ஒரு கோஷத்தைக் கிளப்பிக்கொண்டிருந்தால் வெளியே போவதற்கு உங்களுக்கு வழிவகை பிறக்குமே தவிர, விவாதத்திற்கு நீங்கள் வருவதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், நீங்கள் எத்தனை பேரை அடித்து நொறுக்கி இருக்கிறீர்கள்! *(கூச்சல்-குழப்பம்)*

பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இராஜிநாமா செய்யச் சொன்னார். அவர் சொன்னார்; இராஜிநாமா செய்யச் சொன்னார். நான் அதற்குப் பதில் சொல்லவேண்டாமா? அதைத்தான் நான் திரும்பச் சொன்னேன், முன்னாள் முதலமைச்சராக இருந்த அந்த அம்மையாரைக் கைது செய்தார்கள் என்பதற்காக, ஊர் ஊராக காலிகள் கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள் என்று. அந்த வழியாக கோவை விவசாயக் கல்லூரி மாணவிகள் பஸ் போகிறது. அதில் மாணவிகள் போகிறார்கள். போலீஸார் நிறுத்துகிறார்கள், நிறுத்தி, "அங்கு கலாட்டா நடக்கிறது; போகாதீர்கள்", என்றார்கள். "நாங்கள் மாணவிகள், எங்களை என்ன செய்யப் போகிறார்கள்?" என்று அவர்கள் போனார்கள். பின்னாலேயே போலீஸ் பட்டாளம் வருகிறது. அந்த போலீசினுடைய கண் முன்னாலேயே அ.தி.மு.க.காரர்கள், கரை போட்ட வேட்டிக்காரர்கள், பொறுப்பில் இருக்கிறவர்கள் பஸ்ஸைக் கொளுத்தி, போலீஸார் தடுக்க வந்தும் அவர்களை விரட்டி அடித்து, 3 மாணவிகளைத் துடிக்கத் துடிக்க எரித்துக் கொன்றவர்கள் அ.தி.மு.க.காரர்கள் அல்லவா? இதில், உயர்

[திரு. துரைமுருகன்] [2008 நவம்பர் 13

நீதிமன்றத்தில் இவர்கள்தான் செய்தார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது அல்லவா? "நான் ஒரு பெண்; இன்று மூன்று பெண்களை என் கட்சிக்காரர்கள் எரித்திருக்கிறார்கள்; நான் தார்மீகப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்" என்று ஜெயலலிதா அன்றைக்குச் சொன்னதுண்டா? அப்படி இருந்தால், இன்றைக்கு ஜெயக்குமாருக்குப் பேசுவதற்கு யோக்கியதை இருக்கிறது என்று பொருள். ஆனால், இங்கே முதலமைச்சர் நடவடிக்கை எடுக்காமல் இல்லை. இரவு முழுவதும் அவர் தூங்கவில்லை. சட்டக் கல்லூரியிலே மாணவர்கள் அடிபட்டிருக்கிறார்கள், ஆறுமுகம் என்ற ஒரு மாணவர், பாரதி கண்ணன் என்பவர், அய்யாதுரை, சித்திரைச்செல்வன் ஆகியோர். கீழேபோட்டு அடித்தார்களே, செத்த பாம்பை அடிப்பதைப்போல்! பாரதி கண்ணன் அவர்களோடு நாங்கள் காலையிலே பேசிவிட்டு வந்தோம். உரிய மருத்துவ வசதி செய்துகொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

அதுமட்டுமல்ல; எந்தப் பிரிவு; யார் என்பது அல்ல. பாலமணிகண்டன் 4th Year B.L. கோவிந்தன், 4th Year B.L., இன்னொரு கோவிந்தன் 4th Year B.L., ஜெயக்குமார் - இவரல்ல அவர் - ஜெயக்குமார் 1st Year (III Law), திலீப் ஜெயின் 2nd Year (III Law), பிரபாகரன் 2nd Year (III Law), கோகுல்ராஜ் 2nd Year (III Law), ஆக 7 மாணவர்கள்மீது வழக்குத் தொடுக்கப்பட்டு, கடுமையான செக்ஷன்கள் போடப்பட்டு—செக்ஷன்கள் நிறைய போட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை; 307 பிரிவு உட்பட போடப்பட்டு—அவர்கள் இன்றைக்குச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தாக்குதலைப் போலீஸார் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால், அதை யாரும் விரும்பமாட்டார்கள். நடக்கிற செய்கைகளைப் பார்த்துக்கொண்டு போலீஸார் அங்கே 10 பேர் நிற்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; "என்னய்யா! போட்டு அடிக்கிறான்; நீங்கள் எல்லாம் மனுஷனா? 10 பேர் நிற்கிறீர்களே?" என்று ஜனங்கள் கேட்பார்கள். காவல் துறையே நிற்கிறபொழுது, ஒரு ஆதங்கம் வரத்தான் செய்யும். ஆனால், எங்கே நடந்தது அந்த தவறு? அந்தத் தவறை நாம் கண்டுபிடிக்க வேண்டாமா? மாண்புமிகு உறுப்பினர் மகேந்திரன் போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள்: "அந்த பிரின்சிபால் என்ன செய்து கொண்டிருந்தார்? அவர்களுக்கு முன்கூட்டியே செய்தி வந்ததா? இதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று. எனவேதான், உடனடியாக அவர்களுக்கு உத்தரவிடக்கூடிய அந்த உயர் நீதிமன்ற காவல் நிலைய உதவி ஆணையாளர் நாராயணமூர்த்தி, எஸ்பிளனேடு

2008 நவம்பர் 13] [திரு. துரைமுருகன்]

காவல் நிலையத்தினுடைய ஆய்வாளர் சேகர்பாபு என்ற இந்த இருவரும் உடனடியாகத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அந்த இடத்திலே இருந்த உதவி ஆய்வாளர்கள் கோழியராஜ், விஜயலட்சுமி, பெருமாள், துரைராஜ் ஆகிய 4 பேரும் far away from city மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; இவ்வளவு நடந்திருக்கிறது; பிரின்சிபால் என்ன செய்திருந்தார்? ஒன்று அவராவது வந்து வெளியே நின்றிருக்க வேண்டும் மாணவர்கள் மத்தியிலே; அல்லது முன்கூட்டியே தெரிந்திருந்தால், இவ்வாறு நடக்கும் என்று முதலிலேயே போலீசுக்குச் சொல்லியிருக்க வேண்டும். அவர் எங்கே தவறியிருக்கிறார்? அதற்காகவும் பிரின்சிபால் ஸ்ரீதேவ் அவர்களும், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

அதுமட்டுமல்ல; இந்த நிகழ்ச்சிகள் தொடராவண்ணம் இருக்கவேண்டும் என்று இங்கே திரு. இராமகிருஷ்ணன் குறிப்பிட்டார். மற்ற நண்பர்களும் குறிப்பிட்டார்கள். ஆகையால் கெல்லீஸ் ஹாஸ்டல் மூடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; எல்லாக் கல்லூரிகளுக்கும், சட்டக் கல்லூரிகளின் வகுப்பறைகளுக்கும் விடுமுறை விடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இப்போது exam நடந்து கொண்டிருக்கிறது, Semester Exam. ஆனால், இவ்வளவுப் பெரிய கலவரத்திற்கிடையே இன்றைக்கு Semester Exam எழுதப்போனால், ஒரு 100 பேர் திமுதிமு என்று மாணவர்களாக, ஹால் டிக்கெட் இல்லாதவர்கள்கூட உள்ளே நுழைந்து ஒரு கலவரத்தை உருவாக்குவதற்காகச் செல்வார்கள். எனவே, அந்த செமஸ்டர் தேர்வையும் தள்ளி வைத்திருக்கிறோம், ஒரு சுமுக நிலை உருவான பிறகு, Semester Exam-ஐப் பிறகு நடத்திக் கொள்ளலாம் என்று. ஆனால், இங்கே மன்ற உறுப்பினர்கள் கேட்டார்களே, மற்ற கேள்விகள். அந்த இடத்திலே போலீசினுடைய மெத்தனத்திற்கு என்ன காரணம்? பிரின்சிபால் எங்கே தவறியிருக்கிறார்? இதனுடைய மொத்த விளைவு என்ன? மாணவர்கள் மத்தியிலே என்ன புகைந்திருக்கிறது என்பதையெல்லாம் துருவித் துருவி ஆய்ந்து ஒரு அறிக்கை தர வேண்டுமென்பதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற * நீதியரசர் திரு. சண்முகம் அவர்கள் தலைமையில் ஒரு கமிஷன் போடப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சிக்காக நாங்கள் வருத்தப்படுகிறோம். இது இருக்கக்கூடாது. ஆனால், இனிமேல் நடக்காமல் இருப்பதற்கு இந்த அரசு மட்டுமல்ல; பெற்றோர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், இங்கே சொன்னார்களே பல

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அறிஞர்கள், இவர்களெல்லாம் சேர்ந்து செய்ய வேண்டும். ஜாதி ஒழிய வேண்டும். Groupism தொலையவேண்டும் என்று ஆயிரம் மேடைகளில் பேசுகிறோம். ஒரு காலத்தில் நானும் மாணவனாக இருந்தவன்தான். இங்கே இருக்கிறார் பீட்டர். பீட்டருக்கும் எங்களுக்கும்தான் தகராறு வரும் சட்டக் கல்லூரியில். ஆனால், அவரை சேர்மெனாக்க வேண்டாமென்பதற்காகப் படாதபாடுபட்டோம். அவர் தப்பித்துவிட்டார். அரசியல் ரீதியாக நாங்கள் அன்றைக்குப் போராடியிருக்கிறோமே தவிர, இங்கே இருக்கிற ஞானசேகரனானாலும், மற்றவர்களானாலும், அரசியல் ரீதியிலே எங்களுக்குள் மாறுபட்ட கருத்துகள் வந்ததேயொழிய, ஜாதி அடிப்படையிலோ, ஏரியாக்கள் அடிப்படையிலோ, மதத்தின் அடிப்படையிலோ வந்ததில்லை.

நண்பகல் *12-00*

ஆக, இது வரக்கூடாது என்று இந்த நாட்டிலே பெரியார், வள்ளலார், காமராஜர், அறிஞர் அண்ணா, கலைஞர், மற்றவர்கள் எல்லாம் பாடுபட்டு என்ன பிரயோஜனம்? மீண்டும் அது முளையில் இருந்து ஆரம்பித்து வருகிறதே! அதை எப்படித் தடுப்பது? இது ஒரு அரசாங்கத்தால் மட்டும் தடுத்துவிடக்கூடியது அல்ல. ஒரு கட்சியால் மட்டும் இது முடியும் என்பதல்ல. இதை ஒரு சமுதாய மாற்றத்தால் செய்தாக வேண்டும். அதற்கு கட்சி மனமாச்சர்யங்களை விட்டு ஒருவருக்கொருவர் இப்போது இவரைத் தூண்டிவிடலாமா, அப்போது அவர்மீது பழிபோடலாமா என்பதைவிட, இந்த நாட்டு நலனில் அக்கறைகொண்டு நாம் அத்தனை பேரும் இதற்குப் பாடுபட வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து, இத்துடன் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

(ஆ) தமிழ்நாட்டில் நிலவும் மின்வெட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகத்தில் நிலவும் மின்வெட்டு குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. சி. சண்முகவேலு, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு இரா. விசுவநாதன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. டி. சுதர்சனம், திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. சி. ஞானசேகரன், திரு. சு. சிவராஜ், திரு. போளூர் ம. வரதன், டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. போ. கோபாலன், திரு. என்.ஆர். ரங்கராஜன், திரு. மா. ராஜசேகரன், திருமதி டி. யசோதா,

2008 நவம்பர் 13] [பேரவைத் தலைவர்]

திரு. இரா. இராம்பிரபு, திரு. மா. தண்டபாணி, திரு. அருள் அன்பரசு, திரு. ஆர்.எம். பழனிசாமி, திரு. பா. வேல்துரை, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். ஜெயபால், திரு. பெ.சு. விஜயகுமார், திரு. ராம. சுப்புராம், திரு. விடியல் எஸ். சேகர், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக திரு. கே. மகேந்திரன், செல்வி கே. பாலபாரதி, திரு. ப. டில்லி பாபு, திரு. வே. மாரிமுத்து, திரு. ஜா. ஜாண் ஜோசப், திருமதி ஜி. லதா, திருமதி ரா. லீமா ரோஸ், திரு. சி. கோவிந்தசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. எஸ். இராசசேகரன், திருமதி பி. பத்மாவதி, திரு. கே. உலகநாதன், ம.தி.மு.க. சார்பாக திரு. மு. கண்ணப்பன், திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. ஆர். ஞானதாஸ், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ரா. வரதராஜன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. து. ரவிக்குமார் ஆகியோர் விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாகப் பேசவேண்டும். அக்கட்சியின் சார்பாக அவையில் அவர்கள் யாரும் இல்லை. ஆகவே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் அவர்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சண்முகம் என்று சொல்வதற்குப் பதிலாக உச்ச நீதிமன்ற நீதிபதி சண்முகம் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. சண்முகம் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிலவிக்கொண்டிருக்கிற மின்சார வெட்டுப் பிரச்சினைமீது பேச வாய்ப்பளித்த எங்கள் கட்சியின் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தடையில்லா மின்சாரத்தைப்பற்றிப் பேச வந்திருப்பதன் காரணமாக என் பேச்சிலும் எந்தத் தடையும் வராமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை உங்களிடம் விட்டு, என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

[டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்] [2008 நவம்பர் 13

கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு முன்பு, மார்டின் லூதர் கிங் அமெரிக்காவில் ஒரு கறுப்பர் இனத்தைச் சார்ந்தவர் ஜனாதிபதியாக வரவேண்டுமென்று கனவு கண்டாராம். அந்தக் கனவும் இப்போது நனவாகிவிட்டது. நம்முடைய முன்னாள் ஜனாதிபதி திரு. அப்துல் கலாமும் என்ன சொல்கிறார் என்றால், நம்முடைய இந்திய இளைஞர்கள் அத்தனை பேரும் நிறைய கனவு காணுங்கள் என்று சொல்கின்றார். ஆனால் தமிழகத்து இளைஞர்களால் கனவு காண முடியவில்லை. காரணம் தூக்கம் இல்லை. ஏனென்று சொன்னால் இங்கே மின்சாரம் இல்லை. 'சட்டம் ஒரு இருட்டறை' என்பது போய், தமிழகமும் இருட்டறையாக மாறிக் கொண்டிருக்கிற அவல நிலையை இப்போது நாம் கண்டுகொண்டிருக்கிறோம். ஒரு வேடிக்கைக்காகவோ அல்லது அரசியல் சதுரங்கத்திலே பகடைக் காயாக இந்தப் பிரச்சினையை நாம் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடோ நான் இதைச் சொல்லவில்லை.

பிற்பகல் 12-05

சென்னை போன்ற மாநகராட்சிகளிலே கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் மின்வெட்டு ஏற்படுகின்றது. கிராமப்புறங்களிலே 6-லிருந்து 8 மணி நேரம் மின்வெட்டு ஏற்படுகின்றது. ஒருவன் காலை விழிக்கும்போதே மின்சாரம் இல்லையென்று சொன்னால், அவனுடைய மன நிலை எப்படியிருக்கும் என்பதை நன்கு புரிந்துகொள்ளலாம். தாய்மார்கள் கல்லூரிக்குச் செல்கின்ற, பள்ளிகளுக்குச் செல்கின்ற குழந்தைகளுக்குச் சமைப்பதற்குக்கூட மிக்சி, கிரைண்டர் பயன்படுத்துகின்ற இன்றைய சூழ்நிலையிலே, அதற்கும் மின்சாரம் இல்லை; மோட்டாரைப் பயன்படுத்தி தண்ணீர் ஏற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கும் மின்சாரம் இல்லை. இது சாமானியனுடைய பிரச்சினை. ஆனால், கிராமத்திலே விவசாயிகளுடைய முக்கிய பிரச்சினை என்னவென்று சொன்னால், நீர்ப் பாசனத்திற்கு மோட்டார் தேவைப்படுகிறது. ஆனால், அதை இயக்குவதற்கு மின்சாரம் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணியிலே கடைமடைப் பகுதிகளிலே நெல் சாகுபடி செய்திருக்கிறார்கள். இந்த வருடம் மழை பொய்த்துவிட்டதன் காரணமாக அங்கே நீர் பற்றாக்குறை இருக்கின்றது. எனவே, மும்முனை மின்சாரம் 10 மணி நேரம் மட்டுமே வழங்குவதை, 14 மணி நேரம் வழங்க வேண்டுமென்றதொரு வேண்டுகோளையும் இந்த நேரத்திலே வைக்கிறேன்.

2008 நவம்பர் 13][டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்]

மின்சாரப் பிரச்சினை, நெசவாளர்களுக்கும் அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக மாற்றுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இந்தியாவின் கிட்டத்தட்ட 40 சதவிகித spinning mills தமிழகத்திலே இருக்கின்றன என்கிற ஒரு செய்தியும் வந்திருக்கின்றது. இதன் காரணமாக மூன்றிலிருந்து நான்கு இலட்சம் நெசவாளர்களுடைய குடும்பங்கள் இப்போது அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிறு மற்றும் குறு தொழிற்சாலைகளெல்லாம் மின்சாரம் இன்றி வாழ்வாதாரத்தை இழந்துவிட்ட ஒரு சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் என்ன காரணம்? ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய், விவசாயக் கடன் இரத்து, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியெல்லாம் தந்து இந்தியாவிலேயே மிகச் சிறந்ததொரு மாநிலமாகத் தமிழகத்தை வழி நடத்திக்கொண்டிருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்களுடைய சீரிய சிந்தனையினிடையிலே, இந்த ஒரு மின்சார வெட்டு என்கின்ற ஒரேயொரு பிரச்சினை, மக்கள் நம்மீது வைத்திருக்கின்ற நன்மதிப்பைக் குறைக்கின்ற அளவிற்கு இப்போது வந்துவிட்டது என்பதை நினைக்கும்போது மிகவும் பயமாக இருக்கின்றது.

தமிழகத்திலே என்ன நிலைமை? மின்சார உற்பத்தித் திறன் என்ன; எத்தனை மெகா வாட் என்று சொன்னால், 14,220 mega watt is the maximum capacity Tamil Nadu can generate. அதிலே தேவை என்னவென்று சொன்னால், 10,120 மெகா வாட்தான் தேவை. ஆனால், அதுகூட 31-3-2008 அன்று 9,557 மெகா வாட்டாகத்தான் இருந்தது. இந்த 6 மாத காலத்திலே கிட்டத்தட்ட 500-லிருந்து 600 மெகா வாட் அதிகமாகத் தேவைப்படுவதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், தமிழகத்திலே இப்போது தொழிற்சாலைகள் அதிகப்படியாக வழங்கப்பட்டுவிட்டன. அதன்மூலம் H.T. services அதிகரித்து, சென்னையிலே மட்டுமே கிட்டத்தட்ட 347 H.T. services இந்த ஒரு வருடத்திலே தந்திருக்கின்றார்கள். தொழிற்சாலைகள் வரவேண்டியதுதான்; வரவேற்கின்றோம். இங்கே தொழிற்சாலைகள் வருவதன் காரணமாகப் பொது மக்களுக்கும், விவசாயிகளுக்கும் கிடைக்கக்கூடிய மின்சாரம் பகிர்ந்தளிக்கப்படும்பொழுதுதான், நமக்குப் பிரச்சினையாகவும், வேதனையாகவும் இருக்கின்றது.

மேலும், 70 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டுவிட்டன. இன்னும் 40 இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவிருக்கின்றார்கள். இந்த வருடம் மட்டும் கிட்டத்தட்ட 650 மெகா வாட் திறன்கொண்ட குளிர்சாதனப்

[டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்] [2008 நவம்பர் 13

பெட்டிகள் கடைகளிலே விற்கப்படுகின்றன என்ற ஒரு செய்திக் குறிப்பும் நமக்குத் தெரிகின்றது. 125 மெகா வாட் பயன்படுத்தும் அளவுக்கு fridge-கள் இங்கே விற்கப்படுகின்றன என்றதொரு கணக்கும் நமக்குத் தெரிகின்றது. தேவையோ 10,120 மெகா வாட்தான்! ஆனால், உற்பத்தி என்ன தெரியுமா? வெறும் 7,165 மெகா வாட். இது நேற்று இரவு 9 மணிக்குக் கிடைத்த தகவல். இதில் நாம் என்ன கவனிக்க வேண்டுமென்று சொன்னால், நமக்கு முக்கியமாக, நிரந்தரமாக எப்போதுமே நாம் நம்பியிருக்கின்ற ஒரு மின்சார உற்பத்தி முறை எது என்று சொன்னால், அனல் மின் நிலையம், எண்ணூர், வட சென்னை, மேட்டூர், தூத்துக்குடி என்று இந்த 4 நிலையங்களிலிருந்தும் கிட்டத்தட்ட 2,970 மெகா வாட்தான் நமக்குக் கிடைக்கின்றது; அல்லது கிடைக்கலாம். ஆனால், இப்போது எவ்வளவு கிடைக்கிறது தெரியுமா? வெறும் 2,520 மெகா வாட்தான், இந்த 4 அனல் மின் நிலையங்களிலிருந்தும் கிடைக்கின்றது. 500 மெகா வாட், 600 மெகா வாட் நமக்குக் குறைவாகக் கிடைப்பதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால், அந்த அனல் மின் நிலையத்திற்கு முக்கியமான பொருள் என்னவென்று சொன்னால், நிலக்கரி. ஆனால், இந்த நிலக்கரியிலே தரம் குறைந்த நிலக்கரி இப்போது வருகின்றது என்ற ஒரு பயங்கரமான செய்தியும் நமக்கு வந்திருக்கின்றது, மக்களும் கேட்கிறார்கள். முக்கியமாக, பீகாரிலிருந்தும், ஒரிசாவிலிருந்தும் மற்றும் இறக்குமதி செய்யப்பட வேண்டுமென்ற நிலையில், இந்தோனேஷியாவிலிருந்தும் அது வருகின்றது என்ற ஒரு குறிப்பும் இருக்கின்றது. ஆனால் இந்த நிலக்கரி தரம் குறைந்திருப்பதன் காரணமாக, உற்பத்தியும் 500 மெகா வாட் குறைவாகவே கிடைக்கின்றது.

பிற்பகல் 12-10

அதேசமயம் இந்த grid-களும் பாழடைந்துவிட்டன என்ற அபாயகரமான செய்தியும் நமக்கு வந்துகொண்டிருக்கின்றது. ஏனென்றால், பெட்ரோல் நன்றாக இருந்தால்தான் engine-ம் நன்றாக இருக்கும், mileage-ம் நன்றாக இருக்கும். ஆனால், இப்போது நிலக்கரி சரியாக இல்லையென்பதால் உற்பத்தியும் குறைவாக இருக்கிறது. அதேசமயம், அங்கே இருக்கின்ற grid-களும் பழுதடைந்துவிட்டன என்ற செய்தி நம்மை அச்சுறுத்துகிறது. இதற்கும் மேலாக எண்ணூரில் இருக்கின்ற சில grid units failure ஆகி, கிட்டத்தட்ட நிறைய மாதங்களாக அப்படியே இருக்கின்றன. அதிலும் நம்முடைய அரசாங்கம் சற்று கவனம் செலுத்த வேண்டும். இதற்கெல்லாம் மேலாக வட சென்னை அனல் மின் நிலையத்தின் Total Capacity 2 x 500 மெகா வாட் = 1000 மெகா வாட் மின்சார உற்பத்தியையும், தூத்துக்குடியிலே

2008 நவம்பர் 13][டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்]

600 மெகா வாட் மின்சார உற்பத்தியையும் நாம் செய்யலாம். ஆனால், இந்த இரண்டும் முழுமையாகச் செயல்படவில்லை என்ற ஒரு குறிப்பும் நமக்கு வந்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இரண்டாவதாக, புனல் மின் நிலையம். புனல் மின்சாரம் 2,187 மெகா வாட் Maximum Capacity. காற்றாலை மூலமும் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இதிலே விந்தை என்னவென்று சொன்னால், காற்றாலைகளுக்கு இப்போது அரசாங்கம் நிறைய மானியம் தருகிறது. கிட்டத்தட்ட 3,373 மெகா வாட் திறன் கொண்ட காற்றாலைகளைத் தனியார்மயமாக ஆக்கியிருக்கிறார்கள். தனியார்கள் காற்றாலையிலே அதிகப்படியாக முதலீடு போடுகிறார்கள். ஆனால், அரசாங்கம்மூலம் 17 மெகா வாட் மட்டும்தான் Maximum Capacity production இருக்கிறது. இந்தக் காற்றாலை மற்றும் நீர்மின் மூலமும் கிடைக்கின்ற மின்சாரம் கிட்டத்தட்ட 6,000 மெகா வாட். இதை நாம் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால், இதில் விந்தை என்னவென்று சொன்னால், இந்த இரண்டும், நீரும் சரி, காற்றும் சரி, நிரந்தரமாக நமக்கு மின்சாரத்தைத் தந்துவிட முடியாது. ஏனென்று சொன்னால், இப்போது Global Warming என்று சொல்கிறோமே, உலகம் வெப்பம் அடைவதன் காரணமாக காற்றின் வேகம், கூடலாம்; அல்லது குறையலாம். மழை பொய்த்துவிட்டால் மின்சாரமும் பொய்த்துப் போய்விடும். எனவே, நாம் இயற்கையின் மேல் குற்றம் சொல்லாமல்—அப்பொழுதெல்லாம் கல்லணையை ஏன் சோழன் கட்டவேண்டும்? பச்சைத் தமிழன் காமராஜர் ஏன் அணைகளைக் கட்ட வேண்டும்? இதையெல்லாம் நீங்கள் கருத்தில்கொண்டு—நமக்கு 365 நாட்களும் வெயில் இருக்கின்றது; அதாவது Solar Energy; அதனை நாம் பயன்படுத்தலாம். Solar Energy மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு initial investment, principal அதிகமாகத் தேவைப்படும் என்று சொல்வார்கள். உதாரணமாக, தார்ச் சாலையைவிட சிமெண்ட் சாலை கூடுதலாக உழைக்கலாம். அதற்குச் செலவு அதிகம்தான் ஆகும். தேவை என்று வந்தபோது செலவைப் பார்க்காமல் நாம் இன்னும் 5 வருடங்களில், 50 வருடங்களுக்கு நம்முடைய நாட்டை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு நல்ல பாதையில் இந்த அரசாங்கம் செயல்பட்டிருக்க வேண்டும். Central Government's National Grid Corporation மூலம் கிட்டதட்ட 3,000 மெகாவாட் நமக்குக் கிடைக்க வேண்டும். உண்மைதான். ஆனால், இப்போது 1,600 மெகா வாட்தான் நமக்குக்

[டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்] [2008 நவம்பர் 13

கிடைக்கிறது.ஏனென்றால், யுரேனியம் raw material நமக்குக் குறைவாகத்தான் கிடைக்கின்றது. அதனால்தான் அன்னை சோனியா காந்தி அவர்களும், டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் 123 Agreement கொண்டுவந்து 10 வருடங்களுக்குள் இந்தியா இருளில் இருந்து அகல வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்திலேதான் இந்த 123 Agreement-ஐப் போட்டிருக்கிறார்கள். வெளி மாநிலத்திலிருந்து மின்சாரம் வாங்கும்போது Power Trading Corporation தான் நடுவிலே குளிர் காய்கிறது. அந்நிறுவனத்தார் கிட்டத்தட்ட 12 ரூபாய் முதல் 13 ரூபாய் வரை ஒரு யூனிட்டிற்கு என்ற விலையில் விற்கிறார்கள். நாம் அதைத்தான் வாங்கியிருக்கின்றோம். இங்கே எந்தவித ஒரு நல்ல எண்ணத்தோடும் அவர்கள் செயல்படவில்லை. Sugar Mill-களிலிருந்து 337 மெகா வாட் கிடைக்கின்றது. இதிலே தமிழகத்திற்கு கிட்டத்தட்ட 2,500-லிருந்து 3,000 மெகா வாட் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. இதிலிருந்து எப்படி நாம் மீள்வோம் என்று பார்த்தால், ஒன்று அதிகப்படியான மின்சாரத்தினை உற்பத்தி செய்ய வேண்டும்; இரண்டாவது, மின்வெட்டு மூலம் நாம் சமாளிக்கலாம். மூன்றாவது சேமிக்கலாம். இப்போது மின்வெட்டு எப்படி இருக்கின்றது? 40 சதவிகிதம் High-tension-இணைப்பில் நாம் மின்வெட்டினை அறிவித்திருக்கிறோம். Low-tension-இணைப்பில் நாம் கிட்டதட்ட 20 சதவிகிதம் அறிவித்திருக்கிறோம். இதற்கெல்லாம் மேலே போனால் load shedding பண்ணுவார்கள்.

மின்சார உற்பத்தியை எப்படிச் செய்யலாம்? ஏற்கெனவே சொன்னதுபோல, வட சென்னை மற்றும் அனல் மின் நிலையங்களிலிருந்து 1,600 மெகா வாட்டை நாம் ஏப்ரல் மாதத்திற்குள் பெற்றாகவேண்டும். ஏனென்று சொன்னால், அது மாணவர்களுடைய பரீட்சை நேரம். கோடைக் காலமும் தொடங்கிவிடும். அதற்குள் நாம் இந்த இரண்டு அனல் மின் நிலையங்களை வேகப்படுத்திச் செயல்படுத்த வேண்டும். இரண்டாவதாக, கூடங்குளம் அணு மின் நிலையம் இருக்கின்றது. அது டிசம்பர் 2008-க்குள் கிட்டத்தட்ட 400 மெகா வாட் மின்சாரத்தினைத் தரும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஏப்ரல் 2009 முதல் 525 மெகா வாட் என மொத்தம் கிட்டதட்ட 925 மெகா வாட் நம்முடைய தமிழ்நாட்டின் பங்காகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதையும் துரிதப்படுத்தவேண்டும். N.L.C.-யினுடைய இரண்டாவது பாகம். 325 மெகா வாட் தூக்கூடியது. அதையும் நாம் பெறவேண்டும்.

இதற்கெல்லாம் மேலே, சென்னை பேசின் பிரிட்ஜ் அருகே நாபதா மூலம் தயாரிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவு 120 மெகா வாட். ஆனால், வருடத்திற்கு வெறும் 20 நாட்கள்தான் அந்த அமைப்பு வேலை செய்கின்றது என்ற ஒரு குற்றச்சாட்டையும், நம் மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அதற்கும் இந்த அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும். SIMA என்ற ஒரு அமைப்பு இருக்கின்றது. South India Mills Association என்று கோயம்புத்தூரில் இருக்கிறது. இவர்கள் கிட்டத்தட்ட 3,000 மெகா வாட் மின்சாரம் டீசல்மூலம் ஜெனரேட்டரை இயக்கி, நமக்குத் தருகிறேன் என்று வருகிறார்கள். இவர்களுக்கு மானியத்தை கொடுத்து. அவர்களும் 12 ரூபாய்க்கு விற்க முன்வருகிறார்கள். அவர்கள்மூலம் நாம் பெற்றுவிட்டோம் என்று சொன்னால், நாம் ஓரளவிற்கு இந்த மின்சார வெட்டைக் கட்டுப்படுத்த முடியும்.

C.F.L. என்கிற பல்பை உபயோகப்படுத்தினால் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் மின்சாரம் நமக்கு savings இருக்கிறது. Theft of energy, line loss, இதன்மூலம் கிட்டத்தட்ட 17 சதவிகிதம் வீணாகிறது. ஏனென்றால் கம்பிகள் பழுதாகிப்போய் maintenance இல்லாமல் இருக்கின்றன. அதிலே நாம் கவனம் செலுத்துவோம் என்று சொன்னால், 17 சதவிகிதம் நம்மால் மின்சாரத்தைச் சேமிக்கலாம். ஒவ்வொரு யூனிட்டையும் ஒரு மனிதன் சேமிக்கிறான் என்று சொன்னால், ஒவ்வொரு யூனிட் மின்சாரத்தையும், அந்த மனிதன் உற்பத்திச் செய்கிறான் என்பதற்குச் சமம் என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, இறுதியாக ஒரு விஷயத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக தமிழகத்திலே மின்சார வாரியம் பொறுப்பேற்று, தானாகவே மின்சாரத்தைத் தயாரிக்க இதுவரை முன்வரவில்லை. கிட்டத்தட்ட 10-லிருந்து 12 தனியார் மின்சார நிலையங்கள் வந்திருக்கின்றன. அவர்களுக்கு இலவசமாக இடத்தையும் கொடுத்து, கிட்டத்தட்ட ரூ. 10,000 கோடி—இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், இதுதான் உண்மையான நிலைமை. R.K. Enterprises, G.M.R., G.R. Entrepreneurs என்ற தனியார் நிறுவனங்கள், 5 தனியார் உற்பத்தி நிலையங்கள் கடந்த 10 ஆண்டுகளில் ரூ.10,000 கோடியை முதலீட்டுக் கட்டணமாகக் கொண்டுபோய்விட்டன. இதிலே ரூ.4,000 கோடிக்கு மேல் மின்சார வாரியம் அதிகமாகச் செலுத்த வேண்டியுள்ளது. மேலும்,

[டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்] [2008 நவம்பர் 13

காற்றாலைகளுக்கு ஆணையம் சலுகைகளை இரு கைகளாலும் அள்ளி அள்ளி வழங்கிவிட்டது. இந்த G.M.R. நிறுவனம் இருக்கின்றதே, இந்த நிறுவனம் பேசின் பாலத்திலே கிட்டத்தட்ட 29 ஏக்கர் பரப்பளவிலே, மின்சார உற்பத்தி செய்கின்ற ஒரு நிறுவனமாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 10 ஆண்டுகளைக் கடந்துவிட்ட இந்த G.M.R. நிறுவனம், 850 கோடி ரூபாய் மூலதனம் உள்ள இந்த நிறுவனம், மூலதனக் கட்டணமாகவே 2 ஆயிரத்து 40 கோடியைப் பெற்றுவிட்டது. எல்லாருமே இப்போது லண்டன் வரைக்கும் கேஸ் போட்டிருக்கிறார்கள் நம்முடைய வாரியத்தின்மேல். இதே நிலை நீடித்தால் நம்முடைய மின்சார வாரியம் சிக் யூனிட்டாகக்கூட மாறலாம். ஆனால், நம்முடைய மின்சார வாரியத்தின் திறமை என்னவென்று சொன்னால், கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ஊழியர்கள் இருக்கிறார்கள். 80,000 களப் பணியாளர்கள் இருக்கிறார்கள். 20,000 பொறியாளர்கள் இருக்கிறார்கள். நம்முடைய மேட்டூர் பொறியாளர்களுக்குத் தங்கப் பதக்கமே வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட திறமைவாய்ந்த பொறியாளர்களும், களப் பணியாளர்களும் இருந்தும்கூட, நாம் ஏன் இந்த மின்சாரத்தை 1 ரூபாய் 90 பைசாவிலே உற்பத்தி செய்யக்கூடாது? 15 ஆண்டுகளாக மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய இந்தப் பொறுப்பை நம்முடைய தமிழக அரசு ஏற்று நடத்தாமல் போய்விட்ட விந்தைதான் என்ன? இதுதான் முக்கியமான பிரச்சினையாக இருக்குமோ என்றுகூட மக்கள் இப்போது அஞ்சுகிறார்கள். எனவே, இங்கே யாரும் அரசியலும் பேசவில்லை. தனிப்பட்ட முறையிலே எந்தப் பிரச்சினையும் இல்லை.

கடந்த மாதம் இளைஞரணி மாநாட்டிலே நம்முடைய தலைவர் ஒருவர் சொன்னார், "எனக்கு ஒரு திட்டம் இருக்கிறது; என்னை நீங்கள் ஆட்சியில் அமர்த்தினால் இந்தத் தமிழகத்தை இருளிலிருந்து நான் மீட்டுவிடுவேன்" என்று சொன்னார். மக்கள்மீது உண்மையிலேயே அன்பும், அக்கறையும் இருந்தால்—யார் வேண்டுமானாலும் பேர் எடுத்துக்கொண்டு போகட்டும். இது போர்க்கால அடிப்படை கொண்டது. போர்க்காலத்திலே உணவுப் பொருள்கூட ரேஷனிலேதான் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தால், மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். மக்களிடம் நாம் அணுகுவோம். அவர்களிடமே ஆலோசனையும் கேட்கலாம். அவர்களும் நமக்கு உரிய துணையாக இருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், "மலையைத் தூக்கி என்னுடைய தோள்மேல் வையுங்கள், நான் மலையைச் சுமக்கிறேன்" என்று சொல்வதுபோல் இருக்கிறது. எனவே, யாரும் பலனை எதிர்பார்க்காமல் அரசியல்

2008 நவம்பர் 13][டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்]

இலாபத்தை இதிலே புகுத்தாமல் உண்மையிலேயே நம்மையெல்லாம் மக்கள் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பியிருக்கிறார்கள். இந்தத் துயரத்திலிருந்து மக்களை மீட்க நாம் தீர்வைக் காண வேண்டும் என்று சொன்னால், பொறுப்புடன் அணுக வேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு, இறுதியாக கருவறை முதல் கல்லறை வரை சில்லறை தேவைப்படுகிறது. இப்போது கருவறை முதல் கல்லறை வரை மின்சாரமும் தேவைப்படுகிறது. கருவறையிலே, ஸ்கேனுக்கு மின்சாரம் தேவைப்படுகிறது. கல்லறையிலே சுடுகாட்டிற்கு மின்சாரம் போகவேண்டிய நிலையிருக்கிறது. எனவே, மின்சாரத்தின் அருமையையும், பெருமையையும் கருதி—"காலம் தாழ்ந்த ஞானம்" என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால், "Better late than never" என்பதைப்போல—இன்றிலிருந்து ஒரு வருடத்திலே தமிழக அரசாங்கமே அனல் மின் நிலையத்தைத் துவங்கினால், கிட்டத்தட்ட 600 மெகா வாட் முதல் 1,000 மெகா வாட் நம்மாலேயே உற்பத்தி செய்ய முடியும். மேற்கொண்டு மற்ற அனல் மின் நிலையங்களை எல்லாம் முடுக்கிவிட்டால் நாம் நிச்சயமாக இந்தப் பிரச்சினையிலிருந்து மீண்டு விடலாம் என்று கூறிக்கொள்கிறேன். மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஜெனரேட்டர்களை சர்வீஸ் செய்தால், கூடுதல் மின்சாரம் தயாரிக்கலாம் என்பதனையும் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றியைக்கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, பா.ம.க. சார்பாக திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, கடந்த 15 ஆண்டுக் காலமாக, மாநில அரசு ஏன் மின் உற்பத்திக்குத் திட்டமிடவில்லை என்று காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். கடந்த 17 ஆண்டுக் காலமாக மாநில அரசுகள் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடாது; தனியார்தான் செய்யவேண்டும் என்ற அந்த உலகமயக் கொள்கையை ஏற்று, அதை ஒரு தனி மசோதாவாகக் கொண்டு வருவதற்குக் கடந்த காலத்தில் முயற்சி செய்தது காங்கிரஸ் அரசு. மாநில அரசுகள் மின்சார உற்பத்தியைத் திட்டமிடுவதற்கான போதிய நிதி ஒதுக்கீட்டைக் கடந்த 15 ஆண்டுக் காலமாக மத்திய அரசினுடைய பட்ஜெட்டில் செய்யவில்லை. ஆகவே, மத்திய அரசிடம் அதிகமான அதிகாரத்தையும் நிதியையும் வைத்துக்கொண்டு மாநில அரசு மின்வெட்டில் மாட்டிக்கொண்டபொழுது, நீங்கள் பொறுப்பாகச் செயல்படவேண்டும்

[செல்வி கே. பாலபாரதி] [2008 நவம்பர் 13

என்று காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினரும் சொல்கிறார்; ஆளுங்கட்சியினுடைய அமைச்சரும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால் இந்த மின்வெட்டு எங்கிருந்து உருவானது என்பது எங்களுக்குத் தெரியவேயில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற மின்சாரப் பற்றாக்குறையைப் பற்றிப் பேசுகின்றபோது, எப்பொழுதும் போகாத ஊருக்கு வழி சொல்லியே பழக்கப்பட்ட இவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டில் முன்னேற்றமும், வளர்ச்சியும் வந்துவிடக்கூடாது என்பதற்காக எவ்வளவு பெரிய போராட்டங்களையும் துணிந்து செய்யக்கூடிய மனநிலை படைத்த இவர்கள், இந்த நாட்டிலே மின்சாரமே உற்பத்தி செய்யக்கூடாது என்பதற்காக 123 ஒப்பந்தத்தை எதிர்த்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

அமெரிக்காவோடு ஒப்பந்தம் போடப்போகிறோம் என்று ஊரெல்லாம் சொல்லி பயங்காட்டி, இந்த ஒப்பந்தத்தைத் தடுத்த இவர்கள், 123 ஒப்பந்தம் முதலில் பிரான்ஸ் நாட்டோடு போட்டபோது வாயடைத்துப் போனார்கள். இதை ரஷியாவோடும் போட்டிருக்கிறோம். இன்று டாக்டர் மன்மோகன் சிங் அரசு எடுத்த முடிவு நியாயமான முடிவு என்பதை அவர்களே ஏற்றுக்கொள்கின்ற அளவுக்கு இப்பொழுது வாயடைத்துப் போயிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டிலே இருக்கின்ற மின்சாரப் பற்றாக்குறைக்கு முழுமையாக, உறுதி செய்யப்பட்ட விநியோகம் கிடைக்க வேண்டும் என்று சொன்னால், இன்று இருக்கின்ற அனு மின்சாரம், நீராதார மின்சாரம், காற்றாலை, சூரிய ஒளி, இவை எல்லாவற்றையும்விட, அதிகமாக reliable energy source என்பது Atomic Power என்பதை உணர்ந்திருக்கிறோம். அதற்கான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி நாங்கள் எடுத்திருக்கிற முயற்சி தடைபட்டது என்று சொன்னால், மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற அத்தனை முயற்சிகளுக்கும் தடைபோட்ட நீங்கள்தான் அதற்குக் காரணமேயொழிய, ஒருநாளும் காங்கிரஸ் அரசு இல்லை என்பதை இந்த இடத்திலே பதிவுசெய்ய ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, பிரச்சினையை திசை திருப்பிப் போகிறீர்கள். இதில் don't mix politics (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதிலே நீங்கள் உங்கள் கட்சி சார்பாகப் பேசும்போது பேசலாம். Don't mix politics. அடுத்து, பா.ம.க. சார்பாக. (கூச்சல்-குழப்பம்)

2008 நவம்பர் 13]

செல்வி கே. பாலபாரதி: ஒரேயொரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, அம்மா. நீங்கள் பேசும்போது பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. உங்கள் வாய்ப்பு வரும்போது உங்கள் ஆலோசனையைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை. இதிலே அரசியல் வேண்டாம் please. திரு. ஜி.கே. மணி, ஆரம்பியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது, நீங்கள் அப்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு என்பது உங்களுக்கும் கிடைக்கும்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு மின்வெட்டுப் பிரச்சினை உள்ளது குறித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசிலவற்றை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத அளவிற்கு, வரலாறு காணாத அளவிற்கு மின்வெட்டு ஏற்பட்டு, இன்று எல்லாத் தரப்பு மக்களும், குழந்தைகள் முதல் முதியோர் வரையில் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி தமிழ்நாடு முழுவதும் மிகப் பெரிய போராட்டங்கள் நடைபெறுகின்றன. போராட்டம் நடத்தாத இயக்கங்களே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்குத் தமிழகத்தினுடைய நிலை தள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்கு முதலில் கொண்டுவர விரும்புகிறேன். காலையிலே குழந்தைகள் படிக்கிறார்கள், அல்லது பள்ளி முடிந்தவுடன் இரவு நேரத்திலே படிக்க வேண்டும் என்று சொன்னால், மின்வெட்டு ஏற்படுகிறது. குழந்தைகள் கல்வி பாதிக்கப்படுகிறது. இரவு நேரத்திலே தூங்க வேண்டாமா? பெற்ற ஒரு மாதக் குழந்தை, இரண்டு மாதக் குழந்தையாக இருந்தாலுங்கூட, மின் விசிறி ஓடாமல், கொசுக்கடித் தொல்லையினால், குழந்தைகள்முதல் வீட்டிலே எல்லோருக்கும் தூக்கமின்மை. உடனே இரவிலே குழந்தைகளுக்குத் திட்டு. இப்படி குழந்தைகளுக்கும், மாணவர்களுக்கும் திட்டு. அதேபோல் விவசாயம் கடுமையான பாதிப்பு. எத்தகைய பாதிப்பு என்று சொன்னால், மின் மோட்டார் இயங்கவில்லை, தண்ணீர் இறைக்க முடியவில்லை, பயிர் காய்ந்து விடுகிறது. மின்சாரம் திடீரென்று போய்விட்டது என்று சொன்னால், அந்த மின் மோட்டார் பழுதடைந்து விடுகிறது; அதற்கான செலவு. ஒட்டுமொத்த விவசாயமே பாதிப்பு. அதுமட்டுமல்ல;

சிறு, குறுந்தொழில்கள் இயங்கவேயில்லை. விசைத்தறித் தொழில் அறவே நின்றுவிட்டது. ஒட்டுமொத்த சிறு குறுந்தொழில் பாதிப்பு. ஒரு நாட்டுக்கு உற்பத்தி தரக்கூடிய தொழிற்சாலைகள் கடுமையாக பாதிப்பு; முதலீட்டாளர்களுக்குப் பாதிப்பு; தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு என்று அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டே போகலாம்.

பிற்பகல் *12-25*

அரசு அலுவலகங்களில் அரசு அலுவலர்கள் பணியாற்ற முடியவில்லை, எங்குப் பார்த்தாலும். ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கு இருண்ட காலமாக இந்த மின்வெட்டு அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது தமிழ்நாட்டினுடைய இருண்ட காலம்; இது மின்வெட்டினுடைய காலம் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த மின்வெட்டு எவ்வளவு பெரிய தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதை நான் சொல்வது மட்டுமல்ல, நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களே சொல்லியிருப்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இங்கே தமிழ் நாட்டிலே ஒருவேளை விரைவிலே நாடாளுமன்றத் தேர்தல் வருமென்று சொன்னால், அந்த நாடாளுமன்றத் தேர்தலிலே தி.மு.க. அணி வெற்றி வாய்ப்பை இழக்கும் என்று எல்லாத் தரப்பாலும் சொல்லப்படுகிறதே, அப்படிச் சொல்லப்படுமானால் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இல்லை, இல்லை, ஒன்றுமில்லை. (குறுக்கீடு) உங்களுக்குச் சாதகமாகத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, சொல்கிறேன். நீங்கள் நாடாளுமன்றத் தேர்தல் வரைக்கும் போகவேண்டாம். விநியோக முறையில் சீரமைப்பு என்ற முறையில் 10 நாட்களுக்கு முன்பு எடுத்த முடிவின் அடிப்படையிலே இப்போது எல்லாக் கிராமங்களிலும் வீடுகளுக்கு மின்சாரம் இருக்கிறது. அதைப்போல கடைகளுக்கு இருக்கிறது. பம்பு செட்டுகளுக்குத் தேவையான மின்சாரமும் கிடைக்கிறது. நீங்கள் சொல்வதைப்போல, 8 மணி நேரம், 10 மணி நேரம் மின்சார வெட்டு என்பதே இல்லை. நானும் விவசாயிதான். அதுவும் விவசாயத் துறை அமைச்சர் என்ற முறையிலேயே இப்போது இந்தப் பதிலை உங்களுக்கு நான் தர விரும்புகிறேன்.

2008 நவம்பர் 13]

திரு. ஜி.கே. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயிகள் சார்பிலே பேசுவதாகச் சொல்கிறார். விவசாயச் சங்கங்கள் தமிழ்நாட்டிலே, எத்தனைச் சங்கங்கள், எத்தனை நாட்கள் போராடின! அது பத்திரிகையிலே வந்த செய்தி.

அதைப்போல தொழிலாளர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள் கோயம்புத்தூரிலிருந்து எல்லா மாவட்டங்களிலும் போராட்டம். போராடாத இயக்கம், அமைப்பு, கட்சி, தமிழ்நாட்டில் எது இருந்தது? எல்லோரும் போராடினார்கள், அவ்வளவு பேரும். நான் அதைத்தான் சொல்ல வந்தேன். "தமிழ்நாட்டிலே விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் வருமானால், அந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. அணிக்கு வெற்றி வாய்ப்பு பாதிப்பு, அதற்கு மின்வெட்டுதான் காரணமாக இருக்கும் என்று எல்லோரும் சொல்கிறார்களே, அப்படி அதுதான் காரணம் என்று சொன்னால், அதற்கு நான்தான் பொறுப்பு" என்று அமைச்சர் அவர்களே சொல்லக்கூடிய அளவிற்கு மின்வெட்டுத் தாக்கம் இருந்தது என்பதைத்தான் இங்கே சொல்ல வருகிறேன். மின்வெட்டினால் மக்கள் மத்தியிலே அவ்வளவு தாக்கம்.

இதற்கு என்ன காரணம் என்பதை நாம் பல கோணங்களிலே—நான் மட்டுமல்ல; அரசியல் கட்சிகள், இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டிலே மின் துறையிலே மிகப் பெரிய பொறியியல் வல்லுநர்கள் இருக்கிறார்கள்—நான்கூட அந்தப் பொறியியல் வல்லுநர்களை, ஓய்வு பெற்றவர்களை, நல்லவர்களை எல்லாம் பார்த்துப் பேசியிருக்கிறேன், பாராட்டியிருக்கிறேன். இங்கே மசினக்குடியிலே உள்ள மின் உற்பத்தித் திட்டம், எவ்வளவு பெரிய திட்டம்? அந்தத் திட்டத்தை நிறைவேற்றியது யார்? நம்முடைய தமிழ்நாட்டுப் பொறியாளர்கள், தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள், ஆட்சிப் பொறுப்பிலே இருந்ததனால் நீங்கள் எல்லாம் உதவினீர்கள். அப்படி நல்லவர்கள் எல்லாம், நல்ல அதிகாரிகள், பொறியியல் வல்லுநர்கள் இருக்கிற காலத்தில் இவ்வளவு பெரிய மின்வெட்டு வந்ததற்கு என்ன காரணம்? அரசின் தரப்பிலே சொல்லப்படுவது மின்சாரத்தினுடைய தேவை அதிகமாக இருக்கிறது, முடியவில்லை என்று. தேவை அதிகரிக்க, அதிகரிக்க உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமா, வேண்டாமா? உற்பத்திக்கான திட்டங்களையே நாம் நிறைவேற்றவில்லை என்பதை அரசு ஒத்துக்கொள்ள வேண்டும். கடந்த காலங்களிலே—தேவைக்கேற்ப மின் உற்பத்தி வேண்டும்—மின் உற்பத்தியில் அக்கறை செலுத்தவில்லை. அதுமட்டுமல்ல. அரசே, தமிழ்நாடு மின்சார வாரியமே உற்பத்தி செய்வதைக் கைவிட்டு

[திரு. ஜி.கே. மணி] [2008 நவம்பர் 13

தனியாருக்குக் கொடுப்பது எப்படி? தனியார் மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குவது, ஊக்குவிப்பது என்ற போர்வையிலே, அதே சிந்தனை இருந்த காரணத்தினாலேதான் மின் உற்பத்தி ஒட்டுமொத்தமாகப் பாதித்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதே நேரத்திலே தமிழ்நாட்டிலே மின் உற்பத்தியை புனல், அனல், எரி வாயு, காற்றாலை, சோலார் எனர்ஜி, சர்க்கரை ஆலை, தமிழ்நாடு மின்சார வாரியம், தனியார் என்று பல நிலைகளில் உற்பத்தி செய்கிறோம். மழை குறைவு, தண்ணீர் வரவில்லை, ஒத்துக்கொள்கிறோம். காற்றடிக்கவில்லை, காற்றாலை மின்சாரம் உற்பத்திக் குறைவு என இப்படிக் காரணங்களைச் சொல்லலாம். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில் அனல் மின் நிலையங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. நான்கு சிறப்புமிக்க அனல் மின் நிலையங்கள். வட சென்னை, எண்ணூர், மேட்டூர், தூத்துக்குடி. இந்த 4 அனல் மின் நிலையங்களினுடைய உற்பத்தித் திறன் என்பது 2,870 மெகா வாட். அதிலே மாறி மாறி வருவது 2,550-லிருந்து 2,300, 2,200 மெகா வாட் என்று குறைகிறது. இதற்கு என்ன காரணம் என்று—நான் சொல்லவில்லை—மின்சார வாரியத்திலே பணியாற்றிய ஓய்வுபெற்ற பொறியியல் வல்லுநர்கள் எல்லாம் சொன்னது, இதற்கு நிலக்கரி ஒரு காரணம். வெறுமனே காரணம் மட்டும் சொல்லவில்லை. நிலக்கரியிலே சாம்பல் தன்மை என்பது, நல்ல தரமான நிலக்கரி என்று சொன்னால் 6 விழுக்காடுதான் இருக்கவேண்டும். ஆனால், நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பயன்படுத்துகிற, அனல் மின் நிலையங்களிலே பயன்படுத்துகிற நிலக்கரியிலே இருக்கிற சாம்பல் தன்மை என்பது 15 விழுக்காடு இருக்கிறது. 9 விழுக்காடு கூடுதலாக சாம்பல் தன்மையுள்ள நிலக்கரியை வாங்குகின்ற காரணத்தாலேதான் இந்த ஒட்டுமொத்த உற்பத்தித் திறனுக்குப் பாதிப்பு என்பதையெல்லாம் பொறியியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

பிற்பகல் 12-30

இப்படி சாம்பல் தன்மை அதிகமாக இருக்கிற தரமில்லாத நிலக்கரியை ஏன் அரசு வாங்குகிறது? அரசின் தரப்பிலேகூட பதில் சொல்லப்பட்டது. நாங்கள் மத்திய அரசிலோ அல்லது எந்த நிறுவனத்தில் வாங்குகிறோமோ அதனோடு ஒப்பந்தம் போட்டிருக்கிறோம்; மத்திய அரசின் அனுமதியோடு போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். எந்தத் தேதியிலே போடப்பட்டது? யாரோடு போடப்பட்டது? அந்த நிலக்கரியினுடைய

தாம் என்ன? அது மாறுபடுகிறது. ஒரே ஒப்பந்தத்தை வைத்து நிலக்கரி வாங்க முடியாது. நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடுகிறது. தேதி மாறுபடுகிறது. அந்த நிலக்கரியினுடைய தன்மை மாறுபடுகிறது; அதற்கேற்ப மாறுபடுமே தவிர, ஒரே ஒப்பந்ததை வைத்துக்கொண்டு மத்திய அரசின் ஒரே அனுமதியை வைத்துக்கொண்டு நாம் நிலக்கரி வாங்கிவிட முடியாது. ஆக, இப்படிப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன என்பதை அரசு ஒத்துக்கொண்டாக வேண்டும்.

அதுமட்டுமல்ல; இப்போது தனியார் துறையிலேயிருந்து மின்சாரம் வாங்குவதாகச் சொல்லப்படுகிறது. தனியார் நிறுவனங்களிலிருந்து வாங்குகிற நேரத்தில் இடத்திற்கு இடம் விலை மாறுபடுகிறது. ஒரு யூனிட்டினுடைய விலை 9 ரூபாய், 7 ரூபாய், 11 ரூபாய், 15 ரூபாய். ஏன் அப்படி மாறுபடுகிறது? என்ன காரணம்? ஒரு யூனிட்டின் விலை, உற்பத்தி எவ்வளவு, அரசினுடைய விலை என்ன? தனியாரிடத்திலே, யாரிடம் வாங்கினாலும் சரி, ஒரே விலை கொடுத்து வாங்க வேண்டுமே தவிர, நபருக்கு நபர், நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடக் கூடாது; அதற்கு என்ன காரணம் என்பதையும் அரசு இங்கே விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது சர்க்கரை ஆலையிலே மின்சார உற்பத்தி நடக்கிறது. சர்க்கரை ஆலையிலே மின்சார உற்பத்தி என்று சொன்னால் சர்க்கரை ஆலையிலே சக்கையிலேயிருந்து மின் உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு 3 ரூபாய் சில்லறை என்று விலை சொல்கிறார்கள். அதே சர்க்கரை ஆலையில் நிலக்கரியின்மூலமாக உற்பத்தி செய்தால் அதற்கு 9 ரூபாய். ஏன் இந்த நிலைமை? என்ன காரணம் சொல்கிறார்கள்? சக்கை வீணாகப் போகிறதுதானே? வீணாக இருக்கிற சக்கையிலே தயாரித்தால் குறைந்த விலை என்று சொல்லலாம். கூடுதலாகக் கொடுத்தால் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நன்கு இயங்குமா, இயங்காதா? அந்தப் பணம் விவசாயிக்குப் போகுமா, போகாதா? கரும்புக்குக் கூடுதலான விலை கிடைக்குமா, கிடைக்காதா?

காலையிலேகூட சட்டமன்ற உறுப்பினர் திரு. தமிழரசு சொன்னார். என்ன சொன்னார்? இன்றைக்கு நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர்கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். இன்றைக்கு நடுவண் அரசு டன்னுக்கு ரூ.800 சில்லறைதான் கரும்புக்கு விலை கொடுக்கிறது; ஆனால் நாங்கள் கூடுதலாகக் கொடுக்கிறோம், ரூ.1,050 வரைக்கும் என்று சொன்னார்கள். இப்போது சமீபத்திலே உத்தரப்பிரதேச மாநில அரசு 1,450 ரூபாய், இதே மத்திய அரசு நிர்ணயித்த விலைதான் உத்தரப்பிரதேசத்திற்கும். ஆனால் ஏன் மாறுபடுகிறது? ஆக,

இதையெல்லாம் சரிக்கட்டினால் விவசாயிகளுக்கும் பணம் கூடுதலாகக் கிடைக்கும். எனவே, இப்படிப்பட்ட முரண்பட்ட நிலை கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேட்டூரிலேகூட மால்கோ நிறுவனம் என்று ஒரு தொழிற்சாலை இருக்கிறது, அலுமினியம் தொழிற்சாலை. அலுமினியம் இப்போது விலை குறைந்துபோய்விட்டது; அந்தத் தொழிற்சாலையிலே உற்பத்தி பாதிப்பு. அந்த நிறுவனத்தார் தொழிலாளர்களுக்குவேலை கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் படையெடுக்கிறார்கள். மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையெல்லாம் சந்திக்க வந்தார்கள். என்னைக்கூட பார்த்தார்கள். அவர்கள் சொன்னது, "எங்களுக்கு வேலை போகிறது; சம்பளம் இல்லை; ஆனால், நாங்கள் உற்பத்தி செய்கிற மின்சாரத்தை அரசாங்கம் வாங்கிக்கொண்டால் அதைக்கொண்டு சம்பளம் கொடுக்கிறோம், ஆலையை இயக்குகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த மின்சாரத்தை அரசு வாங்க மறுக்கிறது" என்றார்கள். என்? மற்றவர்களிடத்தில், தனியாரிடத்தில் வாங்குகிறீர்கள். மின் உற்பத்தி இல்லை; மின் பற்றாக்குறை இருக்கிறது; மின் உற்பத்தி செய்து கொடுக்கிற இடத்திலே ஏன் வாங்கக்கூடாது? ஏன் இப்படித் தனியாரிடத்திலே பல்வேறு முரண்பாடுகள் இருக்கின்றன என்பதையும் அரசு விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு காரணம் என்னவென்றால், மின்சார உற்பத்தி நிலையங்களிலே இருக்கக்கூடிய கருவிகள், இயந்திரங்கள், மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்) மின் பாதைகள், கம்பிகள் இவையெல்லாம் நீண்டகாலமாக இருக்கின்றன, அதனால் பழுதடைந்திருக்கின்றன. மின்சாரம் மின்பாதையிலே செல்கிற நேரத்தில், மின் மாற்றிகளிலே செல்கிற நேரத்தில் பழுதடைந்த கம்பிகளும் புதுப்பிக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினாலே அதுவும் ஒரு குறையாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35

அதுமட்டுமில்லை. இப்போது தேசிய அனல் மின் உற்பத்திக் கழகம் இருக்கிறது. N.T.P.C. இருக்கிறது. இந்த N.T.P.C. மூலம் மற்ற மாநிலங்கள் எல்லாம் உற்பத்தி செய்வது 2 1/2 இலட்சம் மெகா வாட். ஒருசில மாநிலங்களில் நிறைய இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டைப்

2008 நவம்பர் 13] [திரு. ஜி.கே. மணி]

பார்த்தீர்களென்று சொன்னால், இதுவரைக்கும் தேசிய அனல் மின் உற்பத்திக் கழகம் தமிழ்நாட்டிற்கு வரவேயில்லை. N.T.P.C. வரவேயில்லை. இவ்வளவு மின் தேவை இருக்கிறது; மின் பற்றாக்குறை வரும் என்று அரசு யோசிக்க வேண்டுமா, வேண்டாமா? அதேநேரத்திலே, மத்திய அரசாங்கத்தை N.T.P.C.-யை அணுகி, தமிழ்நாட்டிற்கு வரவேண்டும் என்று முயற்சிக்க வேண்டுமா, வேண்டாமா? ஏன் முயற்சிக்கவில்லை என்பதை அரசு இங்கே சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதனுடைய ஒரு கட்டம்தான், N.T.P.C.-யிலிருந்து வந்து, 'செய்யூரிலே நாங்கள் அமைக்கப் போகிறோம்' என்று சொன்னார்கள். இதே பிரச்சினை குறித்து அவையிலே விவாதிக்கப்பட்டது; அமைச்சர் அவர்கள்கூட, 'செய்யூரிலே நிலம் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது' என்று சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. கிழக்குக் கடற்கரைச் சாலையை ஒட்டியிருக்கிற பகுதியிலே, நுழைவு வாயிலிலே ஏக்கர் 35 இலட்சம் ரூபாய் என்று சொன்னார்கள். அதை விடுத்து கொஞ்சம் தூரம் போனால், செய்யூரிலே அங்கே வெறும் முள் செடி நிறைந்த காடு, நிலம் இருக்கிறது. அதிலே ஏக்கர் ரூ.4 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சத்திற்குக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்; வாங்கியிருக்கலாம். N.T.P.C. வந்து இரண்டு வருடங்கள் ஆகியிருக்கும்; மின் உற்பத்தியைத் தொடங்கியிருக்கலாம். ஆனால், வரவில்லை. இன்னும் வராமல் இருப்பதற்கு யார் காரணம் என்பதையும் அரசு விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படியே நீங்கள் 35 இலட்சம் ரூபாய் கொடுத்து—செய்யூர் பகுதியிலே எல்லாம் ஏக்கர் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சம் வரைதான் விலையாகச் சொல்கிறார்கள். நீங்கள் ரூ.35 இலட்சமே கொடுத்திருந்தாலும்கூட, அதனுடைய திட்ட மதிப்பீட்டிலே வெறும் 4 விழுக்காடுதான் நிலத்தினுடைய மதிப்பு. 20 ஆயிரம் கோடி ரூபாயிலே திட்டம் என்று சொல்கிறோம். 20 ஆயிரம் கோடியிலே N.T.P.C. மின் உற்பத்தித் திட்டம். அதிலே உற்பத்தி செய்யக்கூடியது 2,000 மெகா வாட். 1,000 மெகா வாட் வந்தால்கூட போதும்; இப்போது ஈடுகட்டியிருக்கலாம். இதற்கெல்லாம், இந்த இழப்பிற்கெல்லாம் அரசுதான் பொறுப்பு என்பதை நான் இங்கே குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2008 நவம்பர் 13

அதுமட்டுமல்ல: ஜெயங்கொண்டம் நிலக்கரித் தொழிற்சாலையைப்பற்றிச் சொன்னால், 'ஜெயங்கொண்டம் நிலக்கரித் தொழிற்சாலை வந்திருக்கும்; அதை நீங்கள்தான் தடுத்தீர்கள்' என்று நீங்கள் சொல்வீர்கள். நான் மறுக்கிறேன். விவசாய நிலத்தை அடிமாட்டு விலைக்குக் கேட்டால், விவசாயி எப்படிக் கொடுப்பான்? ஏக்கருக்கு ரூ.5 இலட்சம் கொடுக்கமுடியாதா? அரசு மதிப்பீடு என்று சொல்லி, ஒரு ஏக்கர் நிலத்திற்கு 50 ஆயிரம் ரூபாய், இல்லையென்றால், ஒரு இலட்சம் ரூபாய்தான்; வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னால் எப்படி முடியும்? ஏக்கருக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுத்திருந்தால், பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஜெயங்கொண்டம் நிலக்கரித் தொழிற்சாலை வந்திருக்கும்; மின் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்கும்; இன்னும் கூடுதல் மின்சாரம் வந்திருக்கும். இதிலேயும் அக்கறை செலுத்தவில்லை. அங்கே விவசாயி பயப்படுகிறான். என்ன காரணம்? நெய்வேலியிலே நிலக்கரித் தொழிற்சாலை இருக்கிறது; ஆரம்பிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன? நிலம் கையகப்படுத்தப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? இன்னும் விவசாயிகளுக்கு முறையாகப் பணம் போய்ச் சேரவில்லை. உரிய மதிப்பீட்டு விலை கொடுப்போம், குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்று ஒப்பந்தம் போடுகிறோம். என்ன ஆயிற்று வேலை? இன்று வரைக்கும் வேலை கிடைக்கவில்லை; விவசாயி, நிலத்தைக் கொடுத்தவன் போராடிக்கொண்டிருக்கிறான். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான், அரசு நிலத்தைக் கையகப்படுத்துகிற நேரத்தில் மக்கள் எதிர்க்கிறார்கள். ஆகவே, உரிய விலையைக் கொடுத்து வாங்குங்கள். அதை விட்டுவிட்டு, அரசுக்கு என்று சொன்னால், அடிமாட்டு விலைக்கு வாங்குவதும், வெளிநாட்டவர்களுக்கு என்று சொன்னால், அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலையிலேயும் அரசின் போக்கு இருக்கக்கூடாது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று; மிகப் பெரிய மின் நெருக்கடி ஏற்பட்டது. இங்கே தென்னிந்திய ஜவுளி உற்பத்தியாளர்கள் கழகம் (S.I.M.A.- South Indian Mills Association) என்று இருக்கிறது. திரு. சீனிவாசன் ஒரு அறிக்கையிலே சொன்னார்; 'நாங்கள் மின்னாக்கியின்மூலமாக, ஜெனரேட்டர்மூலமாக உற்பத்தி செய்கிறோம்; குறைந்த விலையிலே கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள். 'அரசாங்கம் தனியாரிடமிருந்து வாங்கக்கூடிய விலையைவிட, 15 ரூபாய், 9 ரூபாய், 11 ரூபாய்

கொடுக்கிறீர்களே, அதைவிடக் குறைந்த விலைக்குக் கொடுக்கிறேன்; 11 ரூபாய் 60 காசுக்குக் கொடுக்கிறேன்; எங்களை ஊக்கப்படுத்துங்கள்' என்று சொன்னார்கள். ஆனால், அரசு அதற்கும் செவிசாய்க்கவில்லை; கைவிட்டுவிட்டது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. இப்படிச் சொல்லிக் கொண்டேயிருக்கலாம்.

பிற்பகல் 12-40

ஒட்டுமொத்தமாக, தமிழ்நாட்டில் வரலாறு காணாத மின்வெட்டு ஏற்பட்டிருக்கிறது. இந்த மின்வெட்டிற்கு அரசு பொறுப்பேற்க வேண்டும். இதிலே முழு அக்கறை செலுத்தாத காரணத்தினாலே, நாளுக்கு நாள் தேவை அதிகரிக்கிறது. அதிகரித்திருக்கக்கூடிய தேவைக்கேற்ப, மின் உற்பத்தியிலே அக்கறை செலுத்தவில்லை. அதே நேரத்தில், தமிழ்நாடு மின்சார வாரியமே உற்பத்தி செய்கிற போக்கை மாற்றி, தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற அந்தப் போக்கிலே ஆர்வம் செலுத்துகின்ற காரணத்தாலேதான், மின் உற்பத்தி குறைந்துவிட்டது. இப்போதும் சொல்கிறேன், இங்கே பொதுத் துறை நிறுவனமாக இருக்கிற தமிழ்நாடு மின்சார வாரியம் உற்பத்தி செய்தால் விலை கட்டுப்பாட்டிலே இருக்கும்; அடக்க விலையிலே கிடைக்கும். நாளைக்கு விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் குறைந்த கட்டணத்திலே மின்சாரம் விநியோகிக்கப்படும். தனியாருக்குக் கொடுத்தீர்களென்று சொன்னால் அவர்கள் என்ன சொல்வார்கள்? இவ்வளவு விலை என்றால்தான் கொடுப்பேன், இல்லையென்றால் இல்லை என்று சொல்வார்கள். இப்போதே பல தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் தமிழ்நாட்டுக்கு வராததற்கு என்ன காரணம்? அதிக விலையை இவர்கள் தரமாட்டார்கள் என்பதால்தான் முடியாது என்ற ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். இப்போது காற்றாலையை எடுத்துக்கொண்டால், அவர்கள் என்ன சொல்கிறார்கள்? எங்களுக்கு இவ்வளவு விலை கொடுக்கவில்லை, நாங்கள் தரமாட்டோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, தனியாரை ஊக்குவிக்கின்ற காரணத்தினாலே மின் உற்பத்திக்கு மட்டுமல்ல; எதிர்காலத்திற்கு இது மிகப் பெரிய கேடாக அமையும் என்பதை இங்கே சொல்லி, ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாடு மின்சார வாரியம் அதிக உற்பத்தியை ஈட்டுவதற்கு முயற்சி செய்யுங்கள். தேசிய அனல் மின் உற்பத்திக் கழக (NTPC) மின் உற்பத்தியைத் தமிழ்நாட்டிலே உடனடியாக ஏற்றுக்கொண்டு அவர்களை வரவழையுங்கள். இந்திய அரசு, யாருடைய அரசு?

நம்முடைய முதலமைச்சர் கை காட்டினால் ஓடி வரக்கூடிய அரசு. தமிழ்நாட்டின்மீது அக்கறையுள்ள அரசு. இப்படிப்பட்ட காலத்திலே N.T.P.C. இங்கே வரவில்லையென்று சொன்னால், மின் உற்பத்தியை அதிகரிக்கவில்லையென்று சொன்னால், தமிழ்நாட்டில் எந்தக் காலத்திலும் N.T.P.C. வராமல் போய்விடும். அந்தக் காரணத்தினாலே N.T.P.C.-ஐ வரவழையுங்கள். அரசே மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கேட்டு, ஒட்டுமொத்தமாக மின் உற்பத்தி இல்லாமல் போனதற்கும், மின்வெட்டு காரணத்திற்கும் அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். இந்த மின்வெட்டுக் காலம் தமிழ்நாட்டினுடைய இருண்ட காலம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த இருண்ட காலத்தைப் போக்குவதற்கு சாக்குப்போக்கு சொல்லாதீர்கள். காரணம் காட்டி காலம் தாழ்த்தாதீர்கள். போர்க்கால அடிப்படையில் விரைந்து செயலாற்றி இந்த மின் தட்டுப்பாட்டைப் போக்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் ஓர் உறுப்பினர் பேசுகிறார். அப்படிப் பேசுகிறபோது எனக்கு உரிய சந்தேகத்தை எழுப்புகிறேன். என்னுடைய சந்தேகத்தைத் தீர்க்கவேண்டிய இடத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர் சொல்லியிருந்தால் நான் அமர்ந்திருப்பேன். எனக்குப் பதிலை காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்போது மீண்டும் நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால் எனக்குப் பேசுவதற்கு உரிய power-ஐ நீங்கள் cut பண்ணி விடுகிறீர்கள். ஆகவே, இந்த power-ஐ cut பண்ணிக்கொள்வது, நியாயந்தானா என்பது என்னுடைய கேள்வி. ஆகவே, இப்போது கொடுத்திருக்கக்கூடிய இந்த அதிகாரத்தை நீங்கள் எப்போது வெட்டுவீர்களோ எனக்குத் தெரியாது. என்னுடைய கருத்தை நான் பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, கடந்த 17 ஆண்டுக் காலமாக மத்தியில் இருக்கக்கூடிய அரசுகள் உலகமயக் கொள்கையை ஏற்றுக்கொண்டன. உலகமயக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, மின்சாரத்தை உற்பத்தி செய்வது அரசுகளினுடைய கடமையல்ல. மின்சாரத்தை உற்பத்தி செய்வது தனியார்களுடைய

2008 நவம்பர் 13] [செல்வி கே. பாலபாரதி]

வேலையாகப் பிரிக்க வேண்டும் என்ற சட்ட திட்டத்தைக் கொண்டு வந்தது மத்திய அரசு. அதிலே காங்கிரஸ் கட்சிக்குக் கூடுதலான பங்கு இருக்கிறது.

இந்திய நாடு விடுதலை பெற்ற பிற்பாடு, அதிகமான ஆண்டுகள் ஆட்சியிலே இருந்தது காங்கிரஸ் அரசுதான். ஆகவே, மத்தியிலே இருக்கக்கூடிய காங்கிரஸ் அரசாங்கம் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த மின்வெட்டு, மின்சாரத் தடையைப் போக்குவதற்கு இதுவரையில் என்ன உதவி செய்தார்கள் என்பதெல்லாம் இருட்டுக்குள் இருக்கக்கூடிய, மறைக்கப்பட்ட உண்மைகளாகவே இருந்துகொண்டிருக்கின்றன. இப்போது பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினரும், உங்கள்மீதுதான் பழி போடுகிறார்கள். மத்தியில் ஆட்சியில் இடம்பெற்றிருக்கக்கூடிய கட்சிகளும், மாநில அரசும்தான் காரணம் என்கிறார்கள். உண்மையிலேயே எங்களுக்கும் ஓர் உண்மை தெரிந்தாக வேண்டும். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை இப்போது சமீபத்தில் மத்திய அரசாங்கம் உங்களுக்குக் கொடுத்ததா, இல்லையா? அப்படி மின்சார வாரியத்தை மத்திய அரசாங்கத்தினுடைய நிர்ப்பந்தத்தின் காரணமாக நீங்கள் பிரித்தீர்களா? பிரிக்க முயற்சி செய்தீர்களா? அல்லது உங்களுடைய சொந்த விருப்பத்திலேயே பிரிக்க முயற்சி செய்தீர்களா? நாங்கள் அறிந்தவரை, இவை அனைத்துக்கும் மத்திய அரசினுடைய நிர்ப்பந்தமே காரணம். ஆகவே, 7 மாத காலமாக ஏற்பட்டு வரக்கூடிய மின்வெட்டு, மின் தடை என்பது, ஒரு நாளில் ஒரு மணி நேரத்தில் உருவாக்கப்பட்டதல்ல. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பேசி முடித்துவிடட்டுமே! அவர் power-ஐ cut பண்ண மாட்டேன் என்று அவர் என்மேல் ஒரு நம்பிக்கை வைத்திருக்கிறார். அதனாலே அவர் பேசட்டும். நீங்கள் பிறகு பேசுங்கள்.

பிற்பகல் 12-45

செல்வி கே. பாலபாரதி: ஆகவே, இது ஒரு நாளில், சில ஆண்டுகளில் அல்லது இரண்டு ஆண்டுகளில் உருவாக்கப்பட்டதல்ல. மின்சாரத்தைத் தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டுவந்ததனுடைய, உலகமயக் கொள்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதனுடைய விளைவுதான் அது. நம்முடைய

[செல்வி கே. பாலபாரதி] [2008 நவம்பர் 13

மதிப்பிற்குரிய அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் 123 Act,—இடதுசாரிக் கட்சிகளெல்லாம், அணுசக்தி ஒப்பந்தத்தின்மூலமாக மின்சாரம் வாங்கத் தடையாக இருந்தன என்று சொல்கிறார்கள். 123 Act-ஐ, அந்த ஒப்பந்தத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் எதிர்க்கவில்லை. (குறுக்கீடுகள்) அணு உலையின்மூலமாக (குறுக்கீடுகள்) இருங்கள், அணு உலையின்மூலமாக மின்சாரம் தயாரிப்பதை நாங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுக்கவே இல்லை. அது ரஷ்யாவா, அமெரிக்காவா என்பதல்ல. அண்ணன் சொன்னதைப்போன்று ரஷ்யாவுடன் நாம் போட்டிருக்கக்கூடிய ஒப்பந்தங்களின் அடிப்படையில் மின்சாரம் தயாரிப்பதற்கு அடிப்படையான அந்தக் கனிமங்களை வாங்குவதற்கு 123 ஒப்பந்தமும் போடவில்லை; அமெரிக்க நாட்டைப் போன்று Hyde Act என்று சொல்லக்கூடிய சட்டத்தையும் போடவில்லை. இதைச் செய்ததனுடைய நோக்கம் என்ன என்பதைத்தான் இடதுசாரிக் கட்சிகள் நாடாளுமன்றத்திலே எழுப்பின Hyde Act என்பது என்ன சொல்கிறது? இந்தியாவிலே இருக்கக்கூடிய அணு உலைகளை எல்லாம் பார்ப்பதற்கு அமெரிக்க நாட்டிற்கு உரிமை வேண்டும் என்று அந்தச் சட்டம் சொல்கிறது. அந்த அணு உலைகளிலே கழிவுகளின்மூலமாக அணுகுண்டு தயாரிப்பதாக சந்தேகப்பட்டால்கூட நாங்கள் தடுப்போம் என்று Hyde Act சொல்கிறது. இத்தனை ஆண்டுக் காலமாக அணு உலைமூலமாக மின்சாரம் தயாரிப்பதில் இந்திய நாட்டு அரசினுடைய சொந்தக் காலிலே நின்று நாம் வெற்றிபெற்றிருக்கின்றோம். நமது விஞ்ஞானிகளுடைய அறிவுத் திறனைக்கொண்டு. அப்படியிருக்கிறபோது, எப்போதும் வராத அமெரிக்கா இப்போது சொல்கிறது, அணு உலையில் நீங்கள் கழிவுகள்மூலமாக அணுகுண்டுகளைத் தயார் செய்வதாக நாங்கள் சந்தேகப்பட்டால்கூட நாங்கள் வந்து நிறுத்திவிடுவோம் என்று. Hyde Act அப்படிச் சொல்கிறது. இது இந்திய நாட்டினுடைய இறையாண்மையை, சுதந்திரத்தை, சுயசார்புத் தன்மையைப் பாதிக்கிறது என்பதனால்தான் அங்கே நாங்கள் எதிர்த்து நின்றோம். நாடாளுமன்றத்திலே எதிர்த்து நின்றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) காங்கிரஸ் கட்சியினுடைய நண்பர்கள் கொஞ்சம் கூச்சல் போடாமல் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் நிரம்ப கூச்சல் போட்டீர்களானால் அது மக்களுக்குப் பயன்படாது. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு என்று ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அதன் சார்பாக வந்திருக்கக்கூடிய உறுப்பினர்கள் அதைக் காக்க

2008 நவம்பர் 13] [செல்வி கே. பாலபாரதி]

வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட Hyde Act-ஐக் கொண்டுவந்த அமெரிக்காவில் ஒரு அணு உலையில்கூட மின்சாரம் தயாரிக்கப்படவில்லை. ஆனால், இந்தியா அணு உலையில் மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்று சட்டத்தைக் கொண்டுவந்த ஜார்ஜ் புஷ் எங்கே இருக்கிறார்? நம்முடைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் சொன்னார்கள், இந்திய நாட்டு மக்கள் ஜார்ஜ் புஷ்மீது மிகுந்த பாசம் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மிகவும் உன்னத இந்திய நாட்டு மக்கள் வைத்த. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் அருமைச் சகோதரி பாலபாரதி அவர்கள், இங்கே 123 agreement பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். புஷ் எங்கே போனார் என்றெல்லாம் கேட்கிறார்கள். ஒரு தவறான தகவலை இந்த அவையிலே பதிவு செய்யக் கூடாது. தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் என்ற கொள்கை மேற்கு வங்காளத்தை ஆளுகின்ற கம்யூனிஸ்ட் கட்சியும், கேரளத்தை ஆளுகின்ற கம்யூனிஸ்ட் கட்சியும் தனியார்மயமாக்கல் கொள்கையிலே மிக நம்பிக்கை வைத்து, தனியார்கள் எல்லாம் வாருங்கள், தொழில்களை எங்களுடைய மாநிலத்திலே தொடங்குங்கள் என்று சொல்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த தனியார்மயமாக்கல் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொண்ட காரணத்தினால்தான் மேற்கு வங்காளத்திலே இப்போது தொழிற்சாலைகள் எல்லாம் தொடங்க முன்வந்தபோது அங்கே இருந்த சில பேர் தகராறு செய்து அதற்குப் பின்னாலே அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் தொடங்கப்படாமல் போனது என்பதை இந்த நாடு அறியும். 123 agreement பற்றி இங்கே ஒரு தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 123 agreement என்பது, இந்த நாட்டிலே மின்சார உற்பத்தி செய்யப்படுவதற்குத் தேவையான மூலப் பொருட்களை நாம் அமெரிக்க நாட்டிலிருந்து மட்டுமல்ல; உலக நாடுகளிலே இருந்து வாங்கிக்கொள்வதற்காக, அந்த 123 agreement போடப்பட்டது. அதற்குச் சீன நாடு மறைமுகமாக இங்கே இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிகளோடு சேர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து எதிர்ப்புத் தெரிவித்த அந்தக் காரணத்தினால், அவர்கள் நேரடியாக எதிர்க்காமல் இங்கே இருக்கின்ற கம்யூனிஸ்ட் நண்பர்களை விட்டு, இதை எதிர்க்கச் சொன்னார்கள். ஏனென்று சொன்னால், இந்த 123 agreement அவர்களால் ஏற்கெனவே போடப்பட்டது. சீன நாடு போட்டுவிட்டது.

சீன நாடு போட்டு இன்றைக்கு தொழில் துறையிலே மிக வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்ற காரணத்தினால் இந்தியாதான் அதற்கு மார்க்கெட்டாக இருக்கிறது. இந்தியாவிலே மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுமேயானால் தங்களுடைய மார்க்கெட் போய்விடும் என்று அவர்கள் கருதிய காரணத்தினால் மறைமுகமாக உங்களைத் தூண்டிவிட்டு எதிர்த்தார்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்க வைத்தார்கள். அதுவரை நீங்கள் காங்கிரஸ் கட்சியோடு இணக்கமாக இருந்தீர்கள். சீன நாட்டினுடைய தூண்டுதலின்பேரில் இங்கே இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் அதை எதிர்த்தன. பாராளுமன்றத்திலே எதிர்த்தார்கள். இருந்தாலும், அந்தக் குழு, டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலே இருக்கின்ற இந்த அரசு, துணிச்சலோடு செயல்பட்டு அந்தச் சட்டத்தை பாராளுமன்றத்திலே நிறைவேற்றியது. நீங்கள் எதிர்த்தீர்கள். எதிர்த்ததோடு மட்டுமல்லாமல் உலகத்திலே இருக்கின்ற அத்தனை நாடுகளும் இருக்கின்ற அணுசக்தி ஒப்பந்தக் கழகத்திலே போய் நீங்கள் மறைமுகமாக பின்லாந்து நாட்டைவிட்டு எதிர்க்கச் சொன்னீர்கள்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே இவ்வளவு விஷயம் இருக்கிறதா? (குறுக்கீடு) இவ்வளவு விஷயம் இருக்கிறதா?

திரு. டி. சுதர்சனம்: அதற்குப் பின்னாலே அந்தச் சிறிய நாடுகளெல்லாம் எதிர்த்தன. எதிர்த்தபோது மறு நாள் சீன நாடு அன்றைக்கு அந்தக் கூட்டத்திலேயே கலந்துகொள்ளாமல் பகிஷ்காரம் செய்துவிட்டு, வெளிநடப்பு செய்துவிட்டது என்பதை உலக நாடுகள் நன்றாக அறிந்து வைத்திருக்கின்றன. அதனாலே அந்த 123 agreement—ஐப் பற்றிப் பேசுவதற்கு இங்கே இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களுக்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி, தலைப்பு, தமிழகத்தில் நிலவும் மின்வெட்டு பற்றியது. திரு. வீர இளவரசன் இல்லாத குறையை நீங்கள் தீர்த்துவிட்டீர்கள். எங்கெங்கேயோ அழைத்துப் போய்விட்டீர்கள்!

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மின்வெட்டு நிலவுவதன் காரணமாகத்தான்.

2008 நவம்பர் 13] [செல்வி கே. பாலபாரதி]

இருட்டுக்குள்ளேயே உட்கார்ந்து கதை வசனமெல்லாம் எழுதி, காங்கிரஸ் கட்சியினுடைய, எங்களது மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய தலைவர், அண்ணன் சுதர்சனம் அவர்கள் இப்பொழுது மிக அழகாக வாசித்தார்கள். நான் அதற்குள்ளே போக வேண்டுமென்று விரும்பவில்லை.

ஏனென்றால், அணுசக்தி ஒப்பந்தத்தைப் போட்ட ஜார்ஜ் புஷ்ஷே வெள்ளை மாளிகையில் இல்லை (குறுக்கீடு) வெள்ளை மாளிகையில் இல்லை; ஒரு கறுப்பு மனிதனின் பாதம் வரலாற்றில் முதல் முறையாக வெள்ளை மாளிகையில் பதிந்திருக்கிறதென்று சொன்னால், ஜார்ஜ் புஷ் உலக நாடுகளின்மீது போட்ட இந்த உலகமயக் கொள்கைதான் அடிப்படைக் காரணமாக இருந்தது. ஆகவே, அதற்கும் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய இருட்டுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்து. ஜார்ஜ் புஷ்ஷுக்கு ஏற்பட்ட கதி, நாளைக்கு தமிழகத்திலும், இந்திய நாட்டிலும் மிகப் பெரிய கேள்வியாக இருக்கிறது என்பதையும் நான் நினைவுபடுத்துகிறேன். (குறுக்கீடுகள்)

என்னுடைய நேரத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தயவுசெய்து நீங்கள் விட்டுத்தர வேண்டாம். ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிலவக்கூடிய இந்த மின் தடையின் காரணமாக 11 இலட்சம் சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே பார்த்தீர்களென்றால், கோவை மாவட்டத்தில் மோட்டார் என்ஜினியரிங் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, ஈரோடு, கரூர், திருப்பூர் போன்ற இடங்களில் அதிகமான அளவிற்கு பின்னலாடைத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தத் தொடர் மின்வெட்டின் காரணமாக இந்த மதிப்புக் கூட்டப்பட்ட ஆடைகளும், பின்னலாடைகளும் இன்னும் நுட்பமான கணினிகளும் இயங்க முடியாமல் தொழில் பாதிப்பு ஏற்பட்டு, இன்றைக்கு 30 சதவிகித் உற்பத்தி வீழ்ச்சியடைந்திருக்கிறது என்பதை நான் வேதனையோடு பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 300-க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் இருக்கின்றன. தொடர்ந்து மின்வெட்டின் காரணமாக ஒரு மாதத்தில் 10 நாட்கள்கூட தொழிலாளிகளுக்கு வேலை வழங்க முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில், நம்முடைய திண்டுக்கல் மாவட்டம்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[செல்வி கே. பாலபாரதி] [2008 நவம்பர் 13

மட்டுமல்ல; தூத்துக்குடியில் இருக்கக்கூடிய ஆயத்த ஆடைகள் தயார் செய்யக்கூடிய கம்பெனிகளுக்கும், ஒரு நாளைக்கு 50 கோடி ரூபாயிலிருந்து 100 கோடி ரூபாய்வரை இழப்பு ஏற்பட்டு வருகிறது.

இப்பொழுது நம்முடைய பல்வேறு அரசியல் கட்சிகளினுடைய உறுப்பினர்கள் பல கருத்துகளை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். இந்த மின்சாரத் தடை எதனால் ஏற்பட்டது? நம்முடைய தமிழகத்தில் மின் பயனீட்டாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அதிகமாக, அந்த எண்ணிக்கை 60 இலட்சத்திலிருந்து 2 1/4 கோடியாக உயர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் மின் பயனீட்டாளர்கள் எத்தனை பேர்? தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடிய மின் உற்பத்தி நிலையங்களில் எவ்வளவு மின்சாரம் தயார் செய்கிறோம்? மத்திய அரசு அவர்களுடைய துறைகள்மூலம் எவ்வளவு மின்சாரம் தயார் செய்கிறார்கள்? இவ்வளவு மின் தடை ஏற்பட்டபோதும் மத்திய அரசு நம் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு மின்சாரத்தை வழங்கியதா? இவ்வளவு மின்சாரத் தடை இருந்தபொழுதும் பன்னாட்டுக் கம்பெனிகள் ஒரு மணி நேரம்கூட மின் தடையே இல்லாமல் அவர்களுடைய தொழிற்சாலைகளை இயக்குகிறார்களே, அது எப்படி முடிகிறது?

ஆகவேதான், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்த ஒரு வெள்ளை அறிக்கையை முன்வைத்து, இந்தச் சபையிலே விவாதத்தை நடத்த வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்லாமல், இப்போது இந்த மின்வெட்டின் காரணமாக நம்முடைய தொழிற்சாலைகள், விவசாயம் இதுபோன்றவற்றிலும் கடுமையான பாதிப்பை நாம் ஏற்படுத்திக்கொண்டு வருகின்றோம். மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய தூத்துக்குடி போன்ற மாவட்டங்களிலெல்லாம் 1,500 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்கு நாம் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தோம்.

ஆனால், அந்தத் திட்டத்தின் அடிப்படையிலேகூட அங்கே மின்சாரம் என்பது உற்பத்தி செய்யப்படவில்லை. இப்படியிருக்கிறபோது, சேலம் மாவட்டத்தில், மேட்டூரிலே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய MALCO கம்பெனியில் 75 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்து, மாநில மின்சார வாரியத்திற்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விற்பனை செய்கிறோம், வாங்கிக்கொள்ளுங்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால், தமிழக மின்சார வாரியம் நாங்கள் வாங்க மாட்டோம் என்று மறுத்ததன் காரணமாக, சேலத்தில் இருக்கக்கூடிய அந்த MALCO கம்பெனியினுடைய உற்பத்தி இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-35

ஆகவே, இவ்வளவு மின்சாரத் தேவை இருக்கிறபோது அந்த மின்சாரத்தை ஏன் மின்சார வாரியம் விலை கொடுத்து வாங்க முன்வரவில்லை? ஆகவே, அந்த MALCO கம்பெனியில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகள் என்ன என்பதையெல்லாம் நாம் ஆழமாக விவாதிக்கவேண்டிய இடத்திலே இருந்துகொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த மின் தடையைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது மட்டுமல்ல; மாநில அரசு தங்களுடைய சக்திக்கு உட்பட்டு இதற்கான குறைந்தபட்ச தீர்வுகளைக் காணவேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம்.

நீங்கள் துணை நிதிநிலை அறிக்கையில் ஜெனரேட்டர் வாங்குவதற்கான மானியம் வழங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு உண்மையிலேயே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. ஆனால், அதேசமயத்தில் ஜெனரேட்டர்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு டீசல் தேவைப்படுகிறது. அந்த டீசலை Bunk-களில் கேட்கிறபோது செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி மின்வெட்டைக் காரணமாக வைத்து அதிகமான விலைக்கு டீசலை விற்பனை செய்கிறார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில், மத்திய-மாநில அரசுகள் டீசல் மீது விதித்திருக்கக்கூடிய வரிகளை வாபஸ் வாங்கிக்கொண்டு தமிழகத்தினுடைய சிறு, குறுந் தொழில்கள் அந்த ஜெனரேட்டர்கள்மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்வதற்கு நீங்கள் டீசலை மானிய விலையில், மலிவு விலையில் வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

நடுத்தரத் தொழிற்சாலை என்று இல்லாமல், சின்னஞ்சிறிய தொழில் நிறுவனங்களும் இருக்கின்றன. மண்ணெண்ணெயை மின்சாரத்திற்காக அவர்கள் ஜெனரேட்டர்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அந்த மண்ணெண்ணெய் வழங்குவதற்கு ஓர் அட்டை வழங்கி அவர்களுக்குப் மானிய விலையில் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு மாநில அரசு ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

[செல்வி கே. பாலபாரதி] [2008 நவம்பர் 13

வீடுகளில் மின்தடை ஏற்படுகிறபோது மெழுகுவர்த்தியை வைக்கிறார்கள். ஆனால், அந்த மெழுகுவர்த்தியை உற்பத்தி செய்யக்கூடிய நேரத்தில், மூன்று மணி நேரம் மின்சாரம் நின்றால் மெழுகுவர்த்தியே தயாரிக்க முடியவில்லை என்று மெழுகுவர்த்தி உற்பத்தியாளர்களும் புலம்புகிறார்கள். ஆகவே, இந்த சிறு, குறுந் தொழில்களை அத்தகைய பாதிப்புகளிலிருந்து மீட்பதற்கு நீங்கள் இத்தகைய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்லாமல், Superior Kerosene Oil என்று சொல்லக்கூடிய ஒரு ஆயிலை தொழிற்சாலைகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, அந்த ஆயிலைப் பயன்படுத்தி, மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்வதற்கு மத்திய அரசிடமிருந்து நமது மாநில அரசு அனுமதி பெற வேண்டும். அந்த Superior Kerosene Oil-ஐ ஏற்கெனவே, 1999-க்கு முன்னால் தொழில் நிறுவனங்கள் இறக்குமதி செய்துகொள்ள அனுமதி இருந்தது. ஆனால், இப்போது இல்லை. ஆகவே, கடுமையான மின் தடையால் ஏற்படும் தொழில் பாதிப்பு காரணமாக அந்த ஆயிலை இறக்குமதி செய்துகொள்வதற்கும் அரசாங்கம் அனுமதி பெற்றுக் கொடுக்கவேண்டும். ஆகவே, இத்தகையதொரு சூழ்நிலையில் குறைந்தபட்சத் தேவைகளையாவது நமது தமிழ்நாட்டினுடைய தொழில் நிறுவனங்களுக்கு நீங்கள் ஏற்பாடு செய்து இந்த மின் தடையினுடைய பாதிப்பைக் குறைப்பதற்காவது மாநில அரசு முயற்சி செய்திருக்க வேண்டும். அந்த முயற்சியையும் இந்த அரசாங்கமும் மின்சார வாரியமும் செய்யவில்லை.

மின்சாரத் துறையை இரண்டாகப் பிரித்தால்தான் நிதி கொடுப்போம் என்று மத்திய அரசு தொடர்ந்து மிரட்டி வருகிறது. அதைப் பயன்படுத்தி மாநில அரசு மூலம் இந்தத் துறையை இரண்டாகப் பிரிப்பதற்கு தயவுசெய்து நீங்கள் முயற்சி செய்யாதீர்கள். இவ்வளவு கடுமையான மின்வெட்டு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் இத்தகைய ஏற்பாடு என்பது, மின் கட்டணத்தை உயர்த்துவதற்கும், மின்வெட்டை மேலும் அதிகப்படுத்துவதற்கும்தான் உதவி செய்யும். ஆகவே, அத்தகைய நிருவாக ஏற்பாட்டைத் தயவுசெய்து நீங்கள் நிறுத்திவைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதுமட்டுமல்ல; தரம் இல்லாத நிலக்கரியை வாங்குவதாக, இந்தச் சபையிலேகூட நமது எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பதிவு

செய்திருக்கிறார்கள். மத்திய அரசிடம்தான் நிலக்கரி சுரங்கங்கள் இருக்கின்றன. தரமான நிலக்கரியை நம்முடைய மாநில அரசாங்கம் கேட்டதா, அதை மத்திய அரசாங்கம் கொடுத்ததா என்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சபைக்குத் தெரிவிப்பதற்கு முன்வரவேண்டும். அந்தவகையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த மின் தடை, மின்வெட்டு என்ற பிரச்சினையின்மூலமாக, விவசாயிகள், தொழிலாளிகள், மாணவர்கள், பெண்கள் என்று சகல தரப்பு மக்களுடைய இயல்பு வாழ்க்கை முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்திலே மட்டும்தான் ஒரு மணி நேரம் மின் தடை என்பது இருந்தது. ஆகவே, எங்கள் ஊரில் இவ்வளவு மின்சார வெட்டு இருக்கிறது என்று இங்கு வந்து சொன்னால், அப்படியெல்லாம் இல்லையென்று இவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, ஒரு மாவட்டத்தில் நீங்கள் நல்லபடியாக மின்சாரம் கொடுப்பது வரவேற்பதற்குரியதுதான்.

ஆனால், தொழில்களை அதிகமாக வைத்திருக்கக்கூடிய, விவசாயத்தை 80% வைத்திருக்கக்கூடிய பிற மாவட்டங்களில் இந்த மின்வெட்டு என்பது அதிகரித்துக்கொண்டே போவது நல்லதல்ல. ஆகவே, அதற்கான உரிய நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மரியாதைக்குரிய சகோதரி மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் குழுவினுடைய தலைவி தான் பேசுகின்றபோது, அதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு அமைச்சர்களுக்கு உண்டு. ஆனால், அந்தப் பொறுப்பினைக் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினராகிய நான் எப்படி ஏற்றுக் கொண்டேன் என்று கேட்டார். நியாயமான கேள்விதான். அவர்கள் தமிழக அரசிலே இருக்கின்ற அமைச்சரை நோக்கி கேள்விகளை வைத்திருப்பார் என்று சொன்னால், நான் பதில் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால், அவர்கள் இந்த மின்சாரப் பற்றாக்குறைமீது நடக்கின்ற இந்த விவாதத்திலே, மத்திய அரசு, காங்கிரஸ் கட்சி, பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் பின்பற்றி வருகின்ற அணுகுமுறைகளை, நெறிமுறைகளையெல்லாம்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 நவம்பர் 13

கேள்விக்குள்ளாக்கினார்கள். அந்த நேரத்திலே அதற்குப் பதில் சொல்வதற்காகத்தான் நான் எழுந்து நிற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதேயொழிய, அமைச்சர்களுக்குப் பதிலாக நான் பதில் சொல்ல ஆசைப்படவில்லை.

அவர்கள் இன்று ஒரு கொள்கை நெறியில் நின்று பேசுகிறார்கள். அப்படிப் பேசவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருக்கிறது. அந்தக் கொள்கை நெறி வழியாகப் பேசுகின்ற நிர்ப்பந்தம் இருக்கின்ற காரணத்தினால், இந்த நாட்டிலே ஏது தவறாக நடந்தாலும், அதற்குக் காங்கிரஸ்தான் காரணம், மத்திய அரசுதான் காரணம் என்று சொல்லக்கூடிய மனப்பான்மையை இன்றைக்கு அவர்கள் அரசியல் ரீதியாக வைத்திருக்கிறார்கள். இதைத்தான் ஆங்கிலத்திலே McCarthyism என்று சொல்வார்கள். சூரியன் உதித்தால்கூட, தாமதமாக உதித்தால் கூட, அதற்கு அரசுதான் பொறுப்பு; மழை பெய்தால்கூட, பெய்யவில்லையென்று சொன்னால்கூட, அதற்கு மத்திய அரசுதான் காரணம்; காங்கிரஸ்தான் காரணம் என்று பேசுகின்ற மனப்பான்மை McCarthyism என்கிற மனப்பான்மை.

இப்போது தனியார் துறைக்கு, மின்சார உற்பத்தியை ஏதோ காங்கிரஸ் கட்சி திறந்து விட்டதுபோல பேசுகிறார். நான் அவருக்குச் சொல்வேன், மிகப் பெரிய பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே, தமிழக அரசின் உதவிக்கு வந்திருப்பது தனியார் தயாரிக்கிற அந்த மின்சாரம்தான். அவைதான் துணைக்கு வந்து நிற்கின்றன. நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இரண்டு தனியார் ஆலைகளிடமிருந்து மின்சாரத்தை விலை கொடுத்து வாங்குகிறார்கள். அதுமட்டுமல்ல; ஏதோ மத்திய அரசு, தமிழக அரசிடம் பாராமுகமாக இருப்பதைப்போல அவர்கள் பேசியிருக்கிறார்கள். இது பெரிய தவறான ஒரு செய்தி. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் எப்பொழுதெல்லாம் டெல்லிக்குச் சென்று மத்திய அமைச்சரவையிலே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் ஷிண்டே அவர்களைப் பார்கிறார்களோ, அப்போதெல்லாம் 400 மெகா வாட், 300 மெகா வாட் என்று இந்தியாவின் எந்த மாநிலத்திற்கும் இல்லாத அளவிலே, தமிழகத்திற்காகத் தனிச் சலுகையைக் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அணு மின் உற்பத்தியைப்பற்றி ஒரு தவறான கருத்தை அவர்கள் பதிவு செய்கிறார்கள். அது சரியல்ல என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அமெரிக்காவிலே, ஏது அணு மின் உற்பத்தி என்று

2008 நவம்பர் 13][திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

கேட்டார்கள். இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற பிரான்ஸ் என்கிற நாட்டிலே, 70 விழுக்காடு மின்சாரம் அணு உலைகளால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதை நீங்கள் சொல்கிறீர்களே—எதற்கெடுத்தாலும் பீஜிங்கைப் பார், சைனாவைப் பார் என்று சொல்கிறீர்களே—அந்த சைனாவிலே 20 விழுக்காடு மின்சாரம் அணு சக்தியால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், நாம் 3 விழுக்காடு அளவிற்குத்தான் உற்பத்தி செய்கிறோம். எரிபொருள் தேவை ஏற்படும் என்கின்ற அந்த தொலைநோக்குப் பார்வையோடுதான், இன்றைக்கு மத்திய அரசு அணு ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருக்கிறது. கூடங்குளத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ரஷ்யாவை நம்பி, நாம் அந்தக் கூடங்குளம் அணு உலைகளை ஆரம்பித்தோம். ஆனால், அந்த அணு உலைகள் இயக்கம் இன்றைக்கு 3 ஆண்டுகள், 4 ஆண்டுகள் எனத் தாமதமாகி இருக்கிறது. இன்னும் எப்போது அதற்குத் தேவைப்படுகின்ற எரிபொருள் வரும் என்று தெரியவில்லை. அதற்காகத்தான் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருக்கிறோமேயொழிய—ஜார்ஜ் புஷ், ஒபாமா பற்றிச் சொன்னார்கள். உங்களுக்குத் தெரியுமா? இந்த ஒப்பந்தத்திற்காகத்தான் ஜார்ஜ் புஷ்ஷும், ஒபாமாவும் ஒரே நேரத்திலே அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு வந்து வாக்களித்தார்கள். தேர்தல் பிரச்சாரத்திலேயிருந்த அந்தக் 'கறுப்பு இன அதிபர்' என்று சொல்லப்படுகின்ற ஒபாமா அவர்கள், அன்று நமக்காக, இந்திய நாட்டிற்காக, இந்த அணு ஒப்பந்தத்திற்காக, அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு வந்து வாக்களித்த வரலாற்றை நீங்கள் தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.

ஆகவே, இதில் ஏதோ ஒரு சமூக நீதிப் போராட்டம் இருப்பதுபோல, ஒரு கொள்கை முரண்பாடு இருப்பதைப்போல, நீங்கள் பேசுவது தவறு. கம்ப்யூட்டரை அறிமுகம் செய்தபோது, நீங்கள் எதிர்த்தீர்கள். டிராக்டரை அறிமுகம் செய்தபோது, நீங்கள் எதிர்த்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இயந்திரமயமாக்கலை அறிமுகம் செய்கின்றபோது, நீங்கள் எதிர்த்தீர்கள். ஆனால், அதற்குப் பிறகு அதை நீங்களே ஏற்றுக்கொள்ளக்கூடிய காலச்சூழல் வருகின்றபோது, நாங்கள் உங்களைப் பாராட்டுகிறோமேயொழிய, நீங்கள் அன்றைக்கு எதிர்த்தீர்கள் என்று சொல்லவில்லை. இப்போது உங்களுடைய மேற்கு வங்க அரசுக்கு யார் ஆலோசகர்? McKinsey என்கிற அந்த அமெரிக்க நிறுவனத்தைத்தானே நீங்கள் ஆலோசகராக வைத்திருக்கிறீர்கள்? டாடா தொழிற்சாலை வரவேண்டுமென்று நீங்கள் தலைகீழாக நிற்கவில்லையா? டாடா தொழிற்சாலை என்ன அரசுத் தொழிற்சாலையா? பொதுத் தொழிற்சாலையா? அது இந்த

நாட்டினுடைய மிகப் பெரிய தொழிலதிபர் நடத்துகின்ற தொழிற்சாலை. அது வேண்டுமென்று உங்களுடைய முதலமைச்சரிலிருந்து, உங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளர் வரை, அத்தனை பேரும் கல்கத்தாவிற்குப் போய் தவம் கிடக்கவில்லையா? அதை நாங்கள் தவறென்று சொல்லவில்லை. தொழில் வளர வேண்டும், தொழில் முனைவோர் வர வேண்டும், மின்சாரம் வேண்டும். அதேநேரத்திலே நம்முடைய பொது நிறுவனங்களை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில்தான் காங்கிரஸ் கட்சி இருக்கிறதேயொழிய, தனியாருக்கு நாங்கள் வால் பிடிக்கிறோம்; தனியாருக்காகத்தான் காங்கிரஸ் கட்சி இருக்கிறது என்கிற கருத்தை நீங்கள் பதிவு செய்தால், அதை மறுக்கவேண்டிய அரசியல் கடமை எங்களுக்கு உண்டு. அதைத்தான் நாங்கள் செய்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள் சார், உட்காருங்கள்.

5. வெளியேற்றப்பட்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் மீண்டும் கலந்துகொள்ள அனுமதித்தல்

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுவிடுவோம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மின்வெட்டு பற்றி நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களை இன்றைக்கு நீங்கள் வெளியேற்றியிருக்கின்றீர்கள். அவர்களைத் திரும்பவும் அழைத்து, இந்த விவாதத்திலே பங்குகொள்ளச் செய்வதன்மூலமாக ஜனநாயகக் கடமையை அவர்கள் ஆற்ற அனுமதிக்க வேண்டும். அதற்காகத் திரும்பவும் அவர்களை இந்த மன்றத்திற்கு அழையுங்கள் என்று காங்கிரஸ் கட்சி வேண்டுகோள் வைக்க விரும்புகிறது.

நாட்டினுடைய மிகப் பெரிய தொழிலதிபர் நடத்துகின்ற தொழிற்சாலை. அது வேண்டுமென்று உங்களுடைய முதலமைச்சரிலிருந்து, உங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளர் வரை, அத்தனை பேரும் கல்கத்தாவிற்குப் போய் தவம் கிடக்கவில்லையா? அதை நாங்கள் தவறென்று சொல்லவில்லை. தொழில் வளர வேண்டும், தொழில் முனைவோர் வர வேண்டும், மின்சாரம் வேண்டும். அதேநேரத்திலே நம்முடைய பொது நிறுவனங்களை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில்தான் காங்கிரஸ் கட்சி இருக்கிறதேயொழிய, தனியாருக்கு நாங்கள் வால் பிடிக்கிறோம்; தனியாருக்காகத்தான் காங்கிரஸ் கட்சி இருக்கிறது என்கிற கருத்தை நீங்கள் பதிவு செய்தால், அதை மறுக்கவேண்டிய அரசியல் கடமை எங்களுக்கு உண்டு. அதைத்தான் நாங்கள் செய்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள் சார், உட்காருங்கள்.

5. வெளியேற்றப்பட்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் மீண்டும் கலந்துகொள்ள அனுமதித்தல்

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுவிடுவோம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மின்வெட்டு பற்றி நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களை இன்றைக்கு நீங்கள் வெளியேற்றியிருக்கின்றீர்கள். அவர்களைத் திரும்பவும் அழைத்து, இந்த விவாதத்திலே பங்குகொள்ளச் செய்வதன்மூலமாக ஜனநாயகக் கடமையை அவர்கள் ஆற்ற அனுமதிக்க வேண்டும். அதற்காகத் திரும்பவும் அவர்களை இந்த மன்றத்திற்கு அழையுங்கள் என்று காங்கிரஸ் கட்சி வேண்டுகோள் வைக்க விரும்புகிறது.

TRUTH ALONE TRIUMPHS

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடதுசாரிக் கட்சிகள் தனியார். . . (குறுக்கீடு) இருங்கள், இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் ஒரு வேண்டுகோள் வைத்திருக்கிறார். அதை முடித்துவிட்டு வருகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். இன்றையதினம் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்கள் . . . (குறுக்கீடு) திரு. மணி, இந்த subject-ல் பேசுகிறீர்களா? சரி, பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வரலாறு காணாத மின்வெட்டு மிகப் பெரிய பிரச்சினை. பிரதான எதிர்க்கட்சி அ.இ.அ.தி.மு.க. இல்லை. அவர்களும் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள். நீங்கள் அவர்களை அனுமதிக்க வேண்டும்; அழைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்சினை என்ற அடிப்படையிலேதான் 2 தினங்கள் தள்ளி இன்றையதினம் எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது மணி 1-07. துணை நிதிநிலை அறிக்கை என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. நிகழ்ச்சி நிரலில் தினசரி வந்துகொண்டே இருக்கிறது, "விவாதம்-தொடர்ச்சி" என்று. விவாதமே தொடங்கவில்லை; அப்புறம் ஏது தொடர்ச்சி என்று தெரியவில்லை. இருந்தாலும், இந்த மின்சாரம் பற்றிய தீர்மானத்திலே பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச வேண்டும். அதற்குரிய முறையிலே நம்முடைய அமைச்சர் பதிலளிப்பது பொருத்தமாக இருக்கும். அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களும் இந்த விவாதத்தில் பங்கெடுப்பதற்கு, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, அவர்களை அழைக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றையதினம் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டதால், பேரவை விதி 120-ன்கீழ் பேரவையிலிருந்து வெளியேற்றுமாறு கட்டளையிட்டேன். அதன்படி வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் இந்தக் கூட்டத்திற்கு மீண்டும் வரக்கூடாது என்று விதிகளிலே கூறப்பட்டிருந்தாலும், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் மீண்டும் இன்று கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாட்டில் நிலவும் மின்வெட்டு—தொடர்ச்சி

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தவரை, தனியார்மயத்தை முழுவதுமாக நாங்கள் எதிர்க்கவில்லை. அது புரியாமல் இல்லை. ஓட்டல் என்று சொன்னால், தமிழ்நாடு ஓட்டலைதான் அரசாங்கம் நடத்த முடியும். இருக்கிற சிறு, குறு, நடுத்தரத் தொழிலதிபர்கள் நடத்தக்கூடிய நிறுவனங்கள், நடத்தக்கூடிய தனியார் ஓட்டல்களையெல்லாம் மூடு என்று நாங்கள் சொல்லவில்லை. இராணுவத்தைத் தனியாருக்குக் கொடுக்க முடியாது. அதை நம்முடைய சகோதரர் ஒத்துக்கொள்வார் என்று நினைக்கிறேன். அணு உலையிலே மின்சாரம் தயாரிக்க தனியாருக்குக் கொடுக்கமுடியாது. ஏனென்றால், அதுவும் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது. ஆகவே, மின்சாரம் என்பது அத்தியாவசிய தேவை. அது பொதுத் துறையைச் சார்ந்திருக்கவேண்டும். அதில் சமூகக் கண்ணோட்டம் இருக்கவேண்டும். ஆகவே, மின்சாரத்தைத் தனியாருக்குக் கொடுக்கவேண்டாம் என்றுதான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மின்வெட்டு சம்பந்தமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சிறப்புக்கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

பொதுவாக, இப்போது தமிழகம் இருளில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. தொலைக்காட்சிப் பெட்டிகளை, அன்றாட பத்திரிகைகளை நாம் பார்த்தால், தினமும் ஆங்காங்கே மக்கள் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். குடிக்கிற தண்ணீரிலிருந்து வேலைவாய்ப்பிலிருந்து அனைத்துமே கடுமையாக இந்த மின்வெட்டின்

முதலமைச்சர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் மீண்டும் இன்று கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாட்டில் நிலவும் மின்வெட்டு—தொடர்ச்சி

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தவரை, தனியார்மயத்தை முழுவதுமாக நாங்கள் எதிர்க்கவில்லை. அது புரியாமல் இல்லை. ஓட்டல் என்று சொன்னால், தமிழ்நாடு ஓட்டலைதான் அரசாங்கம் நடத்த முடியும், இருக்கிற சிறு, குறு, நடுத்தரத் தொழிலதிபர்கள் நடத்தக்கூடிய நிறுவனங்கள், நடத்தக்கூடிய தனியார் ஓட்டல்களையெல்லாம் மூடு என்று நாங்கள் சொல்லவில்லை. இராணுவத்தைத் தனியாருக்குக் கொடுக்க முடியாது. அதை நம்முடைய சகோதரர் ஒத்துக்கொள்வார் என்று நினைக்கிறேன். அணு உலையிலே மின்சாரம் தயாரிக்க தனியாருக்குக் கொடுக்கமுடியாது. ஏனென்றால், அதுவும் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது. ஆகவே, மின்சாரம் என்பது அத்தியாவசிய தேவை. அது பொதுத் துறையைச் சார்ந்திருக்கவேண்டும். அதில் சமூகக் கண்ணோட்டம் இருக்கவேண்டும். ஆகவே, மின்சாரத்தைத் தனியாருக்குக் கொடுக்கவேண்டாம் என்றுதான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மின்வெட்டு சம்பந்தமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சிறப்புக்கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

பொதுவாக, இப்போது தமிழகம் இருளில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. தொலைக்காட்சிப் பெட்டிகளை, அன்றாட பத்திரிகைகளை நாம் பார்த்தால், தினமும் ஆங்காங்கே மக்கள் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். குடிக்கிற தண்ணீரிலிருந்து வேலைவாய்ப்பிலிருந்து அனைத்துமே கடுமையாக இந்த மின்வெட்டின்

2008 நவம்பர் 13] [திரு. தி. இராமசாமி]

காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அரசின் சார்பில் மின்வெட்டு என்பது ஒரு பக்கம் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அறிவிக்கப்படாத மின் வெட்டு என்பதும் இப்போது தமிழகத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கிராமப்புறத்தில் வாழ்கின்ற மக்கள் எல்லாம் கற்கால நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற ஒரு மோசமான நிலைமை இப்போது தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. சிறு தொழில் நடத்துபவர்கள், சிறிய பஞ்சாலைகள், பனியன் தொழிற்சாலைகள், விவசாயம் செய்வோர் அனுபவிக்கின்ற கஷ்டங்கள் சொல்லி மாளாது. 3 ஷிப்டுகள் நடத்திய பஞ்சாலைகள் எல்லாம் இப்போது இரண்டு ஷிப்டுகள்தான் நடத்துகின்றன. அதோடு அவர்களுக்குச் சொல்லி இருக்கிற அந்த மின் வெட்டு என்பது 4 மணி நேரம் என்று சொன்னாலும், அது 8 மணி நேரமாக இப்போது இருந்துகொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் இந்த மின்வெட்டு ஏன் ஏற்பட்டது? நமது மின் துறை அமைச்சர் அவர்கள், கடந்த காலங்களில், பட்ஜெட் உரை தொடங்கும்போதெல்லாம் தமிழகத்தில் மின்வெட்டு என்பதே இருக்கவே இருக்காது; மின்சாரம் என்பது உபரியாக இருக்கிறது; தேவையைவிட கூடுதலாக நாங்கள் மின்சாரம் வைத்திருக்கிறோம் என்பதை அடிக்கடி கூறி வந்தார்கள்; மனம் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், உபரியாக இருந்த மின்சாரம் திடீரென்று எங்கே காணாமல் போய்விட்டது, ஏன் இருட்டு நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டது என்பது தமிழக மக்களுக்குப் புரியவில்லை. எங்களைப் பொறுத்தவரை, எதிர்காலத்தைப் பற்றிய திட்டம் இல்லாத செலவினமும், புதிய வரவுக்கு வழி வகுக்காத நிலைமையும், உற்பத்தியில் கவனம் செலுத்தாத போக்குகளும், இத்தகைய நிலைமையைத் தமிழகத்தில் ஏற்படுத்தி இருக்கின்றன என்பதே.

பன்னாட்டுக் கம்பெனிகள், புதிய புதிய தொழில்களைத் தொடங்குவதற்குத் தமிழகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தொழில்கள் இங்கே தொடங்குவதற்குத் தடையில்லாத மின்சாரம் என்பது வழங்கப்படுகிறது. ஏற்கெனவே தடையில்லாத மின்சாரம் பெற்று வந்த தொழில்களைத் தடை செய்துவிட்டு, புதிதாக வந்தவர்களுக்குத் தடையில்லாத மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டது. கிராமப்புறத்தில் பழமொழி சொல்வதுபோல, 'வயிற்றுக்குள் இருக்கும் பிள்ளையை நம்பி, மாடு மேய்க்கிற பிள்ளையைக் கொன்ற' கதையாக இன்றைக்கு மாறிவிட்டது. இப்படிப்பட்ட நிலையில் வேலையிழப்பு, குடிதண்ணீர்ப் பிரச்சினை, உற்பத்தி முடக்கம் கடுமையாக

[திரு. தி. இராமசாமி] [2008 நவம்பர் 13

ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு, விவசாயிகளுடைய கஷ்டத்தைச் சொல்லமுடியாது. முதலில், இரவிலே 8 மணி நேரம், பகலில் 6 மணி நேரம் என்று மின்சாரம் வழங்கப்பட்டது. இப்போது பகலில் 4 மணி நேரம், இரவில் 6 மணி நேரம் என்று மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால், இரவிலே அந்த 6 மணி நேரம் மின்சாரம் என்பது தொடர்ச்சியாக வழங்கப்படுவதில்லை. அதிலே ஒரு மணி நேரத்தை நிறுத்திவிட்டு மீண்டும் வழங்குகிறார்கள். 16 மணி நேர மின்சாரமே விவசாயத்திற்குக் காணாத ஒரு நிலைமை இருந்தபோது, 10 மணி நேரமாகக் குறைக்கப்பட்டது. இந்த ஆண்டு பருவ மழையும் பொய்த்து, விவசாயத்திற்குத் தேவையான போதுமான தண்ணீர் நீர்நிலைகளில் இல்லாத ஒரு சூழ்நிலையில், கிணறுகளில் இருக்கிற தண்ணீரை வைத்து விவசாயத்தைப் பெருக்க வேண்டிய ஒரு நிலையில், விவசாயத்திற்கு மின்சாரத்தைக் குறைப்பது என்பது, வரக்கூடிய காலத்தில் உணவு உற்பத்தியைக் கடுமையாகப் பாதித்துவிடும். தமிழ்நாட்டில் இன்றைக்கு கிலோ ஒரு ரூபாய்க்கு அரிசி வழங்கப்படுவதற்கு, அங்கே இருக்கின்ற விவசாயம் செழிப்பாக நடந்தால்தான் அதற்கான உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

பிற்பகல் 1-15

உலகமெல்லாம் இன்றைக்குக் கடுமையான நெருக்கடி ஏற்பட்டாலும், இந்தியா போன்ற நாடுகளில் இன்றைக்கு விவசாயம் செய்கின்ற விவசாய நிலங்களுடைய அளவு குறைக்கப்பட்டிருந்தாலும், உற்பத்தி என்பது தேக்கம் அடையாமல், குறையாமல் இந்திய விவசாயிகளால் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றது என்று சொன்னால் அதற்குக் காரணம் அவர்களின் கடுமையான உழைப்பு. அந்த விவசாயிகளுக்கு இன்றைக்கு நாம் மின்சாரத்தைக் குறை இல்லாமல் வழங்கவேண்டும்.

இன்றைக்கு call center-கள் நகரங்களில் பெருவாரியாகத் தொடங்கப்பட்டு வருகின்றன. 15 ஆயிரம் ரூபாய் generator-க்காக மானியம் வழங்கப்படுவதாக, இங்கே துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது வரவேற்கக்கூடிய விஷயம்தான். ஆனால் call center-கள் ஏதோ வெளிநாட்டுக் கம்பெனிகள் வந்து, அவர்கள் நாட்டில் அந்த வேலையைச் செய்தால் அதிகமான சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கின்றது; எனவே இந்தியா போன்ற நாடுகளில், தமிழகம் போன்ற இடங்களில், இப்படிப்பட்ட பணியைத் தொடங்கும்போது, ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டிய சம்பளத்திற்குப் பதிலாக, 20 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் அந்த வேலையைச் செய்துவிடமுடியும் என்ற அடிப்படையில்,

call center-களைத் தொடங்கினார்கள். இந்த மின்வெட்டு நீங்கும் வரை அந்த call center-கள் அவர்களாகவே generator மூலம் அவர்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ள வேண்டுமென்று ஓர் உத்தரவை நமது அரசு பிறப்பிக்கவேண்டும். இது நிரந்தரமானது அல்ல. ஒரு தற்காலிக ஏற்பாடாக இதைச் செய்யலாம். Generator வைத்து மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு அவர்களிடத்தில் மூலதனம் இருக்கின்றது.

தொழிற்சாலைகள், சிறிய மில்களுக்கு 20 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகின்றது. 4 மணி நேரம் மின்வெட்டு. 4 மணி நேரம் மின்வெட்டு என்று வருகின்றபோது, எட்டு, எட்டு மணி நேரமாக 16 மணிநேரம்தான் வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது. தொழிற்சாலைகளில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு பாதித்துவிடக் கூடாது என்ற காரணத்திற்காக இந்த 4 மணி நேர மின்வெட்டை ஈடு செய்கின்ற முறையில் அவர்களுக்கு டீசலை மானிய விலையில் வழங்குவதற்கு அரசு உத்தரவிட வேண்டும்.

ஏற்கெனவே உலக அரங்கில் கச்சா எண்ணெயின் விலை, ஒரு பீப்பாய் 3,500 ரூபாய் வரை குறைந்தும், டீசல் மற்றும் பெட்ரோல் விலையைக் குறைப்பதற்கு மத்திய அரசு மறுத்து வருகின்ற இந்த வேளையில், உலக அளவில் கச்சா எண்ணெயின் விலை குறைந்த காரணத்தால், இந்தியாவிலும் டீசல் மற்றும் பெட்ரோல் விலையைக் குறைக்கவேண்டுமென்று, நமது மாநில அரசு அவர்களை வற்புறுத்துவதோடு, தொழிற்சாலைகளுக்கு மானிய விலையில் டீசல் வழங்குவதற்கு நாம் தயாராகவேண்டும். அதேபோல, எதிர்வரும் காலங்களில் அதிகமாக மின் உற்பத்தியைச் செய்யவேண்டும். ஆனால், மத்திய அரசிடம் நாம் கோரிக்கை வைக்கின்றோம். நெய்வேலி தமிழ்நாட்டில்தான் இருக்கின்றது. நமது தமிழகத்திலுள்ள நெய்வேலியில் அனல் மின்சாரம் உற்பத்தி செய்து அதை மத்தியத் தொகுப்புக்கு அனுப்பி, திரும்பவும் மத்தியத் தொகுப்பிலிருந்து நாம் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். தமிழகத்தில் உற்பத்தி ஆகின்ற மின்சாரம் தமிழ்நாட்டுக்கு வேண்டும், தமிழ்நாட்டுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும், 'எங்களுக்குப் போக உங்களுக்கு' என்று சொல்கின்ற ஒரு நிலையை நமது தமிழக அரசு கொண்டு வந்தால், நாம் அவர்களைத் தேடிச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. தமிழ்நாட்டில் உற்பத்தி ஆகின்ற மின்சாரத்தை நாமே பெற்றுக்கொள்ள முடியும்.

கூடங்குளத்தில் இன்னும் ஓரிரு மாதங்களில், டிசம்பரில் மின் உற்பத்தி தொடங்கலாம் என்று சொல்கின்றார்கள். கூடங்குளம் மின்

உற்பத்திக்கு எந்த நிபந்தனையும் இல்லை. இன்றைக்கு இந்தியாவில் 22 அணு உலைகள்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. கூடங்குளம் ஒப்பந்தம் நடக்கும்போது எந்த நிபந்தனையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமசாமி, சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. தி. இராமசாமி: ஆனால், இங்கே இப்பொழுது ஏற்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தில் பல்வேறு வகையான நிபந்தனைகள் உள்ளன. அந்த நிபந்தனைகளைத்தான் கம்யூனிஸ்ட்டுகள் எதிர்த்தோமே தவிர, கம்யூனிஸ்ட்டுகள் விஞ்ஞானத்திற்கு எதிரானவர்கள் அல்ல. அதேபோல இன்றைக்கு சீனா போன்ற நாடுகள் அணு விசையின்மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. அந்நாடுகள் அணுவிசை மின்சார ஒப்பந்தம் முடிக்கின்ற நேரத்தில் 123 ஒப்பந்தமும் இல்லை. உலக அணு விசை நாடுகளுடைய அந்தக் கூட்டமைப்பும் இல்லை. அப்படியில்லாத நேரத்தில்தான் சீனா போன்ற நாடுகள் இன்றைக்கு அணு மின் நிலையத்தைப் பெற்றிருக்கிறார்களே தவிர, அந்தக் கூட்டமைப்பும் இல்லை, 123 ஒப்பந்தமும் இல்லை. அது இல்லாத நேரத்தில் சீனா மின்சாரத்தைப் பெற்று உலகத்தில் முன்னணியில் இருந்துகொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-20

இந்திய நாட்டினுடைய தேவை, இந்தியாவினுடைய வளர்ச்சி, இந்தியாவினுடைய முன்னேற்றம் ஆகியவற்றில் முழு அக்கறை உள்ளவர்கள் கம்யூனிஸ்ட்டுகள். இன்றைக்குக்கூட உலகப் பத்திரிகைகள், ஆங்கிலப் பத்திரிகைகள் அத்தனையிலும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள், "அமெரிக்காவினுடைய மூலதனம் சீரழிந்து, அங்கே இருக்கின்ற வங்கிகளெல்லாம் திவாலாகிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், இந்தியாவின் மூலதனம் இந்த அளவிற்குப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு இடதுசாரிகளுடைய தொடர் போராட்டம்தான் காரணம். எதையும் முன்கூட்டி, தெளிவாகச் சொல்பவர்கள். இன்சூரன்சைத் தனியார்மயம் ஆக்க முயற்சி செய்தபோது அதை எதிர்த்தார்கள்; தொடர்ந்து எதிர்த்துப் போராடினார்கள்; பாதுகாத்தார்கள். அதேபோல, வங்கிகளைத் தனியார்மயம் ஆக்கும் முயற்சியின்போதும் எதிர்த்தார்கள்; தொடர்ந்து எதிர்த்தார்கள்; போராடினார்கள். எனவே, வங்கி, இன்சூரன்ஸ், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் இப்படிப்பட்ட பொதுத் துறை நிறுவனங்களெல்லாம் இந்திய நாட்டினுடைய அடித்தளமாக,

2008 நவம்பர் 13] [திரு. தி. இராமசாமி]

நேருவால் உருவாக்கப்பட்ட கொள்கையினுடைய மூலதனமாக இருக்கின்ற காரணத்தால் இந்தியப் பொருளாதாரம், உலகச் சிக்கல்களில் மாட்டாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது" என்று இன்றைக்கு அத்தனைப் பத்திரிகைகளும் உலகப் பொருளாதார வல்லுநர்களெல்லாம் இடதுசாரிகளைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எதைச் செய்தாலும், எதை எதிர்த்தாலும், ஒரு நியாயத்தோடு, மக்களுடைய நலனில் அக்கறைகொண்டு, அதன் அடிப்படையில்தான் இடதுசாரிகள், கம்யூனிஸ்ட்டுகள் செயல்படுகிறோம்; செயல்படுவார்கள்.

இன்றைக்குக்கூட, அணு ஒப்பந்தம் முடிந்தவுடனேயே மின்சாரம் வந்துவிடும் என்று சொன்னார்கள். இன்னும் 15 ஆண்டுக் காலம் கழித்தால்தான் நமக்கு மின்சாரம். 15 வருடம் கழித்துக் கிடைக்கவேண்டிய மின்சாரத்தை உடனடியாகக் கிடைப்பதற்கான ஒரு முயற்சியை எடுக்கவில்லையே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. தி. இராமசாமி: முடித்துவிடுகிறேன். மின்சாரம் என்பது தமிழ்நாட்டினுடைய ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. மக்கள் அன்றாடம் மின்சாரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு இன்னும் தாராளமாக மின்சாரம் வழங்கவேண்டும். தொழிற்சாலைகள் மின்வெட்டு நேரங்களில் டீசலைப் பயன்படுத்துவதற்கு மானியம் வழங்கவேண்டும். எனவே, வேலைவாய்ப்பு குறைந்துவிடாமல் பாதுகாக்கவேண்டும். புதிய உற்பத்தியைத் தொடங்குவதற்கான தீவிரமான நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் எடுக்கவேண்டும். காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற பொறுப்பைத் தனியாருக்குக் கொடுக்கலாம். அதை வாங்கி விநியோகம் செய்கின்ற பொறுப்பு என்றுமே அரசிடம் இருக்கவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ம.தி.மு.க. உறுப்பினர்கள் யாரும் இல்லையா? யாரும் பேசவில்லை. அடுத்து, திரு. து. ரவிக்குமார், சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின் பற்றாக்குறை நிலவரத்தைச் சமாளிப்பதற்காக, இடைக்காலத்திலே கொண்டுவரப்பட்ட அந்த மின் கட்டண உயர்வை, விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அரசியல் கட்சிகளும், பொது

[திரு. து. ரவிக்குமார்] [2008 நவம்பர் 13

மக்களும் இரத்து செய்யவேண்டுமென்று கோரிக்கை விடுத்தபோது, அதை ஏற்றுக்கொண்டு, அந்தக் கட்டண உயர்வை இரத்து செய்த, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மின் கட்டண உயர்வு இரத்தானதற்குப் பிறகு, இப்போது மின் பற்றாக்குறையைப்பற்றி தொடர்ந்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த மின் பற்றாக்குறை பிரச்சினையைச் சமாளிப்பதற்கு, பல்வேறு அரசியல் கட்சிகளும் பல ஆலோசனைகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. நாம் இன்றைக்குக் கொண்டுவந்த புதிய மின் திட்டங்கள், உடனடியாக நிறைவேற்றப்படாமல் இடையூறு ஏற்பட்டதற்கு, அங்கே நிலங்களைக் கையகப்படுத்துவதில் நேர்ந்த பிரச்சினைகளும், எதிர்ப்புகளும்தான் காரணம். இத்தகைய பிரச்சினைகள், குறிப்பாக கடலூர் மாவட்டத்திலே, கடலூர் பவர் புராஜக்ட், அதுபோல நெய்வேலி நிலக்கரி நிறுவன விரிவாக்கத் திட்டம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டபோது அங்கே பொது மக்களின் பிரதிநிதிகளை அழைத்து மாவட்ட நிருவாகத்தின் சார்பாகக் கூட்டங்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. இப்படியான நிலம் கையகப்படுத்துகிற பிரச்சினை வரும்போது, மக்கள் அதிக விலை கோருகின்ற நேரத்திலே, இப்போது இந்தியாவிலே மத்திய அரசு அறிமுகப்படுத்தியிருக்கின்ற 2007 ஆம் ஆண்டுக்கான R & R Policy என்று சொல்லப்படுகிற Resettlement and Rehabilitation Policy-ஐ நம்முடைய அரசாங்கம் நடைமுறைப்படுத்த திட்டமிட்டு அதை அறிவித்திருக்கிறது. ஆனால், அது மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடுவதற்குப் போதுமானது அல்ல. இன்றைக்கு ஜார்கண்ட், சட்டீஸ்கர் போன்ற சிறு சிறு மாநிலங்கள் எல்லாம், தமக்கென்று தனியே R & R Policy-ஐ உருவாக்கி இருக்கின்றன. அப்படி அந்தப் பாலிசியை உருவாக்குகின்றபோது, இத்தகைய நிலம் கையகப்படுத்துகிற பிரச்சினை வருகின்றபோது, கூடுதலாகத் தொகையை வழங்கி அந்த நிலங்களைக் கையகப்படுத்துகின்ற வாய்ப்பு அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதுபோல, தமிழகத்திலும் நம்முடைய மாநிலத்திற்கென்று மத்திய அரசுக்கு அப்பாற்பட்டு Resettlement and Rehabilitation Policy உருவாக்கப்படவேண்டும். அப்படி உருவாக்கப்பட்டால்தான் இத்தகைய நிலம் கையகப்படுத்துகிற பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

2008 நவம்பர் 13] [திரு. து. ரவிக்குமார்]

பிற்பகல் 1-25

அடுத்ததாக, நம்முடைய மின் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்குப் புதிதாக மின் உற்பத்தியை எப்படியெல்லாம் செய்யலாம் என்று யோசிக்கின்ற அதே நேரத்திலே, ஏற்கெனவே நம்முடைய பயன்பாட்டை எந்த அளவுக்குக் குறைத்துக்கொள்ளலாம்; அல்லது கட்டுப்படுத்தலாம்; வீணாகச் செலவழிகிற மின்சாரத்தை எப்படி மிச்சப்படுத்தலாம் என்று யோசிப்பதும் மிக முக்கியமானது. சில மாதங்களுக்கு முன்னாலே உத்தரப்பிரதேச மாநிலத்திலே எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கையை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். கடந்த ஜூலை மாதத்திலே உத்தரப்பிரதேச மாநிலம் ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறது. அரசாங்க அலுவலகங்கள், அரசு சார்பான அலுவலகங்கள் எல்லாவற்றிலும் பல்புகளைப் பயன்படுத்தக் கூடாது; C.F.L. என்று சொல்லப்படுகின்ற அந்த Compact Fluorescent Lamp-களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பல்புகளை முற்றாகத் தடை செய்திருக்கின்றது. அப்படிச் செய்ததன்மூலம் நாள் ஒன்றுக்கு 100 மெகா வாட் மின்சாரத்தை அந்த மாநிலத்திலே மிச்சப்படுத்துகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இதே முறையை வீடுகளிலும் பின்பற்றினால் நாள் ஒன்றுக்கு 800 மெகா வாட் மின்சாரம் அங்கே மிச்சப்படுத்தப்படும் என்று திட்டமிட்டு, அதற்கான செயல்பாட்டிலே அவர்கள் இறங்கியிருக்கின்றார்கள். புதிதாக மின்னிணைப்புகள் பெற வேண்டுமென்று சொன்னால், அந்த வீடுகளிலே பல்புகளுக்குப் பதிலாக C.F.L. மட்டும்தான் பயன்படுத்தப்படும் என்று உத்தரவாதம் அளித்தால்தான் அங்கே புதிய மின்னிணைப்புகள் வழங்கப்படுகின்றன. அப்படி ஒரு அறிவிப்பை நம்முடைய மாநில அரசும் செய்வதற்கு முன்வர வேண்டும். ஏற்கெனவே நம்முடைய மின்சாரத் துறை சார்பாக C.F.L.-ஐப் பயன்படுத்துவதற்கான அறிவிப்புகள் செய்யப்பட்டிருந்தாலும் அது optional-ஆகத்தான் இருக்கிறது. அது நுகர்வோர்களுடைய விருப்பம் சார்ந்ததாக இருக்கிறது. அது கட்டாயமாக்கப்படவேண்டும்.

அதிலும் குறிப்பாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே முன்முயற்சி எடுத்து உள்ளாட்சித் துறை சார்பாக செய்யப்படுகின்ற அனைத்துப் பணிகளுக்கும் குறிப்பாக பஞ்சாயத்துகளிலே மின் விளக்குகள் பொருத்துகின்ற பணிகள் உட்பட அனைத்துப் பணிகளுக்கும் இந்த C.F.L.-ஐப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கவேண்டும்.

அதுமட்டுமல்லாமல், நாம் இன்றைக்கு இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே 60 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கியிருக்கின்றோம். மேலும் 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு இப்பொழுது நாம் அனுமதியளித்திருக்கின்றோம். இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கும்போது அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெறுகிறவர்கள் வீடுகளிலே, C.F.L. இருக்கவேண்டும் என்பதையும் ஒரு நிபந்தனையாக மாற்றினால் நிச்சயமாகத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற கூடுதல் மின் செலவை நாம் இந்த C.F.L.-ஐப் பயன்படுத்துவதன்மூலம் ஈடுகட்ட முடியும்.

அதுமட்டுமல்லாமல், இப்போது தொழிற்சாலைகளிலே ஜெனரேட்டர்களைப் பயன்படுத்துவதற்கு நாம் அனுமதித்திருக்கின்றோம். ஜெனரேட்டர்களுக்கு மானியமும் நம்முடைய அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. இப்போது சர்வதேச சந்தையிலே கச்சா எண்ணெய் விலை பாதியாகக் குறைந்திருக்கிறது. ஒரு பேரல் 57 டாலர் என்கின்ற அளவுக்கு விலை வீழ்ச்சியடைந்திருக்கிறது. இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு இந்த ஜெனரேட்டர்களுக்கு வழங்குகின்ற டீசல் மொத்தத்திற்கும் மத்திய அரசு வரி விலக்கு அளிக்கவேண்டும் என்கின்ற கோரிக்கையை நாம் முன்வைத்து மத்திய அரசிடமிருந்து அந்த டீசலுக்கான வரி விலக்கைப் பெறவேண்டும். அப்படிச் செய்தோமேயானால் நம்முடைய மாநிலத்திற்கான நிதி இழப்பையும் ஈடுகட்ட முடியும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரவிக்குமார், உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

திரு. து. ரவிக்குமார்: அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு நமக்கு மத்திய மின் பகிர்மானத்திலிருந்து வரவேண்டிய மின்சாரத்திலே குறைவு ஏற்பட்டதனால்தான் இத்தகைய தடையை நாம் இங்கே சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இதனிடையே ஒரு செய்தி எனக்கு மின்னஞ்சலிலே வந்தது. அதிலே நமது மாநிலத்தைச் சேர்ந்த கார்வேந்தன் என்கிற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எம்.பி. அவர்கள் பிரதிநிதித்துவம் செய்து, அவர் கோரிக்கை விடுத்து, இன்றைக்கு 600 மெகா வாட் அளவுக்கு மின்சாரம். . .

2008 நவம்பர் 13]

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. உரையை முடியுங்கள். மணி 1-30 ஆகிவிட்டது.

திரு. து. ரவிக்குமார்: மத்திய அரசு வழங்குவதற்கு முன்வந்திருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அது உண்மையா என்பதையும் நான் உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இத்தகைய நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக மின் பற்றாக்குறை இல்லாத மாநிலமாகத் தமிழகம் திகழும் என்ற ஒரு கருத்தை மட்டும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாட்டில் நிலவும் மின்வெட்டுப் பிரச்சினை குறித்து, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் டாக்டர் விஷ்ணுபிரசாத் அவர்களும், பா.ம.க. உறுப்பினர் மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த சகோதரி மாண்புமிகு செல்வி பாலபாரதி அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாண்புமிகு திரு. இராமசாமி அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் மாண்புமிகு திரு. ரவிக்குமார் அவர்களும், பல நல்ல, அரிய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் விஷ்ணுபிரசாத் அவர்களும், கோ.க. மணி அவர்களும் பேசும்போது தமிழ்நாடு இருளிலே இருக்கிறது என்ற ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். நான் தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை இல்லவே இல்லை என்று வாதாட விரும்பவில்லை. மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது என்பது உண்மை. ஆனால் தமிழ்நாடே இருளில்தான் இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நான் இந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தாலும்கூட, நம்முடைய தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு மணி நேரமாவது மின்சாரத் துறை அதிகாரிகளுடனும், தலைமைச் செயலாளருடனும், நிதித் துறைச் செயலாளருடனும் விவாதித்து இந்த மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு எப்படியெல்லாம் நடவடிக்கை

எடுக்கவேண்டும் என்பதிலே முழுக் கவனம் செலுத்துகிறார் என்பதை நான் முதலில் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2007 ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலே நமக்கு மின்சாரப் பற்றாக்குறை இல்லை. இன்னும் சொல்லப் போனால் நம்மிடத்திலே உபரி மின்சாரம் இருந்தது. மகாராஷ்டிர மாநிலத்திற்கும், பஞ்சாப் மாநிலத்திற்கும் நாம் மின்சாரத்தை விற்றுக்கொண்டிருந்தோம். ஆனால் 2008-க்குப் பிறகு ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2006 மே 13 ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டு, புதிய தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வரவேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் காரணமாகவும், சிறு தொழில் கொள்கையிலே ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும், தமிழ்நாட்டிலே ஏராளமான தொழிற்சாலைகள் வந்து அதனுடைய விளைவாக ஆண்டு ஒன்றுக்கு 250 மெகா வாட் மின்சாரம் அதிகம் தேவைப்படும் என்பதற்கு மாறாக, 2007, 2008 ஆம் ஆண்டுகளிலே 1,000 மெகா வாட் மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே இதற்கு முன்னால் ஆண்டுக்கு 1 இலட்சம் முதல் 1-1/2 இலட்சம் வீடுகளுக்குத்தான் மின் இணைப்பு பெறுவார்கள். ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் ஆண்டுக்கு 5 இலட்சம் வீடுகளுக்கு புதிய மின் இணைப்புகள் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆக, இவை அத்தனையும் சேர்த்துப் பார்க்கின்ற நேரத்தில், நம்முடைய மின் உற்பத்தி 7,500 மெகா வாட்டாக இருக்கிறது. நம்முடைய மின் தேவை என்பது 9,200 மெகா வாட்டாக இருக்கிறது. இடையிலே இருக்கக்கூடிய 1,700 மெகா வாட் மின்சாரத்தை ஈடுசெய்வதற்காகத்தான் நாம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 1-35

குறிப்பாக, நம்முடைய முதலமைச்சர் அவர்களே டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்து, அன்னை சோனியா காந்தி அவர்களையும் சந்தித்து, தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசாங்கம் உதவி செய்யவேண்டும் என்று சொன்னபோது, 300 மெகா வாட் மின்சாரத்தை உடனடியாக, முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்து இறங்குவதற்கு முன்னாலேயே கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, அடுத்து 2 மாதம் கழித்து நான் டெல்லிக்குச் சென்று

2008 நவம்பர் 13] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மின் துறை அமைச்சரைச் சந்தித்து, மேலும் அதிகமான மின்சாரம் வேண்டும் என்று கேட்டபோது அவரும் 300 மெகா வாட் மின்சாரம் உடனடியாக வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்; கொடுத்தார்கள். அந்த மின்சாரத்தை நாம் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். Power Trading Corporation மூலமாகப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்து நம்முடைய நாட்டிலே காற்றாலைகள் மூலமாகக் கிடைத்துக்கொண்டிருந்த மின்சாரம் இப்போது கிடைக்காமல் போய்விட்டது.

நமக்குப் போதிய மழை இல்லாத காரணத்தால் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியவில்லை. அனல் மின் நிலையங்களிலே நமக்கு ஏற்பட்ட ஒரு பெரிய புதிய அனுபவம் என்னவென்று கேட்டால், மத்தியத் தொகுப்பிலேயிருந்து நமக்குக் கிடைத்துக்கொண்டிருந்த மின்சாரத்திலே ஏறக்குறைய 505 மெகா வாட் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. நெய்வேலியிலிருந்து கிடைத்துக் கொண்டிருக்கின்ற மின்சாரத்திலே 402 மெகா வாட் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே உள்ள மின் நிலையங்களிலிருந்து பெறக்கூடிய மின்சாரத்தில் 210 மெகா வாட் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆக, இவற்றையெல்லாம் சேர்த்தால், ஏறக்குறைய 1,000 மெகா வாட் அளவுக்கு இங்கே மின் நிலையங்களிலிருந்து உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தைப் பெறமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதையும் வேகப்படுத்துவதற்காக நம்முடைய தமிழகத்தினுடைய அனல் மின் நிலையங்களையும், நெய்வேலி மின் நிலையத்தையும், இராமகுண்டம் மின் நிலையத்தையும், அதைப்போல மத்தியத் தொகுப்பிலே இருக்கக்கூடிய மின் நிலையங்களையும், முழு மின்சாரம் வேண்டுமென்று நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அதற்கான முயற்சிகளிலே அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றையதினம் மின்சாரப் பற்றாக்குறை; இரண்டாவது, மின்சார வெட்டு என்பதைப் பற்றி இங்கே பேசினார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், மின்சார வெட்டு என்பது ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இன்றைக்குத்தான் நாம் கொண்டு வந்ததைப்போலப் பேசுவது தவறு. மாண்புமிகு நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் பதவியிலே இருந்தபோது கிட்டத்தட்ட 6 முறை மின்சார வெட்டு அமல்படுத்தப்பட்டிருக்கிறது. 1982-ல் 4 நாட்களுக்கு 100 சதவிகிதம்கூட மின்சார வெட்டு அமல்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான ஆதாரங்கள்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 நவம்பர் 13

எல்லாம் இருக்கின்றன. புத்தக வடிவிலே இருக்கின்றன, அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. 60 சதவிகிதம், 65 சதவிகிதம் கூட இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1998 ஆம் ஆண்டு 30 சதவிகிதம் மின்சார வெட்டு இருந்தது. முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் ஆட்சியில் demand cut 1991 செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து 30 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதம் வரையிலே மின்சார வெட்டு இருந்தது. ஆனால், மின்சார வெட்டு என்பதை தமிழகத்திலே ஏதோ புதியதாக தி.மு.க. ஆட்சியிலே இப்போதுதான் அறிமுகப்படுத்தியதைப்போல சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டாவது, நாம் H.T. Industry-க்கு 40 சதவிகிதம், L.T. Industry-க்கு 20 சதவிகிதம் என்று அறிவித்தோமே தவிர, நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இதுவரையிலே முழுமையாக எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் 40 சதவிகிதம் மின்சார வெட்டு அமல்படுத்தப்படவில்லை. L.T. Industry-க்கு 20 சதவிகிதம் அமல்படுத்தப்படவில்லை. ஏனென்று கேட்டால், தொழிலாளர்கள் வேலை இழந்துவிடக் கூடாது என்பதற்காக. மழை பெய்திருக்கின்ற காரணத்தினாலே, நம்மிடத்திலே இப்பொழுது மின்சாரம் இருக்கின்ற காரணத்தினாலே, ஓரளவுக்கு 1,500 மெகா வாட் மின்சாரம் மின்வெட்டாலே மிச்சமாகுமென்ற நிலைக்கு மாறாக, 200 மெகா வாட்தான் இப்பொழுது மிச்சமாகி இருக்கிறது. ஆக, 1,300 மெகா வாட் மின்சாரத்தை H.T. Industry-யும் L.T. Industry-யும் பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. எனவே, தொழிலாளர்கள் பாதிக்க வேண்டும்; தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை இருக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் நினைக்கவில்லை.

மூன்றாவது, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் வேறு சில கருத்துக்களைக்கூட சொன்னார்கள். ஏதோ N.T.P.C. இங்கே வருவதில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அக்கறை எடுத்துக்கொள்ளாமல் நீங்கள் விட்டுவிட்டீர்களே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் பேசினார்கள். N.T.P.C.-ஐ இங்கே 4,000 மெகா வாட் மின்சாரம் அவர்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்று நாங்கள்தான் அழைத்தோம். வந்தார்கள். "எங்கே நிலம்?" என்று கேட்டார்கள். செய்யூரிலே விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் நாங்கள் கடலூரிலே கொடுக்கிறோம் என்று சொன்னோம். உடனே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள், "அது விவசாய நிலம்; அதை எடுக்கக்கூடாது"

என்று சொன்னார்கள். எந்த நிலத்தைக் கொடுக்க இருந்தோமோ, அந்த நிலத்திலே அவரே ஏர் ஓட்டி, "இந்த நிலத்தை நீங்கள் பயன்படுத்தக்கூடாது; விவசாயிகளுடைய நிலம்" என்று சொன்னார்கள். எனவே, அவர்கள் நிலத்திலே (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன், கடைசியாகப் பேசிவிடுங்கள். ஏர் உழுவதும் இருக்கிறது; படம் வந்திருக்கிறது; பத்திரிகையிலே இருக்கிறது. ஆக, நான் சொல்வது—உங்களைக் குறை சொல்லவில்லை—பா.ம.க. கொள்கை என்னவென்றால், விவசாய நிலங்களை மின்சார உற்பத்திக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது ஒரு கொள்கை; அல்லது, அப்படி எடுத்தால், அதிக விலை கொடுக்க வேண்டும் என்பது ஒரு கொள்கை. ஆக, இந்த இரண்டு கொள்கைகளுக்கு இடையிலேதான் அந்த N.T.P.C.-யினுடைய மின்சார உற்பத்தித் திட்டம் அன்றையதினம் பாதிக்கப்பட்டது.

பிற்பகல் 1-40

ஆனால், மறுபடியும் நாங்கள்போய் செய்யூரிலே. . . (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) N.T.P.C. மூலமாக மின் உற்பத்தி நிலையம் கொண்டு வாருங்கள், நாங்கள் நிலம் வாங்கித் தருகிறோம் என்று சொல்லி நம்முடைய மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் முன்னின்று செய்யூரிலே N.T.P.C. மூலமாக 4 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். நிலத்தைப் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்கள். தமிழக அரசு உடனடியாக அவர்களுக்கு நிலம் கொடுப்பதற்கு ஒப்புதல் தந்திருக்கிறது என்கிற அந்த மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், கடைசியில் சொல்லுங்கள். அமைச்சர் பதிலை முடித்துவிடட்டும். அமைச்சர் பேசும்போது குறுக்கீடு இருக்கக்கூடாது.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசினுடைய N.T.P.C. நிறுவனம் கடலூருக்கு வருகை தரவிருந்ததாகவும், அங்கே வேல்முருகன் ஏர் உழுது காட்டி இது விவசாய நிலம் என்று தடுத்து நிறுத்தியதாகவும் சொல்கிறார்கள். அது உண்மைக்கு மாறான செய்தி. கடலூரில் அமையவிருந்தது Power Corporation என்கிற தனியாருக்குச் சொந்தமான நிறுவனம். அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் விவசாயம் செய்து வருகிறார்கள்.

ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய வாழ்வாதாரம் அதனால் பாதிக்கப்படும்; ஆதலால் தனியார் அங்கு மின் உற்பத்தியைத் தொடங்கக் கூடாது. மீனவ மக்கள் அங்கே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படித் தனியார் மின் உற்பத்தி செய்து அந்தக் கொதிப்பான்களின் நீர் வெளியேறுகின்றபோது மீன்கள் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட மக்கள் விவசாயக் கூலிகளாக வாழ்கிறார்கள். அவர்களுக்கான மாற்றுத் திட்டம், மறுவாழ்வு இல்லை. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெறும் இரண்டு இலட்சம் ரூபாய் தருகிறோம் என்று சொன்னார்கள். "அவர்கள் விரும்பிக் கொடுத்தால் நீங்கள் முன்வாருங்கள், இல்லையென்றால் எடுக்காதீர்கள்" என்று நான் சொன்னேன். அதற்காக அரசாணை போடப்பட்டது. "நாங்கள் கையகப்படுத்துவோம்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசாணையில் ஒரு தனிப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு Power Corporation-க்குதான் அப்பகுதி விவசாயிகள் தங்களுடைய நிலத்தை விற்க வேண்டுமே தவிர, வேறு யாருக்கும் விற்கக்கூடாது என்று இருந்தது. உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து அந்த ஆணையும் இப்போது இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரா, அரசா என்பதல்ல. மின் உற்பத்தி நிலையம் வர வேண்டுமென்று, முயற்சி எடுக்கின்றபோது அதைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்தீர்கள். நான் அதை இப்போது விவாதப் பொருளாக ஆக்கவில்லை. ஆனால், இந்த அரசாங்கம் மின்சார உற்பத்தி செய்வதற்கு அக்கறை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல; இங்கே மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி சொன்னார்கள்; மற்றவர்களும் சொன்னார்கள். நீங்கள் தனியாரையே நம்பி இருக்காதீர்கள். அரசாங்கத்திலே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலமாக நீங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்யுங்கள் என்று சொன்னார்கள். இது ஒரு நல்ல கருத்து. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு ஐந்தாவது முறையாக வந்தவுடனேயே இதே மன்றத்திலே அறிவித்தார்கள். வட சென்னையில் 1,200 மெகா வாட் மின்சாரத்தை மின்சார வாரியமே உற்பத்தி செய்யும்; மேட்டூரிலே 600 மெகா வாட் மின்சாரத்தை மின்சார வாரியமே உற்பத்தி செய்யும்;

2008 நவம்பர் 13] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அதைப்போல, தூத்துக்குடியிலே Neyveli Lignite Corporation-ம் மின்சார வாரியமும் சேர்ந்து 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்; உடன்குடியிலே B.H.E.L. நிறுவனமும் மின்சார வாரியமும் சேர்ந்து 1,600 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும்; அதேபோல, வள்ளூரில் N.T.P.C. மூலமாக 1,200 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் என்று அறிவித்து, இப்போது டெண்டர்கள் விடப்பட்டு பணிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதன்மூலமாக நமக்குக் கிடைக்க இருக்கின்ற மின்சாரம் 5,900 மெகா வாட் ஆகும். இவை அரசாங்கத்திற்குச் சொந்தமான மின்சார நிலையங்கள். இஃதன்னியில் ஜெயங்கொண்டத்திலே Neyveli Lignite Corporation மூலமாக 1,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, 8,800 ஹெக்டேர் நிலமும் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஜி.கே. மணி அவர்கள், 50,000 ரூபாய், ஒரு இலட்சம் ரூபாய் என்று கொடுத்து விவசாயிகளிடம் அந்த நிலத்தை வாங்கியிருக்கிறீர்கள்; 5 இலட்சம் ரூபாய் கொடுக்கக்கூடாதா என்று கேட்டார்கள். நாங்கள் அந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்பதற்காக, அடிக்கல் நாட்டுவதற்கு அனுமதி தாருங்கள்; எவ்வளவு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதை நீதிமன்றம் முடிவு செய்யட்டும்; அவர்கள் 5 இலட்சம் ரூபாய்தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அதையும் அரசாங்கம் கொடுக்கத் தயாராக இருக்கிறது என்று வாக்குறுதி தந்து நானும், மத்திய அமைச்சர் திரு. ஆ. ராசா அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து ஜெயங்கொண்டத்திற்கே போய் விவசாயிகளையும் கூப்பிட்டுப் பேசி, நீங்கள் முதலிலே இந்தத் திட்டத்தை அனுமதியுங்கள், பிறகு விலையை நீதிமன்றத்தின்மூலமாக நிர்ணயித்துக்கொள்ளலாம் என்று சொல்லி, அந்தத் திட்டத்தையும் நாங்கள் இப்போது தொடங்க இருக்கிறோம். ஆக, 7,400 மெகா வாட் மின்சாரத்தை மத்திய, மாநில அரசுகள்மூலமாக உற்பத்தி செய்ய இருக்கிறோம். இஃதன்னியில், N.T.P.C. மூலமாக 4,000 மெகா வாட் மின்சாரத்தை செய்யூரிலே உற்பத்தி செய்ய இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

ஆக, இந்தத் திட்டங்களெல்லாம் வருகின்ற நேரத்தில் நமக்கு மின்சாரப் பற்றாக்குறையில்லாமல் போய்விடும். ஆனால், இதற்கிடையிலே என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டால், உண்மையைச் சொல்கிறேன். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சருக்கும் ஒரு கடிதம் எழுதினார்;

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 நவம்பர் 13

எனக்கும் ஒரு கடிதம் எழுதினார். அதையும் மின்சார வாரியத்துடன் நாங்கள் விவாதித்தோம். அதன் பயனாக இன்று தமிழ்நாட்டில், 1-11-2008-லேயிருந்து சில புதிய நிபந்தனைகளை நாங்கள் அமல்படுத்தியிருக்கின்றோம். என்ன நிபந்தனை என்றால், ஒரு நாளைக்கு பகலிலே இரண்டு மணி நேரத்திற்கு மேல் எந்தக் கிராமத்திலேயும் மின்சாரம் தடை செய்யக் கூடாது; எல்லாக் கிராமங்களுக்கும் ஒரு நாளைக்கு 2 மணி நேரம் மின்சாரத் தடை தவிர மீதி 22 மணி நேரம் மின்சாரம் கொடுக்க வேண்டும்; சென்னைக்கு மட்டும் 1 1/2 மணி நேரம் மட்டும் மின் தடை ஏற்படுத்தப்பட்டு மீதி 22 1/2 மணி நேரமும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று அறிவித்துவிட்டு, H.T. supply industries-க்கு மட்டும், "6 முதல் 10 மணி வரையில் இரவு நேரத்திலே நீங்கள் உங்கள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்" என்று சொன்னோம். அவர்கள் எங்களோடு பேச முன்வந்தார்கள். அப்படி வந்தபோது அவர்கள் என்ன சொன்னார்கள் என்று கேட்டால், "VAT வரியை நீங்கள் இரத்து செய்யுங்கள், நாங்கள் 1,500 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம்" என்று சொன்னார்கள். நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டோம். முதலமைச்சர் அவர்களும் ஒப்புதல் தந்தார்கள். அதற்கு நம்முடைய நிதித் துறைச் செயலாளரும் ஒப்புக்கொண்டார். திரு. மாணிக்கம் இராமசாமி என்பவர் சி.ஐ.ஐ.-யினுடைய தலைவர், அவரோடு திரு. ரெங்கநாதன் என்பவர், அவரோடு தொழிலதிபர்கள் எல்லோரும் வந்தார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "1,500 மெகா வாட் மின்சாரத்தை எங்களிடத்திலே இருக்கக்கூடிய ஜெனரேட்டர்களைப் பயன்படுத்திக்கொண்டு உற்பத்தி செய்ய நீங்கள் அனுமதித்தால் நாங்கள் எங்களுடைய தொழிற்சாலைகளையும் இயக்கிக்கொள்கிறோம். அதைப்போலவே, கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, மாவட்டங்களிலே இருக்கக்கூடிய சிறிய தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கும் ஒரு யூனிட்டுக்கு கூடுதலாக ஒரு ரூபாய் இருபது காசு என்ற அளவில் எந்தத் தொழிலும் பாதிக்காத அளவுக்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம். சிறு தொழிலதிபர்களைப் பார்த்து அவர்களிடத்திலே அதற்கான கடிதத்தைப் பெற்றுக்கொண்டு வந்து Regulatory Commission முன்னாலே நவம்பர் மாதம் ஒன்றாம் தேதி கொடுக்கிறோம்" என்று சொல்லிவிட்டுப் போனார்கள். போனார்களே தவிர, அவர்கள் போய் சிறு தொழிலதிபர்களிடத்திலே பேசிவிட்டு அவர்களிடமிருந்து வசூலித்து, "நாங்கள் இதற்கு ஒத்துக்கொள்ளமாட்டோம்; நீங்கள் வேண்டுமானால் டீசலைப்

2008 நவம்பர் 13] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ளுங்கள்; நாங்கள் அதற்கு ஒத்துக்கொள்ளமாட்டோம்" என்று அவர்கள் மறுத்துவிட்டார்களாம்.

பிறகு, மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு திரு. இ. பெரியசாமி அவர்களும், நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன் அவர்களும் தொழிலதிபர்களையெல்லாம் கூப்பிட்டுக்கொண்டு வந்து நாங்கள் ஒத்துக்கொள்ளச் செய்கிறோம். நீங்கள் VAT வரியை இரத்துச் செய்யுங்கள்; gensets-ஐ 1,500 மெகா வாட் அளவுக்குப் பயன்படுத்த நாங்கள் ஒப்புதல் பெற்றுத் தந்து சிறு தொழிலதிபர்களிடத்திலேயும் கடிதம் வாங்கித் தருகிறோம் என்று அவர்களும் சொல்லிவிட்டுப் போனார்கள். அவர்களும் முயற்சி செய்து, அதை இதுவரையிலே நிறைவேற்றவில்லை. இந்தச் சூழ்நிலையிலேதான் இப்போது நமக்கு இருக்கக்கூடிய இந்த மின்சாரப் பிரச்சினை, நவம்பர் மாதம் 30 ஆம் தேதி வரையிலேயும் கிராமங்களிலே ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம்தான் மின்சாரம் இருக்காது. 22 மணி நேரம் மின்சாரம் கிடைக்கும். விவசாயத்திற்கு 10 மணி நேரம் மின்சாரம் கிடைக்கும். டி.வி. பார்த்துக்கொள்ளலாம், லைட் எரியும், எல்லாம் எரியும். எந்தவிதமான தடங்கலும் இருக்காது. ஆனால், தொழிற்சாலைகள் மட்டும் 6 மணியிலிருந்து 10 மணிவரையில் அவர்களுடைய ஜெனரேட்டர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோமே தவிர, யாருக்கும் எந்தவிதமான இடையூறும் செய்யவில்லை. H.T. இணைப்புக்கு 40 சதவிகிதம் மின்வெட்டு அறிவித்தும்கூட, L.T. இணைப்புக்கு 20 சதவிகிதம் மின்வெட்டு அறிவித்தும்கூட முழுமையாக இன்னும் அதை அமல்படுத்தவில்லை என்பதையும் மீண்டும் நான் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இந்த மின்சாரப் பற்றாக்குறை நிரந்தரமாக இருந்துவிடக்கூடாது என்பதற்காக நேற்றையதினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு பக்கத்திலே இலங்கைத் தமிழர்களுக்கான தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, தலைமைச் செயலாளரையும், நிதித் துறைச் செயலாளரையும், என்னையும், நம்முடைய மின்சார வாரியத் தலைவர், எரிசக்தித் துறைச் செயலாளர் அத்தனை பேரையும் அழைத்துப் பேசி, நீங்கள் நவம்பர் 30 ஆம் தேதி வரையிலே சமாளித்துவிடுவீர்கள். டிசம்பரிலிருந்து ஏப்ரல் மாதம் வரையில் வெயில் காலம் வரும்போது இந்த மின்சாரத்தை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 நவம்பர் 13

வைத்துக்கொண்டு எப்படிச் சமாளிப்பீர்கள் என்று கலந்து பேசி, அவரே நடவடிக்கை எடுத்து. மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்களைப் பிரதமரோடு சந்திக்க வைத்து. அவர் பிரதமரைப் போய்ச் சந்தித்து, அவர் உடனடியாக எரிசக்தித் துறை அமைச்சரையும் கூப்பிட்டுப் பேசி, உடனடியாக 600 மெகா வாட் மின்சாரம் டிசம்பர் 1 ஆம் தேதியிலிருந்து ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதிவரையிலும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்ற வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

அதற்காக, இந்த 5 மாதங்களுக்கு மட்டும் சொல்கிறேன், 1,050 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்று மத்திய அரசு சொன்னபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறு தயக்கமும் காட்டாமல், பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, தமிழ்நாட்டு மக்களுக்கு மின்சாரத்தை வழங்க வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடு, இழப்பைப்பற்றிக் கவலைப்படாமல், 600 மெகா வாட் மின்சாரத்தை நாம் வாங்குவதற்கு அதிகாரிகளை அனுப்பி அதற்கான கடிதத்தை நேற்று முன்தினமே கொடுத்துவிட்டோம். இன்று காலையிலே நமக்கு வந்த மகிழ்ச்சியான செய்தி, மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் மறுபடியும் மத்திய அரசிடம் பேசி 600 மெகா வாட்டுக்குப் பதிலாக 1,000 மெகா வாட் மின்சாரம் பெற்றுத்தருவதற்கான ஒரு வாக்குறுதியைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே நமக்கு, எதிர்காலத்திலே, 1,000 மெகா வாட் மின்சாரம் கிடைக்கும். ஆகையினால் கோடைக் காலத்தை நாம் சமாளித்துவிடலாம்.

அடுத்து, நமக்குக் கூடங்குளம் மின்சாரத்தினைப் பொறுத்தவரையிலும், ஏப்ரல் மாதத்திலே 466 மெகா வாட் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. அது டிசம்பர் மாதத்திலேயே கிடைக்க வேண்டும். ஆனால், யுரேனியம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இங்கே ஒரு பெரிய வாக்குவாதமே நடந்தது, 123 Agreement-ஐப் பற்றி. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. நாம் ரஷ்ய அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, கூடங்குளத்திலே 2,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 1998-லேயே அனுமதி வழங்கிவிட்டோம். 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்கள் நமக்குக் கொடுத்த வாக்குறுதி, "2007-ல் நாங்கள் 2,000 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தருகிறோம்" என்பது. ஆனால், அவர்களாலே முடியவில்லை. ஏனென்று கேட்டால், எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன; கட்டடங்கள் கட்டியாகிவிட்டன;

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 13] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

யுரேனியம் அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தினாலே அவர்களால் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியவில்லை. "இப்போது ரஷ்ய அரசாங்கம் வருகின்ற டிசம்பருக்குள்ளாக யுரேனியத்தை அனுப்பிவிடும்; மார்ச் மாதம் அல்லது ஏப்ரல் மாதத்திலே எப்படியும் முதல்கட்டமாக, 1,000 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தருகிறோம். டிசம்பரிலே மேலும் ஒரு 1,000 மெகா வாட் மின்சாரத்தினை உற்பத்தி செய்து தருகிறோம் "என்று அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டால், ஏறக்குறைய 950 மெகா வாட் மின்சாரம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும். 2009 ஆம் ஆண்டினைப் பிரச்சினை இல்லாமல் நாம் அணுக முடியும்.

இதற்கிடையில் நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகள்மூலமாக வள்ளூரில் உற்பத்தியாகக்கூடிய 1,200 மெகா வாட்டில், 2010 அக்டோபர் மாதம் நமக்கு 500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகவிருக்கிறது. அந்த மின்சாரமும் 2010 ஆம் ஆண்டு கிடைக்கும். வட சென்னையில் மின்சார வாரியம்மூலம் 1,200 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முதலமைச்சர் அனுமதித்தார் அல்லவா? அதில் மின்சார வாரியத்திற்கு 1200 மெகா வாட் மின்சாரம் 2010 டிசம்பரிலே உற்பத்தி செய்வதற்கு B.H.E.L. நிறுவனம் ஒப்பந்தம் செய்து அவர்கள் இப்பொழுதே, டிசம்பருக்கு முன்னாலேயே 600 மெகா வாட் மின்சாரத்தினை உற்பத்திச் செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்து 600 மெகா வாட் மின்சாரம் 2011 ஜனவரியிலே உற்பத்தி செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக என்னைவிட அதிகமான கவனத்தை முதலமைச்சர் அவர்கள் செலுத்தி, எல்லாரோடும் விவாதித்து, எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கிறார்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், நான் சொல்லக்கூடாது என்று நினைத்தாலுங்கூட, ஒவ்வொரு நாளைக்கும் "தமிழ்நாடு இருளிலே இருக்கிறது; 20 மணி நேரம் தமிழ்நாட்டிலே மின்சாரம் இல்லை; எனவே, இந்த மின்சார இலாகாவைக் கண்டித்து, தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களைக் கண்டித்து நாங்கள் போராட்டம் நடத்துகிறோம்" என்று தமிழ்நாடு பூராவும் தினந்தோறும் போராட்டம் நடத்துகிறார்கள். அதிலே மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு. பன்னீர்செல்வமும் கலந்துகொள்கிறார்; நம்முடைய அ.தி.மு.க. கொறடா திரு. செங்கோட்டையன் கலந்துகொள்கிறார்; நம்முடைய அ.தி.மு.க. தலைவர்கள் எல்லாம் கலந்துகொள்கிறார்கள். எனக்கு அதிலே

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 நவம்பர் 13

எந்தவிதமான கோபமும் கிடையாது. ஆனால் 20 மணி நேரம் தமிழ்நாட்டிலே உண்மையிலேயே மின்சாரம் இல்லாமல் இருக்கிறதா? அதை தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். 2 மணி நேரம், 3 மணி நேரம் மின்சாரம் இல்லை என்று சொல்லுங்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் 20 மணி நேரம் மின்சாரம் இல்லை என்று சொல்லக்கூடிய முன்னாள் முதலமைச்சர், அவருடைய வீட்டிற்கு எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தியிருக்கிறார் என்ற கணக்கினை நான் பார்த்தேன். நான் இதைச் சொல்லக்கூடாது என்றுகூட நினைத்தேன். அவர்கள் இப்படி ஒரு போராட்டம் நடத்துகின்ற காரணத்தினாலே, நாட்டு மக்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அவர்களுடைய வீட்டில், நான் சொல்வது போயஸ் கார்டனில் மட்டும்தான்; வேறு வீடுகளை நான் கணக்கிலே எடுத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால், அவர்களுக்கு எத்தனையோ வீடுகள் இருக்கின்றன. அந்த போயஸ் கார்டன் வீட்டிலே மட்டும் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்தினுடைய அளவு எவ்வளவு என்று கேட்டால் இரண்டு மாதத்திற்கு அவர்கள் கட்டியிருக்கின்ற பணம் 1,02,468 ரூபாய். இவ்வளவு பணம் கட்டவேண்டும் என்று சொன்னால் எத்தனை யூனிட் மின்சாரம் அவர்கள் பயன்படுத்தியிருக்கவேண்டும் என்ற கணக்கையும் நீங்கள் போட்டுப் பார்த்துக்கொள்ளலாம்.

பிற்பகல் 1-55

நான் உடனே அ.தி.மு.க.காரர்கள் இதனைக் கேட்பார்கள் என்பதற்காக, ஒருசமயம் முன்னாள் முதலமைச்சர்தான் இவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்திவிட்டார்போல இருக்கிறது; நம்முடைய முதலமைச்சர் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தியிருக்கிறார் என்று பார்த்தால், அவர் பயன்படுத்தியிருக்கிற மின்சாரம் 2 மாதத்திற்கு 15,000 ரூபாய்அளவிற்குத்தான். ஆக, 1 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய்க்கு மேலே 2 மாதத்திற்கு மின்சாரத்தைப் பயன்படுத்திவிட்டு, தமிழ்நாடு இருளிலே இருக்கிறது. இருளிலே இருக்கிறது என்று மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிற அந்த ஒரு பிரச்சாரத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவர்களும் பலியாகப் போகிறீர்களா? அல்லது, உண்மையிலேயே தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது; அந்தத் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு நம்முடைய முதலமைச்சர் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்; அவரோடு ஒத்துழைப்போம் என்ற ஒரு நிலைக்கு நீங்கள் வரப்போகிறீர்களா என்பதைத்தான் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தமிழ்நாட்டிலே எதிர்காலத்திலே மின்சாரப் பற்றாக்குறை வராமல்

2008 நவம்பர் 13] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பார்த்துக்கொள்வதற்கு முதலமைச்சர் எல்லாவித நடவடிக்கையும் எடுப்பார்; அதற்கு நீங்களும் துணையாக இருக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரிடத்திலே கேட்க விரும்புவது, சமீபத்திலே தனியார் இங்கே மின் உற்பத்தி செய்யலாம்; அவர்களே மின்சாரத்தை வேண்டியவர்களுக்கு, விரும்பியவர்களுக்கு விற்றுக்கொள்ளலாம்; ஆனால், அது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனுமதி இல்லாமலே நம்முடைய மின் பாதை, அதாவது லைன் மூலமாகவே விற்றுக்கொள்ளலாம் என்று ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன், அது உண்மையா? அப்படி இருக்கிறது என்று சொன்னால், தனியாரே உற்பத்தி செய்து, அவர்களே யாருக்கு வேண்டுமானாலும் விருப்பத்திற்கேற்ப விற்றுக்கொள்ளலாம் என்று சொன்னால், நாளைக்கு மின்சாரத்தின் விலை எங்கு போய் நிற்கும்? இதைத் தமிழ்நாட்டில் அனுமதிக்கலாமா, இது ஏற்புடையதல்ல. அதைத் தடைச் செய்யுங்கள்; தடுத்து நிறுத்துங்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதே நேரத்திலே மின் உற்பத்தி நிலையங்கள் வருவதற்கு பா.ம.க. தடையாக இருப்பதைப்போல ஒன்றைச் சொன்னார்கள், இல்லை. நாங்கள் செய்யூரிலே வேண்டுமென்று சொன்னோம். எங்கெங்கேயோ அலைந்துவிட்டு, வேண்டாம் என்ற செய்யூருக்கே மீண்டும் வந்திருக்கிறீர்கள். அதற்கு நன்றி. அதைப்போல, கடலூர் பகுதியிலே ஏக்கர் ரூபாய் 2 இலட்சத்திற்குக் கேட்டீர்கள். ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு எப்படிக் கொடுக்க முடியும்? விளைநிலங்களான காரணத்தினாலேதான் அதிக விலை கொடுங்கள்; இல்லையென்று சொன்னால், பொட்டல் காடாகப் பார்த்து, விளைநிலம் இல்லாத இடத்தைத் தேர்வு செய்யுங்கள் என்று சொல்கிறோமே தவிர, மின் உற்பத்தி நிலையங்களுக்கு பா.ம.க. தடையில்லை என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேரம் இல்லாத காரணத்தினாலே சில செய்திகளைச் சொல்ல இயலவில்லை. தமிழ்நாடு மின்சார வாரியம் என்ன அறிவித்திருக்கிறது என்றால் இங்கேகூட சொன்னார்கள்; நம்முடைய பாலபாரதி அவர்கள்கூட சொன்னார்கள்; மற்றவர்களும்

சொன்னார்கள்; MALCO போன்ற நிறுவனங்கள் captive power தயாரிக்கின்றன. ஆனால், அந்தத் தொழிற்சாலையிலே உற்பத்தியாகின்ற மின்சாரத்தை அந்நிறுவனங்கள் விற்க முடியவில்லை என்ற ஒரு கருத்தை எங்களிடத்திலே தெரிவித்ததும்—இப்படித் தனியார் உற்பத்தி செய்து வெளியே விற்க முடியாமல், இருக்கின்ற மின்சாரத்தை நாம் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இதுவரையிலே, அவர்கள் third party sale என்று சொல்லக்கூடிய இன்னொருவருக்கு விற்கக்கூடிய அந்த உரிமையைப் பெறாமல் இருந்தார்கள்; இப்போது முதன்முறையாக தமிழ்நாட்டிலே MALCO போன்ற நிறுவனங்கள், அவர்களுக்குத் தேவையான மின்சாரத்திற்குப் போக, அதிகமாக உற்பத்தி செய்வார்களேயானால், அவர்கள் அதை எந்த H.T. Industries-க்கும் விற்றுக்கொள்ளலாம்; அதற்கு எவ்வளவு விலை வேண்டுமானாலும் அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்; அதிலே தமிழக அரசு தலையிடாது என்று சொல்லி அவர்களை அனுமதித்திருக்கின்றோம்.

அதேபோல Bio-mass. Bio-mass மின்உற்பத்தி நிலையங்கள் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தையும் தொழிலதிபர்களுக்கு விற்றுக்கொள்ளலாம். ஏனென்று சொன்னால், தொழிலதிபர்கள் தங்களுக்கு மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்திலே, அவர்கள் இப்படிப்பட்ட மின்சாரத்தை வாங்கி, தங்களுடைய தொழிற்சாலைகளை இயக்கிக்கொள்வதற்காகத்தான் அந்தச் சலுகை தரப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; தனியார் சிறுதொழில் நிறுவனங்கள், ஜெனரேட்டர்கள் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தால்கூட, ஒரு தனியார் சிறு தொழில் அதிபருக்கு அதிகபட்சம் 150 கே.வி.ஏ. ஜெனரேட்டர் வாங்க, 5 இலட்சம் ரூபாய் அல்லது 6 இலட்சம் ரூபாய் செலவானால், 25 சதவிகித மானியம், கிட்டத்தட்ட 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் தமிழக அரசு கொடுக்கும். மீதி 75 சதவிகிதம் அவர்கள் வங்கியிலே கடன் வாங்கிக்கொள்ளலாம். அவர்கள் மூலதனம் போடாமலேயே ஜெனரேட்டர்கள் வாங்கிக்கொள்வதற்கான வசதியையும் நாங்கள் செய்து தந்திருக்கின்றோம்.

பிற்பகல் 2-00

இன்னும் ஒன்று; கேசலைப் பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே, கேசலைப் பற்றிச் சொன்னால், இன்னும் நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கும். கஷ்டப்பட்டு முதலமைச்சர் மத்திய அரசிற்குக் கடிதம் எழுதி, நான் நேரடியாகப் பெட்ரோலியத் துறை அமைச்சரிடம் தொடர்பு கொண்டு, தமிழ்நாட்டிலே ஒரு நாளைக்கு

2008 நவம்பர் 13] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]
ஜெனரேட்டர்கள் பயன்படுத்த 2,100 கிலோ லிட்டர் டீசல் எங்களுக்காகத் தனியாக ஒதுக்குங்கள் என்று சொல்லி, அவர் ESSAR நிறுவனத்தைக் கூப்பிட்டு தமிழ்நாட்டிலே கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களிலேயும் 2,100 கிலோ லிட்டர் ஒரு நாளைக்கு நம்முடைய தொழிலதிபர்கள் வாங்கிக் கொள்வதற்காக டீசலை வாங்கி வந்து வைத்திருக்கிறார்கள். வேடிக்கை என்னவென்றால், இந்த ஒரு மாத காலத்திலே நம்முடைய தொழிலதிபர்கள் எவ்வுள்வு டீசல் அவர்களிடத்திலே வாங்கியிருக்கிறார்கள் என்று கேட்டால், வெறும் நூறு கிலோ லிட்டர் அளவுக்குத்தான் அவர்கள் வாங்கியிருக்கிறார்கள். ஆக, அவர்கள் டீசல் வாங்கி மின்சாரம் உற்பத்தி செய்யத் தயாராக இல்லை என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. இருந்தாலுங்கூட, தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, அவர்களுக்கு டீசலை வாங்கிக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கின்றோம். அவர்கள் அதற்காகச் செலுத்தவேண்டிய VAT வரியைச் செலுத்த வேண்டியதில்லை; உங்களுக்கு விதிவிலக்குத் தருகிறோம் என்று சொல்லி, அந்த வரி விலக்கையும் நாங்கள் அமல்படுத்தியிருக்கின்றோம். இதையும் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் தொடர்ந்து தொழில் நடத்துவதற்கும், தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பாமல் இருப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. எனவே, எந்தத் தொழிலாளரும் பாதிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் விரும்பவில்லை. எந்தத் தொழிற்சாலையையும் மூட வேண்டும் என்று இந்த அரசாங்கம் விரும்பவில்லை. எல்லாத் தொழிற்சாலைகளையும் நடத்துவதற்கு எல்லாவிதமான வசதிகளையும் இந்த அரசு செய்து தரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (இறுக்கு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட, நெடிய விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறையைச் சரி செய்வதற்கான ஒத்துழைப்பினை இன்று அவர்கள் கோரியுள்ளார்கள். தமிழ்நாட்டிலே ஏற்றுமதியை முன்னிறுத்திச் செயல்படுகின்ற Export Oriented Units, அந்தத் தொழிற்சாலைகளில் சில, தொடர்ந்து Continuous Processing Industries ஆக இருக்கின்றன. அதாவது, முழுமையாக ஒரு பொருளை உற்பத்தி செய்கின்ற அளவுக்குத் தடையில்லாத மின்சாரம் கிடைத்தால்தான்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 நவம்பர் 13

அவர்கள் அந்தப் பொருளை உற்பத்தி செய்யமுடியும் என்ற நிலையில் PCP Units ஆக இருக்கின்றன. (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். இதில் இப்பொழுது அவர்களுக்குத் தடை ஏற்படுகின்றபோது, அந்தத் தயாரிப்பு செய்கிற அந்த whole lot is getting damaged. இரண்டாவதாக இப்போது energy cut, demand cut என்று இரண்டு வைத்திருக்கிறீர்கள். அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலைக்கு 1,300 KVA quality current வேண்டும் என்று சொன்னால், இப்பொழுது 40 percent cut என்று சொல்லி 940 KVA unit-தான் நீங்கள் supply செய்கிறீர்கள். ஆனால், அதை வைத்துக்கொண்டு அந்த இயந்திரங்களை ஓட்ட முடியவில்லை. இதைப்போன்ற தொழிற்சாலைகளில் அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று சொன்னால், "அரசு சொல்கின்ற அந்த மின்சாரத்தை மட்டும் நாங்கள் எடுத்துக்கொள்ளுகிறோம்; ஆனால், எங்களுக்குத் அதைத் தொடர்ச்சியாக ஒரு 10 நாளோ, 12 நாளோ தந்துவிடுங்கள், அதில் நாங்கள் நடத்தி முடித்துவிடுகிறோம்" என்று சொல்கிறார்கள். அதை அனுமதிப்பீர்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்ததைப்போல, Continuous Process Industries—அது சிமெண்ட் மில்லாக இருக்கலாம்; பேப்பர் மில்லாக இருக்கலாம்—இப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கெல்லாம் தினந்தோறும் மின்சார வெட்டு என்பதிலேயிருந்து விலக்களித்து மாதத்திலே 25 நாட்கள் அவர்கள் ஆலையை ஓட்டிக்கொள்ளலாம். அந்தத் தொழிற்சாலையை நடத்தலாம். கடைசி 5 நாட்கள் மட்டும் அவர்கள் மூடி வைக்கவேண்டும் என்று அந்தச் சலுகையைக் கொடுத்திருக்கின்றோம். அவர்களும் எங்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மணி 2-03.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், தனியார் உற்பத்தி செய்கிறார்கள், விரும்புகிறவர்கள் வாங்கிக்கொள்கிறார்கள் என்று. அதற்கிடையிலே தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் பாதைமூலமாக, நம்முடைய கம்பிமூலமாகத்தான் அது செல்கிறது. ஆகவே, அதைக் கட்டுப்படுத்துவதற்கு,

2008 நவம்பர் 13] [திரு. ஜி.கே. மணி]

ஒழுங்குபடுத்துவதற்கு மின்சார வாரியம் வேண்டாமா? யார் வேண்டுமானாலும் உற்பத்தி பண்ணிக்கொள்ளலாம் என்று சொன்னால், விலை எங்கேயோ போய்விடும் எதிர்காலத்திலே. இதைக் கட்டுப்படுத்துவதற்கு, தனியார் உற்பத்தி செய்யலாம்; அதை விற்பனை செய்வதற்கு அரசு கட்டுப்பாடு வேண்டும். (குறுக்கீடுகள்)

பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். எல்லா இடங்களிலும் நீங்களே நேரடியாக விலை கொடுத்து, நீங்களே விலை பேசி வாங்குகிறீர்கள். ஜெயங்கொண்டத்தில் மட்டும் எதற்கு நீதிமன்றம்? போய் நுழைவோம்; நீதிமன்றம் சொன்னபோது விலை கொடுப்போம்; நிலத்தைக் கொடுங்கள் என்பது கூடாது. விவசாயிகளை அழைத்துப் பேசி, விவசாய சங்கங்களை அழைத்துப் பேசி—எல்லா நிலங்களையும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்—நேரடியாக விலை பேசி வாங்கி, விவசாயிகளையும் வாழ வைத்து, மின் உற்பத்தித் திட்டங்களைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரிடத்திலே இருந்து தொழிலதிபர்கள் மின்சாரம் வாங்குவதுபற்றிச் சொன்னார்கள். மின்சார இலாகாவுக்குத் தெரியாமல் அவர்கள் வாங்கமுடியாது. அவர்கள் எவ்வளவு மின்சாரம் வாங்குகிறார்களோ அதற்கு wheeling charges கொடுக்க வேண்டும். நம்முடைய மின் கம்பிகள் மூலமாகத்தான் அவர்கள் மின்சாரத்தைக் கொண்டு போகவேண்டும். அந்த wheeling charges-ஐ நமக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒரு நிபந்தனை போட்டிருக்கிறோம். எனவே, அதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.

பிற்பகல் 2-05

ஜெயங்கொண்டத்தைப் பொறுத்தவரையிலே 8,800 ஹெக்டேர் நிலம் வாங்கியாகிவிட்டது. அதிலே அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், விலை போதாது; உயர்த்திக் கொடுங்கள் என்று கேட்டார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். யார் விலையை நிர்ணயிப்பது? ஒரு நீதிபதியை நியமித்திருக்கிறோம். அந்த நீதிபதி விவசாயிகளிடத்திலேயும் கலந்து பேசி, அங்கே இருக்கக்கூடிய மார்க்கெட் விலை என்னவென்று யோசித்து, அவர்கள் இவ்வளவு

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 நவம்பர் 13

விலைதான் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அந்த விலையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஒப்புதல் தந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தை வழங்கியிருக்கிறார்கள். சேலத்தில், 'மால்கோ' என்ற அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. 3,000 தொழிலாளிகள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையில் உடனடியாக மாண்புமிகு அமைச்சர் — (குறுக்கீடு) இன்னொரு கேள்வி கேட்டுவிடுகிறேன்—அமைச்சர் அவர்கள் தலையிடுவார்களா என்பதைத் தெரிந்துகொள்வதோடு, இறுதியாக 2 மணி நேரம் கிராமங்களுக்கு மின் தடை தொடரும்; 4 மணி நேரம் தொழிற்சாலைகளுக்கு மின் தடை தொடரும் என்ற பதிலையும் நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். இதையும் குறைத்து முறைப்படுத்துவதற்கு, மின் தடையே இல்லாத அளவிற்கு நீங்கள் திட்டமிட்டு, உடனடியாக அதைச் சரி செய்ய வேண்டுமென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதைப்போல, 'மால்கோ' நிறுவனம் உற்பத்தி செய்யக்கூடிய உபரி மின்சாரத்தை வாங்குவதற்கு சி.ஐ.ஐ.—யினுடைய தலைவர் திரு. மாணிக்கம் இராமசாமி அவர்களிடத்திலே பேசி, இரண்டு பேரையும் நான் என்னுடைய அறையிலேயே உட்காரவைத்து, அந்த மின்சாரத்தை வாங்கிக்கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன். எனவே, 'மால்கோ' உற்பத்தி செய்யக்கூடிய உபரி மின்சாரத்தை அவர்கள் வாங்கிக் கொள்வார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, திரு. சிவபுண்ணியம்?

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அளித்திருக்கிற விளக்கம், உறுப்பினர்கள் கேட்ட கேள்வி, எல்லாவற்றுக்கும் திரும்ப அளித்திருக்கிற பதில், இவற்றையெல்லாம் பார்க்கிறபோது, மின் பற்றாக்குறை இல்லாமல் முழு திருப்தியாக இருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை சிறப்பாகவே உருவாக்கிவிட்டார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திருப்தி அடைவதைவிட, என்னுடைய வேண்டுகோள் ஆளுங்கட்சி சட்டமன்ற

உறுப்பினர்களும், அமைச்சர்களும் திருப்தி அடைந்தாலே போதும். நன்றி.

6. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளைப் பின்னர் எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுப்பதாக இருந்த மற்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த முன்னறிவிப்புகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது முதல் நூற்று முப்பத்து ஆறாவது வரையிலான, பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது முதல் நூற்று நான்காவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2008-2009 ஆம் ஆண்டிற்கான

உறுப்பினர்களும், அமைச்சர்களும் திருப்தி அடைந்தாலே போதும். நன்றி.

6. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளைப் பின்னர் எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுப்பதாக இருந்த மற்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த முன்னறிவிப்புகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது முதல் நூற்று முப்பத்து ஆறாவது வரையிலான, பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது முதல் நூற்று நான்காவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2008-2009 ஆம் ஆண்டிற்கான

2008 நவம்பர் 13] [திரு. வை. சிவபுண்ணியம்]

உறுப்பினர்களும், அமைச்சர்களும் திருப்தி அடைந்தாலே போதும். நன்றி.

6. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளைப் பின்னர் எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுப்பதாக இருந்த மற்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த முன்னறிவிப்புகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது முதல் நூற்று முப்பத்து ஆறாவது வரையிலான, பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது முதல் நூற்று நான்காவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2008-2009 ஆம் ஆண்டிற்கான

உறுப்பினர்களும், அமைச்சர்களும் திருப்தி அடைந்தாலே போதும். நன்றி.

6. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளைப் பின்னர் எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுப்பதாக இருந்த மற்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த முன்னறிவிப்புகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது முதல் நூற்று முப்பத்து ஆறாவது வரையிலான, பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது முதல் நூற்று நான்காவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேர்வைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2008-2009 ஆம் ஆண்டிற்கான

2008 நவம்பர் 13] [திரு. வை. சிவபுண்ணியம்]

உறுப்பினர்களும், அமைச்சர்களும் திருப்தி அடைந்தாலே போதும். நன்றி.

6. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளைப் பின்னர் எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுப்பதாக இருந்த மற்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த முன்னறிவிப்புகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது முதல் நூற்று முப்பத்து ஆறாவது வரையிலான, பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது முதல் நூற்று நான்காவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2008-2009 ஆம் ஆண்டிற்கான

[திரு. கோவை தங்கம்] [2008 நவம்பர் 13

மனுக்கள் குழுவின் நாற்பத்து ஏழாவது முதல் ஐம்பத்து நான்காவது வரையிலான, எட்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்குத் அளிக்கிறேன்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மனுக்கள் குழுவின் நாற்பத்து ஏழாவது முதல் ஐம்பத்து நான்காவது வரையிலான, எட்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.*

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008-2009 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதம் தொடர்ச்சி. திரு. சி. ஞானசேகரன்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008-2009 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதம் தொடர்ச்சி. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொள்கிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கும் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கே நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) நாளை தொடரும் என்று சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே 2 மணி 11 நிமிடங்கள் ஆகிறது என்கிற காரணத்தினாலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு இதை எடுத்துக்கொண்டால் கொஞ்சம் தெளிவாகப் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் நாளை தொடரும்.

10. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க நாளை (14-11-2008) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 14-11-2008, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 14-11-2008 வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொள்கிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கும் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கே நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) நாளை தொடரும் என்று சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே 2 மணி 11 நிமிடங்கள் ஆகிறது என்கிற காரணத்தினாலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு இதை எடுத்துக்கொண்டால் கொஞ்சம் தெளிவாகப் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் நாளை தொடரும்.

10. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க நாளை (14-11-2008) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 14-11-2008, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 14-11-2008 வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-11-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு இரப்பர் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

30. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

31. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

20. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது அறிக்கை. (2008-2009)

21. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து எட்டாவது அறிக்கை. (2008-2009)

22. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2008-2009)

23. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. (2008-2009)

24. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2008-2009)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-11-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு இரப்பர் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

30. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

31. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

20. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது அறிக்கை. (2008-2009)

21. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து எட்டாவது அறிக்கை. (2008-2009)

22. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2008-2009)

23. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. (2008-2009)

24. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2008-2009)

[2008 நவம்பர் 13

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-11-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு இரப்பர் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

30. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

31. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

20. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது அறிக்கை. (2008-2009)

21. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து எட்டாவது அறிக்கை. (2008-2009)

22. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2008-2009)

23. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. (2008-2009)

24. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2008-2009)

25. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து இரண்டாவது அறிக்கை. *(2008-2009)*

26. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை. *(2008-2009)*

27. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. *(2008-2009)*

28. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2008-2009)*

29. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஆறாவது அறிக்கை. *(2008-2009)*

30. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. *(2008-2009)*

31. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. *(2008-2009)*

32. பொது நிறுவனங்கள் குழுவின் நூறாவது அறிக்கை. *(2008-2009)*

33. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை. *(2008-2009)*

34. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை. *(2008-2009)*

35. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை. *(2008-2009)*

36. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நான்காவது அறிக்கை. *(2008-2009)*

37. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஏழாவது அறிக்கை. *(2008-2009)*

38. மனுக்கள் குழுவின் நாற்பத்து எட்டாவது அறிக்கை. *(2008-2009)*

39. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை. *(2008-2009)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

40. மனுக்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (2008-2009)

41. மனுக்கள் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (2008-2009)

42. மனுக்கள் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. (2008-2009)

43. மனுக்கள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2008-2009)

44. மனுக்கள் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2008-2009)

45. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

46. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

47. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS